# இஸ்லாமிய நாகரிகத்தில் ஒழுக்கப் பண்பாடுகளும் நெறிமுறைகளும்

பேராசிரியர் ராகி(g)ப் அஸ்ஸிர்ஜானி

மொழியாக்கம்:

பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர்

எம்.எம்.ஏ. அப்துல்லாஹ்

# இஸ்லாமிய நாகரிகத்தில்
## ஒழுக்கப் பண்பாடுகளும் நெறிமுறைகளும்

பேராசிரியர் ராகி(G)ப் அஸ்ஸிர்ஜானி

மொழியாக்கம்:
பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர்
எம்.எம்.ஏ. அப்துல்லாஹ்

| | |
|---|---|
| **Title** | : Ethics and Values in Islamic Civilization |
| **Author** | : Prof. (Dr.) Ragheb Sergani |
| **Translators** | : Prof. (Dr.) S.M.M. Mazahir,<br>M.M.A. Abdullah |
| **Page:** | : vii + 181 |
| **Edition** | : First, November 2024 |
| **Publisher** | : Self-Publisher |
| **ISBN** | : 978-624-97947-5-7 |
| **Price** | : LKR 1200.00 |

| | |
|---|---|
| **நூல்** | :இஸ்லாமிய நாகரிகத்தில் ஒழுக்கப் பண்பாடுகளும் நெறிமுறைகளும் |
| **ஆசிரியர்** | :பேராசிரியர் (கலாநிதி) ராகி(g)ப் அஸ்ஸிர்ஜானி |
| **தமிழில்** | :பேராசிரியர் (கலாநிதி) எஸ்.எம்.எம். மஸாஹிர்,<br>எம்.எம்.ஏ. அப்துல்லாஹ் |
| **பக்கங்கள்** | :vii + 181 |
| **பதிப்பு** | :முதல், நவம்பர் 2024 |
| **வெளியீடு** | :சுய-வெளியீட்டாளர் |
| **ISBN** | :978-624-97947-5-7 |
| **விலை** | :LKR 1200.00 |

# பெயர்ப்புரை

மனித நாகரிக வளர்ச்சியின் உயிர்நாடி பண்பாடுகள் ஆகும். குறிப்பாக இன மற்றும் மதப் பல்லினத்துவ சூழலில் மனித சமூகத்தின் நிலைதன்மைக்கும் சமாதானத்துக்கும் பண்பாடுகளின் வகிபங்கு காத்திரமானதாகும். இஸ்லாம் இவ்வாறான பண்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்களை தனது அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் ஸுன்னா ஊடாக பூரணமாக வழங்கியுள்ளது எனும் கருத்தியலை நிறுவுவதே இந்நூலின் பிரதான இலக்காகும்.

இப்பின்னணியில் ஏறத்தாள 14 நூற்றாண்டுகளை விட சற்று அதிகமான காலப்பகுதி செழிப்பு மிக்க நாகரிக விழுமியங்களைக் கொண்டிருந்த முஸ்லிம் சமூகத்தில் பண்பாடுகள் தொடர்பான கனதியான கோட்பாட்டியல் அம்சங்கள் எவ்வாறு நடைமுறையோடு ஒன்றியிருந்தன என்பதைப் பரிசீலிக்கவே நூலாசிரியர் முனைகிறார்.

நவீன உலகில் குறிப்பாக பல பேரழிவுகளுக்குக் காரணமாக அமைந்த முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் பின்னர் மனித உரிமைகள் தொடர்பான கரிசனை மேற்குலகில் மிகவும் வலுப்பெற்றது. மறுபுறம் காலனித்துவக் காலப் பகுதியிலும் அதன் பின்னரும் கீழைத்தேய ஆய்வு முயற்சிகள் பெரும்பாலும் இஸ்லாமிய மூலாதாரங்கள், நாகரிகம், கலாசாரம், சட்டவியல் போன்ற பல்வேறு விடயங்களில் உலகளாவிய ரீதியாக எதிர்மறையான பிம்பங்களைப் பரப்ப முயன்றன.

இதனால் பல நூற்றாண்டுகள் ஒளிர்ந்து கொண்டிருந்த இஸ்லாமிய நாகரிகம் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளானது. இதன் விளைவாகவே மேற்கத்திய சடவாத அறிவியலும் சிந்தனைப் பாங்குகளும் கீழைத்தேய உலகில் குறிப்பாக முஸ்லிம்கள் இடையே பெரிதும் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தன. இந்நிர்க்கதி நிலையிலிருந்து முஸ்லிம்களை மீட்டெடுத்து வஹியை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைப் பாங்கை உருவாக்கும் முயற்சியே நவீன இஸ்லாமிய சிந்தனையின் முக்கிய தொழிற்பாடாகும்.

அந்தவகையில் நவீன உலகில் மனித உரிமைகள் குறிப்பாக பெண்கள், சிறுவர், முதியோர், தொழிலாளர்கள், சிறுபான்மை யினர், விஷேட தேவையுடையோர், போர்க் கைதிகள் போன்ற பல்வேறு தரப்பினருடன் தொடர்பான பிரத்தியேகமான உரிமைகள் பலரினதும் கவனத்தைப் பெற்றுள்ளன. அவை சர்வதேசப் பிரகடனங்கள், சமவாயங்கள், ஒப்பந்தங்கள் போன்ற பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுக்கான செயற்திட்டங்களும் பொறிமுறை களும் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாக அமுல்படுத் தப்பட்டு வருகின்றன. அத்துடன் இன்று மனிதன் வாழும் சூழல் மற்றும் விலங்குகள் தொடர்பாகவும் அதிக அக்கறை செலுத்தப்படுகிறது. இவற்றில் மேற்குலகின் செல்வாக்கே மிக அதிக அளவில் காணப்படுகிறது. எனினும் இவற்றின் நடை முறையில் பல்வேறு விமர்சனங்கள் தொடர்ந்தும் எழுந்தவண்ணமுள்ளன.

உண்மையில் இவ்வாறான பல விடயங்கள் தொடர்பான நேர்த்தியான திட்டவட்டமான வழிகாட்டல்களை இஸ்லாமிய மூலாதாரங்கள் பிரஸ்தாபிக்கின்ற முறையை இந்நூல் மிகத் துல்லியமாக விளக்குகின்றது. மேலதிகமாக ஒரு மனிதனின் பல்வேறு வகிபாகங்களான கணவன்-மனைவி, தாய்-தந்தை, பிள்ளைகள், சமூகப் பிரஜை போன்ற பல்வேறு படிநிலைகளில் அவனது உரிமைகள் மற்றும் கடமைகளை இந்நூல் விபரிக்கும் முறை மிகவும் அலாதியானது. அதேபோல் பன்மைத்துவம் தொடர்பாகவும் இந்நூல் ஓரளவு அலசுகிறது.

தற்காலத்தில் பரவலாகக் கலந்துரையாடப்படும் பண்பாடுகளு டன் தொடர்பான அதிகமான விடயங்கள் பல நூற்றாண்டுக ளுக்கு முன்னரே இஸ்லாமிய மூலாதாரங்கள் ஊடாக வரையறுக்கப்பட்டு, அவை முஸ்லிம் உலகில் மிகப் பரவலாக நடைமுறையில் இருந்து வந்துள்ளன எனும் மையக் கருத்தை நிறுவுவதனூடாக உலகின் அனைத்து நாகரிகங்க ளையும் விட இஸ்லாமிய நாகரிகம் கொண்டுள்ள தனித்துவத்தை இந்நூல் மிக அற்புதமாக வெளிக்காட்டுகிறது. இதனூடாக இஸ்லாத்துக்கும் இஸ்லாமிய நாகரிகத்துக்கும் எதிராக மனித உரிமைகள் மற்றும் ஏனைய விவகாரங்களை மையப்படுத்தி முன்வைக்கப்படும் எதிர்மறையான கருத்துக்களை இந்நூல் அறிவியல் பூர்வமாக எதிர்கொள்ள முயல்கிறது.

இம்மூல நூலின் ஆசிரியர் பேராசிரியர் கலாநிதி ராகி(g)ப் அஸ்ஸிர்ஜானி எகிப்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கெய்ரோ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சிறுநீரகவியல் (Urology) துறைப் பேராசிரியரான இவர் இஸ்லாமிய வரலாற்றுத் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். இதுவரை இஸ்லாமிய சிந்தனை மற்றும் வரலாற்றுத் துறைசார்ந்த ஏறத்தாள 60க்கும் மேற்பட்ட இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. சர்வதேச முஸ்லிம் அறிஞர்களின் ஒன்றியத்தின் (International Union of Muslim Scholars) உறுப்பினரான இவர் தற்கால முஸ்லிம் உலகின் முக்கிய சிந்தனையாளர்களுள் ஒருவர் ஆவார்.

இறுதியாக, இம்மொழிபெயர்ப்பின் குறைகள் அனைத்தும் எம்மைச் சாரும். நிறைகள் அனைத்தும் நிறையறிவுமிக்க அல்லாஹ்வைச் சாரும்.

**பேராசிரியர் (கலாநிதி) எஸ்.எம்.எம். மஸாஹிர்**
இஸ்லாமிய கலாசாரத் துறைப் பேராசிரியர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**எம்.எம்.ஏ. அப்துல்லாஹ்**
கலாநிதிக் கற்கை மாணவன்
சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம் மலேசியா
30.10.2024

## Contents


பெயர்ப்புரை.....iii

இஸ்லாமிய நாகரிகத்தில் பண்பாடுகள் மற்றும் விழுமியங்களின் முக்கியத்துவம்..... 1

இஸ்லாமிய நாகரிகத்தில் மனித உரிமைகள்..... 3

இஸ்லாமிய நாகரிகத்தில் பெண்களின் உரிமைகள்..... 10

இஸ்லாமிய நாகரிகத்தில் பணியாட்கள் மற்றும் ஊழியர்களின் உரிமைகள்..... 17

நோயாளிகள் மற்றும் விசேட தேவையுடையோரின் உரிமைகள்..... 24

இஸ்லாமிய நாகரிகத்தில் சிறுபான்மையினரின் உரிமைகள்..... 30

இஸ்லாமிய நாகரிகத்தில் பிற உயிரினங்களின் உரிமைகள்..... 36

இஸ்லாமிய நாகரிகத்தில் சூழலியல் உரிமைகள்..... 43

இஸ்லாத்தில் நம்பிக்கைச் சுதந்திரம்..... 50

இஸ்லாமிய நாகரிகத்தில் சிந்தனைச் சுதந்திரம்..... 54

இஸ்லாமிய நாகரிகத்தில் கருத்துச் சுதந்திரம்..... 58

இஸ்லாத்தில் உயிர் வாழும் உரிமை மற்றும் அடிமை விடுதலை..... 64

இஸ்லாத்தில் சொத்துடைமைச் சுதந்திரம்..... 72

இஸ்லாத்தில் கணவன்-மனைவி.. உரிமைகளும் கடமைகளும்..... 80

இஸ்லாத்தில் பிள்ளைகள்.. உரிமைகளும் கடமைகளும்... 89

இஸ்லாத்தில் பெற்றோரின் உரிமைகள்..... 102

இஸ்லாத்தில் இரத்த உறவுகளை சேர்ந்து நடத்தல்.. முக்கியத்துவமும் உரிமைகளும் ....................................... 107

முஸ்லிம் சமூகத்தில் சகோதரத்துவம்.. முக்கியத்துவமும் பெறுமானமும் .................................................................. 112

இஸ்லாமிய சமூகத்தில் சமூகக் கூட்டுறவு........................ 120

இஸ்லாத்தில் நீதி.. முக்கியத்துவமும் யதார்த்த நிலையும் ........................................................................................ 131

இஸ்லாத்தில் அன்பு.. முக்கியத்துவமும் சில முன்மாதிரிகளும் ................................................................ 139

முஸ்லிம்கள் - முஸ்லிமல்லாதோர் இடையிலான தொடர்பு ........................................................................................ 148

முஸ்லிம்கள் - முஸ்லிமல்லாதோர் இடையிலான உடன்படிக்கைகள் ............................................................. 153

இஸ்லாத்தில் யுத்தம்.. காரணிகளும் நோக்கங்களும் ...... 169

இஸ்லாத்தில் யுத்த தர்மங்கள்.......................................... 174

# இஸ்லாமிய நாகரிகத்தில் பண்பாடுகள் மற்றும் விழுமியங்களின் முக்கியத்துவம்

பண்பாடுகளும் விழுமியங்களும் இஸ்லாமிய நாகரிகத்தின் உயிர்நாடியாகவும் ஒவ்வொரு கலாசாரத்தின் அத்திவாரமாகவும் உள்ளன. அத்துடன் வரலாறு நெடுகிலும் பல்வேறு தலைமுறையினரைக் கடந்த ஒவ்வொரு நாகரிகத் தினதும் இருப்புக்கும் நிலைதன்மைக்கும் மூல காரணியாக இவையே தொழிற்படுகின்றன. மனித வாழ்வின் உயிர்நாடியாக உள்ள இப்பகுதி ஒரு நாளேனும் அவனிடத்தில் இருந்து மறைந்து விடுமாயின் அவனுள் உள்ள ஆன்மீக உயிரோட்டம் உடனே அகன்று விட அது காரணமா கிவிடுகிறது. இதனூடாக மனித இதயம் கருணையற்றதாக மாறிவிடுகிறது. அத்துடன் அவனது உள்ளம் அதன் வகிபாகத்தை உரிய முறையில் நிறைவேற்ற முடியாமல் பலவீனப்பட்டு விடுகிறது. இதனால் மனிதன் தனது ஆன்மாவின் யதார்த்தம் ஒருபுறமிருக்க தனது வாழ்வின் யதார்த்தத்தையே சரிவரப் புரிந்து கொள்வதில்லை. இப்பின்னணியில் சடவாத மாயவலையில் சிக்கிக் கொள்ளும் அவன் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான எவ்வழிக ளையும் அறியாதவனாகவே வாழ்ந்து விடுகிறான்.

## பண்டைய நாகரிகங்களும் ஒழுக்கப் பண்பாடுகளும்

பண்டைய நாகரிகங்களோ நவீன நாகரிகங்களோ பண்பாடு மற்றும் விழுமியங்களின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புக்களை வழங்கவில்லை என்பதே நிதர்சனமாகும். மேற்குலக அறிஞர்களும் சிந்தனையாளர்களும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் ஆங்கில எழுத்தாளர் ஜோட் (Joad) "நவீன நாகரிகத்தில் அதிகாரம் மற்றும் பண்பாடுகளுக்கிடையே சமநிலை இல்லை. பண்பாடு கள் அறிவியல் தோன்றி நீண்ட காலத்தின் பின்னரே தோன்றின. இயற்கை விஞ்ஞானங்கள் பண்பாடுகளுக்கான ஒப் பற்ற ஆற்றலை வழங்கின. எனினும் நாம் சிறு பிள்ளைகளின் அல்லது மிருகங்களின் சிந்தனையினூடாக அவற்றைப் பயன்படுத்த முனைகிறோம். இப்பிரபஞ்சத்தில் தனது இருப்பின் யதார்த்த நிலை தொடர்பான மனிதனின் புரிதலில் ஏற்படும் தவறு மற்றும் அதி உன்னத, உண்மையான அழகிய

பண்பாடுகளை உள்ளடக்கிய உயர் விழுமியங்களின் தொகுப்பை அவன் மறுத்தல் ஆகியவையே உண்மையான வீழ்ச்சியாகும்"[1] என்கிறார்.

அத்துடன் அலக்ஸிஸ் கெரல் (Alexis Carrel) "பண்பாடுகள் நிறைந்த ஓர் முன்மாதிரியை நவீன நகரங்களில் வாழும் மனிதர்கள் மிகவும் குறைவாகவே பின்பற்றுகின்றனர். ஓர் நாகரிகத்தின் அத்திவாரம் என்ற வகையில் உயர் பண்பாடு களின் அழகு அனைத்து வகை அறிவியல் மற்றும் கலை களை மிக இலகுவில் மிகைத்துவிடுகிறது"[2] என்கிறார்.

உண்மையில், உயர் பண்பாடுகள் மற்றும் விழுமியங்கள் தமது பெறுமானத்தை முஸ்லிம்களின் நாகரிகத்தில் மாத்தி ரமே முழுமையாகப் பெற்றுள்ளன. அதாவது அந்நாகரிகத்தின் அத்திவாரம் உயர் விழுமியங்கள் மற்றும் பண்பாடுகளின் மீதே அமைந்துள்ளது. அத்துடன் அவை பல்வேறு சமூகங்களிலும் நாகரிகங்களிலும் சிதறுண்டு இருந்தபோது அதன் தூதுவரும் சிறந்த பண்பாடுகளைப் பூரணப்படுத்தல் என்ற பிரத்தியேக நோக்கத்துக்காகவே அருளப்பட்டார்.

எனவே, இப்பண்பாடுகளும் விழுமியங்களும் கால ஓட்டத்தில் மனித சிந்தனை வளர்ச்சியின் பயனாக உருவானவை அல்ல. அவை அல்லாஹ்வால் அருளப்பட்டு இஸ்லாத்தின் தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களால் (இஸ்லாமிய மார்க்கம் என) பிரகடனப்படுத்தப்பட்டவையாகும். எனவே, 15 நூற்றாண்டுக ளாக இதன் மூலாதாரமாக இஸ்லாமிய சட்டவாக்கமே திகழ்கிறது.

---

[1] அன்வர் அல்ஜுன்தி. முகத்திமாதுல் உலூம் வல்மனாஹிஜ், 4/770.
[2] அலக்ஸிஸ் கெரல். அல்இன்ஸானு தாலிகல் மஜ்ஹூல், பக்: 153.

# இஸ்லாமிய நாகரிகத்தில் மனித உரிமைகள்

## அறிமுகம்

மேற்குலக தத்துவியலளரான நீட்ஷா (Nietzsche) "வயது முதிர்ந்து பலவீனமாக உள்ளோர் அழிக்கப் (கொல்லப்)பட வேண்டும்!. அத்துடன் அவர்கள் கொல்லப் படுவதற்காக (பிறரின்) உதவி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்!"[3] என்கிறார்.

எனினும் இஸ்லாத்தின் தத்துவமும் அதன் சட்ட ஒழுங்கும் எந்நிலையிலும் பண்பாடுகள் மற்றும் விழுமியங்களை விட்டு விலகிச் செல்லவே இல்லை. நிறம், இனம், மொழி என எவ்வித பாகுபாடுமின்றி இஸ்லாம் ஒவ்வொரு மனிதருக்கும் உத்தரவாதப்படுத்தியிருக்கும் பல்வேறு உரிமைகளில் இது புலப்படுகிறது. அத்துடன் மனிதன் வாழும் சூழலுக்கும் இது பொருந்தும். மேலும் இஸ்லாம் தனது சட்ட ஒழுங்கின் அதிகாரத்தினூடாக இவ்வுரிமைகளைப் பாதுகாத்து அவற்றின் நடைமுறையை உத்தரவாதப்படுத்தியிருப்பதோடு அவ்வுரிமை களை மீறுவோருக்கெதிரான தண்டனைகளை வகுத்துள்ள மையினூடாகவும் இது புலனாகிறது.

## மனிதன் தொடர்பான இஸ்லாத்தின் நோக்கு

இஸ்லாம் மனிதனை கண்ணியமும் மகத்துவமும் மிக்க ஒரு படைப்பினமாக நோக்குகிறது. இதற்கு பின்வரும் அல்குர்ஆனிய வசனம் சிறந்த சான்றாகும் "நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம். கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப்படுத்தினோம்" (அல்குர்ஆன், 17:70).

---

[3] அல்கஸ்ஸாலி. ரகாஇஸுல் ஈமான் பய்னல் அக்லி வல்கல்ப், பக். 318.

மனிதன் தொடர்பான இந்த நோக்கு மனித உரிமைகள் தொடர்பான இஸ்லாத்தின் தனித்துவங்களையும் சிறப்பம்சங்க ளையும் தெளிவுபடுத்துகின்றன. இவ்வுரிமைகள் அனைத்தை யும் உட்பொதிந்துள்ளமை என்பது அவற்றுள் மிக முக்கியமானதாகும். அதாவது அவை அரசியல், பொருளாதா ரம் சமூகம், சிந்தனை போன்ற பல்துறை சார்ந்தவையாகும். அத்துடன் நிற, இன, மொழி வேறுபாடுகள் இன்றி முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதோர் என அனைவருக்கும் பொதுவானதாகும். அதேபோன்று தெய்வீக வழிகாட்டல்கள் உடன் நெருங்கிய தொடர்பு கொண்டு உள்ளமையால் இவ்வுரிமைகள் மறுக்கப்படுவதற்கோ மாற்றத்துக்கோ உட்படாதவையாகும்.

நபி (ஸல்) அவர்கள் தனது இறுதி ஹஜ்ஜில் (ஹஜ்ஜத்துல் வதா) இடப்பெற்ற பேருரையில் இதனை உத்தரவாதப்படுத்தி யுள்ளார்கள். இவ்வுரையில் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட பின்வரும் வாசகம் மனித உரிமைகளுக்கான பூரணமான பிரகடனமாக நோக்கத்தக்கதாகும். “உங்களுடைய (புனிதமா ன) இந்த நகரத்தில் உங்களுடைய (புனிதமான) இந்த மாதத்தில் இன்றைய தினம் எவ்வளவு புனிதமானதோ அந்த அளவுக்கு உங்கள் உயிர்களும் உங்கள் உடைமைக ளும் உங்கள் இரட்சகனைச் சந்திக்கும் நாள்வரை புனிதமானவை ஆகும்!..” (புகாரி, 1741). இப்பேருரையில் பல்வேறு உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன. உயிர், சொத்துக்கள் மற்றும் மானத்தின் புனிதத்துவம் இவற்றுள் மிக முக்கியமானவையாகும்.

அதேபோன்று மனித உரிமைகளுள் மிக உன்னதமான உயிர் வாழும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் பெரும்பாவங்கள் தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் வினவப்பட்டபோது பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

“இறைவனுக்கு இணை வைத்தல்.. உயிரை கொல்லுதல்” (புகாரி, 6675). இவ்விடத்தில் பொதுவாக உயிர் என்ற சொற்பிரயோகமே பயன்படுத்தப்பட்டுள்ளது. எவ்வித நியாயமா ன காரணங்களும் இன்றி கொல்லப்படும் அனைத்து உயிர்களுக்கும் இது பொருந்தும்.

தற்கொலையை வன்மையாகத் தடுத்து ஒரு மனிதன் தன்னிடமிருந்து தனது உயிரை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியமையானது இதனை விட ஒரு படி மேலானதாகும். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். "மலையின் மீதிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொள்கிறவர் நரக நெருப்பில் (தள்ளப்பட்டு மேலிருந்து கீழே) என்றைக்கும் நிரந்தரமாக குதித்துக் கொண்டேயிருப்பார். விஷம் குடித்து தற்கொலை செய்துகொள்கிறவர் தம் விஷத்தைக் கையில் வைத்திருந்தபடி நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக குடித்துக் கொண்டேயிருப்பார். ஒரு கூரிய ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கிறவரின் கூராயுதத்தை அவர் தம் கையில் வைத்துக்கொண்டு நரக நெருப்பில் தம் வயிற்றில் தாமே என்றென்றும் நிரந்தரமாக அதனால் குத்திக் கொண்டேயிருப்பார்" (புகாரி, 5778).

அத்துடன் மனிதனின் உயிர் வாழும் உரிமைக்கு குந்தகமாக அமையும் அச்சுறுத்தல், இழிவுபடுத்தல் அல்லது துன்புறுத்தல் போன்ற எவ்வகையான செயற்பாடுகளையும் இஸ்லாம் முற்றாகத் தடுத்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறியதை தான் கேட்டதாக ஹிஷாம் பின் ஹகீம் (ரழி) பின்வருமாறு குறிப்பிட்டார்கள், "இவ்வுலகில் மனிதரை துன்புறுத்துவோரை நிச்சயம் அல்லாஹ் துன்புறுத்துவான்" (முஸ்லிம், 2613).

## மனிதர்களுக்கிடையே சமத்துவம்

இஸ்லாம் பொதுவாக மனிதனை கண்ணியப்படுத்தி, மனித உயிர், மானம், உடமைகள் மற்றும் உயிர்வாழும் உரிமையை உத்தரவாதப்படுத்திய பின்னர் தனி நபர்கள், குழுக்களுக்கள், இனங்கள், குலங்கள், ஆட்சியாளர், ஆட்சிக்கு உட்பட்டோர், தலைவர்கள் குடிமக்கள் என அனைவரிடையேயும் சம உரிமையை வலியுறுத்துகிறது. எனவே, இவற்றில் எவ்வித வரையறைகளோ விதிவிலக்கு களோ இல்லை. அரபி, அரபி அல்லாதோர், வெள்ளையர், கறுப்பர், ஆட்சியாளர், குடிமகன் என்ற எவ்வித வேறுபாடுகளும் இச்சட்டவாக்கத்தில் இல்லை. மக்களிடையே இறைவனை அஞ்சும் (தக்வா எனும்) இறையச்சம் என்பதிலேயே வேறுபாடு வரமுடியும் என இஸ்லாம் கூறுகிறது.

இதனை நபியவர்கள் பின்வருமாறு தெளிவுபடுத்தினார்கள். “மக்களே உங்களது இறைவன் ஒருவனே. உங்களது (முதல்) தந்தையும் ஒருவரேயாவார். நீங்கள் அனைவரும் ஆதமின் வாரிசுகளாவர். ஆதம் மண்ணிலிருந்து வந்தார். உங்களுள் அல்லாஹ்விடம் மிகவும் கண்ணியமானவர் அதிக இறையச்சம் (தக்வா) உடையவர் ஆவார். அவ்விறையச்சம் மூலமாகவே அன்றி எந்த ஒரு அரபிக்கும் அரபி அல்லாதவரை விட, அரபி அல்லாதவருக்கு அரபியை விட, சிவந்தவருக்கு கருப்பரை விட அல்லது கருத்தவருக்கு சிவந்தவரை விட எவ்வித சிறப்பும் இல்லை” (ஷுஅபுல் ஈமான், 5137)[4].

தற்போது நபியவர்கள் சமத்துவக் கோட்பாட்டை நடைமுறைப் படுத்தியமை தொடர்பில் சற்று நோக்குவோம். இதனூடாக அவரது மகத்துவத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

அபூ உமாமா (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள். “ஒரு முறை அபூ தர் (ரழி) எனும் நபித்தோழர் (கருப்பினத்தைச் சேர்ந்த) பிலால் (ரழி) எனும் நபித்தோழரை அவரது தாயைக் குறிப்பிட்டு இழிவுபடுத்தி விட்டார். அதாவது “கருப்புப் பெண்ணின் மகனே” என்று குறிப்பிட்டு விட்டார். பிலால் (ரழி) நபியவர்களிடம் வந்து இதனை முறையிட்டவுடன் நபியவர்கள் கோபப்பட்டார்கள். பின்னர் இவ்விடயம் தொடர் பில் அறியாத அபூதர் அவ்விடத்துக்கு வந்தார். அவரை நபியவர்கள் புறக்கணித்து விட்டார்கள். அப்போது அவர் “அல்லாஹ்வின் தூதரே! என்னைப் பற்றி நீங்கள் அறிந்திருக் கும் ஏதோ ஒரு விடயத்தினால்தான் என்னை நீங்கள் புறக்கணிக்கிறீர்கள்” என்றார். உடனே, நபியவர்கள் “பிலாலின் தாயின் மூலம் அவரை இழிவுபடுத்தியவர் நீர்தானே” என்று கூறி “முஹம்மத் மீது வேதத்தை அருளிய அல்லாஹ்வின் மீது ஆணையாக, “(உங்களில்) எவருக்கும் (அவரது) நல்ல அமல்கள் ஊடாகவேயன்றி என்னை விட சிறப்பு இல்லை. நீங்கள் அனைவரும் (ஏதேனுமோர்) (சம தரத்தில் உள்ள) ஒருவரை ஒருவர் ஒத்தவர்களேயாவர்” என்றார்கள்” (ஷுஅபுல் ஈமான், 4772).

---

[4]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 2700.

## இஸ்லாத்தில் நீதி

சமத்துவம் எனும் உரிமையுடன் நீதம் எனும் உரிமையும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. திருட்டுக் குற்றத்தில் ஈடுபட்ட மக்ஸூம் கோத்திரத்தைச் சார்ந்த பெண்ணொருவர் விடயத்தில் பரிந்துரை செய்ய வந்தபோது உஸாமா பின் ஸைத் எனும் நபித்தோழருக்கு நபி (ஸல்) அவர்கள் கூறிப்பிட்ட பின்வரும் கூற்று இவ்விடயம் தொடர்பில் ஈன்று குறிப்பிடத்தக்கதாகும். “என் உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! (என் புதல்வி) ஃபாத்திமாவே இ(ந்தக் குற்றத்)தைச் செய்திருந்தாலும் அவரின் கையையும் நான் துண்டித்திருப்பேன்” (புகாரி, 6787).

அதேபோன்று நீதத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரு மனிதர் தன் சார்பாக வாதிடும் உரிமையை பறிப்பதை நபியவர்கள் முற்றாகத் தடை செய்தார்கள். இதற்கு “உரிமையுடையவர் தன் உரிமையை கேட்கும் போது (கடுமை யாகப்) பேச அவருக்கு உரிமையுண்டு” (புகாரி, 2606) எனும் ஹதீஸ் சான்றாகும்.

அதேபோன்று ஆட்சிப் பொறுப்பில் அமர்வோருக்கு அல்லது நீதித்துறை பொறுப்புகளை வகிப்போருக்கு நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு அறிவுரை வழங்கினார்கள். உம்மி டத்தில் ஒரு வழக்கு விடயத்தில் (வாதி, பிரதிவாதி ஆகிய) இருவர் வந்து அமர்ந்தால் ஒருவரிடத்தில் கேட்டு விசாரித்ததைப் போல் மற்றவரிடமும் கேட்டு விசாரிக்கும் வரை நீர் தீர்ப்பளிக்க வேண்டாம். ஏனெனில் (சரியான) தீர்ப்பு தொடர்பில் உமக்கு தெளிவு பெற இதுவே மிகச் சிறந்ததாகும்” (அபூ தாவூத், 3582)[5].

---

[5]இந்த ஹதீஸ் ஹஸன் லிகய்ரிஹி தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தக்ரீஜு மிஷ்காதில் மஸாபீஹ், 3666.

## இஸ்லாத்தில் வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்வதற்கான உரிமை

எந்த ஒரு நாட்டின் சட்ட திட்டங்களிலும் அல்லது மனித உரிமைகள் தொடர்பான ஏதேனும் ஆவணங்களிலும் குறிப்பிடப்படாத இஸ்லாத்தில் மாத்திரமே தனித்துவமாகக் குறிப்பிடப்பட்ட உரிமையே வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்வதற்கான உரிமையாகும்.

ஒரு மனிதன் கண்ணியமான ஒரு வாழ்வை வாழ்வதற்காக அவனது வாழ்வுக்கான பொருத்தமான அந்தஸ்தை உறுதி செய்யும் பொருட்டு அவனது வாழ்வாதாரத்துக்குத் தேவை யான உரிமையை இஸ்லாமிய நாடொன்றில் வாழும் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்வதே இதன் பொருளாகும். எனவே, வேறு நாடுகளின் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதியளவான கொடுப்பனவு என்ற உரிமையை விட இது சற்று வித்தியாசமானதாகும். அதாவது அந்நாடுகளில் ஒரு மனிதன் வாழ்வதற்கு தேவையான மிகக் குறைந்த வாழ்வா தார அளவை இவ்வுரிமை குறிக்கிறது.[6]

வாழ்வாதாரத்தை பெற்றுக்கொள்ளும் இவ்வுரிமை ஒரு மனிதன் ஈடுபடும் தொழிலின் ஊடாக உத்தரவாதப்படுத்தப் படுகிறது. ஒருவரால் தொழிலில் ஈடுபட முடியவில்லையாயின் அவனுக்கு ஸகாத்தின் ஊடாக (போதிய தொகை) வழங்கப் பட வேண்டும். அவ்வாறு ஸகாத்தினூடாக தேவையான அளவு வாழ்வாதாரத்தை வழங்க முடியாவிடின் நாட்டின் வரவு செலவு திட்டத்தின் ஊடாக குறித்த அத்தேவையை நிறைவேற்றுவதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். “யாரேனுமொருவர் ஒரு கடனை அல்லது அவரைச் சார்ந்திருந்த (பிள்ளைகள், மனைவி, தனது தேவைகளை தானாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதோர் போன்ற) யாரையேனும் விட்டுச் செல்வாராயின் அதற்கு நானே பொறுப்புதாரியாவேன்” (முஸ்லிம், 867).

---

[6]பார்க்க: கதீஜா அந்நப்ரானி, மவ்ஸூஅது ஹுகூகில் இன்ஸான் பில் இஸ்லாம், பக்: 505-509.

அதேபோன்று இவ்வுரிமையை உறுதிப்படுத்தும் வகையில் நபியவர்கள் பின்வருமாறும் குறிப்பிட்டார்கள் “ஒருவரின் அண்டைவீட்டார் பசியுடன் இருப்பதை அறிந்தும் வயிறு நிறைய உண்டு இரவுப் பொழுதை கழிக்கும் நபர் என்னை ஈமான் கொள்ளவில்லை” (அல்மு.ஃஜமுல் கபீர் லித்தபரானி, 751). அத்துடன் “அஷ்அரீ குலத்தினர் போரின்போது கையிரு ப்பிலுள்ள பயண உணவு (இருப்பு) குறைந்துவிட்டால் அல்லது மதீனாவில் தங்கள் மனைவி மக்களின் உணவு (இருப்பு) குறைந்து போய்விட்டால் தங்களிடம் (எஞ்சி) இருப்பதை ஒரு துணியில் சேகரித்து, பிறகு, ஒரு பாத்திரத்தைக் கொண்டு சமமாக தங்களுக்கிடையே அதைப் பங்கிட்டுக் கொள்வார்கள். அவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள் நான் அவர்களைச் சேர்ந்தவன்” (புகாரி, 2486) எனப் புகழ்ந்து குறிப்பிட்டார்கள்.

## குடிமக்கள் மற்றும் சிறைக் கைதிகளின் உரிமைகள்

யுத்த சூழ்நிலையின் போது நாட்டின் பொதுமக்கள் மற்றும் சிறைபிடிக்கப்பட்டோர் தொடர்பான உரிமைகளுடன் தொடர்புபடும் போதே மனித உரிமைகள் அவற்றின் உன்னத நிலையை அடைகின்றன. உண்மையில் யுத்த சூழ்நிலைகளின் போது பழிவாங்கல், சித்திரவதை போன்றவையே அங்கு மேலோங்கி நிற்கும். பெரும்பாலும் மனித உயிர் மற்றும் அன்புக்கான பெறுமானம் அங்கு இருக்க மாட்டாது. எனினும் இச்சூழ்நிலையில் மனித நேயத்தை அடிப்படையாகக்கொண்டு அன்பின் மீது அமைந்த ஒரு தனித்துவமான வழியை இஸ்லாம் கையாள்கிறது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள், “நீங்கள் சிறுவர், பெண், மற்றும் முதியவரை (எந்நிலையிலும்) கொன்றுவிடவே வேண்டாம்” (அல்மு.ஃஜமுல் அவ்ஸத் லித்தபரானி, 4162)

நாம் மேலே குறிப்பிட்ட விடயங்கள் மேலோட்டமாக மனித உரிமைகள் தொடர்பான இஸ்லாத்தின் சட்டதிட்டங்களையும் ஒழுங்குகளையும் தெளிவுபடுத்துகின்றன. இவ்வனைத்தையும் பொதுவாக நோக்கும்போது முஸ்லிம்களின் நாகரிகத்தின் உயிர்நாடியான மனிதநேய நோக்கையே அவை பிரதிபலிக்கி ன்றன எனலாம்.

# இஸ்லாமிய நாகரிகத்தில் பெண்களின் உரிமைகள்

## அறிமுகம்

இஸ்லாம் பெண்கள் தொடர்பில் அதிக அக்கறையும் கரிசனையும் கொண்டுள்ளது. அத்துடன் அது மகள், மனைவி, சகோதரி, தாய் போன்ற பல்வேறு படிநிலைகளில் பெண்ணின் அந்தஸ்தை உறுதிப்படுத்தி, அவர்களுக்கான கண்ணியத்தை வழங்குவதோடு அவர்களுடன் நல்ல முறையில் நடப்பதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது. முதலில் ஆணும் பெண்ணும் ஒரே மூலத்திலிருந்து படைக்கப்பட்டவர்கள் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. இது மனிதத்துவத்தில் ஆணும் பெண்ணும் சமமானவர்கள் எனும் கருத்தைக் குறிப்பிடுகிறது. இதனை அல்குர்ஆன், “மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவி யையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்” (4:1) எனக் கூறுகிறது. இதேபோன்று இன்னும் பல அல்குர்ஆனிய வசனங்கள் உண்டு. அவை பொதுவாக மனிதத்துவப் பெறுமானத்தில் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்திப் பார்க்கும் ஒழுங்கை தகர்த்துள்ளன.

## இஸ்லாத்தில் பெண்ணின் அந்தஸ்து

உண்மையில் பெண் தொடர்பான மேற்கூறப்பட்ட அடிப்படைகளுக்கமைய பெண்ணின் நிலையுடன் தொடர்பான ஜாஹிலிய்யா கால மற்றும் இஸ்லாத்துக்கு முன்பிருந்த சமூகங்களின் வழக்காறுகளை கண்டிக்கும் வகையில் பெண்க ளைப் பாதுகாப்பதை இஸ்லாம் நோக்காகக் கொண்டுள்ளது எனலாம். அதேபோன்று முன்பு இருந்த எச்சமூகத்திலும் பெண்கள் அடையாத, இனிவரும் எச்சமூகங்களிலும் அவர்களால் அடைய முடியாத உயர் அந்தஸ்தை இஸ்லாம் அவர்களுக்கு வகுத்துள்ளது. அதாவது ஒரு தாய், சகோதரி, மனைவி, மகள் போன்ற பல்வேறு படிநிலைகளில் 14

நூற்றாண்டுகளாகவே பல்வேறு உரிமைகளை இஸ்லாம் வகுத்துள்ளது. உண்மையில் தற்கால மேலைத்தேய சமூகத்தி லுள்ள பெண்கள்கூட இவ்வுரிமைகளை அடைவதற்கு இன்று வரை தொடர்ந்தும் போராடுகின்றனர். எனினும் அவற்றின் சாத்தியப்பாடு வெகு தூரமானது!

ஆரம்பமாக கண்ணியத்திலும் அந்தஸ்திலும் பெண்கள் ஆண்களைப் போன்றவர்களாவர் என இஸ்லாம் உறுதிப்படுத் தியுள்ளது. எனவே, அவர்கள் பெண்களாக இருப்பது ஒரு போதும் அவர்களுக்குக் குறையாக அமையாது. இவ்விடயம் தொடர்பில் ஓர் அடிப்படை விதியை வகுக்கும் வகையில் நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள் "பெண்கள் ஆண்களின் உடன்பிறப்புக்கள் ஆவர்" (அபூ தாவூத், 236)[7].

இதேபோன்று பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளும்படி நபியவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி இருப்பதை அவதானிக்க முடிகிறது. நபியவர்கள் தனது தோழர்களிடம் "பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள் என உங்களுக்கு நான் உபதேசிப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்" (புகாரி, 5185) என அடிக்கடி குறிப்பிடுவார்கள். தனது இறுதிப் பேருரையில் (ஹஜ்ஜதுல் வதா∴) பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில் உரையாற்றும் போதும் நபியவர்கள் இவ்வறிவு ரையை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார்கள்.

## ஜாஹிலிய்யா (அறியாமைக்கால) சமூகத்தில் பெண்ணின் நிலை

பெண்களின் உயர்வுக்கும் கண்ணியத்திற்கும் எவ் வகையான வழிகாட்டல்களையும் அடிப்படைகளையும் இஸ்லா ம் வகுத்துள்ளது என்பது தொடர்பில் நாம் தெளிவு பெற வேண்டுமாயின் ஆரம்பமாக பண்டைய மற்றும் நவீன ஜாஹிலிய்யா சமூகங்களில் பெண்களின் நிலை தொடர்பில் நாம் அறிந்து கொள்வது மிக அவசியமானது. இதனூடாகவே அவர்கள் உண்மையில் எவ்வகையான இருளில் வாழ்ந்தும்

---

[7]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 2863.

தொடர்ந்து வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள் என்பதை எம்மால் ஓரளவு அவதானிக்க முடியும். இதனூடாகவே இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் இஸ்லாமிய நாகரிகத்தின் நிழலில் பெண்களின் அந்தஸ்து மற்றும் நிலை தொடர்பான யதார்த்தம் தொடர்பில் நாம் தெளிவு பெற முடியும்.

பெண் பிள்ளைகளுக்கான உயிர்வாழும் உரிமையை மறுத்து அவர்களை உயிருடன் புதைக்கும் நிலை ஜாஹிலிய்யாக் கால அரபு சமூகத்திடையே இருந்தது. இதனை குற்றமாகக் கருதி, இச்செயலை அல்குர்ஆன் தடைசெய்தது. அந்த வகையில் "உயிருடன் புதைக்கப்பட்ட பெண் (குழந்தை) வினவப்படும் போது, "எந்தக் குற்றத்திற்காக அது கொல்ல ப்பட்டது?" என்று" (81:8-9) என அல்குர்ஆன் இறங்கியது.

இது கொடிய குற்றங்களில் ஒன்றாகும் என நபியவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: "நபியவர்களிடம் பாவங்களில் மிகக் கொடியது எது?" எனக் கேட்டேன். அப்போது "அல்லாஹ் உன்னை படைத்திருக்கும் நிலையில் அவனுக்கு நிகராக ஒன்றை ஏற்படுத்துவதாகும்" எனக் கூறினார்கள். "பின்பு எது?" எனக் கேட்டேன். "உன்னுடன் உணவளிக்க வேண்டும் என்ற பயத்தில் உனது பிள்ளையை நீ கொல்வதாகும்" என்றார்கள். "பின்பு எது?" எனக் கேட்டேன். "உனது அண்டை வீட்டுக்காரரின் மனைவியுடன் நீ விபசாரத்தில் ஈடுபடுவது" எனக் கூறினார்கள்" (புகாரி, 6811).

## இஸ்லாத்தில் பெண்ணின் உரிமைகள்

இஸ்லாம் பெண்ணுக்கு வாழ்வதற்கான உரிமையை மாத்திரம் உத்தரவாதப்படுத்துவதுடன் நின்றுவிடவில்லை. அவள் சிறுபிள்ளையாக இருக்கும் போதிருந்தே அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளும்படி இஸ்லாம் ஆர்வம் ஊட்டுகிறது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் "யார் இந்தப் பெண் குழந்தைகளில் ஒன்றுக்குப் பொறுப்பேற்று, நன்மை புரிவாரோ அவருக்கு அந்தக் குழந்தைகள் நரகத்தில் இருந்து தடுக்கும் திரையாக இருப்பார்கள்" (புகாரி, 5995) என்றார்கள்.

அதேபோன்று பெண் பிள்ளைக்குக் கல்வியைக் கொடுக்கும் படியும் நபியவர்கள் வழிகாட்டினார்கள். "ஒரு மனிதரிடம் ஒரு பெண் பிள்ளை இருந்து, அவளுக்கு அவர் கல்வி கற்பித்து, அதையும் நன்கு கற்பித்து, அவளுக்கு ஒழுக்கமூட்டி, அதையும் அழகுற செய்வாராயின், அவருக்கு இரண்டு கூலிகள் உண்டு" (புகாரி, 5083).

அதேபோன்று பெண்களுக்கு அறிவுரைகளை வழங்கவும் இறைவனை ஞாபகமூட்டி இறை வழிபாடுகளில் அவர்கள் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் பிரத்தியேகமான ஒரு நாளை நபியவர்கள் ஏற்படுத்தி இருந்தார்கள் (புகாரி, 101).

அத்துடன் அப்பெண் பருவமடைந்து வாலிபப் பெண்ணாக மாறும்போது அவளின் திருமண உறவை ஏற்றுக்கொள்ளவும் மறுக்கவும் முடியுமான உரிமையை இஸ்லாம் அவளுக்கு வழங்குகிறது. எனவே, தான் விரும்பாத ஒரு நபருடன் திருமண பந்தத்தில் இணைவதற்காக அப்பெண்ணை வற்புறுத்துவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் ஒரு விதவைப் பெண் (தன் விவாக விடயத்தில்) தனது வலியை (பொறுப்பாளரை) விட மிக உரிமை உடையவள் ஆவாள். கன்னிப்பெண் (அவளது திருமண விடயம் தொடர்பில்) ஆலோசனை கேட்கப்படுவாள். அவள் மௌனமாக இருப்பது அவளது சம்மதமாகும்" (முஸ்லிம், 1421) எனக் கூறினார்கள்.

அதேபோன்று நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறும் குறிப்பிட்டார்கள். "கன்னிகழிந்த பெண்ணை, அவளுடைய (வெளிப்படையான) உத்தரவு பெறாமல் மணமுடித்துக் கொடுக்க வேண்டாம். கன்னிப் பெண்ணிடம் (ஏதேனும் ஒரு முறையில்) அனுமதி பெறாமல் மணமுடித்துக் கொடுக்க வேண்டாம்". அப்போது மக்கள், "இறைத்தூதர் அவர்களே! எப்படி கன்னியின் அனுமதி(யைத் தெரிந்து கொள்வது)" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவள் மௌனம் சாதிப்பதே (அவளுடைய சம்மதம்)" என்று கூறினார்கள்" (புகாரி, 5136).

பின்னர் அவள் திருமண பந்தத்தில் இணைந்து மனைவியாக மாறும்போது அவளுடன் அன்னியோன்னியமாக நல்ல முறையில் நடந்து கொள்ளும்படி இஸ்லாம் தூண்டுகிறது. அது, ஒரு மனிதனின் உயர் பண்பாட்டுக்கும் நற்குண ங்களுக்கும் பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது சிறந்த சான்றாகும் எனக் கூறுகிறது. நபி (ஸல்) அவர்கள் மனைவியுடன் நல்லமுறையில் நடப்பவரைப் புகழ்ந்து "ஒரு மனிதன் தனது மனைவிக்குப் பருக நீர் கொடுப் பதற்கும் நற்கூலி உண்டு" (அஹ்மத், 17195)[8] எனவும் மனைவியுடன் நல்லமுறையில் நடக்காதவரை எச்சரித்து "யா அல்லாஹ்! அனாதை மற்றும் பெண் ஆகிய இரு பலவீனமா னோரின் உரிமையில் பொடுபோக்காக இருப்போருக்கு கஷ்டத்தை ஏற்படுத்துவாயாக" (இப்னு மாஜா, 2982)[9] எனப் பிரார்த்தித்தமையையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

நபியவர்கள் இவ்விடயம் தொடர்பில் நடைமுறை முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள். தனது குடும்பத்தாருடன் மிகவும் மென்மையாகவும் நலினமாகவும் அவர்கள் நடந்து கொண்டார்கள். அஸ்அத் பின் யஸீத் என்பவர் ஆயிஷா (ரழி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் தனது குடும்பத்தவருடன் இருக்கும் போது என்ன செய்வார்கள் என வினவியபோது ஆயிஷா (ரழி) அவர்கள் "நபியவர்கள் தனது குடும்பத்தில் (மனைவியருக்கு அவர்களின்) வேலைகளில் உதவியாக இருப்பார்கள். தொழுகை நேரம் வந்துவிட்டால் தொழுகைக்கா கச் சென்றுவிடுவார்கள்" எனக் குறிப்பிட்டார்கள் (புகாரி, 6039).

மனைவி தனது கணவனை வெறுத்து அவருடன் வாழ முடியாத நிலை தோன்றுமாயின் குல்உ (மஹரை மீள் ஒப்படைத்து கணவரை பிரிதல்) எனும் முறை ஊடாக தனது கணவனை பிரிவதற்கான உரிமையை இஸ்லாம் அவளுக்கு வழங்கியுள்ளது. பின்வரும் சம்பவம் இதற்கான சான்றாகும்.

---

[8]இந்த ஹதீஸ் ஹஸன் லிகய்ரிஹி தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுத் தர்கீப், 1963.

[9]இந்த ஹதீஸ் ஹஸன் லிகய்ரிஹி தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 1015.

“ஸாபித் இப்னு கைஸ் (ரழி) அவர்களின் துணைவியார் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, “இறைத்தூதர் அவர்களே! நான் ஸாபித் அவர்களின் மார்க்கப் பற்றையோ, அவரின் குணத்தையோ பழி சொல்லவில்லை. ஆயினும் நான் இறை நிராகரிப்புக்குரிய செயலைச் செய்து விடுவேனோ என்று அஞ்சுகிறேன்” என்று கூறினார். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், “சரி! அவரின் தோட்டத்தை அவரிடமே திருப்பிக் கொடுத்து விடுகிறாயா?” என்று கேட்டார்கள். அதற்கு அவரும் “ஆம்” என்று கூறினார்கள். பின்னர், (அந்தத் தோட்டத்தை) ஸாபித் அவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார். நபி (ஸல்) அவர்கள் ஸாபித் அவர்களுக்கு உத்தரவிட, அவரும் தம் மனைவியிடமிருந்து பிரிந்துவிட்டார்” (புகாரி, 5276).

அத்துடன் பொருளாதார ரீதியாக ஆணைப் போன்று சுதந்திரமாக தனித்துச் செயற்படுவதற்கான உரிமையை இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கியுள்ளது. எனவே, ஒரு பெண் விற்றல், வாங்குதல், வாடகைக்குப் பெறல், வாடகைக்கு கொடுத்தல், பொறுப்புதாரரை (வகீல்) நியமித்தல், அன்பளிப்புச் செயதல் போன்ற பொருளாதார செயற்பாடுகளில் அவள் ஈடுபட முடியும். அவள் நன்மை தீமைகளை பிரித்தறியத் தெரிந்த புத்தி சுயாதீனம் உள்ளவளாக இருக்கும் வரை இவ்வாறான பொருளாதாரச் செயற்பாடுகளில் அவள் மீது எவ்விதத் தடைகளையும் ஏற்படுத்த முடியாது. இதனையே “அவர்கள் (தங்கள் சொத்தை நிர்வகிக்கும் ஆற்றல்) அறிவை பெற்றுவிட்டதாக நீங்கள் அறிந்தால் அவர்களிடம் அவர்கள் சொத்தை ஒப்படைத்து விடுங்கள்” (4:6) எனும் அல்குர்ஆனிய வசனம் உணர்த்துகிறது.

உம்மு ஹானி∴. பின் அபீ தாலிப் (ரழி) என்ற பெண் இணைவைப்பாளர்களின் ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்த போது அவரது சகோதரர் அலி (ரழி) அவர்கள் அவரை கொன்றேயாக வேண்டும் என உறுதியாக இருந்தார். இவ்விவகாரத்தில் நபியவர்கள் பின்வருமாறு தீர்ப்பளித்தார்கள். “உம்மு ஹானி∴. அவர்களே! நீர் அடைக்கலம் கொடுத்தவருக்கு நாமும் அடைக்கலம் கொடுத்து விட்டோம்” (புகாரி, 3171).

எனவே, யுத்தம் அல்லது சமாதானச் சூழலில் முஸ்லிம் அல்லாதோருக்கு பாதுகாப்பு மற்றும் அடைக்கலம் அளிக்கும் உரிமைகளை அப்பெண்ணுக்கு நபி (ஸல்) அவர்கள் வழங்கினார்கள்.

எனவே, உயர்வான இஸ்லாமிய போதனைகள் மற்றும் இஸ்லாமிய நாகரிகத்தின் நிழலில் முஸ்லிம் பெண் கண்ணியமாகவும் சுயகௌரவத்துடன் தனது மதிப்பைப் பாதுகாத்தவளாக வாழ்கிறாள் எனக் குறிப்பிட முடியும்.

# இஸ்லாமிய நாகரிகத்தில் பணியாட்கள் மற்றும் ஊழியர்களின் உரிமைகள்

## இஸ்லாத்தில் பணியாட்கள் மற்றும் ஊழியர்களின் உரிமைகள் தொடர்பான சில முன்மாதிரிகள்

இஸ்லாம் பணியாட்களையும் ஊழியர்களையும் கண்ணியப்படுத்தியுள்ளது. அவர்கள் தொடர்பில் கரிசனை செலுத்தி, வரலாற்றில் முதல் தடவையாக அவர்களுக்கான பல்வேறு உரிமைகளை அங்கீகரித்துள்ளது. உலகின் தொன் மையான சில மதங்களில் கூலித் தொழில் என்பது அடிமைத்தனம் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டது. வேறுசில மதங்களில் பணிந்து இழிவடைதல் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டது. எனினும் இஸ்லாம் பணியாட்களுக்கு இவ்வாறு உரிமைகளை வழங்கியிருப்பது சமூக நீதியை நிலைநாட்டி கௌரவமிக்க ஒரு வாழ்வை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலாகும். பணியாட்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான இஸ்லாமிய நாகரிகத்தின் உயரிய நோக்குக்கு நபி (ஸல்) அவர்களின் வாழ்வு சிறந்த சான்றாகும். உண்மையில் நபியவர்கள் அவர்களுக்கான பல்வேறு உரிமைகளை உத்தரவாதப்படுதியிருந்தார்கள்.

எஜமான்கள் அல்லது தொழில் வழங்குவோர் தமது பணியாட்களுடன் கண்ணியமாக மனிதநேயத்துடன் பாசமாக நடந்துகொள்ள வேண்டும். அவர்களால் செய்ய இயலாத விடயங்களை அவர்களுக்கு பொறுப்புச் சாட்டக் கூடாது என நபி (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். “உங்களுக்குக் கீழ் உள்ள பணியாட்கள் உங்களின் சகோ தரர்களாவர். அல்லாஹ்தான் அவர்களை உங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கிறான். எனவே ஒருவரின் சகோதரர் அவரின் அதிகாரத்தின் கீழ் இருந்தால் அவர், தாம் உண்பதிலிருந்து அவருக்கும் புசிக்கக் கொடுக்கட்டும். தாம் அணிவதிலிருந்து அவருக்கும் அணியக் கொடுக்கட்டும். அவர்களின் சக்திக்கு மீறிய பணிகளைக் கொடுத்து அவர் களைச் சிரமப்படுத்த வேண்டாம். அவ்வாறு அவர்களை நீங்கள் சிரமமான பணியில் அமர்த்தினால் நீங்கள் அவர்களுக்கு உதவுங்கள்” (புகாரி, 30) எனும் நபிமொழி

இதற்கான சான்றாகும். ஒரு பணியாளர் சகோதரன் எனும் அந்தஸ்தை உடையவர் என இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது பணியாளரின் மேன்மையைக் குறிக்கிறது. இது இஸ்லாமிய நாகரிகம் அல்லாத ஏனைய எந்த நாகரிகத்திலும் நடை முறையில் இருக்காத ஒன்றாகும்.

அதேபோல் தொழில் வழங்குனர் தொழிலாளிக்கு எவ்வித அநியாயமும் தாமதமும் இன்றி அவரது உழைப்புக்கான தகுந்த கூலியைப் பூரணமாக வழங்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தினார்கள். இதற்கு “ஒரு கூலித் தொழிலாளியின்” வியர்வை காய்ந்துவிட முன்னர் அவருக் கான கூலியை வழங்கி விடுங்கள்” (இப்னு மாஜா, 1995)[10] என்ற நபியவர்களின் கூற்று சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அத்துடன் பணியாட்களுக்கு அநியாயமிழைப்பதை இஸ்லாம் எச்சரிக்கிறது. இறைவன் குறிப்பிடுவதாக நபியவர்கள் ஒரு ஹதீஸ் குத்ஸியில் குறிப்பிடும் பின்வரும் விடயம் இங்கு கவனிக்கத்தக்கது “மறுமை நாளில் மூவருக்கெதிராக நான் வழக்காடுவேன் என்று அல்லாஹ் கூறினான். ஒருவன் என் பெயரால் சத்தியம் செய்துவிட்டு, அதில் மோசடி செய்தவன். இன்னொருவன் சுதந்திரமான ஒருவரை விற்று அந்தக் கிரயத்தைச் சாப்பிட்டவன். மூன்றாமவன் ஒரு கூலியாளிடம் வேலை வாங்கிக் கொண்டு கூலி கொடுக்காமல் இருந்தவன்!” (புகாரி, 2227). இந்த நபிமொழியில் ஒரு பணியாளருக்கு அல்லது கூலித் தொழிலாளிக்கு அநியாயம் இழைக்கும் ஒவ்வொருவரையும் அல்லாஹ் கண்காணித்துக் கொண்டு இருப்பதாகவும் மறுமையில் அவருக்கு எதிராக அல்லாஹ் வாதிடுவான் எனவும் நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

அதேபோன்று ஒரு பணியாளரை வேலைக்கு அமர்த்தும் நபர் அப்பணியாளரின் ஆரோக்கியத்துக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் அவரை கஷ்டத்தில் ஈடுபடுத்துவது அல்லது வேலையில் ஈடுபட முடியாதவராக அவர் ஆகிவிடுமளவு

---

[10]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: இர்வாஉல் கலீல், 1498.

அவரைக் கஷ்டத்துக்கு உள்ளாக்குவது கூடாது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) பின்வருமாறு குறிப்பிட்டார்கள். “உமது பணியாளுக்கு நீர் வேலையை இலகுபடுத்திக்கொடுப்பின் மறுமையில் உமது தராசில் அது உமக்கு நற்கூலியாக அமையும்” (இப்னு ஹிப்பான், 4314)[11].

அதேபோல் இஸ்லாம் தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ள உன்னத உரிமைகளில் ஒன்றாக அவருடன் பணிவாக நடந்து கொள்வதை குறிப்பிடமுடியும். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் தனது சமூகத்தினருக்கு பின்வருமாறு ஆர்வமூட்டுகிறார்கள். “தனது பணியாளை தன்னுடன் இணை த்துக் கொண்டு ஒன்றாக உண்பவரும், சந்தைகளில் தனது கழுதையில் ஏறிச் சவாரி செல்பவரும், தனது ஆட்டைக் கட்டிவைத்து தானே பால் கரப்பவரும் பெருமையடித்துக் கொண்டவர் அல்லர்” (அல்அதபுல் முப்ரத், 428)[12].

உண்மையில் நபியவர்களின் வாழ்வும் அவரது அறிவுரைகளை நடைமுறைப்படுத்தும் வண்ணமே அமைந் திருந்தது. இவ்விடயம் தொடர்பில் ஆயிஷா (ரழி) அவர்கள் “இதுவரை நபியவர்கள் தனது கையினால் எந்த ஒன்றுக்கும் அடித்ததில்லை. எந்தப் பெண்ணுக்கும் எந்தப் பணியாள ருக்கும் அடித்ததே இல்லை” (முஸ்லிம், 2328) எனக் கூறினார்கள்.

அதேபோல் ஒருமுறை அபூ மஸ்ஊத் அல்அன்சாரி (ரழி) தனது அடிமைக்கு அடித்த போது இடம்பெற்ற பின்வரும் சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது. “எனக்கு, “அபூ மஸ்ஊத் அவர்களே! அவர் மீது நீர் அதிகாரம் பெற்றிருப்பதை விட அல்லாஹ் உம்மீது அதிகாரம் பெற்றுள்ளான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்” எனும் சத்தம் கேட்டது. உடனே

---

[11]இந்த ஹதீஸ் முர்ஸல் வகையைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல்அர்நாஊத் குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தக்ரீஜு ஸஹீஹ் இப்னு ஹிப்பான், 1438.

[12]இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுல் ஜாமிஃ, 5527.

நான் திரும்பிப் பார்த்தேன். அப்போது அங்கு நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள். அப்போது நான் "அல்லாஹ்வின் தூதரே இறைவனின் திருமுகத்துக்காக அவர் விடுதலையாகி விட்டார்" என்றேன். அப்போது அவர் "நீர் இதனை செய்திருக்காவிடின் உமக்கான நரகம் திறந்து இருக்கும் அல்லது உம்மை நரக நெருப்பு தீண்டி இருக்கும்" என்றார்கள்" (முஸ்லிம், 1659).

இச்சம்பவத்துக்கிணங்க, பணியாளருக்கு அடித்தல், குத்துதல், கண்ணத்தில் அறைதல் அல்லது உதைத்தல் போன்றவை அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய தூதரும் முற்றாக தடுத்த, பணியாளரை இழிவுபடுத்தும் செயல்களாகும். எனவேதான் குறித்த அடிமை அவரது உரிமையிலிருந்து தடுக்கப்படுதல் (அவரிடத்தில் இருந்து விடுதலையாதல்) என்ற கல்நெஞ்சம் கொண்ட எஜமானனுக்கு வழங்க முடியுமான உச்சபட்ச தண்டனை இங்கு அவருக்கான பரிகாரமாகக் குறிப்பிட ப்பட்டுள்ளது. இது இஸ்லாத்தினதும் இஸ்லாமிய நாகரிகத்தினதும் உன்னதத் தன்மையை பிரதிபலிக்கிறது.

அதேபோன்று நபியவர்களின் சேவகராக இருந்த அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் அணுகுமுறை தொடர்பில் பின்வருமாறு சாட்சியம் கூறுகிறார்கள்.

"நபி (ஸல்) அவர்கள் மக்களுள் மிக அழகிய நற்குணம் கொண்டவராக இருந்தார். ஒரு நாள் ஒரு தேவை நிமித்தம் என்னை அனுப்பி இருந்தார்கள். அப்போது நான் "அல்லாஹ் மீது ஆணையாக நான் போகமாட்டேன்" என்றேன். எனினும் என் உள்ளத்தில் நபி (ஸல்) அவர்கள் எனக்குச் சொன்ன விடயத்திற்காக நான் போக வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். பின்னர் நான் அத்தேவை நிமித்தம் புறப்பட்டுச் சென்றேன். அப்போது சில சிறுவர்களைக் கடந்து சென்றேன். அவர்கள் சந்தையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது நபியவர்கள் எனக்குப் பின்னால் இருந்து என் பிடரியைப் பிடித்தார்கள். உடனே நான் திரும்பி பார்த்தேன். அப்போது அவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர் என்னிடம் அன்பாக "அனஸே! நான் உமக்குக் கூறிய இடத்துக்கு நீங்கள் செல்லுங்கள்"

என்றார். நானும் “ஆம், நான் அங்கு போகிறேன் அல்லாஹ்வின் தூதரே!” என்றேன். தொடர்ந்து அனஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள், “அல்லாஹ் மீது ஆணையாக! அவருக்கு நான் ஏழு வருடங்கள் அல்லது ஒன்பது வருடங்கள் சேவகம் செய்து இருக்கிறேன். அக்காலப்பகுதியில் நான் செய்த ஏதேனும் ஒன்றுக்காக ஏன் இவ்வாறு இவ்வாறு செய்தாய்? என்று அவர் கேட்டதே இல்லை. அதேபோன்று நான் செய்யாமல் விட்ட ஏதேனும் ஒன்றுக்காக “நீ இவ்வாறு இவ்வாறு செய்திருக்கலாமே” என்று அவர் கூறி நான் அறிந்ததில்லை” (முஸ்லிம், 2310; அபூ தாவூத், 4773).

நபியவர்கள் தனக்கு சேவகம் புரிந்தோரின் திருமணம் தொடர்பில் கூட கரிசனையுடன் செயற்பட்டிருப்பது அவர்கள் உடனான அவரது அக்கறையை தெளிவுபடுத்துகிறது இவ்விடயம் தொடர்பில் ரபீஆ பின் க.்.ப் அல்அஸ்லமி என்ற நபித்தோழர் குறிப்பிடும் விடயம் கவனிக்கத்தக்கது.

நான் நபி (ஸல்) அவர்களுக்கு சேவகம் செய்து கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் “ரபீஆவே! நீர் திருமணம் முடிப்பதில்லையா?” என்று என்னிடம் கேட்டார்கள். அப்போது நான் “இல்லை, அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ்வின் தூதரே! நான் திருமணம் முடிக்க விரும்ப வில்லை. மனைவியின் தேவையை நிவர்த்தி செய்வதற்கு என்னிடம் எதுவுமில்லை. அத்துடன் உம்மை விட்டு எந்த ஒன்றும் என்னை திசை திருப்பி விடக்கூடாது என நான் விரும்புகிறேன்” என்றேன். அப்போது நபியவர்கள் என்னை சற்று நேரம் கண்டுகொள்ளாமல் இருந்தார்கள். சிறிது நேரத்தின் பின்னர் என்னிடம் “ரபீஆவே! நீர் திருமணம் முடிப்பதில்லையா?” என்றார். அப்போது நான் “இல்லை, அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதரே! நான் திருமணம் முடிக்க விரும்பவில்லை. மனைவியின் தேவையை நிவர்த்தி செய்வதற்கு என்னிடம் எதுவுமில்லை. அத்துடன் உம்மை விட்டு எந்த ஒன்றும் என்னை திசை திருப்பி விடக்கூடாது என நான் விரும்புகிறேன்” என்றேன். பின்னர் சற்று நேரம் நபி (ஸல்) அவர்கள் என்னை கண்டுகொள்ளாமல் இருந்தார்கள். பின்பு நானே சற்று யோசித்துவிட்டு, “அல்லாஹ் மீது ஆணையாக, அல்லாஹ்வின்

தூதரே! இவ்வுலகிலும் மறுமையிலும் எனக்கு நலவாக அமையும் விடயம் தொடர்பில் நீரே மிக அறிந்தவர்" என்றேன். அப்போது "நபியவர்கள் ஏற்கனவே கேட்ட விடயத்தை மூன்றாவது முறையும் கேட்கமாட்டாரா!! அவ்வாறு கேட்டால் நான் நிச்சயம் "ஆம்" என்றே சொல்லி விடுவேன் என்று என் மனதுக்குள்" நானே கூறிக்கொண்டேன். உடனே நபியவர்கள் மூன்றாவது முறையாகவும் ரபீஆவே! "நீர் திருமணம் முடிப்பதில்லையா?" என்றார். நான் உடனே "ஆம், அல்லாஹ்வின் தூதரே! நீர் விரும்பியவாறே எனக்குக் கட்டளையிடுங்கள்" என்றேன். அப்போது நபியவர்கள் என்னிடம் ஒரு குடும்பத்தைக் குறிப்பிட்டு அந்தக் குடும்பத்த வர்களிடம் செல்லுங்கள்" என்றார்கள் (ஹாகிம், 2756).

உண்மையில் நபி (ஸல்) அவர்கள் தனக்குப் பணிவிடை செய்த முஸ்லிம் அல்லாதவர்களுடனும் அன்பாக நடந்து கொண்டமையானது தொழிலாளர்களுடனும் பணியாளர்களு டனும் நடந்துகொள்ள வேண்டிய முறை தொடர்பான இஸ்லாமிய நாகரிகத்தின் மகத்துவத்தை வெளிப்படுத்துகிறது. தன்னிடம் சேவகராகப் பணிபுரிந்த யூத மதத்தைச் சார்ந்த ஒரு சிறுவனுடனான நபியவர்களின் அணுகுமுறை இங்கு குறிப்பிடத்தக்கது. அச்சிறுவன் கடுமையாக நோயுற்று இருந்தான். நபியவர்கள் தொடர்ந்து அச்சிறுவனை நோய் விசாரித்து அவனது நிலை தொடர்பில் கேட்டறிந்து வந்தார்கள். ஒரு முறை அச்சிறுவன் மரணிக்கும் தருவாயில் இருக்கும் போது நபி (ஸல்) அவர்கள் அவனைச் சந்திக்கச் சென்றிருந்தார்கள். அவனின் தலைப்பகுதியில் நபியவர்கள் அமர்ந்து கொண்டார்கள். பின்பு இஸ்லாம் தொடர்பில் அச்சிறுவனுக்கு தெளிவுபடுத்தினார்கள். பின்பு அச்சிறுவன் கேள்விக்குறியுடன் தனது தந்தையைப் பார்க்கலானான். அப்போது அவர் அவனிடம் அபுல் காஸிமுக்கு (அதாவது முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு) கட்டுப்படு" எனக்கூற அச்சிறுவன் இஸ்லாத்தைத் தழுவினான் பின்னர் அச்சிறுவனின் உயிர் பிரிந்துவிட்டது. அப்போது நபி (ஸல்) அவர்கள் "அவனை நரகிலிருந்து பாதுகாத்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்" என்று கூறிக்கொண்டு வெளியே வந்தார்கள்" (புகாரி, 1356).

மேற்கூறப்பட்டவை பணியாளர்கள் மற்றும் வேலையாட்களின் உரிமைகள் தொடர்பாக இஸ்லாத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில அடிப்படைகள் ஆகும். உலகம் முழுவதும் அநியாயமும் அடக்குமுறையும் சர்வாதிகாரமும் நிறைந்திருந்த காலப்பகுதி என அறியப்பட்டிருந்த நேரத்தில் இஸ்லாத்தின் உன்னத தூதர் நபி (ஸல்) அவர்கள் தனது அறிவுரைகள் மற்றும் செயற்பாடுகள் ஊடாக இவற்றை நடைமுறைப்படுத்தினார்கள். உண்மையில் இவ்விடயங்கள் இஸ்லாம் மற்றும் முஸ்லிம் களின் நாகரிகம் எவ்வளவு தூரம் மனித நேயத்துடனான உச்ச நிலையை அடைந்திருந்தது என்பதற்கான சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

# நோயாளிகள் மற்றும் விசேட தேவையுடையோரின் உரிமைகள்

## அறிமுகம்

நோயுற்றோர் மற்றும் விசேட தேவையுடையோருடன் அக்கறையுடன் செயற்படுவதில் இஸ்லாத்துக்கும் இஸ்லாமிய நாகரிகத்துக்கும் ஓர் தனித்துவமான பார்வை உண்டு. இஸ்லாத்தின் கடமைகளுள் சிலவற்றில் அவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருப்பது இதன் ஆரம்பப் படிநிலை ஆகும். எடுத்துக்காட்டாக "குருடர் மீதும் குற்றமில்லை. முடவர் மீதும் குற்றமில்லை. நோயாளியின் மீதும் குற்றமில்லை" (24:61; 48:17) எனும் வசனங்களைக் குறிப்பிட முடியும். அத்துடன் அவர்களின் உள்ளங்களில் தன்னம்பிக்கையை வளர்த்தல் மற்றும் அவர்களின் உடல், உள உரிமைகள் தொடர்பில் கரிசனையுடன் செயற்படல் என்பவை இதன் இறுதிப் படிநிலை எனலாம்

## நோயாளிகளுடனான நபி (ஸல்) அவர்களின் அணுகுமுறை

தனது பல்வேறு வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் யாரேனும் ஒருவர் நோயுற்றுள்ளார் என்ற செய்தி கிடைத்தவுடன் விரைந்து அவரது வீட்டுக்குச் சென்று அவரை நோய் விசாரிப்பவராக நபி (ஸல்) அவர்கள் இருந்தமையை எம்மால் அவதானிக்க முடிகிறது. நபியவர்கள் தன்னை வருத்தி அல்லது நிர்ப்பந்தத்தில் அவ்வாறு நோய் விசாரிக்கச் சென்றதாகத் தெரியவில்லை. எனினும், குறித்த நோயாளி விடயத்தில் அவரை நலம் விசாரிப்பது தன் மீதுள்ள கடமை என்று உணர்ந்தமையினாலேயே நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு இருந்தார்கள். யாரேனும் ஒருவர் நோயுற்றால் அவரை நலம் விசாரிப்பது அவர் மீதான உரிமைகளில் ஒன்றாகும் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் என்பது இக்கருத்தின் உண்மை நிலையை நன்கு உறுதிப்படுத்துகிறது. இதற்கு "ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து… நோயாளியை நலம் விசாரிப்பது…" (புகாரி, 1240) எனும் நபிமொழி சான்றாகும்.

சிறந்த போதனையாளராகவும் முன்மாதிரியாகவும் இருந்த நபி (ஸல்) அவர்கள் நோயாளிக்கு ஏற்படும் நெருக்கடி மற்றும் அவரது நோய் ஆகியவற்றை இலகுபடுத்த முயன்றுள்ளார்கள். அத்துடன் எவ்வித கஷ்டமும் இன்றி குறித்த நோயாளிக்கான தனது ஆதரவு, அன்பு, இரக்கம் போன்றவற்றை வெளிப் படுத்துபவராக இருந்தார்கள். இது நோயாளி மற்றும் அவரது குடும்பத்தை மகிழ்ச்சியூட்டும் விடயமாக அமைந்து விடுகிறது.

இவ்விடயம் தொடர்பில் அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) கூறும் பின்வரும் சம்பவம் இங்கு கவனித்தக்கது:

ஸஅத் இப்னு உபாதா (ரழி) நோயுற்றபோது நபி (ஸல்) அவர்கள், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரழி), ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரழி), அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரழி) ஆகியோரோடு நோய் விசாரிக்கச் சென்றார்கள். வீட்டில் நுழைந்த போது (ஸஅத் இப்னு உபாதாவின்) குடும்பத்தினர் அவரைச் சூழ்ந்திருப்பதைக் கண்டதும், என்ன? இறந்து விட்டாரா? எனக் கேட்டார்கள். இல்லை நபி அவர்களே! என்றனர். நபி (ஸல்) அவர்கள் அழலானார்கள். அவர்களின் அழுகையைக் கண்ட மக்களும் அழத் தொடங்கினர். பின் நபி (ஸல்) அவர்கள், (மக்களே!) நீங்கள் (செவி சாய்த்துக்) கேட்க மாட்டீர்களா? நிச்சயமாகக் கண்கள் அழுவதாலும் உள்ளம் கவலை கொள்வதாலும் அல்லாஹ் தண்டிப்பதில்லை. பின்பு, தம் நாவின் பால் சைகை செய்து எனினும் இதன் காரணமாக த்தான் தண்டனையோ அருளோ வழங்குகிறான். நிச்சயமாகக் குடும்பத்தினர் (ஒப்பாரி வைத்து) அழுவதால் மய்யித் வேதனை செய்யப்படுகிறது" என்று கூறினார்கள் (புகாரி, 1304).

அத்துடன் நோயாளிகள் பிரார்த்திப்பவராகவும் அவருக்கு ஏற்பட்டுள்ள நோயின் காரணமாக நற்கூலியும் வெகுமானமும் கிடைக்கப்பெறும் எனவும் அவருக்கு நன்மாராயம் கூறுபவ ராகவும் நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள். இதனூடாக ஓரளவு நிலைமை இலகுவாகும். அத்துடன் நோயாளிக்கு ஓரளவு ஆறுதலாகவும் அது அமையும்.

உம்முல் அலா (ரழி) பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

“நான் நோயுற்றிருந்த போது நபியவர்கள் என்னை நோய் விசாரிக்க வந்தார்கள். அப்போது என்னிடம் “உம்முல் அலாவே! நீர் நன்மாராயம் பெற்றுக் கொள்ளுங்கள். நெருப்பு தங்கம் வெள்ளியில் இருக்கும் கரைகளை (துருவை) எவ்வாறு போக்குகிறதோ அவ்வாறு ஒரு முஸ்லிமுக்கு ஏற்படும் நோயின் ஊடாகவும் அவரது பாவங்களை அல்லாஹ் போக்குகிறான்” என்றார்கள்” (அபூ தாவூத், 3092)[13].

அத்துடன் நோயாளிக்குத் தேவையான சலுகைகளை வழங்கி அவருக்கு எவ்வித கஷ்டத்தையும் ஏற்படுத்தாமல் இருக்கவே நபியவர்கள் விரும்பினார்கள். இவ்விடயம் தொடர்பில் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“ஒருமுறை நாம் ஒரு பிரயாணத்தில் இருந்தோம். அப்போதும் எங்களோடு இருந்த ஒரு மனிதருக்கு கல்லடி பட்டு அவரது தலையில் காயம் ஏற்பட்டுவிட்டது. பின்னர் அவர் குளிப்பு கடமையானவராக மாறிவிடுகிறார். அப்போது தனது தோழர்களிடம் “எனக்கு தயம்மும் செய்வதற்கான சலுகை உண்டா?” என்று கேட்டார். அப்போது அங்கிருந்த தோழர்கள் “உமக்கு நீரைப் பயன்படுத்த முடியுமாக உள்ளமையினால் தயம்மும் செய்வதற்கான சலுகை இல்லை” என்று கூறி விட்டனர். இதனால் அவர் கடமையான குளிப்பை குளித்த உடனே இறந்து விட்டார். பின்னர் நாங்கள் பிரயாணத்தை முடித்து நபியவர்களிடம் வந்தோம். நபியவர்களிடம் இச்செய்தி சொல்லப்பட்டது. அப்போது நபியவர்கள் கோபமாக “அவரை அவர்கள் கொன்று விட்டார்கள். அல்லாஹ் அவர்களை கொன்று விடுவான். அவர்கள் அறியாதவர்களாக இருந்தால் அவர்கள் கேட்டிருக்கக் கூடாதா?” மடமைக்கு நிவாரணம் தெரிந்தவரிடம் கேட்பதே ஆகும். அவர் (கடமையான குளிப்புக்குப் பதில்) தயம்மும் செய்து பின்னர் தனது

[13]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுத் தர்கீப், 3427.

காயத்தைத் துணியால் கட்டி அதன் மீது மஸ்ஹு செய்து ஏனைய உறுப்புகளை கழுவி இருந்தாலே போதுமானது" என்றார்கள்". (அபூ தாவூத், 336)[14].

அதுமாத்திரமன்றி நோயாளியின் தேவைக்கு விடை அளிப் பவராகவும் அவருடன் சென்று அவரது தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பவராகவும் நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள். ஒரு முறை ஒரு பெண் நபி (ஸல்) அவர்களிடம் வந்தாள். அவளது சிந்தனையில் ஏதோ ஒரு கோளாறு இருந்தது. அவள் நபி (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! உங்களிடம் எனக்கு ஒரு தேவை உள்ளது" என்றாள். அப்போது நபியவர்கள், "பெண்ணே! உனது தேவையை நிறைவேற்ற (நான்) எவ்வழியாகப் போக வேண்டும் என நீ விரும்புகிறாய்?" என்றார்கள். பின்னர் அவள் தனது தேவையை நிறைவேற்றும் வரை அவளுடன் சில பாதைகளினூடாகச் சென்றார்கள்"[15] (முஸ்லிம், 2326).

அதேபோன்று நோயாளிகளும் விசேட தேவையுடையோரும் தமக்கான சிகிச்சைகளை செய்து கொள்வதற்கான உரிமையையும் நபியவர்கள் வழங்கியிருந்தார்கள். உண்மை யில் மனித உடலின் வெளிப்பகுதியும் உட்பகுதியும் எவ்வித நோயுமற்று இருப்பது இஸ்லாத்தின் உயரிய இலக்குகளில் ஒன்றாகும். இவ்விடயம் தொடர்பில் நோய்க்கான மருந்துகளை செய்து கொள்வது தொடர்பில் சில நாட்டுப்புற அரபிகள் நபி (ஸல்) அவர்களிடம் வினவிய போது "அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் நோய்க்கான மருந்துகளை செய்து

---

[14]இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 336.

[15] அதாவது அவளது பிரச்சினைக்கான பொருத்தமான தீர்வை வழங்குவதனூடாக அவளது தேவையை நிறைவேற்றி வைப்பதற்கா கவே நபி (ஸல்) அவர்கள் மக்களின் பயன்பாடுள்ள ஒரு தனியான பாதையில் அவளுடன் நின்றார்கள். அந்நியப் பெண்ணுடன் தனித்திருப்பதாக இது அமையவில்லை. ஏனெனில் மக்கள் நடமாடும் பாதையில் அவ்விருவரையின் அவர்கள் பார்க்கும் வகையிலேயே இது இருந்தது. எனினும் அவள் பேசும் விடயம் அவர்களுக்கு கேட்கவில்லை. அவளது பேச்சு மற்றவர்களுக்குக் கேட்காத வகையிலேயே அமைந்திருந்தது. பார்க்க: நவவி, அல்மின்ஹாஜ் பீ ஷர்ஹி ஸஹீஹ் முஸ்லிம், 15/83.

கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் முதுமையைத் தவிர அனைத்து வகை நோய்களுக்கும் மருந்துகளை ஏற்படுத்தியிருக்கிறான்" (இப்னு மாஜா, 2789)[16] என்று குறிப்பிட்டமை இதற்கான சிறந்த சான்றாகும்.

அதேபோல் ஒரு முஸ்லிம் பெண் முஸ்லிம்களில் ஆணுக்கு சிகிச்சை அளிப்பதையும் நபி (ஸல்) அவர்கள் தடை செய்யவில்லை. கந்தக் யுத்தத்தில் ஸ.்.த் பின் முஆத் என்ற நபித்தோழரை ஈட்டி தாக்கியபோது அவருக்கு சிகிச்சை அளிக்க அஸ்லம் கோத்திரத்தை சார்ந்த ருபைதா என்ற பெண்ணை நபியவர்கள் நியமித்திருந்தமை இதற்கு எடுத்துக் காட்டாகும். அதே போன்று அப்பெண் காயப் பட்டோருக்கு தொடர்ந்து மருத்துவம் செய்து வந்தார். அத்துடன் முஸ்லிம்களில் (அசையாச்) சொத்துக்கள் இருப்போருக்கு (அவர்களிடம்) எவ்வித வெகுமதியும் எதிர்பார்க்காமல் (இறைவனிடம் வெகுமதியை எதிர்பார்த்து) சேவகம் செய்து வந்தார் (அல்அதபுல் முப்ரத், 1129; அத்தபகாதுல் குப்ரா, 395)[17].

நடைமுறையில் நபி (ஸல்) அவர்கள் அம்ர் பின் ஜமூஹ் எனும் நபித்தோழருக்கு உதவியாளராகவும் ஓதிப்பார்ப் பவராகவும் இருந்தார்கள். அம்ர் விசேட தேவையுடையவராக இருந்தார். அவர் கடுமையான கால் ஊனமுற்றவராக இருந்தார். அவரது நான்கு புதல்வர்களும் நபியவர்களுடன் பல்வேறு யுத்தங்களில் கலந்து கொண்டவர்களாக இருந்தனர். எனினும் உஹத் யுத்தத்தின்போது அவர்கள் அம்ருவை தடுக்க முயன்றனர். அப்போது அம்ர் நபியவர்களிடம் வந்து "எனது புதல்வர்கள் உங்களுடன் நான் வருவதை தடுக்க முனைகிறார்கள். அல்லாஹ் மீது ஆணையாக எனது இந்த நொண்டிக்காலுடன் நான் சுவனத்தில் நடமாட விரும்புகிறேன்"

---

[16]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுல் ஜாமி.்., 2930.

[17]இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 1158.

என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அம்ரிடம், “உம்மைப் பொருத்தவரை அல்லாஹ் உமக்கு சலுகை அளித்திரு க்கிறான். எனவே, நீர் போராட வேண்டிய கடமை இல்லை” என்றார்கள். அத்துடன் அவரது புதல்வர்களிடம் “நீங்கள் ஏன் அவரை தடுக்க முனைகிறார்கள்? அவருக்கு அல்லாஹ் இறை பாதையில் மரணிக்கும் பாக்கியத்தை அருளக் கூடும்” என்றார்கள். பின்னர் உஹத் யுத்தத்தில் நபி (ஸல்) அவர்க ளுடன் சென்று அவர் கொல்லப்பட்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள் “என் ஆன்மா எவன் கை வசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, அல்லாஹ் மீது ஏதேனும் ஒன்றை சத்தியம் செய்தால் அதனை நிறைவேற்றுவோர் உங்களில் நிச்சயம் உள்ளனர். அம்ர் அவர்களில் ஒருவராவார். நொண்டிக்காலுடன் சுவனத்தில் அவர் நடமாடுவதை நான் கண்டேன்” என்றார்கள் (இப்னு ஹிப்பான், 6985; ஸீரது இப்னி ஹிஷாம், 3/23)[18].

இஸ்லாத்திலும் இஸ்லாமிய நாகரிகத்தின் நிழலிலும் நோயாளிகள் மற்றும் விசேட தேவையுடையோரின் நிலை இவ்வாறு தான் இருந்தது.

[18]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: பிக்ஹுஸ் ஸீரா, 267.

# இஸ்லாமிய நாகரிகத்தில் சிறுபான்மையினரின் உரிமைகள்

## அறிமுகம்

இஸ்லாமிய சட்டவாக்க நிழலில் முஸ்லிம் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினர் வேறு எந்த சட்டங்களிலும் நாடுகளிலும் இல்லாத பல்வேறு உரிமைகளையும் தனித்துவங்களையும் பெற்றுக்கொண்டனர். அதற்கான பின்புலமாக முஸ்லிம் சமூகத்துக்கும் முஸ்லிமல்லாத சிறுபான்மையினருக்கும் இடையிலான தொடர்பு தெய்வீக அடிப்படையில் அமைந்ததாகும் என்ற தத்துவத்தை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

“மார்க்க (விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான்” (60:8).

முஸ்லிமல்லாதோருடன் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான ஒழுக்கவியல் மற்றும் சட்டவியல் அடிப்படையை இவ்வசனம் வகுத்துள்ளது. தம்மீது எவ்வித பகைமையுமின்றி இருப்பவருடன் நல்ல முறையிலும் நீதமாகவும் நடந்து கொள்வதே அவ்வடிப்படையாகும். இவை இஸ்லாத்துக்கு முன்னர் மனித சமூகம் அறிந்திராத அடிப்படைகளாகும். உண்மையில் இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னர் கூட இவ்வடிப்படைகளைக் கடைபிடிக்கத் தவறி பல்வேறு நூற்றாண்டுகள் மனித சமூகம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றுவரை பல்வேறு நவீன சமூகங்களில் இவற்றை உத்தரவாதப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் மனித சமூகம் தொடர்ந்து முயற்சித்த போதும் மனோ இச்சை, கோத்திர வாதம் மற்றும் இனவாதம் போன்றவற்றால் இது எட்டாக்கனியாகவே உள்ளது.

## சிறுபான்மையினருக்கான நம்பிக்கை சுதந்திரத்துக்கான உரிமை

முஸ்லிமல்லாத சிறுபான்மையினருக்கான பல்வேறு உரிமைகளையும் சிறப்பம்சங்களையும் இஸ்லாமிய சட்ட வாக்கம் உத்தரவாதப்படுத்தியுள்ளது. நம்பிக்கை சுதந்திரத துக்கான உத்தரவாதம் அவற்றுள் மிக முக்கியமானதாகும். இதனையே "மார்க்கத்தில் எவ்வித நிர்பந்தமும் இல்லை" (2:256) என்ற அல்குர்ஆனிய வசனம் உணர்த்துகிறது. யெமனில் இருந்த வேதம் கொடுக்கப்பட்டோரை இஸ்லாத்துக்கு அழைத்து நபி (ஸல்) அவர்கள் எழுதிய கடிதத்தில் இவ்விடயம் செயல் வடிவம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. இக்கடிதத்தில் "யாரேனும் ஒரு யூதர் அல்லது கிறிஸ்தவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் அவர் முஸ்லிம்களுள் ஒருவரேயாவார். முஸ்லிம்களுக்கான அனை த்து உரிமைகளும் அவருக்கு உண்டு. அத்துடன் அவர்கள் மீதுள்ள அனைத்து கடமைகளும் அவர் மீதும் உண்டு. மேலும் யார் யூத மதத்தின் மீது அல்லது கிறிஸ்தவ மதத்தின் மீது இருக்கிறாரோ அதற்காக அவர் சோதிக்கப்பட மாட்டார்" (அஸ்ஸுனன் அல்குப்ரா லில்பய்ஹகி, 18674) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாமிய சட்டவாக்கம் முஸ்லிம் அல்லாதவர் தனது நம்பிக்கை சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான உரிமையை மாத்திரம் வழங்குவதோடு நின்றுவிடாமல் மனிதர்கள் என்ற வகையில் அவர்கள் வாழ்வதற்கான உரிமையையும் கவனத்தில் கொண்டு அவர்களின் வாழ்வை பாதுகாப் பதற்கான பல்வேறு சட்டதிட்டங்களையும் அது அறிமுகப் படுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் "(இஸ்லாமிய அரசுடன் அமைதி ஒப்பந்தம் செய்து அதன் கீழ் வாழ்ந்து வரும்) ஓர் ஒப்பந்தப் பிரஜையைக் கொன்று விடுபவன் சொர்க்கத்தின் வாடையைக் கூட நுகர மாட்டான்" (புகாரி, 3166) எனும் நபிமொழி சுட்டிக்காட்டத்தக்கது.

## முஸ்லிம் அல்லாதோருக்கு அநியாயம் இழைத்தல் தொடர்பான எச்சரிக்கை

முஸ்லிமல்லாதோருக்கு அநியாயம் இழைத்தல் அல்லது அவர்களின் உரிமைகளைப் பறித்தல் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள். சிறுபான்மையினரின் உரிமை விடயத்தில் அத்துமீறி நடப்போருக்கு எதிராக தானே வாதிடுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதற்கு "முஸ்லிம் பிரதேசத்தில் உடன்படிக்கை செய்து கொண்டு வாழும் முஸ்லிமல்லாதவருக்கு அநீதி இழைத்தவர், அவரது உரிமைகளைப் பறித்தவர், அவரது சக்திக்கு மீறி அவரை கஷ்டப்படுத்தியவர் அல்லது அவரது விருப்பமின்றி அவரிடத்தில் இருந்து ஏதோ ஒன்றை அபகரித்தவர் போன்றோருக்கு எதிராக மறுமை நாளில் நான் வாதிடுபவராக இருப்பேன்" (அபூ தாவூத், 3052)[19] என்ற நபிமொழி சான்றாகும்.

கைபர் பகுதியில் அன்சாரிகளுடன் இடம்பெற்ற நிகழ்வு இவ்விடயம் தொடர்பான நபி (ஸல்) அவர்களின் நடைமுறை வழிகாட்டலுக்கான உன்னத எடுத்துக்காட்டாகும். குறித்த யுத்தத்தில் அப்துல்லாஹ் பின் ஸஹ்ல் அல்அன்சாரி (ரழி) என்ற நபித்தோழர் யூதர்கள் வாழும் பகுதி ஒன்றில் கொல்லப்பட்டார். இவ்விடத்தில் யூதர்களில் ஒருவரே அவரைக் கொன்றிருப்பதற்கான அதிக வாய்ப்பு இருந்தது. எனினும் இந்த யூகத்துக்கான எவ்வித தெளிவான ஆதாரங்களும் இருக்க வில்லை. இப்பின்னணியிலேயே நபி (ஸல்) அவர்கள் யுதுர்களில் எவரையும் எவ்வகையிலும் தண்டிக்கவில்லை. எனினும் அவர்களில் எவரும் அதனைச் செய்யவில்லை எனப் பகிரங்கமாக சத்தியம் செய்யும் படி மாத்திரமே பணித்தார்கள். இந்நிகழ்வு தொடர்பில் ஸஹ்ல் பின் அபீ ஹஸ்மா என்பவர் பின்வருமாறு கூறுகிறார்.

"என் குலத்தாரில் சிலர் கைபர் நோக்கிச் சென்றார்கள். அங்கே அவர்கள் தனித் தனியாகப் பிரிந்துவிட்டார்கள். அவர்களில் ஒருவர் கொல்லப்பட்டுக் கிடக்கக் கண்டனர். அவர் கிடந்த இடத்தில் இருந்த (யூத) மக்களிடம் அவர்கள்,

---

[19] இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுத் தர்கீப், 3006.

“எங்கள் நண்பரை நீங்கள் (அநியாயமாகக்) கொன்று விட்டீர்கள்” என்று கூறினர். (அந்த யூத) மக்கள் “நாங்கள் (அவரைக்) கொல்லவுமில்லை. (அவரைக்) கொலை செய்தவர் யார் என எங்களுக்குத் தெரியவுமில்லை” என்று கூறினர். எனவே, (கைபர் சென்ற) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, “இறைத்தூதர் அவர்களே! நாங்கள் கைபருக்குச் சென்றோம். அங்கு எங்களில் ஒருவர் கொல்லப்பட்டுக் கிடக்கக் கண்டோம்” என்று கூறினர். அப் போது (பேச்சைத் துவங்கிய அப்துர் ரஹ்மான் இப்னு ஸஹ்ல் (ரழி) அவர்களை நோக்கி) நபி (ஸல்) அவர்கள், “பெரியவர்களைப் பேசவிடு! பெரியவர்களைப் பேசவிடு!” என்று கூறினார்கள். பிறகு (கொல்லப்பட்டவர்களின் நண்பர்களைப் பார்த்து) நபி (ஸல்) அவர்கள், “அவரைக் கொலை செய்தவர் யார் என்பதற்குச் சாட்சி கொண்டுவாருங்கள்!” என்று கூறினார்கள். அவர்கள், “எங்களிடம் சாட்சி இல்லை” என்று கூறினர். நபி (ஸல்) அவர்கள், “அவ்வாறாயின் (யூதர்களான) அவர்கள் சத்தியம் செய்யட்டும்” என்றார்கள். அதற்கு (கொல்லப்பட்டவரின் நண்பர்களான) அவர்கள், “யூதர்களின் சத்தியத்தை நம்பி) ஏற்றுக் கொள்ள மாட்டோம்” என்று கூறினர். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கொலையுண்டவரின் உயிரிழப்பை வீணாக்க விரும்பாமல் தாமே நூறு தர்ம ஒட்டகங்களை இழப்பீட்டுத் தொகையாக வழங்கினார்கள்” (புகாரி, 6898).

யாராலும் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத ஒன்றை நபியவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். இந்நிகழ்வில் குறித்த கொலைக்கான இழப்பீடை (தியா) முஸ்லிம்களில் சொத்துக்களில் (பைத்துல்மாலில்) இருந்து வழங்கும் பொறு ப்பை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இது அன்ஸாரிகளின் உள்ளத்தைச் சாந்தப்படுத்துவதற்கும் யூத மதத்தவர்கள் அநியாயம் இழைக்கப்படாமல் இருப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட முடிவாகும். எனவே, ஒரு யூத மதத்தை சார்ந்தவர் மீதும் சந்தேகத்தின் அடிப்படையில் எவ்வித தண்டனையும் நடைமுறைப்படுத்தப்பட்டு விடக்கூடாது என்ற வகையில் இந்நிகழ்வுக்கான இழப்பீட்டுச் சுமையை இஸ்லாமிய அரசே பொறுப்பேற்றது!

## முஸ்லிம் அல்லாதோரின் சொத்துக்களைப் பாதுகாத்தல்

இஸ்லாம் முஸ்லிம் அல்லாதோரின் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. அதாவது முஸ்லிம் அல்லாதோரின் சொத்துக்களை அபகரிப்பது அல்லது எவ்வித உரிமையும் இன்றி அவற்றின் மீது ஆக்கிரமிப்புச் செலுத்துவது போன்றவற்றை இஸ்லாம் முற்றாக தடுத்துள்ளது. உதாரணமாக: திருடுதல், கொள்ளையடித்தல், அழித்தல் அல்லது ஏதேனும் ஒரு வழியில் அநீதியிழைத்தல் என்று கருதப்பட முடியுமான அனைத்து வகை செயற்பாடுகளையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. (கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த) நஜ்ரான் பிரதேச வாசிகளுடனான நபியவர்களின் உடன்படிக்கை இதற்கான சிறந்த நடைமுறை உதாரணம் ஆகும். இவ்வுடன்படிக்கையில் "நஜ்ரான் வாசிகளுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் அல்லாஹ்வின் பாதுகாப்பு உண்டு. அவர்களின் சொத்துக்கள், சமயம், பொருட்கள் போன்றவற்றுக்கும் அவர்களிடம் இருக்கும் ஏதோ சிறிய அல்லது பெரிய விடயத்துக்கும் இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் பாதுகாப்பு உத்தரவாதம் உண்டு" (தலாஇலுந் நுபுவ்வா லில்பய்ஹகி, 5/389).

முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினரின் இயலாமை, முதுமை, அல்லது வறுமை நிலைகளின் போது நாட்டின் திரை சேரியிலிருந்து (பைதுல் மால்) இஸ்லாமிய அரசு தேவையான செலவீனங்களை பொறுப்பேற்க வேண்டும் என்ற வழிகாட்டல் அவர்களுக்கான மிக உன்னத உரிமைகளில் ஒன்றாகும். இதனை "உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்புதாரியாவர். உங்களில் ஒவ்வொருவரும் அவரது பொறுப்புகள் குறித்து (மறுமையில்) வினவப்படுவார்" (புகாரி, 5200) எனும் நபிமொழிக்கிணங்க முஸ்லிம்களைப் போன்றே முழுமையாக முஸ்லிமல்லாத சிறுபான்மையினரும் இஸ்லாமிய சாம் ராஜ்யத்தின் குடிமக்களேயாவர். எனவே, இறைவன் முன்னிலையில் குறித்த இஸ்லாமிய சாம்ராஜ்யம் அம்மக்கள் தொடர்பிலும் வினவப்படுவார்கள் எனும் நோக்கில் கவனத்தில் கொள்ள முடியும்.

இவ்விடயம் தொடர்பில் ஸஈத் பின் முஸய்யப் (ரஹ்)[20] கூறுவதாக அபூ உபைத்[21] (ரஹ்) "அல்அம்வால்" என்ற தனது நூலில் குறிப்பிடும் விடயம் நோக்கத்தக்கது. "நபி (ஸல்) அவர்கள் தனது (ஸபிய்யா என்ற தனது மனைவி ஊடான) யூதர்களில் சில உறவினர்களுக்கு தர்மம் (ஸதகா) வழங்கி னார்கள். அது அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது"[22].

இவ்விடயம் தொடர்பில் இஸ்லாத்தின் மகத்துவம் மற்றும் இஸ்லாமிய நாகரிகத்தின் மனிதநேயம் தொடர்பான நிகழ் வுகளுக்கு நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் தொடர்பான பல்வேறு நூல்களில் இடம் பெற்றுள்ள சம்பவங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவற்றுள் ஒரு முறை நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஓர் சடலம் (ஜனாஸா) கொண்டு செல்லப்பட்டது. அப்போது நபியவர்கள் அதற்காக எழுந்து நின்றார்கள். அப்போது அவரிடம் "இது ஒரு யூதரின் சடலம்" எனக் கூறப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அதுவும் ஓர் உயிர்தானே" என்றார்கள் (புகாரி, 1312; முஸ்லிம், 961).

இஸ்லாத்திலும் இஸ்லாமிய நாகரீகத்திலும் முஸ்லிமல்லாத சிறுபான்மையினரின் உரிமைகள் இவ்வாறு தான் இருந்தன. அந்தவகையில் ஏதேனும் ஓர் அநியாயம் அல்லது அத்து மீறலில் ஈடுபடாத வரை அனைத்து மனித உயிர்களையும் மதிப்பதே இஸ்லாத்தின் பொதுக் கோட்பாடு எனலாம்.

---

[20]ஸஈத் பின் முஸய்யப்: அபூ முஹம்மத் ஸஈத் பின் முஸய்யப் பின் ஹஸன் அல்குரஷி (ஹி. 13-94/ கி.பி. 634-713). இவர் தாபிஈன்களின் தலைவராவார். மதீனாவின் ஏழு புகஹாக்களில் (அல்புகஹாஉஸ் ஸப்ஆ) ஒருவர். இவர் ஹதீஸ், பிக்ஹ், ஸஹ்த், வர.்ஃ. போன்ற கலைகளைக் கற்றிருந்தார். பார்க்க: இப்னு ஸ.்ஃத், அத்தபகாதுல் குப்ரா, 5/119-143.

[21]அபூ உபைத்: அபூ உபைத் அல்காஸிம் பின் ஸல்லாம் அல்ஹரவி (ஹி. 157-224/ கி.பி. 774-838). இவர் ஹதீஸ், அதப், பிக்ஹ் துறைகள் சார்ந்த பெரும் அறிஞராவார். இவர் ஒழுக்கவியல் ஆசிரியரான இவர் (ஆப்கானிஸ்தானிலுள்ள) ஹிராத் எனும் பகுதியில் பிறந்து அங்கு கல்வியும் கற்றார். பக்தாத், எகிப்து போன்ற பிரசேங்களுக்கு சென்றுள்ள இவர் மக்காவில் மரணித்தார். பார்க்க: தஹபி, ஸியரு அ.்ஃலாம் அந்நுபலா, 10/490-492.

[22]அபூ உபைத்: அல்அம்வால், பக்: 613. ஸஈத் பின் முஸய்யப் வரை இதன் அறிவிப்பாளர் வரிசை ஆதாரபூர்வமானதாகும் என இமாம் அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தமாமுல் மின்னா, பக்: 389.

# இஸ்லாமிய நாகரிகத்தில் பிற உயிரினங்களின் உரிமைகள்

இஸ்லாம் பிற உயிரினங்களை மிகவும் யதார்த்த பூர்வமாகவே நோக்குகிறது. அவை வாழ்வுக்கு அவசியமா னவை. மனிதனுக்குப் பயனுள்ளவை. இவ்வுலகை வளப்படுத்துவதிலும் தொடரான வாழ்வுக்கும் மனிதனோடு இணைந்து பல்வேறு ஒத்தாசைகளை வழங்குபவை. இஸ்லாத்தில் அடிப்படை மூலாதாரமான அல்குர்ஆனின் பல அத்தியாயங்களுக்கு (சூரா) பிராணிகளின் பெயர்கள் இறைவனால் சூட்டப்பட்டுள்ளமை இதற்கான மிகச் சிறந்த சான்றாகும். சூரா பகரா (பசு), சூரா அன்ஆம் (கால்நடைகள்), சூரா நஹ்ல் (தேனி) போன்றவை இதற்கான சில உதாரணங்களாகும்.

உயிருள்ள பிராணிகள் மதிக்கப்பட வேண்டும் என்பதோடு அவற்றின் அந்தஸ்து மற்றும் மனிதனுடன் ஒப்பிடுகையில் அவற்றின் நிலை தொடர்பான வரையறை தொடர்பிலும் அல்குர்ஆன் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது. எடுத்துக் காட்டாக பின்வரும் வசனங்களைக் குறிப்பிடமுடியும்:

“கால்நடைகளையும் அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்குக் கதகதப்பு(ள்ள ஆடையணிகளு)ம் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கிறீர்கள். அவற்றை நீங்கள் மாலை நேரத்தில் (வீட்டுக்குத்) திரும்பி ஓட்டி வரும் போதும், காலை நேரத்தில் (மேய்ச்சலுக்காக) அவிழ்த்துவிடும் போதும், அவற்றில் உங்க ளுக்கு(ப் பொலிவும்) அழகுமிருக்கிறது. மேலும், மிக்க கஷ்டத்துடனன்றி நீங்கள் சென்றடைய முடியாத ஊர்களுக்கு அவை உங்களுடைய சுமைகளைச் சுமந்து செல்கின்றன. நிச்சயமாக உங்களுடைய இறைவன் மிக இரக்கமுடையவன். அன்பு மிக்கவன். இன்னும், குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச்செல்வ தற்காகவும், அலங்காரமாகவும், (அவனே படைத்துள்ளான்). இன்னும், நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைக்கிறான்” (16:5-8).

## இஸ்லாமிய சட்டவாக்கத்தில் பிராணிகள் தொடர்பான சில உரிமைகள்

இஸ்லாமிய ஷரீஆ வகுத்துள்ள மிக அடிப்படையான உரிமைகளுள் மிருகத்தைத் துன்புறுத்துவது தடைசெய்யப் பட்டுள்ளமை தொடர்பான உரிமை மிக முக்கியமானதாகும். ஜாபிர் (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள்:

"நபியவர்கள் ஒரு முறை ஒரு கழுதையைக் கடந்து சென்றார்கள். அக்கழுதையின் முகத்தில் (நெருப்பில் காய்ச்சப்பட்ட கம்பியின் ஊடாக) அடையாளங்கள் இடப்பட்டி ருந்தன. அப்போது நபி (ஸல்) அவர்கள் "இக்கழுதைக்கு குறியிட்டவரை அல்லாஹ் சபிப்பானாக" என்றார்கள்" (முஸ்லிம், 2117). அதேபோன்று "மிருகத்தை சித்திரவதை செய்ப வரை நபி (ஸல்) அவர்கள் சபித்தார்கள்" என அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள் (புகாரி, 5515).

இது, மிருகத்துக்கு நோவினை செய்வது, அதனைத் துன்புறுத்துவது, அதனுடன் மென்மையான நடந்து கொள் ளாமல் இருப்பது போன்றவை இஸ்லாமிய ஷரீஆவின் கண்ணோட்டத்தில் ஒரு குற்றமாகவே கருதப்படுகிறது என்பதை உணர்த்துகிறது.

அதேபோன்று மிருகத்தை தடுத்து வைத்தல், பட்டினியால் வாட வைத்தல் போன்றவற்றை இஸ்லாம் தடை செய்து ள்ளமை பிராணிகளின் உரிமைகள் தொடர்பான இஸ்லாத்தின் அடிப்படைகளில் ஒன்று எனக் கொள்ளலாம். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

"ஒரு பூனையை, அது சாகும் வரை (பட்டினி போட்டு) கட்டி வைத்த காரணத்தால் பெண் ஒருத்தி (நரகத்தில்) வேதனை செய்யப்பட்டாள். அதை அடைத்து வைத்தபோது அவள் அதற்குத் தீனியும் போடவில்லை. அதற்கு (குடிக்கத்) தண்ணீ ரும் கொடுக்கவில்லை. அவள் அதை பூமியின் புழு பூச்சிகளைத் தின்ன (அவிழ்த்து) விடவுமில்லை" (புகாரி, 3482).

அதேபோன்று ஸஹ்ல் பின் அல்ஹன்ளலா (ரழி) பின்வருமாறு கூறுகிறார்:

“நபியவர்கள் முதுகுப் பகுதி வயிற்றுடன் சேர்ந்துள்ள (பட்டினியால் உடல் மெலிந்துள்ள) ஓர் ஒட்டகத்தைக் கடந்து சென்றார்கள். அப்போது “வாய் பேச முடியாத கால்நடைகள் விடயத்தில் அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள். (எவ்வித நோய் நொடியின்றி) ஆரோக்கியமாக அவை இருக்கும்போது அவற்றில் நீங்கள் ஏறிப் பயணியுங்கள். ஆரோக்கியமாக இருக்கும்போது அவற்றை நீங்கள் (அறுத்து) உண்ணுங்கள்” என்றார்கள்” (அபூ தாவூத், 8452; அஹ்மத், 26671).

அதேபோன்று ஓர் மிருகம் படைக்கப்பட்ட நோக்கத்திற்காக மாத்திரமே அதனைப் பயன்படுத்துமாறு நபியவர்கள் வழி காட்டினார்கள். அத்துடன் கால்நடைகள் பயன்படுத்தப்பட வேண்டியதன் பிரதான இலக்கை அவர்கள் பின்வருமாறு வரையறுத்தார்கள். “உங்களது கால்நடைகளின் முதுகுப் பகுதிகளை உரையாற்றும் இடங்களாக நீங்கள் ஆக்கிக் கொள்வதை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில் நீங்கள் உங்களை வருத்திக் கொண்டே தவிர அடைய முடியாத இடங்களுக்கு (நீங்கள் கஷ்டப்பட்டு அடைய வேண்டிய இடங்களுக்கு) உங்களைக் கொண்டு போய்ச் சேர்ப் பதற்காகவே அவற்றை அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான்” (அபூ தாவூத், 2567)[23].

அதேபோன்று இஸ்லாமிய ஷரீஆ பிராணிகளை உயிரற்ற பொருளைப் போன்று பயன்படுத்துவதை முற்றாகத் தடுத்து ள்ளமையானது பிற உயிர்கள் தொடர்பான உரிமைகளின் இஸ்லாமிய வழிகாட்டல்களுள் மிக அடிப்படையான ஒன்றாகும். இப்னு உமர் (ரழி) அவர்கள் ஒரு முறை குறைஷிக் கோத்திரத்தைச் சார்ந்த சில வாலிபர்களைக் கடந்து சென்றார்கள். அவர்கள் ஓர் பறவையை (கட்டி) வைத்து அதற்கு அம்பை எய்து கொண்டிருந்தார்கள். உடனே

[23]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 2567.

அவர், “இதனைச் செய்தவரை அல்லாஹ் சபிப்பானாக. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் உயிருள்ள ஏதேனும் ஒன்றை உயிரற்ற பொருள் போன்று ஆக்கிக்கொள்பவரைச் சபித்தார்கள்” என்றார்கள் (புகாரி, 5515; முஸ்லிம், 1958).

அதே போன்று மிருகத்துடன் அன்பாகவும் கருணையுடனும் நடந்து கொள்ள வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்தியுள்ளமை மிருக உரிமைகள் தொடர்பான இஸ்லாமிய ஷரீஆவின் முக்கிய அடிப்படைகளுள் ஒன்றாகும். இவ்விடயம் நபி (ஸல்) அவர்களின் பின்வரும் கூற்றில் வெளிப்படுகிறது:

“ஒருவர் ஒரு பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவருக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. அவர் (வழியில்) ஒரு கிணற்றைக் கண்டார். உடனே அதில் இறங்கித் தண்ணீர் குடித்தார். பிறகு (கிணற்றை விட்டு) அவர் வெளியே வந்தார். அப்போது நாய் ஒன்று தாகத்தால் (தவித்து) நாக்கைத் தொங்கவிட்டபடி ஈரமண்ணை நக்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்த மனிதர் (தம் மனதிற்குள்) எனக்கு ஏற்பட்டதைப் போன்ற (அதே) கடுமையான தாகம் இந்த நாய்க்கும் ஏற்பட்டிருக்கிறது போலும் என்று சொல்லிக் கொண்டார். உடனே (மீண்டும்) அக்கிணற்றில் இறங்கி (தண்ணீரை தோலால் ஆன) தன்னுடைய கால் உரையில் நிரப்பிக் கொண்டு, அதை தன் வாயால் கவ்வியபடி (மேலேறி வந்து) அந்த நாய்க்குப் புகட்டினார். அல்லாஹ் இதற்கு நன்றியாக அவரை (அவரின் பாவங்களை) மன்னித்தான் என்று இறைத்தூதர் அவர்கள் கூறினார்கள். (இதைச் செவியுற்ற) மக்கள், இறைத்தூதர் அவர்களே! மிருகங்களுக்கு உதவும் விஷயத்திலும் எங்களுக்கு மறுமையில் நற்பலன் கிடைக்குமா? என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “ஆம்”, உயிருள்ள பிராணி ஒவ்வொன்றின் விஷயத்திலும் அதற்கு உதவும் பட்சத்தில் மறுமையில் அதற்கான நற்பலன் கிடைக்கும் என்று கூறினார்கள்” (புகாரி, 6009).

அதேபோன்று அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

“ஒரு முறை நபியவர்களோடு நாம் ஒரு பயணத்தில் இருந்தோம். அப்போது தனது தேவை நிமித்தம் நபி (ஸல்) அவர்கள் ஓர் இடத்துக்கு நடந்து சென்றார்கள். அங்கு நாம் தனது இரு குஞ்சுகளுடன் ஒரு சிறிய பறவையைக் கண்டோம். நாங்கள் அவ்விரு குஞ்சுகளையும் எடுத்துக் கொண்டோம். உடனே தாய்ப் பறவை சத்தமிட ஆரம்பித்தது. அப்போது நபியவர்கள் அந்த இடத்துக்கு வந்து “குஞ்சுகளை எடுத்து அப்பறவையை (கவலைப்படுத்தித்) துன்புறுத்தியவர் யார்? எனக் கேட்டு, பின்னர் அக்குஞ்சுகளை அதன் தாயிடமே சேர்த்து விடுங்கள்” என்றார்கள்” (அபூ தாவூத், 8625; ஹாகிம், 9957).

அதேபோன்று செழிப்பான மேய்ச்சல் நிலங்களை விலங்குகளுக்காக தேர்வு செய்யுமாறு இஸ்லாம் வலியுறுத்தி யுள்ளமையும் மிருக உரிமைகள் தொடர்பான அதன் கரிசனையைத் தெளிவுபடுத்துகிறது. செழிப்பான மேய்ச்சல் தரைகள் கிடைக்கப்பெறவில்லையாயின் வேறு ஒரு இடத்துக்கு அவற்றைக் கொண்டு செல்வது அவசிய மானதாகும். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“இறைவன் மென்மையானவன். அவன் மென்மையை விரும்புகிறான். அதனையே பொருந்தியும் கொள்கிறான். அத்துடன் கடினத்துக்கு உதவாத விடயங்களுக்காகக் கூட மென்மைக்காக அவன் உதவுகிறான். வாய் பேச முடியாத கால்நடைகளில் நீங்கள் ஏறிப்பிரயாணிக்கும் போது அவற்றின் உரிய (மேய்ச்சல் நிலங்களில் அவற்றை) நீங்கள் இறக்கிவிடுங்கள். நீங்கள் இருக்கும் இடம் (பயிர்களற்ற) வரண்ட பூமியாக இருப்பின் அவற்றை ஏதேனும் ஓர் செழிப்பான இடத்துக்குக் கொண்டு சென்று விடுங்கள்” (முவத்தா, 2062)[24].

---

[24]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 682.

உண்மையில் மிருகத்துடன் பாசமாக நடந்து கொள்வதை விட மேன்மையான பெறுமதியான ஓர் படிநிலையை இஸ்லாம் வலியுறுத்துகிறது. மிருகத்துடன் நல்லமுறையில் நடந்து கொள்வதும் அதன் உணர்வுகளை மதிப்பதுமே அப்படிநிலை ஆகும். இறைச்சியை உண்பதற்காக ஏதேனும் ஒரு மிருகத்தை அறுக்கும்போது அதனை எவ்வகையிலும் துன்புறுத்தி விடக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் வழிகாட்டியுள்ளமை இப்பண்பாட்டுக்கான மிகச் சிறந்த நடைமுறை வழிகாட்டலாகும். மிருகத்தை அறுப்பதற்காக இழுத்துக் கொண்டு வரும்போது அது நோவினையடையும் வகையில் கொண்டு வருவதன் ஊடாக அல்லது அறுக்கும் கருவியான கத்தி ஒழுங்காக தீட்டப்படாமல் இருப்பதனூடாக உடலியல் ரீதியாக அதனை துன்புறுத்துவது அல்லது கத்தியை அதற்கு முன் காட்டி பலமுறை அதனை கொல்லப்போவதாக அச்சத்தை ஏற்படுத்துவதனூடாக உள ரீதியாக அதனை துன்புறுத்துவது போன்ற பல்வேறு துன்புறுத்தல்களையும் நபி (ஸல்) அவர்கள் முற்றாகத் தடை செய்துள்ளார்கள்.

ஷத்தாத் பின் அவ்ஸ் (ரழி) பின்வருமாறு கூறுகிறார்:

நபி (ஸல்) அவர்களிடமிருந்து நான் இரண்டு விடயங்களை மனனமிட்டு கொண்டேன். அல்லாஹ் ***இஹ்ஸான்*** எனும் திருத்தமாக செய்தல் என்ற விடயத்தை அனைத்திலும் கடமையாக்கி இருக்கிறான். எனவே, (நீதிமன்றத் தீர்ப்புக்கு இணங்க நியாயமான காரணத்துக்காக நீங்கள் கொலை செய்தால்) அதனை திருத்தமாகச் செய்யுங்கள். அதேபோன்று நீங்கள் பிராணிகளை அறுக்க முற்பட்டால் அதனையும் அழகிய முறையில் திருத்தமாகச் செய்யுங்கள். (அதற்காக) உங்களில் ஒருவர் கத்தியை நன்கு தீட்டிக் கொள்ளட்டும். அத்துடன் (அறுக்கும்) அந்தப் பிராணியை இலகுவில் உயிர் பிரியுமாறு ஆக்கி (நன்கு அறுத்து) விடட்டும்" (முஸ்லிம், 1955; அபூ தவூத், 5182; திர்மிதி, 9041).

அதே போன்று அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

ஒருமுறை ஒரு மனிதர் தான் அறுக்க விரும்பிய ஓர் ஆட்டை அறுப்பதற்காக நிலத்தில் படுக்கவைத்து அவர் (அப்பிராணிக்கு முன்) தனது கத்தியைத் தீட்டினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அவரிடம், “அதனை இரண்டு முறை நீர் மரணிக்கச் செய்யப் போகிறீரா? அதனை அறுப்பதற்காக படுக்கவைக்க முன் அதற்கு தெரியாத வகையில் உன் கத்தியைத் தீட்டி இருக்கக்கூடாதா! என்றார்கள்” (ஹாகிம், 7771)[25].

இவையே இஸ்லாத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உயிர்ப் பிராணிகளின் உரிமைகளாகும். எனவே, இஸ்லாமிய நாகரிகம் வேரூன்றியுள்ள சூழலில் அவை இருக்கும் வரை அவற்று க்கான பூரண பாதுகாப்பும் அச்சமற்ற நிலையும் நிம்மதியும் அமைதியும் அவற்றுக்கு நிச்சயம் உண்டு.

---

[25]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுத் தர்கீப், 2265.

# இஸ்லாமிய நாகரிகத்தில் சூழலியல் உரிமைகள்

## அறிமுகம்

இறைவன் சூழலைத் தூய்மையாகவும் எவ்வித குறைபாடுகளும் இன்றியும் பயன்மிக்கதாகவும் படைத்துள்ளான். அதனை மனிதனுக்கு வசப்படுத்தியும் கொடுத்துள்ளான். அத்துடன் அதனைப் பேணிப் பாதுகாக்கும் பணியை அவன் மீது கடமையாக்கியுள்ளான். மிக அழகிய வடிவில் படைக்கப்பட்டுள்ள அல்லாஹ்வின் பிரபஞ்ச அத்தாட்சிகள் தொடர்பில் சிந்திக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகப் பின்வருமாறு அல்குர்ஆன் குறிப்பிடுகிறது:

அவர்களுக்கு மேலிருக்கும் வானத்தை நாம் எவ்வாறு (ஒரு கட்டுக் கோப்பாக) அமைத்து, அதை அழகு செய்து, அதில் எவ்வித வெடிப்புகளும் இல்லாமல் (ஆக்கியிருக்கின்றோம்) என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? மேலும் நாம் பூமியை நீட்டி விரிவாக்கி, அதில் உறுதியான மலைகளை அமைத்துள்ளோம். மேலும் அதில் அழகிய புற்பூண்டுகளை (ஆண், பெண் வகையுள்ள) ஜோடியாக முளைப்பிக்கவும் செய்திருக்கின்றோம் (50: 6-7).

## மனிதனும் சூழலும்

அந்தவகையில் முஸ்லிமான ஒரு மனிதனுக்கும் அவனைச் சூழ உள்ள சட மற்றும் உயிருள்ளவற்றைக் கொண்ட சூழலுக்கும் இடையில் ஓர் அன்பும் பாசமும் மிக்க தொடர்பு உருப்பெறுகிறது. அத்துடன் சூழலை பேணிப் பாதுகாப்பது ஓர் அமைதியான வாழ்வுக்கான அடிப்படையாகும் என்பதால் இவ்வுலகில் மிகவும் பயன்தரக்கூடியதாகும். அத்தோடு இறைவனின் மகத்தான கூலியும் கிடைக்கப் பெறுவதால் மறுமையிலும் அவனுக்கு அது மிகவும் பயன் மிக்கதாகும்.

மனிதனுக்கும் இயற்கை வளங்களுக்குமிடையே அடிப்படையான தொடர்பும் பரஸ்பர இணைப்பும் இருக்கிறது என்ற பிரபஞ்சம் தொடர்பான பூரணமான அல்குர்ஆனிய நோக்கை

உறுதிப்படுத்தும் விதமாகவே சூழல் தொடர்பான நபி (ஸல்) அவர்களின் கண்ணோட்டமும் இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில் ஏதேனுமோர் இயற்கை வளத்தை மனிதன் துஷ்பிரயோகம் செய்யும் போது அல்லது அதனை அழித்து விடும் போது அது நேரடியாகவே இவ்வுலகுக்குத் தீங்காக அமைந்து விடும் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே இது கட்டமைந்துள்ளது எனலாம்.

## சூழல் தொடர்பான இஸ்லாத்தின் கரிசனைக்கான சில எடுத்துக்காட்டுகள்

பூமியின் மீது வாழும் ஒவ்வொரு மனிதனுக்குமான ஒரு பொது விதியை இஸ்லாமிய ஷரீஆ அறிமுகப் படுத்தியுள்ளது. அதாவது இப்பிரபஞ்சத்தில் உள்ள ஏதேனும் ஒன்றுக்கு எந்த வகையிலும் எவ்வித கெடுதலும் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதே அதுவாகும். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் "(ஆரம்பமாக) தீங்கிழைப்பதோ (ஏதேனுமோர் கெடுதிக்குப் பிரதியீடாகத்) தீங்கிழைப்பதோ கூடாது" (இப்னு மாஜா, 2341; அஹ்மத், 2865)[26] எனக் குறிப்பிட்டார்கள்

அதேபோன்று சூழலை மாசுபடுத்தல் அல்லது சீர்குலைத்தல் தொடர்பில் கடுமையாக எச்சரிக்கும் பல்வேறு போதனைகளை இஸ்லாம் முன்வைக்கிறது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் "அதிகம் சாபத்தை சம்பாதித்துத் தரும் மூன்று இடங்களை நீங்கள் தவிர்ந்து கொள்ளுங்கள்: அதாவது (கிணறு, நதி போன்ற) நீர் ஊற்றெடுக்கும் இடங்கள், மக்கள் அதிகம் நடமாடும் இடங்கள், (மனிதர்கள் இளைப்பாறும் மர) நிழல் உள்ள இடங்களில் மலம் கழித்தல் (ஆகியவையே அவையாகும்)" (அபூ தாவூத், 26)[27] என்றார்கள்.

---

[26]இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஹுகூகுந் நிஸா பில் இஸ்லாம், 67.

[27]இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 26.

பாதையில் உள்ள தீங்கு தரும் விடயங்களை அகற்றுவது பாதைக்கு வழங்க வேண்டிய உரிமைகளுள் ஒன்று என நபி (ஸல்) அவர்கள் வழிகாட்டினார்கள். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

“நீங்கள் சாலையில் அமர்வதைத் தவிருங்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள், “எங்களுக்கு அங்கு அமர்வதைத் தவிர வேறு வழியில்லை அவைதாம், நாங்கள் பேசிக் கொள்கிற எங்கள் சபைகள்” என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள், “அப்படியென்றால் நீங்கள் அந்தச் சபைகளுக்கு வ(ந்து அம)ரும் போது, பாதைக்கு அதன் உரிமையைக் கொடுத்து விடுங்கள்” என்று கூறினார்கள். மக்கள், “பாதையின் உரிமை என்ன?” என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், “(அந்நியப் பெண்களைப் பார்க்காமல்) பார்வையைத் தாழ்த்திக் கொள்வதும் (பாதையில் உள்ள) தீங்கை நீக்குவதும் சலாமுக்கு பதிலுரைப்பதும், நன்மை புரியும்படி கட்டளையிடுவதும், தீமையிலிருந்து தடுப்பதும் (அதன் உரிமைகள்) ஆகும்” என்று பதிலளித்தார்கள்” (புகாரி, 2465).

இவ்விடத்தில் “தீங்கை நீக்குதல்” என்பது மனிதர்கள் பயன்படுத்தும் பாதைகள் அல்லது வழிகளில் அவர்களுக்கு தீங்கிழைக்கும் வகையில் உள்ள அனைத்தையும் அகற்று வதைக் குறிக்கும் விரிவான சொற்றொடர் ஆகும்.

இதனை விட ஒரு படி மேலாக நபி (ஸல்) அவர்கள் இறைவனிடம் கிடைக்கப்பெறும் வெகுமதி மற்றும் சூழலைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஒன்றிணைத்து குறிப்பிட்டு ள்ளார்கள். இவ்விடயம் தொடர்பில் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

“எனது சமூக அங்கத்தவர்களின் நல்ல மற்றும் தீய செயல்கள் என்ற அனைத்துச் செயற்பாடுகளும் எனக்கு எடுத்துக் காட்டப்பட்டன. பாதையில் இருக்கும் சிறு தீங்கை அகற்றுவது எனது உம்மத்தில் நல்ல செயல்களில் இருந்ததை நான் கண்டேன். அத்துடன் பள்ளியில் புதைக்கப்படாமல் இருக்கும் சளிக்கட்டி (எச்சிலை) எனது உம்மத்தின் கெட்ட அமல்களில் இருப்பதை நான் கண்டேன்” (முஸ்லிம், 553).

அதேபோன்று எமது வசிப்பிடங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளும்படி நபியவர்கள் மிகத் தெளிவாக வழி காட்டுகிறார்கள். "நிச்சயமாக அல்லாஹ் மிகச் சிறந்தவன். அவன் மிகச் சிறந்ததையே விரும்புகிறான். அவன் தூய்மையானவன். அவன் தூய்மையே விரும்புகிறான்... எனவே, உங்களது (வீட்டு) முற்றங்களை நீங்கள் தூய்மையாக வைத்திருங்கள். நீங்கள் யூதர்களுக்கு ஒப்பாகிவிடாதீர்கள்" (திர்மிதி, 2799).

எவ்வகை மாசுபடுத்தல்களும் இன்றி தூய்மையான வாழ்வை ஆர்வமூட்டும் இவ்வாறான இஸ்லாமிய போதனைகளும் சட்டதிட்டங்களும் எவ்வளவு அழகாக உள்ளன!! மனித உள்ளத்தின் அமைதியும் ஆரோக்கியமும் இதனூடாகவே கைகூடுகிறது.

ஒரு நபித்தோழர் நபியவர்களிடம் வினவிய கேள்விக்கு நபியவர்கள் பின்வருமாறு பதிலளித்த விதம் சூழல் மற்றும் அதன் அழகைப் பேணுவதை ஆர்வமூட்டும் மிகத் தெளிவான, திட்டவட்டமான வழிகாட்டலாகக் கொள்ளலாம்.

"(அவர்) எனது உடையும் எனது செருப்பும் அழகாக இருப்பது பெருமை ஆகுமா? என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ் நிச்சயம் அழகானவன். அவன் அழகையே விரும்புகிறான். பெருமை என்பது உண்மையை மறுப்பதும் மக்களை தாழ்வாகக் கருதுவதுமாகும்" என்றார்கள்" (முஸ்லிம், 9).

அல்லாஹ் அழகிய அமைப்பில் படைத்துள்ள எமது சூழலின் வெளித்தோற்றங்களை அழகுற வைத்திருப்பது இதனுள் அடங் கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதேபோல் நல்ல மணமான வாசனைத் திரவியங்களை விரும்புவதற்கும், அவற்றை மக்களிடையே பரப்புவதற்கும், அவற்றை அன்பளிப்பாக வழங்குவதற்கும், அதனூடாக மாசடைந்துள்ள சூழலை அலங்கரிப்பதற்கும் நபியவர்கள் வழி காட்டி இருப்பதனை எம்மால் அவதானிக்க முடிகிறது. "யாருக்கேனும் வாசனைத் திரவியம் வழங்கப்பட்டால் அதனை அவர் மறுக்க வேண்டாம். ஏனெனில் வாசனைத் திரவியம்

(பருமனில்) பாரம் குறைந்ததாக இருப்பினும் நல்ல நறுமணம் மிக்கதாகும்" (முஸ்லிம், 2253) என்ற நபிமொழி இதனை நன்கு தெளிவுபடுத்துகிறது.

பூமியில் தாவரங்களை நடுதல் மற்றும் விவசாயம் செய்தல் போன்றவற்றை ஊக்குவிப்பது தொடர்பாக இஸ்லாம் குறிப் பிட்டுள்ளமையானது சூழலுடன் தொடர்பான இஸ்லாமிய சட்டதிட்டங்களின் உன்னத நிலையை தெளிவுபடுத்துகின்றன. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

"யாரேனும் ஒரு முஸ்லிம் ஏதேனும் ஒரு மரத்தை நட்டால் மறுமை நாள் வரை அதிலிருந்து உண்ணப்படும் அனைத்தும் அவருக்கு தர்மமாகவே அமையும். அதிலிருந்து திருடப்படும் அனைத்தும் அவருக்கு தர்மமாகவே அமையும். ஏதேனும் விலங்கு அதிலிருந்து உண்பதும் அவருக்கு தர்மமாகவே அமையும். பறவைகள் அதிலிருந்து உண்பதும் அவருக்கு தர்மமாகவே அமையும். பிறர் அதிலிருந்து எடுப்பதும் அவருக்கு தர்மமாகவே அமையும்" (முஸ்லிம், 1552).

ஒருவர் குறித்த சூழலில் இருப்போருக்கு பயன்தரும் வகையில் நடுகின்ற பயிர் பிறருக்கு பயனுள்ளதாக இருக்கும் வரை அதற்கான வெகுமதி அவருக்கு கிடைத்துக்கொண்டே இருக் கும். அம்மரத்தின் உரித்து வேறு யாருக்கேனும் சென்றாலும் அல்லது அதனை நட்டவர் அல்லது பயிரிட்டவர் மரணித்தாலும் அதனூடாக பயன் கிடைத்துக் கொண்டிருக்கும் வரை அதற்கான வெகுமதி அவருக்கு கிடைத்துக்கொண்டே இருக்கும் என்பது இஸ்லாத்தின் மகத்துவங்களில் ஒன்றாகும்.

எவ்வித பயிர்களுமற்ற ஒரு (தரிசு) நிலப்பகுதியை உயிர்ப்பித்து, அதிலிருந்து ஒரு மனிதன் அறுவடை செய்யும் அனைத்தையும் இஸ்லாம் வரவேற்றுள்ளது. ஏதேனும் ஓர் மரத்தை நடல், ஓர் விதை விதைத்தல் அல்லது நீர் தேவைப்படும் (வரண்ட) பூமிக்கு நீர் பாய்ச்சுதல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளையும் இஸ்லாம் நன்மை தரும் செயற்பாடுகளாகவே கருதுகிறது. இவ்விடயம் தொடர்பில் நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

“ஒருவர் (எந்த ஒருவருக்கும் உரித்து இல்லாத) மரணித்து இருக்கும் ஒரு பூமியை உயிர்ப்பிப்பாராயின் அதிலிருந்து (விளைபவற்றுக்காக) அவருக்கு (கூலி) உண்டு. அதேபோன்று அவற்றிலிருந்து விலங்குகளும் பறவைகளும் உண்ணும் அனைத்தும் அவருக்கு தர்மமாக அமையும்” (அஹ்மத், 14271)[28].

தண்ணீர் எமது சூழலில் உள்ள இயற்கை வளங்களுள் மிக உன்னதமான ஒரு வளம் என்ற வகையில் அதனை வீண்விரயம் செய்துவிடாமல் அதன் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துவதை அவதானிக்க முடிகிறது. இவ்விடயம் தொடர்பில் தாராளமாக நீர் கிடைக்கும் போது கூட அதனை தேவைக்கேற்ப வீண் விரயம் இன்றி நடுநிலையாக பயன்படுத்த வேண்டும் என நபியவர்கள் அறிவுரை கூறுகிறார்கள். இதற்கு பின்வரும் சம்பவம் சான்றாகும். அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) கூறுகிறார்:

“ஒருமுறை ஸஃத் (ரழி)[29] அவர்கள் வுழூ செய்து கொண்டிருக்கும்பொழுது நபி (ஸல்) அவர்கள் அவரைக் கடந்து சென்றார்கள். அப்போது அவரிடம் “இது என்ன வீண்விரயம்?” என்று கேட்டார்கள். அப்போது அவர் “வுழூ செய்வதிலும் வீண்விரயம் உண்டா?” எனக் கேட்க, நபி (ஸல்) அவர்கள் “ஆம்” எனக் கூறி, நீங்கள் ஓடும் ஆற்றின் மீது இருந்தாலும் வீண் விரயம் உண்டு” என்றார்கள்” (இப்னு மாஜா, 425; அஹ்மத், 7065)[30].

---

[28]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல் அர்னாஊத் குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தக்ரீஜுல் முஸ்னத், 14271.

[29]ஸஃத் பின் அபீ வக்காஸ் பின் வுஹைப் அஸ்ஸுஹ்ரி, இவர் சுவனத்துக்கு நன்மாராயம் கூறப்பட்ட 10 பேரில் (அல்அஷரதுல் முபஷ்ஷரா) ஒருவரும் அவர்களில் இறுதியாக மரணித்தவருமாவார். பார்க்க: உஸ்துல் காபா, 2/433 மற்றும் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி, அல்இஸாபா, 3/73 (3292).

[30] இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 3292.

அதேபோல் நீரை மாசுபடுத்துவதை நபி (ஸல்) அவர்கள் முற்றாகத் தடுத்துள்ளார்கள். தேங்கி நிற்கும் நீரில் சிறுநீர் கழிப்பதை தடுத்துள்ளமையானது (முஸ்லிம், 281) இதற்கான எடுத்துக்காட்டாகும்.

மேற்கூறியவையே சூழல் தொடர்பான இஸ்லாத்தினதும் இஸ்லாமிய நாகரிகத்திலும் கண்ணோட்டமாகும். மிக அழகிய தோற்றத்தில் இறைவனால் படைக்கப்பட்டுள்ள பிரபஞ்சத்தில் அல்லாஹ்வின் நியதிகளுக்கு ஏற்ப சூழலின் பல்வேறு பகுதிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகவும் ஒன்றை யொன்று சார்ந்து நிற்பவையாகவும் உள்ளன என்பதை அடிப்ப டையாகக் கொண்டே சூழல் தொடர்பான இஸ்லாமிய நோக்கு அமைந்துள்ளது. எனவே, சூழலின் இந்த அழகை பாதுகாப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

# இஸ்லாத்தில் நம்பிக்கைச் சுதந்திரம்

## நம்பிக்கைச் சுதந்திரம் இஸ்லாத்தின் அடிப்படைகளுள் ஒன்று

இஸ்லாத்தில் மதச் சுதந்திரம் அல்லது சிந்தனைச் சுதந்திரம் தொடர்பில் மிகத் தெளிவான அடிப்படை வழிகாட்டலாக "இம்மார்க்கத்தில் எந்தவித நிர்ப்பந்தமும் இல்லை. நிச்சயம் நேர்வழி வழிகேட்டிலிருந்து தெளிவாகி விட்டது" (2: 256) எனும் அல்குர்ஆனிய வசனம் உள்ளது.

நபி (ஸல்) அவர்களோ அவருக்குப் பின்னர் ஏனைய முஸ்லிம்களோ பலவந்தமாக எந்த ஒருவரையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தவில்லை. அதேபோன்று மரணம் அல்லது துன்புறுத்தல் போன்றவற்றுக்குப் பயந்து இஸ்லாத்தை ஏற்றதைப் போல் நடிப்பதற்கான எந்த ஒரு நிர்ப்பந்தத்தையும் மக்களுக்கு அவர்கள் ஏற்படுத்தவில்லை. வற்புறுத்தப்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் ஒருவரின் இஸ்லாத்துக்கு மறுமையில் எவ்வித பெறுமானம் இல்லை என்று நன்கு அறிந்திருந்தார்கள். அவ்வாறானவர்கள் எப்படி (இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துவதில்) ஈடுபட்டிருப்பார்கள்?! உண்மையில், (உலகமல்ல) மறுமையே ஒவ்வொரு முஸ்லிமினதும் இறுதி இலக்காகும்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட அல்குர்ஆனிய வசனம் இறங்கிய பின்னணி பின்வருமாறாகும். இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்:

"நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு பெண் இருந்தாள். அவளது பிள்ளைகள் எவரும் உயிருடன் இருக்கவில்லை. அவள் தனக்கு குழந்தை இருந்தால் அக்குழந்தையை யூதராக ஆக்கிவிடுவேன் என்று தனக்குத்தானே சபதம் எடுத்தி ருந்தாள். (யூத கோத்திரங்களுள் ஒன்றான) பனூ நழீர் நாடு கடத்தப்பட்ட போது அவர்களுள் அன்சாரிகளைச் சார்ந்த சில பிள்ளைகளும் இருந்தனர். எனவே, அன்சாரிகள் நாம் எமது பிள்ளைகளை (அனுப்பி) விட மாட்டோம் என்றனர். அப்போது அல்லாஹ் "இம்மார்க்கத்தில் எந்தவித நிர்பந்தமும் இல்லை.

நிச்சயம் நேர்வழி வழிகேட்டிலிருந்து தெளிவாகி விட்டது" (2:256) என்ற வசனத்தை அருளினான்" (அபூ தாவூத், 2682)[31].

## ஈமான் மற்றும் மனித விருப்பு எனும் விவகாரம்

ஒருவர் ஈமான் கொள்வது அல்லது ஈமான் கொள்ளாமல் இருப்பதை மனித விருப்புடனும் அவனது உளத் திருப்தியுடனும் தொடர்பான ஒரு விடயமாகவே இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அல்லாஹ் "யார் விரும்புகிறாரோ அவர் ஈமான் கொள்ளட்டும். யார் விரும்பு கிறாரோ அவர் நிராகரித்து (ஈமான் கொள்ளாமல் இருந்து) விடட்டும்" (18:29) எனக் கூறுகிறான்.

நபி (ஸல்) அவர்களின் பார்வையை இந்த யதார்த்தத்தின் பக்கமே அல்குர்ஆன் திருப்புகிறது. அத்துடன் இஸ்லாமிய அழைப்புப் பணியை எத்தி வைப்பதே அவர் மீதுள்ள கடமை எனவும் மக்களை இஸ்லாத்தின் பக்கம் (பலவந்தமாகத்) திருப்புவதற்கான எந்த அதிகாரமும் அவருக்கு இல்லை எனவும் அது தெளிவுபடுத்துகிறது. இவ்விடயம் தொடர்பில் அல்குர்ஆன் "நபியே! மக்கள் ஈமான் கொண்டவர்களாக மாறி விடும் வரை அவர்களை நீர் வற்புறுத்திக் கொண்டு இருக்கப் போகிறாரா?" (10:99) என வினவுகிறது. அதேபோல் "நீர் அவர்களின் மீது அதிகாரம் செலுத்துபவர் அல்லர்" (88:22) எனவும் "எனினும் (நபியே!) அவர்கள் புறக்கணித்து விட்டால் (நீர் கவலையுறாதீர்). நாம் உம்மை அவர்கள் மீது பாது காவலராக அனுப்பவில்லை. (தூதுச் செய்தியை எடுத்துக் கூறி) எத்திவைப்பது தான் உம்மீது கடமையாகும்" (42:48) எனவும் குறிப்பிடுகிறது.

இதனூடாக முஸ்லிம்களின் சட்டக்கோவையான அல்குர்ஆன் சிந்தனை சுதந்திரத்தை முழுமையாக அங்கீகரிப்பதோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி பிறரை நிர்ப்பந்திப்பதை திட்டவட்டமாக மறுப்பதனை அவதானிக்க முடிகிறது.[32]

[31]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தவுத், 2682.

[32]பார்க்க: மஹ்மூத் ஹம்தி ஸக்ஸூக், ஹகாஇக் இஸ்லாமிய்யா பீ முவாஜஹதி ஹமலாதி அத்தஷ்கீக், பக்: 33.

## இஸ்லாத்தில் மத பன்மைத்துவம்

மத சுதந்திரத்தை இஸ்லாம் அங்கீகரித்துள்ளமையானது மத பன்மைத்துவத்தை அது ஏற்றுக்கொண்டுள்ளமையைக் குறிக்கிறது. நபியவர்கள் ஏற்படுத்திய முதலாவது சட்டக்கோவையான மதீனா சாசனத்தில் மத சுதந்திரத்தை நபி (ஸல்) அவர்கள் அங்கீகரித்தமை இதற்கான நடைமுறை சார் வழிகாட்டலாகும். இச்சாசனத்தின் யூத மதத்தைச் சார்ந்தோர் முஸ்லிம்களுடன் ஒரே சமூகமாகவே வாழ்வார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதே போன்று மக்கா வெற்றியின் போது நபியவர்களுக்கு பாரிய வெற்றியும் அங்கீகாரமும் கிடைத்தும் குறைஷ் கோத்திரத்தைச் சார்ந்தேரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தாமல் இருந்தமையும் இதற்கான நடைமுறை முன்மாதிரியாகும். அந்நிகழ்வில் அவர்களைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் “நீங்கள் புறப்பட்டுச் செல்லலாம். நீங்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டவர்கள்” (தாரீக் அத்தபரி, 12/93) எனக் குறிப்பிட்டார்கள்.

நபியவர்களை பின்பற்றி இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா உமர் (ரழி) அவர்கள் அப்போதைய பலஸ்தீன் பிரதேசத்தில் வாழ்ந்த கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தோரின் உயிர்கள், வணக்கஸ்தலங்கள், சிலுவைகள் போன்றவற்றுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்கினார்கள். அத்துடன் அவர்களில் எவரும் துன்புறுத்தப்படவோ, (அவர்களின் கிறிஸ்தவ) மதத்துக்காக (இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் படி) வற்புறுத்தப்படவோ மாட்டார்கள் என குறிப்பிட்டார்கள்.[33]

மாறாக சமயங்களுக்கிடையிலான ஆரோக்கியமான கலந்துரையாடலுக்கான உரிமையையும் இஸ்லாம் உத்தரவாதப்படுத்தியுள்ளது. குறித்த கலந்துரையாடல்கள், ஒரு மதத்தைச் சார்ந்தவர் ஏனையோரை மோசமான வார்த்தைகளால் திட்டுவது அல்லது அவர்களை கேலி செய்வது போன்றவை தவிர்க்கப்பட்டு ஆரோக்கியமாக அமையப்பெற வேண்டும் என்பது இஸ்லாத்தின் வழிகாட்டுதலாகும். இவ்விடயம் தொடர்பில் அல்குர்ஆன் “(நபியே!) உம் இறைவனின்

[33] தாரீகுல் உமமி வல்முலூக் லித்தபரி, 3/105.

பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக!" (16:125) எனக் குறிப்பிடுகிறது.

முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதோருக்கும் இடையே இடம்பெறும் கலந்துரையாடல் எவ்வாறு அமையப்பெற வேண்டும் என்பதற்கான அடிப்படைகள் தொடர்பில் வேதம் கொடுக்கப்பட்டோரை கலந்துரையாடலுக்கு அழைக்கும் பின் வரும் அல்குர்ஆனின் வழிகாட்டல் மிக உன்னதமானதாகும்:

"(நபியே! அவர்களிடம்) "வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம். அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம். அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக் கொள்ள மாட்டோம்" எனக் கூறும் (மு.ஃ.மின்களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கணித்து விட்டால், "நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!" என்று நீங்கள் கூறிவிடுங்கள்" (2:64).

இவ்வசனத்தில் இரு தரப்பினரிடையே இடம்பெறும் கலந்து ரையாடல் ஏதேனும் ஒரு முடிவை அடையாவிடின் குறித்த இவ்விரு தரப்பினரும் தாம் ஏற்றுக்கொண்டுள்ள மார்க்க த்திலேயே இருப்பதற்கான உரிமை உண்டு எனும் கருத்தைப் பிரஸ்தாபிக்கிறது. சூரா காபிரூனில் இணைவைப்பாளர்களைப் பார்த்து "உங்களுக்கு உங்களது மார்க்கம் எனக்கு எனது மார்க்கம்" (109:6) எனக் குறிப்பிட்டு முற்றுப்பெறும் வசனமும் இக்கருத்தையே குறிப்பிடுகிறது[34].

---

[34]மஹ்மூத் ஹம்தி ஸக்ஸூக், ஹகாஇக் இஸ்லாமிய்யா பீ முவாஜஹதி ஹமலாதி அத்தஷ்கீக், பக்: 85-86.

# இஸ்லாமிய நாகரிகத்தில் சிந்தனைச் சுதந்திரம்

## சிந்தனைச் சுதந்திரம் தொடர்பான இஸ்லாமிய நாகரிகத்தின் கரிசனை

இஸ்லாம் சிந்தனைச் சுதந்திரத்தை உத்தரவாதப் படுத்தியுள்ளது. அதனைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது. இஸ்லாமிய நாகரிகம் இதற்கான சிறந்த சான்றாகும். இப்பிரபஞ்சத்தில் வானம் மற்றும் பூமி போன்றவற்றின் பல்வேறு பகுதிகளில் மனிதன் தனது சிந்தனையைப் பிரயோகிக்க வேண்டும் என இஸ்லாம் வலியுறு த்தியுள்ளமை இதனை நன்கு தெளிவுபடுத்துகிறது. இஸ்லாம் இதனை அதிகமாக ஆர்வமூட்டியுள்ளது. இதற்கு "நான் உங்களுக்கு உபதேசிப்பது ஒரே ஒரு விஷயத்தைப் பற்றித்தான்: "(அது) நீங்கள் இரண்டிரண்டு பேர்களாகவோ, தனித்தனியாகவோ அல்லாஹ்வுக்காக எழுந்தமர்ந்து பின்னர் சிந்தித்துப் பாருங்கள் (என்பதுதான்)" என்று (நபியே!) நீர் கூறும்" (34: 46) மற்றும் "அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து (இவற்றைப்) பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்த்திருந்தால்) அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும், (நல்லவற்றைச்) செவியேற்கும் காதுகளும் உண்டாகி யிருக்கும். நிச்சயமாக (புறக்) கண்கள் குருடாகவில்லை. எனினும், நெஞ்சுக்குள் இருக்கும் இதயங்கள் (அகக் கண்கள்) தாம் குருடாகின்றன" (22: 46) ஆகிய அல்குர்ஆனிய வசனங்கள் சிறந்த சான்றாகும்.

## இஸ்லாம் மனித சிந்தனையையும் பகுத்தறிவு சார்ந்த சான்றுகளை பயன்படுத்துமாறும் ஊக்குவிக்கிறது

பகுத்தறிவு சார்ந்த அல்லது ஐம்புலன் சார்ந்த ஆற்றலை உரிய முறையில் பயன்படுத்தாமல் பொடுபோக்காக இருப்போரை இஸ்லாம் கண்டிக்கிறது. அத்துடன் மிருகங்களை விட தாழ்வான படிநிலையில் அவர்களை இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அல்லாஹ்:

“அவர்களுக்கு இருதயங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் நல்லுணர்வு பெற மாட்டார்கள். அவர்களுக்குக் கண்கள் உண்டு. ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் (இறைவனின் அத்தாட் சிகளைப்) பார்ப்பதில்லை. அவர்களுக்குக் காதுகள் உண்டு. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் (நற்போதனையைக்) கேட்கமாட்டார்கள். இத்தகையோர் கால்நடைகளைப் போன்றவர்கள். இல்லை! அவற்றை விடவும் வழிகேடர்கள். இவர்கள் தாம் (நம்வசனங்களை) அலட்சியம் செய்தவ ர்களாவார்கள்” (7:179) எனக் குறிப்பிடுகிறான்.

பொய்யான எண்ணங்களையும் சந்தேகங்களையும் பின்பற்று வோரை இஸ்லாம் மிகக் கடுமையாக எச்சரித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் அல்லாஹ் “அவர்கள் வீணான எண்ணத்தைத் தவிர வேறெதையும் பின்பற்றவில்லை. நிச்சயமாக வீண் எண்ணம் (எதுவும்) சத்தியம் நிலைப்பதைத் தடுக்க முடியாது” (53:28) எனக் கூறுகிறான்.

அத்துடன் சத்தியத்தின் மீது அல்லது அசத்தியத்தின் மீது இருக்கின்றமை தொடர்பில் சிந்திக்காமல் கண்மூடித்தனமாக மூதாதையர்களை அல்லது தலைவர்களைப் பின்பற்றுவோ ரையும் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. அவர்களை இழிவுபடுத்தி அல்குர்ஆன், “எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் எங்கள் தலைவர்களுக்கும், எங்கள் பெரியவர்களுக் கும் வழிப்பட்டோம். அவர்கள் எங்களை வழிகெடுத்து விட்டார்கள்” என்றும் அவர்கள் கூறுவார்கள்” (33:67) எனக் குறிப்பிடுகிறது.

உண்மையில் இஸ்லாம் தனது நம்பிக்கைக் கோட்பாட்டை நிறுவ பகுத்தறிவு ரீதியான சான்றுகளை ஆதாரமாக கொள் கிறது. இதனாலே இஸ்லாமிய மூலாதாரங்களுக்கான அடிப்படையாக மனிதப் பகுத்தறிவு உள்ளது என முஸ்லிம் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே, இறைவனின் இருப்பு தொடர்பான விவகாரம் மனிதப் பகுத்தறிவு ஊடாகவே நிரூபிக்கப்படுகிறது. அத்துடன் முஹம்மத் (ஸல்) அவர்களின் தூதுத்துவம் ஆரம்பமாக பகுத்தறிவு ஊடாகவே நிரூபண மானது. பின்னரே அவருக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் அவரது தூதுத்துவத்தின் உண்மை நிலைக்கு சான்றாக

அமைந்தன. இது மனித பகுத்தறிவு மற்றும் சிந்தனையை இஸ்லாம் மதிப்பதற்கான சிறந்த சான்றாகும்.

## இஸ்லாத்தில் சிந்தனையின் பெறுமானம்

இஸ்லாமிய நோக்கில் சிந்திப்பது அனைத்து நிலைகளிலும் ஒரு முஸ்லிம் தவிர்க்க முடியாத ஒரு மார்க்க கடமையாகும். மார்க்க விவகாரங்களில் சிந்தனையைச் செயல்படுத்துவதற்காக இஸ்லாம் பல்வேறு ஒழுங்குகளை ஏற்படுத்தியிருக்கிறது. மனித வாழ்வில் அன்றாடம் தோன்றும் பல்வேறு புதிய விவகாரங்களுக்கான இஸ்லாமிய ஷரீஆவின் தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கு முனைவது மார்க்க விவகாரங்களில் சிந்தனையை பிரயோகிப்பதற்கான இஸ் லாத்தின் திறந்த நிலையை தெளிவுபடுத்துகிறது. இதனையே முஸ்லிம் அறிஞர்கள் ***இஜ்திஹாத்*** அதாவது மார்க்க சட்ட திட்டங்களை பெறும்போது மனிதசிந்தனையை அடிப்படை யாகக் கொண்டு செயற்படல் எனக் குறிப்பிடுகின்றனர்[35].

இஸ்லாத்தில் சிந்தனைச் சுதந்திரத்தைப் பிரதிபலிக்கும் ***இஜ்திஹாத்*** தொடர்பான கோட்பாடு முஸ்லிம்களிடையே இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்வதில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புகளை ஆற்றியு ள்ளது எனலாம். அதேபோன்று இஸ்லாத்தின் ஆரம்பகாலப் பகுதிகளில் தோன்றாத பல்வேறு விவகாரங்களுக்கான உடனடித் தீர்வுகளைப் பெறுவதற்கும் இக்கோட்பாடு பெரிதும் பங்காற்றியது. இதனை அடிப்படையாகக் கொண்டே இன்றுவரை இஸ்லாமிய உலகில் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்குச் செலுத்தும் பிரபலமான இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த மத்ஹபுகள் தோற்றம் பெற்றன.

---

[35]பார்க்க: மஹ்மூத் ஹம்தி ஸக்ஸுக், ஹகாஇக் இஸ்லாமிய்யா பீ முவாஜஹதி ஹமலாதி அத்தஷ்கீக், பக்: 35.

மார்க்கம் தொடர்பான அல்லது உலக விவகாரங்களில் தோன்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கான திட்டவட்டமான சட்ட வசனங்கள் இல்லாத போது ஒரு முஸ்லிம் தனது புத்தி மற்றும் சிந்தனை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்பதே சிந்தனை தொடர்பான இஸ்லாத்தின் ஆழமான அடிப்படைக் கோட்பாடாகும். வரலாறு நெடுகிலும் முஸ்லிம்கள் செழிப்பான தமது நாகரிகத்தை கட்டமைத்துக் கொண்ட அடிப்படையாக இந்நடைமுறை அமைந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்[36].

[36]மஹ்மூத் ஹம்தி ஸக்ஸூக், அல்இன்ஸானு கலீபதுல்லாஹ் - அத்தப்கீரு பரீழஹ், அல்அஹ்ராம் சஞ்சிகை, ரமழான் மாத இதழ், ஹி. 1423, கி.பி. 2002 நவம்பர்.

# இஸ்லாமிய நாகரிகத்தில் கருத்துச் சுதந்திரம்

## அறிமுகம்

ஏதேனும் ஒரு பொது அல்லது தனிப்பட்ட விடயத்தில் தான் அபிப்பிராயப்பபடும் ஏதேனும் ஓர் கருத்தைத் தேர்வு செய்துகொள்வதற்கும் அக்கருத்தை பிறருக்கு வெளிப்படுத்து வதற்கும் தனிநபருக்கு உள்ள உரிமையே இஸ்லாமிய நாகரிகத்தில் கருத்துச் சுதந்திரம் எனப்படுகிறது. எனவே, பிறரின் உரிமையில் எவ்வித அத்துமீறலும் இல்லாதவரை தனது விருப்புக்கு ஏற்ப சிந்தனைகள் மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு தனி நபரின் உரிமையாக இது உள்ளது.

## கருத்துச் சுதந்திரம் ஓர் முஸ்லிமின் உரிமைகளில் ஒன்று

கருத்துச் சுதந்திரம் இஸ்லாமிய நாகரிகத்தில் ஒரு முஸ்லிமுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள ஒரு உரிமை ஆகும். இதனை இஸ்லாமிய ஷரீஆவும் அங்கீகரித்துள்ளது. இஸ்லாமிய ஷரீஆ ஒரு தனிநபருக்கு ஏதேனுமோர் உரிமையை வழங்குமாயின் அதனை யாராலும் முறித்து, அபகரித்து அல்லது நிராகரித்து விட முடியாது. உண்மையில் சிந்தனைச் சுதந்திரம் எந்நிலையிலும் ஒரு முஸ்லிமிடமிருந்து பிரிந்து விட முடியாத அவன் மீதுள்ள கடமையாகவே நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில் பிறருக்கு உபதேசித்தல், நன்மை யை ஏவுதல், தீமையைத் தடுத்தல் போன்றவற்றை அல்லாஹ் அவன் மீது கடமையாக்கியுள்ளான். எனவே, கருத்து வெளிப்பாட்டு உரிமை மற்றும் அதிலுள்ள சுதந்திரம் போன்றவற்றை அனுபவிப்பதனூடாகவே இவ்வாறான மார்க்கக் கடமைகளை அவனால் மேற்கொள்ள முடியும். ஆகவே, ஒரு கடமையை நிறைவேற்ற துணை நிற்கும் அனைத்தும் கடமையே ஆகும் என்ற வகையில் இக்கடமைகளை நிறைவேற்றுவதற்கான முக்கிய ஊடகமாக உள்ள கருத்துச் சுதந்திரம் ஒரு கடமையான விடயமாகும் எனலாம்.

பொது அல்லது சமூகம் சார்ந்த விவகாரங்கள் போன்ற அனைத்து உலகியல் விவகாரங்களிலும் கருத்துச் சுதந் திரத்தை இஸ்லாம் அங்கீகரித்துள்ளது. அஹ்ஸாப் (கூட்டுப்படை) யுத்த நாளன்று எதிரிகளின் கூட்டணியில்

இருந்து வெளியேறுவதற்காக மதீனாவில் விளையும் பேரீத்தம் பழங்களில் மூன்றில் ஒரு பகுதியை வழங்கி க(G)தபா(f)ன் கோத்திரத்தவருடன் யுத்த நிறுத்த உடன்படிக்கை மேற் கொள்வது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் ஸ.்.த் பின் முஆத் (ரழி) மற்றும் ஸ.்.த் பின் உபாதா (ரழி) ஆகிய இரு நபித்தோழர்களுடன் கலந்தாலோசித்த போது அவ்விருவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்திய நிகழ்வு இதற்கான சிறந்த நடைமுறை உதாரணமாகும்.

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“அல்ஹாரிஸ் அல்கதபானி என்பவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! மதீனாவில் விளையும் பேரீத்தம் பழங்களில் நாங்கள் (உங்களுக்கு அரைவாசி எங்களுக்கு) அரைவாசி எனப் பங்கிட்டுக்கொள்வோம்” என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் “நான் ஸ.்.த்களுடன் ஆலோசனை செய்து கொள்கிறேன்” எனக் கூறி, ஸ.்.த் பின் முஆத், ஸ.்.த் பின் உபாதா, ஸ.்.த் பின் அர்ரபீ.்., ஸ.்.த் பின் கய்ஸமா மற்றும் ஸ.்.த் பின் மஸ்ஊத் (ரழி) ஆகியோரை வரவழைத்தர்கள். அவர்களிடம் “முழு அரபு சமூகமும் ஒன்றாகச் சேர்ந்து உங்களை தாக்க முனைகிறார்கள் என நான் அறிவேன். ஹாரிஸ் என்னிடம் வந்து மதினாவில் உள்ள பேரீத்தம் பழங்களில் அவருக்கு அரைவாசிப் பங்கு வேண்டும் என உங்களிடம் கேட்கிறார். நீங்கள் விரும்பினால் இவ்வருடம் அவருக்கு அதனைக் கொடுத்து விட்டு, உங்களது விடயம் (அதாவது எதிர்வரும் வருடங்களில் கொடுப்பதா இல்லையா) தொடர்பில் நீங்கள் பின்னர் யோசித்துக் கொள்ளலாமே” என நபி (ஸல்) அவர்கள் அவர்களிடம் கூறினார்கள். அப்போது அவர்கள் “அல்லாஹ்வின் தூதரே! இது வானத்திலிருந்து அருளப்பெற்ற வஹீயா?, அவ்வாறாயின் நாங்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்பட வேண்டும். அல்லது உமது விருப்பம் மற்றும் கருத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட விடயமா?, அவ்வாறாயின் எமது கருத்தும் உமது விருப்பத்தையும் கருத்தையும் ஒத்ததாகவே இருக்க வேண்டுமா? நீங்கள் எங்களுக்கு இரக்கம் (பாசம்) காட்ட முனைவீர்களாயின், அல்லாஹ் மீது ஆணையாக, எங்களையும் அவர்களையும் நீங்கள் சமமாகவே நோக்கி விட்டீர்கள். (பணத்தினூடான)

வியாபாரம் அல்லது விருந்தோம்பல் என்ற வகையில் நாம் வழங்குவது தவிர்ந்து (வேறெந்த வகையிலும்) ஒரு பேரீத்தம் பழத்தைக் கூட எங்களிடமிருந்து அவர்கள் பெறவே மாட்டார்கள்" எனக் கூறினார்கள்" (அல்மு.ஃ.ஜம் அல்கபீர் லித்தபரானி, 5409).

## அறிவுரை கூறல் மற்றும் நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல்

அறிவுரை கூறல் மற்றும் நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் தொடர்பில் பல்வேறு வசனங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் "மு.ஃ.மினான ஆண்களும் மு.ஃ.மினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நல்லதைச் செய்ய தூண்டுகிறார்கள். தீயதை விட்டும் விலக்குகிறார்கள்" (9:71) எனும் வசனம் குறிப்பிடத்தக்கது. அதேபோன்று "மார்க்கம் என்பதே நலவை நாடுவது (அறிவுரை கூறுவது) ஆகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நாங்கள் "யாருக்கு நலவை நாடுவது, அல்லாஹ்வின் தூதரே?" எனக் கேட்டோம். அதற்கு "அல்லாஹ்வுக்கும், அவனது வேதத்துக்கும், அவனது தூதருக்கும், முஸ்லிம்களின் தலைவர்களுக்கும், முஸ்லிம்களின் பொது மக்களுக்கும் (நலவை நாடுவதாகும்)" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்" (முஸ்லிம், 55) என்ற நபிமொழியும் இதற்கான சான்றாகும்.

இந்நபிமொழியின் விளக்கவுரை தொடர்பில் இமாம் நவவி[37] (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

"முஸ்லிம்களின் தலைவர்களுக்கு நலவு நாடுவது (அறிவுரை கூறுவது) என்பது உண்மை விடயத்தில் அவர்களுக்கு

[37] அந்நவவி: முஹ்யித் தீன் அபூ ஸகரிய்யா யஹ்யா பின் ஷரப் அந்நவவி (ஹி. 631-676/ கி.பி. 1233-1277). இவர் பிக்ஹ், ஹதீஸ் துறைகளில் துறைபோனவர். இவர் பிறந்ததும் இறந்ததும் ஸிரியாவின் நவா எனும் பிரதேசத்திலாகும். அப்பிரதேசத்தை குறிப்பட்டே இவர் (அந்நவவி என) அழைக்கப்படுகிறார். இவரது மிகப் பிரபலமான நூல்கள்: அல்மின்ஹாஜ் பீ ஷர்ஹி ஸஹீஹ் முஸ்லிம் மற்றும் ரியாழுஸ் ஸாலிஹீன். பார்க்க: அல்பிதாயா வந்நிஹாயா, 13/278 மற்றும் அஸ்ஸர்கலி, அல்அல்அ.ஃ.லாம், 8/149.

ஒத்தாசையாக இருப்பதும், அவ்விடயத்தில் அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதும், அதனை அவர்களுக்கு ஏவுவதும், அதற்கு மாற்றமாக நடப்பதை விட்டும் அவர்களை எச்சரிப்பதும், (அதனை) மென்மையாக அவர்களுக்கு ஞாபகம் ஊட்டுவதும், முஸ்லிம்களின் உரிமைகள் விடயத்தில் அவர்கள் தெரியாமல் இருப்பவை மற்றும் அவர்களுக்கு சென்றடையாதவற்றை அவர்களுக்கு தெரியப் படுத்துவதுமாகும்”[38]

அதேபோன்று “மக்கள் மேல் உள்ள அச்சம் சத்தியத்தை அறிந்துள்ள ஒரு மனிதர் அதனை சொல்வற்குத் தடையாக இருந்துவிடக்கூடாது” (இப்னு மாஜா, 3253)[39] என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவ்வாறே “அநியாயமிழைக்கும் ஆட்சியாளரிடம் நீதமான வார்த்தை பேசுவதே மிகச் சிறந்த அறப்போராட்டம் ஆகும்” (திர்மிதி, 2174; அபு தாவூத், 4344)[40] எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

கருத்துச் சுதந்திரத்தை அனுபவிப்பதனூடாவே நன்மையை ஏவுதல் மற்றும் தீமையைத் தடுத்தல் எனும் கடமை நிறைவேறுகிறது. அதாவது அல்லாஹ் இக்கடமையை ஏவியிருப்பதானது மனிதர்கள் நல்லவையாகக் கருதும் விடய ங்களை அவர்கள் ஏவுவதற்கும் தீயவையாகக் கருதும் விடயங்களை விட்டு பிறரைத் தடுப்பதற்கும் தமது கருத்தை வெளிப்படுத்துவற்கான உரிமையை அவர்களுக்கு வழங்கி இருப்பதை இது உணர்த்துகிறது.

அதேபோன்று அதிகாரம் பெற்ற ஆட்சியாளர் மீதுள்ள பிறருடன் கலந்தாலோசிக்க வேண்டிய (ஷுரா எனும்) கடமையானது தான் கலந்தாலோசிக்கும் நபர்களுக்கு கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

---

[38] அல்மின்ஹாஜ் ஷர்ஹு ஸஹீஹி முஸ்லிம் இப்னில் ஹஜ்ஜாஜ், 2/38.

[39] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 168.

[40] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 4344.

இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் கருத்துச் சுதந்திர உரிமை மிக அழகிய முறையில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. பத்ர் போர்க்களத்தில் முஸ்லிம்கள் எங்கு நிலை கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் நபி (ஸல்) அவர்களின் கருத்துக்கு மாற்றமாக அல்ஹப்பாப் பின் அல்முன்திர் என்ற நபித்தோழர் ஒரு கருத்தைக் குறிப்பிடுகிறார். உடனே நபியவர்கள் அக்கருத்தை அங்கீகரித்துச் செயல் படுத்தினார்கள்.

அதேபோல் நபி (ஸல்) அவர்களின் மனைவி (ஆயிஷா (ரழி) அவர்கள்) மீது அவதூறு கூறப்பட்ட நிகழ்வில் சில ஸஹாபாக்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். அப்போது அவர்களில் சிலர் தனது மனைவியான ஆயிஷா (ரழி) அவர்களை விவாகரத்து செய்து விடுமாறு நபியவர் களுக்கு ஆலோசனை வழங்கினர். எனினும் ஆயிஷா (ரழி) குற்றமற்றவர் (தூய்மையானவர்) என அல்குர்ஆன் குறிப் பிட்டது. இவ்வாறு சஹாபாக்களும் அவர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளமைக்கான பல்வேறு சான்றுகள் உண்டு.

எனவே, கருத்துச் சுதந்திரம் அல்லது கருத்தை வெளிப் படுத்துவது இஸ்லாமிய ஷரீஆவின் உத்தரவாதப்படுத்தப்பட்ட ஓர் உரிமையாக உள்ளமையினால், ஒரு நபர் ஏதேனும் ஒரு கருத்தை வெளிப்படுத்தியதற்காக அவரை எந்த வகையிலும் துன்புறுத்த முடியாது. ஏனெனில் அதற்கு அனுமதி வழங்கியது இஸ்லாமிய ஷரீஆ ஆகும். ஒருமுறை உமர் (ரழி) அவர்கள் பள்ளிவாயலில் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது மஹர் தொடர்பான விவகாரம் ஒன்றில் ஒரு பெண் உமர் (ரழி) அவர்களுக்கு மாற்றமாக ஒரு கருத்தை குறிப்பிட்டார். எனி னும் அதற்காக உமர் (ரழி) அவர்கள் அப்பெண்ணைத் தடுக்கவில்லை. அத்துடன் அப்பெண் கூறுவதே சரியாகும் என்பதையும் ஒப்புக் கொண்டு “அப்பெண் சரியாக கூறிவிட்டார். உமர் தவறிழைத்து விட்டார்” எனக் குறிப்பிட்டார்கள்.[41]

[41] பார்க்க: அல்குர்துபி: அல்ஜாமி.ஃ லி அஹ்காமில் குர்ஆன், 5/95.

**கருத்தை வெளிப்படுத்துவதில் நம்பகமாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ளல்**

தனது கருத்து வெளிப்பாட்டு உரிமையைப் பயன்படுத்த முனையும் ஒரு முஸ்லிம் அவ்விடயத்தில் நம்பகமாகவும் உண்மையாகவும் நடந்து கொள்வது மிக அவசியமாகும். எனவே, தான் உண்மை என கருதுபவற்றை அவர் கூற வேண்டும். கடினமாக இருப்பினும் அவர் உண்மை யையே கூறவேண்டும். ஏனெனில் கருத்துச் சுதந்திரத்தின் மிகப் பிரதான இலக்கு சத்தியத்தை அல்லது சரியானதை வெளிப்படுத்துவதும் அதனை பிறருக்குக் கேட்கச் செய்வ துமாகும். பொய்யான ஒன்றை உண்மை என காண்பிப்பது உண்மையை மறைப்பது அதன் நோக்கம் அல்ல. தனது கருத்தை வெளிப்படுத்துவதனூடாக நலவு நடுவதை இலக்காகக் கொள்ள வேண்டும். அத்துடன் தனது கருத்தினூடாக அத்துமீறல், முகஸ்துதி, பிரபலமடைவதை எதிர்பார்த்தல், சத்தியத்தின் பக்கம் இருப்பவரை களங்கப் படுத்தல், சத்தியத்தையும் அசத்தியத்தையும் கலந்துவிடல், மக்களின் உரிமைகளைப் பாதித்தல், ஆட்சியாளர்களின் கெடுதிகளை பெரிதுபடுத்தி அவர்களின் நலன்களையும் ஆளுமைகளையும் இழிவுபடுத்தல், ஏதேனுமோர் நலனை அடைவதற்காக அவர்கள் தொடர்பில் மோசமான விடயங்களைப் பரப்பி அவர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடல் போன்றவற்றினூடாக எந்நேரத்திலும் அவர் அவ்வுரிமையைத் துஷ்பிரயோகம் செய்து விடக்கூடாது.

அந்தவகையில் இஸ்லாம் அங்கீகரித்துள்ள கருத்து சுதந்திரம் இவ்வாறுதான் அமைகிறது. இது நாகரிக முன்னேற்றத்துக்கான முக்கிய கருவியாகவும் ஒருவர் தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான முக்கிய ஊடகமாக இது உள்ளது.

# இஸ்லாத்தில் உயிர் வாழும் உரிமை மற்றும் அடிமை விடுதலை

## அறிமுகம்

மனிதர்கள் எவ்வகையான இனத்தை, நிறத்தை சேர்ந்தவர்களாக இருப்பினும் மனிதர்கள் என்ற வகையில் அவர்களின் கண்ணியத்தை மீள் ஒப்படைப்பதற்காகவே இஸ்லாம் மிளிர்ந்தது எனலாம். எனவே, அனைத்து மனிதர்களுக்கு மத்தியிலும் சமத்துவத்தை அது ஏற்படுத்தியது. மனிதர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு வருவதற்கான ஒரே காரணி இறையச்சம் (தக்வா) என்ற அடிப்படையாகும் என்பதை அது குறிப்பிட்டது. மக்கா வெற்றியின் பின்னர் நிறத்தின் அல்லது இனத்தின் அடிப்படையிலான அனைத்து வகை வேறுபாடுகளையும் நபி (ஸல்) அவர்கள் தவிடுபொடியாக்கினார்கள். அத்துடன் ஏகத்துவ முழக்கத்துக்காக க.்.பாவின் மேற்பரப்புக்கு (கறுப்பித்தைச் சேர்ந்த) பிலால் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் உயர்த்தியதனூடாக அனைத்து வகை இன வேறுபாடுகளையும் வேரோடு ஒழித்தார்கள். அதேபோன்று அதற்கு முன்னர் தன்னுடைய சிறிய தந்தையான ஹம்சா (ரழி) மற்றும் அவரது அடிமை ஸைத் (ரழி) ஆகியோருக்கிடையே சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தினார்கள்.

## இறுதி ஹஜ் கிரிகையும் சமத்துவக் கோட்பாடும்

பிரியாவிடை ஹஜ்ஜின் போது சமத்துவக் கோட்பாட்டை நபி (ஸல்) அவர்கள் பிரகடனப்படுத்தினார்கள். அந்தவகையில் "நீங்கள் அனைவரும் ஆதமின் சந்ததிகளாவர். ஆதம் மண்ணிலிருந்து படைக்கப்பட்டவர். இறையச்சம் (தக்வா) மூலமாக அன்றி உங்களில் அரபி அல்லாதவரை விட ஓர் அரபிக்கோ, ஓர் சிவப்பு நிறத்தவரை விட கறுப்பருக்கோ, ஓர் கறுப்பரை விட சிவப்பு நிறத்தவருக்கோ எந்த சிறப்பும் இல்லை" (அஹ்மத், 23489)[42] என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே, மனித உயிருக்கான

---

[42]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல்அர்நாஊத் குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தக்ரீஜுல் முஸ்னத், 23489.

சுதந்திரம் மற்றும் அடிமை ஒழிப்பு போன்றவற்றுக்கான பகிரங்க அழைப்பாக இது இருந்தது எனலாம்.

மனிதர்கள் அனைவரும் ஒரே தந்தை வழியாக வந்துள்ளனர் என்ற வகையிலும் அவர்கள் பிறக்கும்போது சுதந்திரமானவர்க ளாகவே பிறக்கிறார்கள் என்ற இயற்கை நியதியின் அடிப்படையிலும் மக்கள் அனைவருமே சுதந்திரமானவர்கள். அவர்களில் எவரும் அடிமைகள் அல்லர் என்பதே இஸ்லாத்தின் அடிப்படையாகும்.

அக்கால மக்கள் பல வகையான இழிவுகளுடன் அடிமைப்படும் நிலையிலும் இருந்து வந்தனர். மனிதர்கள் அடிமைகளாக பயன்படுத்தப்படும் இவ்வாறான ஓர் காலப்பகுதியிலேயே இவ் வடிப்படையை வலியுறுத்தி இஸ்லாம் ஒளிர்ந்தது.

## இஸ்லாமும் அடிமை விடுதலையும்

இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர் பல்வேறு சமூகங்களிலும் நாகரிகங்களிலும் கோத்திர அடிப்படையிலான அல்லது மனித சமூகத்தை பல்வேறு படிநிலைகளாக வகைப்படுத்தும் வர்க்கப் பாகுபாடுகள் அடிப்படையிலான ஒழுங்குகள் நிலவி வந்தன. அக்காலப்பகுதியில் சுதந்திரமா னவர்கள் கட்டற்ற உரிமைகளையும், தலைமைத்துவம் மற்றும் அதிகாரத்தையும் முழுமையாக அனுபவித்து வந்தனர். அதே போல் சுதந்திரமான, கௌரவமான வாழ்வுக்கான உரிமை அற்ற அடிமைகள் எவ்வித இரக்கமும் அன்பும் இன்றி வாழ நிர்பந்திக்கப்பட்டனர்.

இவ்வாறான சூழ்நிலையில் அடிமைகளை விடுதலை செய்வதை முஸ்லிம்களுக்கு இஸ்லாம் தூண்டியது. அவர் களை அழகிய முறையில் விடுதலை செய்யுமாறும் பணித்தது. அத்துடன் அதனை ஒரு அன்பளிப்புச் செயலாகவும் மன்னிப்பாகவும் இஸ்லாம் அடையாளப்படுத்தியது. அடிமை விடுதலையை மிக உன்னத நற்செயலாக இஸ்லாம் கருதுகிறது. தமக்குச் சொந்தமான செல்வங்கள் ஊடாக அடிமைகளை விடுதலை செய்யுமாறும் மு.ஃமின்களை இஸ் லாம் தூண்டுகிறது. அடிமைக்கு ஏதேனும் அநியாயம் இடம் பெறும்போது அல்லது அவருக்கு அடிக்கும் போது அதற்கான குற்றப்பரிகாரம் அவனை விடுதலை செய்வதாகும் என

இஸ்லாம் நிர்ணயித்தது. தவறுதலாக இடம்பெறும் கொலை (அல்கத்லுல் கத.்.), சத்தியத்தை முறித்தல், ரமழான் மாத பகல் பொழுதில் நோன்பை விடல் போன்ற பல்வேறு குற்றங்களுக்கான பரிகாரமாக அடிமை விடுதலையை அது நிர்ணயித்தது. அத்துடன் (தம் எஜமானிடமிருந்து) விடுதலைக் கான உரிமைச் சீட்டை வேண்டும் அடிமைகளுக்கும் (அவர்கள் விடுதலையாக) உதவுமாறு இஸ்லாம் வழி காட்டுகிறது. அத்துடன் ஸகாத் செலவிடப்பட வேண்டிய (எட்டில்) ஒரு பகுதியாக அடிமை விடுதலையை இஸ்லாம் பிரகடனப்படுத்தியது. அதேபோன்று எஜமான் ஊடாக ஒரு அடிமைப்பெண் குழந்தை பெற்றிருப்பின் அவரின் மரணத்தின் பின்னர் அத்தாய் விடுதலையானவள் ஆவாள் என இஸ்லாம் நிர்ணயித்தது.

## அடிமைப் பிரச்சினையைக் கையாள்வதற்கான இஸ்லாத்தின் திட்டம்

மனித சமூகத்தில் முக்கிய பிரச்சினையாக உள்ள அடிமைப் பிரச்சினையை வெற்றிகரமாகக் கையாள்வதற்கான இஸ்லாத்தின் உன்னத திட்டமிடலை சுருக்கமாக 3 குறிப்புகளில் பின்வருமாறு குறிப்பிட முடியும்:

**முதலாவது** யுத்தத்தில் பிடிபடும் அடிமைகளைத் தவிர அடிமை ஆக்கிக் கொள்வதற்கான ஏனைய அனைத்து வழிகளையும் மூடி, அதனை முற்றாகத் தடை செய்தமை.

**இரண்டாவது** அடிமை விடுதலைக்கான பல்வேறு வழிகளை ஏற்படுத்தியமை.

**மூன்றாவது** விடுதலைக்குப் பின்னர் அடிமைகளின் பல்வேறு உரிமைகளை பாதுகாத்து உத்தரவாதபடுத்தியமை.

அடிமைகளை விடுதலை செய்யுமாறும் அதற்காக மறுமையில் மகத்துவமான கூலி இருக்கிறது என்றும் (அக்காலத்தில்) வளர்ந்து வந்த முஸ்லிம் சமூகத்தை ஆர்வமூட்டும் வகையில் இஸ்லாமிய சட்டவாக்கம் அமைந்திருந்தது. இவ்விடயம் தொடர்பில் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்: “ஒரு அடிமையை விடுதலை செய்கிறவருக்கு (விடுதலை செய்யப்பட்ட) அந்த அடிமையின் ஒவ்வொரு

உறுப்புக்கும் பகரமாக ஓர் உறுப்பை நரகத்திலிருந்து அல்லாஹ் விடுதலை செய்வான். அவரின் மர்ம உறுப்புக்குப் பதிலாக இவருடைய மர்ம உறுப்பையும் விடுதலை செய்வான்" (முஸ்லிம், 1509).

அதேபோன்று அடிமைப் பெண்ணை விடுதலை செய்து அவளை மணந்து கொள்ளுமாறும் நபியவர்கள் ஆர்வம் ஊட்டினார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறுவதாக அபூ மூஸா அல்அஷ்அரி (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

"ஒரு மனிதரிடம் அடிமை(பணி)ப் பெண் ஒருத்தி இருந்து, அவளுக்கு அவர் கல்வி கற்பித்து, அதையும் நன்கு கற்பித்து, அவளுக்கு ஒழுக்கமூட்டி, அதையும் அழகுற செய்து, பிறகு அவளை விடுதலையும் செய்து, திருமணமும் செய்தால் அவருக்கு (விடுதலை செய்தது மற்றும் மணந்ததற்காக) இரண்டு நற்பலன்கள் கிடைக்கும்" (புகாரி, 5083). நபி (ஸல்) அவர்களும் தனது மனைவியான ஸபிய்யா பின்த் ஹுயய் பின் அக்தப் என்ற பெண்மணியை விடுதலை செய்து அப் பெண்மணியின் திருமணத்துக்கான மஹறாக விடுதலையையே நிர்ணயித்தார்கள்.

அதேபோன்று நபியவர்களின் அடிமைகள் தொடர்பான அறிவுரைகளை எடுத்து நோக்கும் போது அவர்களை விடுதலை செய்வதை ஏற்றுக் கொள்ளும் மனோநிலைக்கு தனது சமூகத்தை தயார்படுத்துவதற்கான திறவுகோலாகவே அவை அமைந்தன. நாம் அன்றாடம் பயன்படுத்தும் வார்த்தை களிலும் சொற்பிரயோகங்களும் கூட அடிமைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறே நபி (ஸல்) அவர்கள் ஆர்வமூட்டியுள்ளார்கள்.

இதற்கு "(உங்கள் அடிமைகளுக்கு) "என் அடிமை, என் அடிமைப் பெண்" என்று உங்களில் எவரும் கூற வேண்டாம். ஏனெனில் நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் அடிமை களாவர். உங்களின் பெண்கள் அனைவரும் அல்லஹ்வின் அடிமைப் பெண்களாவர். மாறாக (அன்பாக) "என் பணியாள், என் பணிப்பெண், என் பையன், என் பெண்மணி" என்று கூறட்டும்" (முஸ்லிம், 2249) எனும் நபிமொழி சான்றாகும்.

அதேபோன்று ஒருவர் தனது வீட்டில் உள்ளவர்கள் எவ்வாறு உணவு உண்டு உடை அணிகிறார்களோ அவ்வாறே அவரது அடிமைக்கும் உணவும் உடையும் வழங்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. அத்துடன் அடிமைகளின் இயலு மைக்கு அப்பாற்பட்டவைகளை அவர்களுக்குச் செய்யுமாறு பணிப்பதையும் இஸ்லாம் தடுக்கிறது. "நீங்கள் உண்பதிலிருந் து அவர்களுக்கு உணவளியுங்கள். நீங்கள் அணிவதிலிருந்து அவர்களுக்கும் அணிவியுங்கள். அல்லாஹ்வின் படைப் பினத்தைத் துன்புறுத்தி விடாதீர்கள்" (அல்அதபுல் முப்ரத், 139)[43] என நபி (ஸல்) அவர்கள் அறிவுரை கூறி வந்ததாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோன்று கண்ணியமிக்க மனிதப்படைப்பு என்ற வகையில் அடிமைக்கு இஸ்லாம் வழங்கியுள்ள எவ்வகையான உரிமை கள் விடயத்திலும் எவ்வகையிலும் அத்துமீறிவிடக்கூடாது.

அதேபோன்று அடிமையைத் துன்புறுத்தல் அல்லது அவனுக்கு அடித்தல் போன்ற குற்றங்களுக்கான பரிகாரமாக அவர்களை விடுதலை செய்யுமாறு இஸ்லாம் பணித்திருப்பது மிக முக்கிய படிநிலையாகும். நடைமுறைச் சாத்தியமான மனித சுதந்திரத் தின் பால் மனித சமூகத்தை நகர்த்த வேண்டும் என்பதே இதன் இலக்காகும். ஒரு முறை அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் தனது அடிமைக்கு அடித்து விட்டார். பின்னர் அவரை அழைத்த போது அவரது முதுகில் ஓர் அடையாளம் இருப்பதை அவர் கண்டார். அப்போது அவரிடம் "நான் உன்னை நோவினை செய்து விட்டேனா?" எனக் கேட்டார். அப்போது அவ்வடிமை "அப்படியில்லை" என்றார். அப்போது அவர் "நீர் விடுதலை செய்யப்பட்டு விட்டீர்" எனக் கூறிவிட்டார். பின்னர் பூமியிலிருந்து ஏதோ ஒரு சிறிய ஒன்றை எடுத்து "இதன் பெறுமானமளவு கூட எனக்கு இவ்விடுதலையில் வெகு மானம் கிடைக்காது. நபியவர்கள் பின்வருமாறு சொல்லுவதை நான் கேட்டேன்: "யாரேனும் ஒருவர் தனது அடிமைக்கு அவர் செய்யாத ஒன்றுக்காக தண்டனை வழங்க வேண்டும் என அடித்து விடுகிறாரோ அல்லது கன்னத்தில் அறைந்து

[43] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுல் அதப் அல்முப்ரத், 139.

விடுகிறாரோ அதற்கான குற்றப்பரிகாரம் அவரை விடுதலை செய்வதாகும்" என்றார்கள்" (முஸ்லிம், 1657).

அதேபோன்று அடிமை விடுதலை தொடர்பான தெளிவான வார்த்தைப் பிரயோகங்கள் உடனடியாக செல்லுபடியாகும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள்: "தீவிரமாக அல்லது விளையாட்டுத்தனமாக எடுத்துக் கொள்ளப்பட்டாலும், மூன்று விஷயங்கள் தீவிரமானவையாகக் கருதப்படுகின்றன. தலாக், திருமணம் மற்றும் அடிமை விடுதலை ஆகியவையே அவையாகும்" (அபூ தாவூத், 2194)[44] எனக் கூறினார்கள்.

அதேபோன்று குற்றங்களுக்கான பரிகாரங்களுக்கான ஒரு வழியாகவும் இஸ்லாம் அடிமை விடுதலையை ஏற்படுத்தி யுள்ளது. இது இயலுமானவரை அதிகமான அடிமைகளை விடுதலை செய்வதற்கான ஓர் உத்தியாகும்.

மனிதப் பாவங்கள் நின்று விடாது தொடர்ந்து நடப்பவை யாகும். ஆதமின் சந்ததிகளில் ஒவ்வொருவரும் பாவம் இழைப்பவனாவான். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"யாரேனும் ஒரு முஸ்லிம் இன்னுமொரு முஸ்லிமான அடிமையை விடுதலைசெய்து விடுவாராயின் அது நரகிலிரு ந்து பாதுகாக்கும் கேடயமாக அவருக்கு அமையும். அவரின் (அவ்வடிமையின்) ஒவ்வொரு உடல் உறுப்பும் அவரது உறுப்புக்களுக்கு (நரகிலிருந்து பாதுகாக்கப்படுவதற்குப்) போதுமானது. யாரேனும் ஒரு மனிதர் முஸ்லிமான இரு அடிமைப் பெண்களை விடுதலை செய்து விடுவாராயின் அது அவருக்கு நரகிலிருந்து பாதுகாப்பாக அமையும். அவர்களது ஒவ்வொரு உறுப்பும் அவரது உறுப்புக்களுக்கு (நரகிலிருந்து பாதுகாக்கப்படுவதற்குப்) போதுமானது. அதேபோன்று யாரே னும் ஒரு முஸ்லிம் பெண் மற்றுமொரு முஸ்லிம் பெண்ணை

---

[44]இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 2194.

விடுதலை செய்வாராயின் அது அவளுக்கு நரகிலிருந்து பாதுகாப்பாக அமையும். அவளது ஒவ்வொரு உறுப்பும் அவளது உறுப்புக்களுக்கு (நரகிலிருந்து பாதுகாக்கப் படுவதற்குப்) போதுமானது" (திர்மிதி, 1547)[45].

அடிமை விடுதலைச் சீட்டின் ஊடாக தமது சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான உரிமையை அடிமைகளுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது. அதாவது தனது எஜமானுடன் உடன்படும் ஓர் பணத்தொகைக்கு நிகராக அவ்வெஜமான் அடிமைக்கு சுதந்திரத்தை வழங்குவதே இவ்விடயமாகும். அத்துடன் இந்நேரத்தில் அவ்வடிமைக்கு விடுதலையாவதற் காக உதவி செய்வதையும் இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. ஏனெனில் ஒரு மனிதன் சுதந்திரமானவன் என்பதே அடிப்படையாகும். அடிமைத்துவம் இடைநடுவில் வந்ததாகும். நபி (ஸல்) அவர்கள் இதற்கான சிறந்த முன்மாதிரியாக இருந்தார்கள். ஜுவைரியா (ரழி) எனும் பெண்ணின் விடுத லைக்காக எழுதப்பட்ட அடிமை விடுதலைச் சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையை நபி (ஸல்) அவர்களே செலுத்தினார்கள். பின்னர் அவரை திருமணம் செய்து கொண்டார்கள். நபி அவர்களின் திருமணம் தொடர்பில் முஸ்லிம்கள் கேள்விப்பட்டபோது அவர்களும் தமக்கு கீழிருந்த அனைத்து யுத்தக் கைதிகளையும் விடுதலை செய்துவிட்டார்கள். அத்துடன் "அவர்கள் (யுத்தக் கைதிகள்) நபியவர்களின் (ஜுவைரியா எனும் மனைவியின் புறத்து) உறவுக்காரர்கள்" என்றார்கள். இதனால் பனூல் முஸ்தலிக் கோத்திரத்தை சார்ந்த 100 பேர் விடுதலை செய்யப்பட்டனர் (அபூ தாவூத், 3931)[46].

---

[45] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல் அர்நாஊத் குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தக்ரீஜு ஸாதில் மஆத், 2/303.

[46]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல் அர்நாஊத் குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தக்ரீஜு ஸாதில் மஆத், 3/231.

ஸகாத் வழங்க முடியுமான (எட்டுப்) பிரிவுகளில் ஒன்றாக அடிமை விடுதலையை இஸ்லாம் கடமையாக்கியுள்ளமை மேற்கூறப்பட்ட விடயத்தை விட ஒரு படி மேலானதாகும். இவ்விடயம் தொடர்பில் "(ஸகாத் எனும்) தானங்கள் தரித்திரர் களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும்… உரியவை" (9:60) என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது

நபி (ஸல்) அவர்கள் 63 பேரை விடுதலை செய்துள்ளதாக சான்றுகள் குறிப்பிடுகின்றன. அதேபோன்று ஆயிஷா (ரழி) அவர்கள் 69 பேரையும், அபூ பக்கர் (ரழி) அவர்கள் பலரை யும், அப்பாஸ் (ரழி) அவர்கள் 70 அடிமைகளையும் உஸ்மான் (ரழி) அவர்கள் 20 அடிமைகளையும், ஹகீம் பின் ஹிஸாம் (ரழி) அவர்கள் 100 அடிமைகளையும், அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் ஆயிரம் அடிமைகளையும் அப்துர் ரஹ்மான் பின் அவ்.ஃப் (ரழி) அவர்கள் முப்பதாயிரம் அடிமைகளையும் விடுதலை செய்துள்ளதாக வரலாற்று சான்றுகள் குறிப்பிடுகின்றன[47].

உண்மையில் இஸ்லாத்தின் அடிமை விடுதலை தொடர்பான வழிகாட்டல் அடிமை வியாபாரத்தை பாரிய அளவில் குறைப்பதற்கு பெரிதும் உதவியது. சிறிது காலத்தின் பின்னர் அது முற்றாக அழிந்துபோனது. இஸ்லாமிய ஆட்சியின் கடைசி காலப்பகுதிகளில் அடிமைகளாக இருந்தவர்கள் உயர் அரசியல் அதிகாரங்களையும் இராணுவ அதிகாரங்களையும் பெற்றவர்களாகத் தரம் உயர்வதற்கு இஸ்லாமே பெறும் பங்காற்றியது. கிட்டத்தட்ட 300 வருடங்கள் முஸ்லிம் சமூகத்தின் ஓர் பெரும் நிலப்பரப்பு *மமாலீக்* (எனும் அடிமைப் பின்னணியில் தோன்றிய) அரசினால் ஆளப்பட்டமை இதற் கான சிறந்த உதாரணமாகும். வரலாறு நெடுகிலும் இதற்கு நிகராக எவ்வித நிகழ்வுகளும் இடம்பெறவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

---

[47] அல்கத்தானி, அத்தாராதீபுல் இதாரிய்யா, பக். 49-59.

# இஸ்லாத்தில் சொத்துடைமைச் சுதந்திரம்

## சமவுடமை மற்றும் முதலாளித்துவ நோக்கில் சொத்துடமைச் சுதந்திரம்

பண்டைய உலகிலும் நவீன உலகிலும் சொத்து டைமை விவகாரம் தொடர் பேசு பொருளாகவே உள்ளது. இவ்விவகாரத்தில் பல்வேறு எதிரும் புதிருமான சிந்தனைகளும் கருத்துக்களும் தோற்றம் பெற்றுள்ளன. பொதுவுடமைக் கோட்பாடு தனி தனிநபர் பெறுமானத்தையும் அவனது சுதந்திரத்தையும் முற்றாக அழித்துவிட்டது. ஏனெனில் இக் கோட்பாட்டின்படி ஏதேனும் ஓர் பூமி, தொழிற்சாலை, அசையாச் சொத்து, அல்லது வருமானம் ஈட்டும் சாதனமாக உள்ள எந்த ஒன்றையும் எந்த ஒரு தனி நபருக்கும் உரித்தாக்க முடியாது. இக்கோட்பாட்டுக்கிணங்க, உற்பத்தி மூலங்களின் உரித்துடமையைப் பெற்று, அவற்றை நிர்வ கிக்கும் அரசுக்கு கூலித்தொழிலாளியாக செயற்படுவதே அவன் மீதுள்ள கடமையாகும். அதேபோன்று ஹலாலான மூலதனமாக இருப்பினும் அதனை தனிநபர் உரித்துப் பெறுவதை இது முற்றாகத் தடை செய்கிறது.

அதேபோன்று மறுபுறம் முதலாளித்துவம் தனிநபர் சொத்துடைமை சுதந்திரத்தை புனிதப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. சொத்தை உரித்தாக்கல், அதனை பெருகச் செய்தல், அல்லது அதனை செலவிடும் வழிகள் தொடர்பில் முழுமையாக தனிநபர் விருப்புக்கு ஏற்ற வகையில் எவ்வித நிபந்தனைகளுமின்றி சொத்துடமையில் கட்டற்ற சுதந்திரத்தை அவனுக்கு அது வழங்குகிறது. இதனால் அச்சொத்து விடயத்தில் சமூகத்திற்கு எவ்வித உரிமைகளும் இல்லாமல் போய் விடுகின்றன.

## இஸ்லாமும் சொத்துடமைச் சுதந்திரமும்

மேற்கூறப்பட்ட இரு கோட்பாடுகளிலும் பல்வேறு கெடுதிகளும் சீர்கேடுகளும் இருக்கின்றன என்ற வகையில் தனிநபர் சொத்துரிமையை மகத்துவப்படுத்தும் முதலாளி த்துவத்தின் எல்லைமீறிய போக்குக்கும் தனிநபர் சொத்துடைமையை முற்றாக மறுக்கும் பொதுவுடமைக்

கோட்பாட்டின் எல்லைமீறிய போக்குக்குமிடையே ஓர் நடுநிலையான போக்கை இஸ்லாம் அறிமுகப்படுத்தியுள்ளது. இது தனிநபர் மற்றும் சமூக நலனுக்கிடையே பிணைப்பு ஏற்படுவதற்கு பெரிதும் பங்காற்றுகிறது.

அந்தவகையில் தனிநபர் சொத்துரிமையை இஸ்லாம் ஆகுமாக்கியிருப்பினும் பிற மனிதர்களையும் பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு பிரத்தியேக நிபந்தனைகளையும் இட்டுள்ளது. அத்துடன் மனித உரிமைகளைக் கவனத்தில் கொண்டு பிரத்தியேகமான சில விடயங்களில் தனிநபர் சொத்துரிமையை அது தடுத்துள்ளது. அதாவது அவற்றைப் பொது உரிமையாக ஆக்கியுள்ளது. அந்தவகையில் இஸ்லாம் தனிநபர் சொத்துரிமை சுதந்திரத்தையும், சமூக சொத்துரிமைச் சுதந்திரத்தையும் நடுநிலையாகவும் ஏற்றத்தாழ்வின்றியும் அங்கீகரித்துள்ளது எனலாம்.

## இஸ்லாத்தில் தனிநபர் சொத்துரிமை

ஏதேனுமொன்றைப் பெற்றுக் கொள்ளும்போது பிரத்தியேகமாக தனிப்பட்ட முறையில் அவற்றை உரித்தாக்கல் மற்றும் அவற்றினூடாக பயன்பெறல் போன்ற உரிமைகளை தனிநபருக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது. இயற்கை நியதியும், மனித சுதந்திரத்தின் தனித்துவங்களும், மனித இனத்தின் தனித்துவங்களும் இதனையே வேண்டி நிற்கின்றன. அதேபோன்று உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அதனை திறன்பட மேற்கொள்வதற்கும் இது மிக முக்கிய ஊக்கியாகும். இஸ்லாமியப் பொருளாதாரத்தின் அடிப்படை விதியாக இதனை இஸ்லாம் வகுத்துள்ளது. அதன்விளைவாக குறித்த சொத்துரிமையாளருக்காக கொள்ளை, திருட்டு, அபகரிப்பு போன்றவற்றிலிருந்து அச்சொத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான வழிவகைகளையும் அது ஏற்படுத்தியுள்ளது. இவ்வுரிமைக்கான உத்தரவாதம் என்ற வகையிலும் ஒரு தனிநபருக்கு தனது சொத்துரிமையில் ஏற்பட முடியுமான அச்சுறுத்தல்களை தவிர்ப்பதற்காகவும் அச்சொத்துக்களில் அத்துமீறுவோருக்கு எதிராக பல்வேறு கடுமையான தண்டனைகளையும் அது வகுத்துள்ளது. அத்துடன் இவ்வுரிமைகளுடன் தொடர்பான வேறு பல ஒழுங்குகளையும் அமைத்துள்ளது. தனது விருப்பத்திற்கேற்ப விற்றல், வாங்கல், வாடகைக்கு

விடல், அடமானம் வைத்தல், அன்பளிப்பாக வழங்குதல், வஸிய்யா செய்தல் போன்ற பல்வேறு ஆகுமான செயற்பாடுகள் ஊடாக அவற்றில் விரும்பியவாறு கொடுக்கல் வாங்கலை மேற்கொள்வதே அதுவாகும்.

எனினும் தனிநபர் சொத்துரிமையை இஸ்லாம் எவ்வித வரையறைகளும் இன்றி பொதுவாக விட்டுவிடவில்லை. பிறரின் உரிமைகள் பாதிப்புக்கு உள்ளாகி விடாத வண்ணம் பல்வேறு வரையறைகளை அது வகுத்துள்ளது. இஸ்லாம் வட்டி, மோசடி, இலஞ்சம், பதுக்கல் போன்ற சமூக நலனில் பாதிப்பை ஏற்படுத்தும் அல்லது குந்தகத்தை ஏற்படுத்தும் பல்வேறு விடயங்களைத் தடை செய்துள்ளமையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். தனிநபர் செத்துரிமைச் சுதந்திரம் எவ்வித வேறுபாடுமின்றி ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் உரியதாகும். இதனை "ஆண்களுக்கு, அவர்கள் சம்பாதித்த(வற்றில் உரிய) பங்குண்டு. (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித்த(வற்றில் உரிய) பங்கு உண்டு" (4:32) எனும் அல்குர்ஆனிய வசனம் தெளிவு படுத்துகிறது.

அதேபோன்று குறித்த மனிதன் தனது சொத்தைப் பெருக்க (இலாபமீட்ட) முனைய வேண்டும் என்பதும் அந் நிபந்தனைகளில் ஒன்றாகும். ஏனெனில் அவ்விடயத்தில் பராமுகமாக இருப்பது தனிநபருக்கும் சமூக விருத்திக்கும் பாதிப்பாக அமையும். அத்துடன் குறித்த சொத்து *நிஸாபை* (ஸகாத் கடமையாகும் அளவு) அடைந்து அதற்கு ஒரு வருடம் பூர்த்தியடையும் எனில் அதிலிருந்து ஸகாத்தை நிறைவேற்றல் இவ்வரையறைகளுள் ஒன்றாகும். ஏனெனில் சொத்துக்கான உரிமைகளுள் அதன் ஸகாத்தை நிறைவேற்றுவதும் ஒன்றாகும்.

## இஸ்லாத்தில் கூட்டு (சமூக) சொத்துடமை

இஸ்லாத்தில் சமூக சொத்துரிமை என்ற ஓர் அம்சமும் உண்டு. அதாவது ஒரு பாரிய சமூகம் அல்லது சமூகத்தில் உள்ள சில குழுக்கள் அதிகாரம் செலுத்தும் பகுதியே இதுவாகும். எனவே, இச்சொத்தின் பலன்களை அச்சமூகத்தில் ஒவ்வொரு தனிநபரும் அனுபவிக்க முடியும். குறித்த

அச்சொத்தில் பிரத்தியேகமான எந்த ஒரு பகுதியையும் அச்சமூகத்திலுள்ள தனிநபர்களால் தனக்கானதென சொந்தம் கொண்டாட முடியாமல் இருப்பினும் அச்சமூகத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் தனிநபர் அதனூடாகப் பயன்பெறுகிறார். பள்ளிவாயில்கள், பொது மருத்துவ மனைகள், பாதைகள், ஆறுகள், கடல்கள் போன்றவை இவற்றுக்கான சில உதாரணங்களாகும். எனவே, பொது நலனுக்காக பயன்படுத்தப்படும் பொது உரிமையாக இவை உள்ளன. ஓர் ஆட்சியாளர் அல்லது அவரது பிரதிநிதி இதில் அதிகாரம் செலுத்த முடியாது. எனினும் அது முஸ்லிம் சமூகத்தின் நலன்களை உறுதிப்படுத்துகிறது என்ற வகையில் அதனை நிர்வகிக்கும் பொறுப்பும் அதனை உரிய வகையில் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு.

## தனிநபர் சொத்துரிமையின் சில பிரதிபலிப்புகள்

சொத்துரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு வழிகளையும் ஊடகங்களையும் இஸ்லாம் வரையறுத்துள்ளது. அத்துடன் அவை தவிர்ந்த ஏனைய வற்றைத் தடுத்துள்ளது. அந்தவகையில் இஸ்லாத்தில் தனிநபர் சொத்துரிமை பின்வரும் இரு வகைகளில் கைகூடுகிறது.

**முதலாவது:** உரித்தாக்கப்பட்ட சொத்து. அதாவது ஏற்கனவே யாரேனுமொருவருக்கு உரித்தாக உள்ள சொத்தை இது குறிக்கிறது. இவ்வகையான சொத்தின் உரிமை அவ் வுரிமையாளரிடமிருந்து இஸ்லாம் குறிப்பிட்டுள்ள ஏதோ ஒரு காரணியின் ஊடாகவே பிறருக்குச் செல்லும். வாரிசுரிமை, வஸிய்யா, ஷுப்ஆ, வியாபார (கொடுக்கல் வாங்கல்) உடன்படிக்கை, அன்பளிப்பு போன்ற காரணிகளை இதற்கான உதாரணமாகக் கூற முடியும்.

**இரண்டாவது:** (உரித்தாக்க) அனுமதியான சொத்துக்கள். அதாவது எந்த ஒரு தனிநபராலும் ஏற்கனவே உரித்தா க்கப்படாத சொத்துக்களை இது குறிக்கிறது. இவ்வாறான சொத்துக்களை கையகப்படுத்த இஸ்லாம் வகுத்துள்ள ஒரு சில பிரத்தியேகமான செயற்பாடுகள் ஊடாகவே தனிநபர் அவற்றின் உரிமையை பெறுகிறார். தரிசு நிலங்களை

உயிர்ப்பித்தல், வேட்டையாடுதல், பூமியில் உள்ள கனிய வளங்களை தோண்டி எடுத்தல் போன்றவை இதற்கான உதாரணங்களாகும். அதேபோல் ஆட்சியாளர் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் ஏதேனும் ஓர் காணித் துண்டை குறித்த நபருக்காக பிரத்தியேகமாக வழங்குதல் (இக்தா∴) மூலமாகவும் இது சாத்தியப்படும்.

## கூட்டு (சமூக) சொத்துரிமையின் சில வடிவங்கள்

இஸ்லாத்தில் சமூக சொத்துரிமையின் பல்வேறு வடிவங்கள் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமான சில பின்வருமாறு:

**வடிவம் 1: பொதுவான இயற்கை வளங்கள்:** எவ்வித சிரமமோ முயற்சியோ இன்றி ஒரு நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பெறும் வளங்களை இது குறிக்கிறது. நீர், புற்பூண்டுகள், நெருப்பு போன்ற பல்வேறு விடயங்கள் இதனுள் அடங்கும்.

**வடிவம் 2: பாதுகாக்கப்படும் வளங்கள்:** அதாவது முஸ்லிம் சமூகத்தின் அல்லது முழு மனித சமூகத்தின் நலனுக்காக ஓர் அரசால் பாதுகாக்கப்படும் வளங்களை இது குறிக்கிறது. அடக்கஸ்தலங்கள், அரச திணைக்களங்கள், வக்ப் சொத்துக்கள், ஸகாத் பொருட்கள் போன்ற பல்வேறு விடயங்கள் இதனுள் அடங்கும்.

**வடிவம் 3:** எக்காலப்பகுதியிலும் முழுமையாக அல்லது நீண்ட நாட்களாக எந்த ஒருவரினதும் கைகள் படாத (யாராலும் பயன்படுத்தப்படாத) வளங்களை இது குறிக்கிறது. தரிசு நிலங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும்.

பொதுவாக சொத்துரிமையை பாதுகாக்கும் வழியாக சொத்துக்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென அல்லாஹ் கட்டளையிடுகிறான். அத்துடன் அல்லாஹ் கடமையாக்கி இருக்கும் தண்டனைகள் (ஹுதூத்) ஊடாகவும் இஸ்லாம் சொத்துரிமையை பாதுகாக்கிறது. திருடனின் கையைத் துண்டிப்பதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

## இஸ்லாம் அங்கீகரிக்காத சொத்துரிமை

சொத்தை உரித்தாக்கும் செயற்பாடு தூய்மை யானதாகவும் ஹலாலாகவும் இருப்பது மிக அவசியமானது. அச்சொத்து பிறருக்கு உரித்தானதாக இருக்கக் கூடாது. எனவே, அனாதைகள் ஏமாற்றப்பட்டு அவர்களின் சொத்துக்கள் அபகரிக்கப்படக் கூடாது. ஓர் ஏழையின் ஏழ்மை அல்லது ஓர் தேவையுள்ளவரின் தேவை பயன்படுத்தப்பட்டு வட்டிக் கொடுக்கல் வாங்கல் ஊடாக அவர்களின் சொத்துக்கள் உண்ணப்பட்டு விடக்கூடாது. அத்துடன் சமூக த்துக்கிடையே விரோதத்தை ஏற்படுத்தி தனி நபர்களிடையே பிளவுகளை உண்டுபண்ணும் சூதின் ஊடாகவும் அவர்களது சொத்துக்கள் உண்ணப்பட்டு விடக்கூடாது. இதனையே அல்குர்ஆன் "நம்பிக்கை கொண்டவர்களே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் ஏற்படுகிற வர்த்தகம் அல்லாமல், ஒருவர் மற்றொருவரின் பொருட்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்" (4:29) எனக் கூறுகிறது.

ஷரீஆவுக்கு முரணான வழியில் ஒருவர் ஒரு சொத்தின் உரிமையை பெற்றுக் கொள்வாராயின் அதனை இஸ்லாம் ஏற்கவோ பாதுகாக்கவோ மாட்டாது. மாறாக அதனை வைத்திருப்பவரிடமிருந்து அதனைப் பறித்து, அதன் அடிப்படை உரித்தாளிக்கு அதனை வழங்கிவிடும்படி இஸ்லாம் கூறுகிறது. திருடப்பட்ட அல்லது அபகரிக்கப்பட்ட பணத்தை இதற்கு உதாரணமாக கொள்ள முடியும். குறித்த சொத்துக்கு உரித்தாளர் யாரும் இல்லை எனில் அது திறைசேரிக்கு (பைத்துல் மாலுக்கு) உரித்தானதாகும்.

அத்துடன் சொத்தை ஈட்டுவதற்கும் அதனைப் பெருக்குவதற்கும் பல்வேறு வரையறைகளையும் ஒழுங்கு களையும் இஸ்லாம் வகுத்துள்ளது. தவறான வழியில் தோன்றும் வளர்ச்சியை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. வட்டி கொடுக்கல் வாங்கல், மது, போதைப் பொருட்கள் விற்பதனூடாக கிடைக்கப் பெரும் வளர்ச்சியை இதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும். அத்துடன் சமூக நலனுக்காக பிரத்தியேகமான ஒரு பகுதியை தனிநபர் சொத்தில் இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. ஸகாத், ஏனைய

கடமையான செலவீனங்கள், வாரிசுதாரர்களின் உரிமையைப் பாதுகாப்பதுடன் முழுச் சொத்தில் மூன்றில் ஒரு பகுதி வரையான சொத்தை வஸிய்யா செய்வதற்கு அனுமதித்து உள்ளமை போன்றவற்றை இதற்கான உதாரணங்களாகக் கொள்ள முடியும்.

அதேபோன்று செலவிடும் போது எவ்வித வீண்விரயமும் கஞ்சத்தனமும் இன்றி நடுநிலையாகச் செலவிடும்படி இஸ்லாம் வரையறுக்கிறது. இவ்விடயம் தொடர்பில் அல்குர்ஆன் “இன்னும், அவர்கள் செலவு செய்தால் வீண் விரயம் செய்யமாட்டார்கள். (உலோபித்தனமாகக்) குறைக்கவும் மாட்டார்கள். எனினும், இரண்டுக்கும் மத்திய நிலையாக இருப்பார்கள்” (25:67) எனக் குறிப்பிடுகிறது. அதேபோன்று இஸ்லாமிய ஷரீஆ தடுத்துள்ள விடயங்களுக்காகச் செலவிடுவதை இஸ்லாம் முற்றாகத் தடுத்துள்ளது.

பொது நலனைக் கருத்தில் கொண்டு நிர்ப்பந்த நிலைகளின் போது ஒருவரின் சொத்தை பலவந்தமாக பெற்று அச் சொத்துக்காக அவ்வுரிமையாளருக்கு நீதமான ஓர் மாற்றீட்டை வழங்குவதற்கும் இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. பொதுப் பாதை விஸ்தரிப்புக்காக ஒருவரிடமிருந்து பெறப்படும் சொத்தை இதற்கு உதாரணமாகக் கொள்ள முடியும்.[48]

## முஸ்லிம் அல்லாதவருக்கான சொத்துரிமை

ஓர் இஸ்லாமிய அரசுக்கு உட்பட்ட பகுதியில் முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதோரும் சொத்துரிமை பெறும் தனித்துவமான சட்ட ரீதியான அங்கீகாரத்தை பெற்றிருந்தனர். இதனால் பெரும் சொத்துக்களுக்கு அவர்கள் உரிமையாளர் களாக இருந்தனர். எடுத்துக்காட்டாக அப்பாஸிய ஆட்சியாளர்களில் பத்தாவது ஆட்சியாளரான முதவக்கில் என்பவரது மருத்துவரும் அவருக்கு நெருங்கியவருமான பக்தீஷ்ஃ. பின் ஜிப்ராஈல் என்ற கிறிஸ்தவர் அவ் வாட்சியாளருக்கு நிகராக உடையணிபவராகவும், நல்ல நிலையில் உள்ளவராகவும், பொருளாதார செழிப்பு உள்ள

[48] அல்ஹுகைல், ஹுகூகுல் இன்ஸான், பக். 57.

வராகவும் இருந்தார்.[49] அதேநேரத்தில் முஸ்லிம் அல்லாத தனிபர்கள் பொதுச் சொத்தினூடாகக் கிடைக்கப் பெறும் வளங்களையும் (முஸ்லிம்களைப் போன்று முழுமையாக) அனுபவித்து வந்தனர்.

இவ்வாறே இஸ்லாத்தில் சொத்துரிமைச் சுதந்திரம் இருந்தது. இது அனைவருக்கும் உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமை ஆகும். எனினும் இவ்வுரிமை பொது நலன்களுக்கு, தனிநபர்களின் அல்லது தனிப்பட்ட நலனுக்கு எவ்வகையிலும் குந்தகமாக அமைந்துவிடக் கூடாது என்பது இங்கு கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

49 முஸ்தபா அஸ்ஸிபாஈ, மின் ரவாஇஇ ஹழாரதினா, பக்: 68.

# இஸ்லாத்தில் கணவன்-மனைவி.. உரிமைகளும் கடமைகளும்

## அறிமுகம்

இஸ்லாமிய சமூகம் எனும் கட்டடத்தின் அடிப்படை அலகாக குடும்பம் விளங்குகிறது. அத்துடன் அது சமூகத்தின் பாதுகாப்பு அரணாகவும் அதன் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அடித்தளமாகவும் திகழ்கிறது.

இஸ்லாம் குடும்பம் தொடர்பில் அதிகூடிய கவனமும் கரிசனையும் கொண்டுள்ளது. அத்துடன் குடும்பத்துடன் தொடர்பான துல்லியமான ஓர் சட்ட ஒழுங்கையும் அது வகுத்துள்ளது. குடும்ப அங்கத்தவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளை அதில் தெளிவுபடுத்தியுள்ளது. அத்துடன் திருமணத் தொடர்பாடல்கள், செலவினம், வாரிசுரிமை, குழந்தை வளர்ப்பு, பெற்றோர் உரிமைகள் போன்ற பல்வேறு விடயங்களை ஒழுங்கமைத்துள்ளது. அன்பு, பிணைப்பு, பாசம் போன்றவற்றைக் குடும்ப அங்கத்தவர்களிடையே விதைத்து ள்ளது. குடும்பத்தைப் பலப்படுத்தி அதன் அங்கத்தவர்களின் நடத்தைகளை சீர்படுத்துவதானது சமூகத்தைப் பலப்படுத்து வதற்கும் அதன் இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் சமூக அங்கத்தவர்களிடையே உயர்ந்த மனித மற்றும் சமூக நெறிமுறைகளைப் பரப்புவதற்கும் பெரிதும் உதவுகிறது. அந்தவகையில் ஒப்பற்ற ஒரு நாகரிக வடிவில் சமூகத்தை இஸ்லாம் உயர்வடையச் செய்கிறது எனலாம். இதனூடாக இஸ்லாம் அராஜகம், நடத்தை நெறிபிறழ்வு, மற்றும் எதிர்காலச் சந்ததிகள் சீர்கேடுதல் போன்றவற்றிலிருந்து இயன்றவரை சமூகத்தைத் தடுக்க முனைகிறது.

## இஸ்லாமிய நாகரிகத்தில் குடும்பத்தின் தூண்கள்

இஸ்லாமிய நாகரிகத்தில் இரு முக்கிய தூண்களின் மீது குடும்பம் கட்டமைந்துள்ளது. குடும்ப உருவாக்கத்துக்கு இவ்விரண்டுமே அடிப்படையானவையாகும். அதுவே, ஆண் பெண் அதாவது கணவன் மனைவியே அவ்வடிப்படைகளாகும். குடும்ப உருவாக்கத்துக்கும் சமூகம், சந்ததி உருவாக்கத்து க்கும் சமூகத்தின் நிலைதன்மைக்கான மனித இனப் பெருக்கத்துக்கும் இவர்களே அடிப்படையாகும். அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

“மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவி லிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்” (4:1).

அத்துடன் “இன்னும் அல்லாஹ் உங்களுக்காக உங்களிலிருந்தே மனைவியரை ஏற்படுத்தியிருக்கிறான். உங்களுக்கு உங்கள் மனைவியரிலிருந்து சந்ததிகளையும் பேரன் பேத்திகளையும் ஏற்படுத்தி, உங்களுக்கு நல்ல பொருட்களிலிருந்து ஆகாரமும் அளிக்கிறான்” (16:72) எனவும் கூறுகிறான்.

குடும்பத்தின் இவ்விரு அடிப்படைகள் தொடர்பிலும் இஸ்லாம் பாரிய கரிசனை கொண்டுள்ளது. திருமண உறவுகளுக்கான சீரான சட்ட ஒழுங்கை இஸ்லாம் குறிப்பிடுகிறது. தம்பதியி னரில் ஒவ்வொருவரின் உரிமைகள் மற்றும் கடமைகளைத் தெளிவுபடுத்தும் வகையிலான பல்வேறு வரையறைகளையும் அது வகுத்துள்ளது. அத்துடன் குடும்பக் கட்டமைப்பில் தமது பணியை அழகிய முறையில் மேற்கொள்ளவும் தொடர்ந்தும் சமூகக் கட்டமைப்புக்கான முழுமையான பங்களிப்பை வழங்குவதற்கும் கணவன், மனைவி ஆகியோரிடையே பொறுப்புக்களையும் பணிகளையும் இஸ்லாம் பகிர்ந்து அளித்துள்ளது.

அந்தவகையில் இஸ்லாம் ஆரம்பமாக திருமணம் எனும் ஒழுங்கை சட்டமாக்கியுள்ளது. மனித இனப்பெருக்கத்தின் தூய்மையைப் பாதுகாப்பதும், ஆட்சியின் பிரதான இலக்கான இப்பூமியை வளப்படுத்தல் எனும் பணியை மேற்கொள்ளும் ஆற்றலுள்ள இப்பூமியில் உருவாக முடியுமான சிறந்த தனி மனிதர்களைத் தோற்றுவிப்பதனூடாக சமூகத்துக்கு உதவுவ துமே இதன் பிரதான குறிக்கோள்களாகும். அத்துடன் நெறிபிறழ்வு மற்றும் பண்பாட்டு வீழ்ச்சி ஆகியவற்றிலிருந்து தனிமனிதனையும் சமூகத்தையும் பாதுகாப்பதும் இதன் நோக்கமாகும். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் இளம் தலைமுறையினரை விழித்து பின்வருமாறு கூறினார்கள்:

“வாலிபர்களே! உங்களில், திருமணத்திற்கான (செலவினங்களுக்குச்) சக்தியுள்ளவர் திருமணம் செய்யட்டும். ஏனெனில் திருமணம் (அன்னியப் பெண்களைப் பார்ப்பதை விட்டும்) பார்வையைக் கட்டுப்படுத்தும். கற்பைக் காக்கும். யார் அதற்குச் சக்தி பெறவில்லையோ அவர் நோன்பு நோற்கட்டும். அது அவரின் இச்சையைக் கட்டுப்படுத்தும்!” (புகாரி, 1905; முஸ்லிம், 1400).

வணக்க வழிபாட்டுக்காக ஒதுங்கி பெண்களைத் திருமணம் முடிக்காமல் தவிர்ந்து இருக்க சில வாலிபர்கள் சிந்தித்த போது நபியவர்கள் அதை விட்டு அவர்களை முற்றாகத் தடுத்தார்கள். அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள் குறிப்பிடும் பின்வரும் சம்பவம் இதற்கான சிறந்த சான்றாகும்:

நபி (ஸல்) அவர்களின் துணைவியரின் வீடுகளுக்கு மூன்று பேர் கொண்ட குழுவினர் வந்து நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகள் குறித்து வினாத் தொடுத்தனர். அதுபற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போது, அவர்கள் நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகளைக் குறைத்து மதிப்பிட்டது போல் தெரிந்தது. பிறகு (அவர்களே அதற்குச் சமாதானமும் கூறிக் கொண்டு), முன்பின் தவறுகள் மன்னிக்கப்பட்டுவிட்ட நபி (ஸல்) அவர்கள் எங்கே? நாம் எங்கே என்று சொல்லிக் கொண்டனர். அவர்களில் ஒருவர், “(இனிமேல்) நான் என்ன செய்யப் போகிறேன் என்றால், எப்போதும் இரவில் தொழுதுகொண்டே இருக்கப்போகிறேன்” என்றார். இன்னொருவர், “நான் ஒருநாள் கூட விடாமல் காலமெல்லாம் நோன்பு நோற்கப் போகிறேன்” என்று கூறினார். மூன்றாம் நபர் நான் “பெண்களை விட்டும் ஒதுங்கியிருக்கப் போகிறேன். ஒருபோதும் திருமணம் முடிக்க மாட்டேன்” என்று கூறினார். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், (அந்தத் தோழர்களிடம்) வந்து, இப்படி இப்படியெல்லாம் பேசிக்கொண்டது நீங்கள்தாமே! அறிந்து கொள்ளுங்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களை விட அதிகமாக நான் அல்லாஹ்வை அஞ்சுபவன் ஆவேன். அல்லாஹ்வைப் பயந்து நடப்பவன் ஆவேன். ஆயினும், நான் நோன்பு நோற்கவும் செய்கிறேன். விட்டுவிடவும் செய்கிறேன். தொழுகவும் செய்கிறேன். உறங்கவும் செய்கிறேன். மேலும், நான் பெண்களை

மணமுடித்தும் உள்ளேன். எனவே, என் வழிமுறையை கைவிடுகிறவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்" என்று கூறினார்கள்" (புகாரி, 5063).

### நவீன யுகத்தில் துறவறம்

குறுகிய சிந்தனை காரணமாக துறவறம் பூண்டு தமக்குத் தாமே திருமணத்தைத் தடை செய்து கொண்ட மையால் மனித சமூகத்திற்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. உண்மையில் ஐரோப்பாவில் 15 நூற்றாண்டுகளுக்கு மேல் துறவறம் நடைமுறையில் இருந்த போது அவற்றின் ஊடாக பல்வேறு சீரழிவுகள் ஏற்பட்டதை அனுபவத்தின் ஊடாக கண்டுகொண்ட பல்வேறு மேற்கத்திய புத்திஜீவிகள் அதனை முற்றாகத் தடுத்தனர். உண்மையில் அங்கு (துறவறம் பூண்ட) பல்வேறு மதத் தலைவர்களும் பல ஆண் மற்றும் பெண் குழந்தைகளை துஷ்பிரயோகம் செய்யும் நிலைக்குச் சென்றுவிட்டனர். இந்நிலை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரவலாக இருந்தது. இதனால் பல மதத் தலைவர்கள் தமது மத ஸ்தலங்களில் இருந்து நீக்கப்பட்டனர் அல்லது விரட்டப்பட்டனர். இவ்வாறான பாலியல் நெறிபிறழ்வுகள் மற்றும் அத்துமீறல்களால் கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்கள் தடுமாறின. எனினும் எமது தூய் மையான இம்மார்க்கம் இதனை முற்றாகத் தடை செய்துள்ளமையினூடாக கவலையான அனுபவங்கள் மற்றும் கசப்பான நோவினைகளிலிருந்து எமக்கு அது நிம்மதியை அளித்துள்ளது.[50]

---

[50]பார்க்க: முஹம்மத் பின் அஹ்மத் பின் ஸாலிஹ், ஹுகூகுல் இன்ஸான் பில் குர்ஆன் வஸ்ஸுன்னா வதத்பீகாதுஹா பில் மம்லகதில் அரபிய்யா அஸ்ஸுஊதிய்யா, பக்: 134.

## திருமணத்தின் சில இலக்குகள்

தனிமனிதனுக்கான உள அமைதி கிடைப்பதே இஸ்லாமியத் திருமணத்தின் முக்கிய இலக்காகும். மனிதன் தனது உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளையும் ஆசைகளையும் கலைந்து, பிறருக்குக் கொடுத்தல் மற்றும் புத்தாக்க செயற்பாடு போன்றவற்றில் ஈடுபடுவதற்கான வழி இதனூடாக ஏற்படுகிறது.

அத்துடன் கணவன் மனைவி ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்கும் ஓர் ஒதுங்குதளமாகவும் திருமணம் நோக்கப்படுகிறது. தனது வாழ்வுக்கான உன்னதமான துணையும் தோழமையும் அதனூடாகக் கிடைக்கப்பெறுகிறது. இவ்விடயம் தொடர்பில் அல்குர்ஆன், “இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுவதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே உவப்பையும், கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக, இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன” (30:21) எனக் கூறுகிறது. இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று அடிப்படைகளான உள அமைதி, இரக்கம், அன்பு ஆகியவற்றின் ஊடாகவே இஸ்லாம் விரும்பும் திருமண சுபீட்சம் பரிபூரணமடைகிறது.

## இஸ்லாத்தில் கணவன் மனைவியைத் தேர்வு செய்வதற்கான அளவுகோல்

கணவன்-மனைவி ஆகிய ஒவ்வொருவரையும் தேர்வு செய்யும் போது நல்ல முறையில் துல்லியமாக தேர்வு செய்யுமாறு இஸ்லாம் பணிக்கிறது. இதற்கு “இன்னும், உங்களில் வாழ்க்கைத் துணை இல்லா (ஆடவர், பெண்டி) ருக்கும், அவ்வாறே (வாழ்க்கைத் துணையில்லா) ஸாலிஹான உங்கள் (ஆண், பெண்) அடிமைகளுக்கும் விவாகம் செய்து வையுங்கள்” (24:32) எனும் வசனம் ஆதாரமாகும்.

நபி (ஸல்) அவர்கள் மார்க்கப்பற்றுள்ள நல்ல மனைவியைத் தேர்வு செய்யுமாறு வழிகாட்டும் வகையில் பின்வருமாறு கூறினார்கள்:

நான்கு நோக்கங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகிறாள்: 1. அவளுடைய செல்வத்திற்காக 2. அவளுடைய குடும்பப் பாரம்பரியத்திற்காக. 3. அவளுடைய அழகிற்காக 4. அவளுடைய மார்க்க (நல்லொழுக்க) த்திற்காக. எனவே, மார்க்க (நல்லொழுக்க)ம் உடையவளை (மணந்து) வெற்றி அடைந்து கொள்! (இல்லையேல்) உன்னிரு கரங்களும் மண்ணாகட்டும்!” (புகாரி, 5090).

கணவனை தேர்வு செய்யும் போதும் இதே அடிப்படையில் நடந்து கொள்ள வேண்டுமென இஸ்லாம் மனைவிக்குப் பணிக்கிறது. நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“(ஒருவரின்) சமயம் மற்றும் நற்பண்பு தொடர்பில் நீங்கள் திருப்தியடையும் யாரேனும் ஒருவர் உங்களிடத்தில் திருமணம் பேசி வந்தால் அவருக்கு நீங்கள் திருமணம் முடித்துக் கொடுத்து விடுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யவில்லை எனில் இவ்வுலகில் சோதனையும் பாரிய சீர்கேடுமே தோன்றும்” (திர்மிதி, 1085)[51].

அத்துடன் இஸ்லாம் குறிப்பிடும் இவ்வடிப்படையில் துணையை த் தேர்ந்தெடுப்பது மனித சமூகத்துக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. ஏனெனில் இதனூடாகவே ஒரு சிறந்த சந்ததி உருவாக முடியும். இவ்விடயமே நல்ல தம்பதியினரின் ஊடாகப் பெற முடியுமான உச்ச பயனாகும். இஸ்லாமியப் பண்பாட்டு நெறிமுறைகளின் நிழலில் வாழும் அன்பும் பாசமும் கொண்ட குடும்பம் இதன் பின்னணியிலேயே தோற்றம் பெறுகிறது.

---

[51]இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: அத்த.்.லீகாதுர் ரழிய்யா, 2.்.143.

## இஸ்லாத்தில் திருமண ஒப்பந்தம்

திருமண உடன்படிக்கை மிக முக்கியமான ஓர் உடன்படிக்கையாக உள்ளமையால் அதன் நிலை தன்மையை உறுதிப்படுத்தும் சில முன்னேற்பாடுகள் மிக அவசியமானவை யாகும். உண்மையில் திருமணம் தவிர்ந்த வேறு எந்த உடன்படிக்கைக்குமான பிரத்தியேகமான முன்னேற்பாடுகள் தொடர்பில் இஸ்லாம் பெரிதாகக் கவனம் செலுத்தவில்லை. எனினும் திருமணம் தொடர்பில் அதிக கரிசனை செலுத்தி அதற்கான பல்வேறு சட்ட ஒழுங்குகளை அது வகுத்துள்ளது. திருமணப் பேச்சுவார்த்தை என அறியப்படும் விடயமே திருமண உடன்படிக்கைக்கான முன்னேற்பாடு எனப்படுகிறது. இது புரிந்துணர்வும் நெருக்கமும் ஏற்படுவதை இலக்காகக் கொண்ட ஓர் படிநிலையாகும். திருமணத்தில் தொடர்புபடும் இரு தரப்பாரும் பாரிய அளவில் மற்றவர்களைத் தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இது வழங்குகிறது. இதனூடாக திருமணப் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து நீடிப்பதா அல்லது அதை விட்டு விலகி விடுவதா என்பதை வரையறை செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் உருவாகிறது.

ஒரு திருமண ஒப்பந்தம் செல்லுபடியாவதற்கு அத்திருமணம் பிரபல்யப்படுத்தப்பட வேண்டும் என இஸ்லாம் நிபந்தனை இடுகிறது. இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் சமயம் மற்றும் இவ்வுலகம் சார்ந்த பல்வேறு நலன்களைப் பெறுவதில் திருமணத்துக்கு ஒரு பாரிய பங்களிப்பு உண்டு என்பதே இதன் பின்னணியாகும். எனவே, திருமணம் எனும் விவகாரம் பிரபல்யப்படுத்தப்பட்டு அவ்விடயம் பரப்பப்படுவது மிகவும் ஏற்புடையதாகும். தேவையற்ற சந்தேகங்களையும் வீண் சந்தேகங்களையும் தவிர்ப்பதற்காகவே இது கடமையாக்கப்பட்டுள்ளது.

கணவன், மனைவி ஆகிய இருவரது மகிழ்ச்சியையும் உறுதிப்படுத்தும் வகையில் அவர்களது குடும்பத்துக்கு நலன் ஏற்படும் வகையிலும் மிகவும் நம்பகமான உத்தரவாதத்தின் ஊடாகவே திருமண ஒப்பந்தத்தை இஸ்லாம் அமைத்துள்ளது. கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் பல்வேறு ஆற்றல்களையும் சக்திகளையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். அந்தவகையில் பொருளாதார ரீதியாக பெண்களைப் பராமரிக்கும் பொறுப்பு ஆண்களைச் சார்ந்ததாகும்.

இவ்விடயம் தொடர்பில் அல்குர்ஆன் "(ஆண், பெண் இருபாலாரில்) அல்லாஹ் சிலரை சிலரை விட மேன்மைப் படுத்தி வைத்திருக்கிறான். (ஆண்கள்) தங்கள் சொத்து களிலிருந்து (பெண் பாலாருக்காகச்) செலவு செய்து வருவதினாலும், ஆண்கள் பெண்களை நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்" (4:43) எனக் கூறுகிறது.

இப்பொறுப்பினூடக திருமணத்தின் போது மஹரை மணமக னுக்கு இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. அதனை மனைவியின் உரிமைகளில் ஒன்றாகவும் குறிப்பிட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அல்குர்ஆன், "நீங்கள் (மணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக் கொடை)களை மகிழ்வோடு (கொடையாக) கொடுத்துவிடுங்கள்" (4:4) எனக் கூறுகிறது.

அதேபோல் தனது செலவினத்தைப் பெற்றுக் கொள்வதையும் மனைவிக்கான உரிமையாகக் குறிப்பிட்டுள்ளது. உணவு, உடை, வசிப்பிடம், மருத்துவம் போன்ற அன்றாடம் பெண்ணு க்குத் தேவையானவற்றையே இது குறிக்கிறது.

அத்துடன் கணவன் நல்ல முறையில் நடந்து கொள்வதும் அவளது உரிமைகளுள் ஒன்றாகும். இதனை "இன்னும், அவர்களுடன் கனிவோடு நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால் (அது சரியில்லை ஏனெனில்) நீங்கள் ஒன்றை வெறுக்கக் கூடும். அதில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை ஏற்படுத்தி விடலாம்" (4:19) எனும் வசனம் குறிப்பிடுகிறது.

மறுபுறம் பெண்கள் தனது கணவனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. இது பெண்ணுக்கு கணவன் மீதுள்ள முக்கிய கடமையாகும்.

அதேபோன்று கணவன், மனைவி ஆகிய ஒவ்வொருவருக்கும் தாம் பெறவேண்டிய பல்வேறு உரிமைகளையும் தாம் நிறைவேற்ற வேண்டிய பல்வேறு கடமைகளையும் இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது. நல்ல முறையிலும் நடுநிலையாகவும் நடந்து கொள்ளும்படியும் அவ்விருவரிடையே உள்ள பொது வாழ்வில் ஒத்துழைப்புடனும் நடந்து கொள்ளும்படியும்

இஸ்லாம் அவ்விருவரிடம் வேண்டுகிறது. பின்னர் கணவன், மனைவி இடையே தோன்றும் முரண்பாடுகள், பிரச்சினைகள் போன்றவற்றைத் தீர்ப்பதற்கான நேர்த்தியான வழியையும் இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது. அல்லாஹ்வின் வரையறைகளை நிலைநாட்டவும் திருமண உறவை நகர்த்திச் செல்வதற்குத் தேவையான இறை வழிகாட்டல்களின் வரம்பில் நின்று கொள்ளவும் முடியாதவிடத்து இறுதியாக விவாகரத்தை இஸ்லாம் தீர்வாகப் பரிந்துரைக்கிறது.[52]

[52]பார்க்க: முஹம்மத் பின் அஹ்மத் பின் ஸாலிஹ், ஹுகூகுல் இன்ஸான் பில் குர்ஆன் வஸ்ஸுன்னா வதத்பீகாதுஹா பில் மம்லகதில் அரபிய்யா அஸ்ஸுஊதிய்யா, பக்: 135-138.

# இஸ்லாத்தில் பிள்ளைகள்..
# உரிமைகளும் கடமைகளும்

## பிள்ளைகளும் அவர்களை வளர்ப்பதில் சூழலின் தாக்கமும்

இஸ்லாத்தில் சிறுவர்கள் இவ்வுலக வாழ்வின் ஒளியும் அலங்காரமும் ஆவர். அத்துடன் உள இன்பமும் கண் குளிர்ச்சியுமாவர். இஸ்லாம் சிறுவர்கள் தொடர்பில் தனித்துவமான கவனம் செலுத்துகிறது. அத்துடன் பெற்றோர்களின் மீது அவர்கள் மீதான உரிமைகளும் கடமைகளும் உண்டு என இஸ்லாமிய ஷரீஆ குறிப்பிடுகிறது.

வாழ்வு தொடர்பான முதலாவது பிம்பத்தை பெற்றோருடைய சூழலின் தாக்கம் ஊடாகவே ஒரு குழந்தை பெறுகிறது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்: "எல்லாக் குழந்தைகளும் இயற்கையான (மார்க்கத்)திலேயே பிறக்கின்றன. பெற்றோர்கள் தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தை விட்டுத் திருப்பி) யூதர்களாகவோ கிறித்தவர்களாகவோ நெருப்பு வணங்கிகளாகவே ஆக்கிவிடுகின்றனர்" (புகாரி, 1385).

எனவே, பிள்ளைகளின் மதநமபிக்கை மற்றும் பண்பாடு ஆகியவற்றில் பெற்றோரின் தாக்கம் மிகப் பெரியதாகும். ஆகவே, பிள்ளைகள் சீர்பெறுவதற்கும் சமூகத்தின் எதிர்காலம் சீர்பெறுவதற்கும் பெற்றோர் நல்லவர்களாக இருப்பது மிக அவசியமாகும் எனலாம். அந்தவகையில் பிள்ளைகளின் உரிமை எனும் போது அது அப்பிள்ளையின் பிறப்புக்கு முன்னர் இருந்தே ஆரம்பித்துவிடுகிறது. அதாவது முன்னர் நாம் குறிப்பிட்டது போல் நல்ல மார்க்கப்பற்றுள்ள தாயையும் தந்தையையும் தெரிவு செய்வதில் இருந்து ஆரம்பித்து விடுகிறது.

## பிறப்புக்கு முன்னர் பிள்ளைகளின் உரிமைகள்

- **ஷைத்தானை விட்டு அவனைப் பாதுகாத்தல்**

தம்பதிகளில் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்து விடுவார்களாயின் தமக்குப் பிறக்கப்போகும் குழந்தையை ஷைத்தானை விட்டுப் பாதுகாப்பது அக்குழந்தையின் உரிமையாக மாறிவிடுகிறது. கர்ப்பப்பையில் விந்தணு செல்லும்போதே இது ஆரம்பித்து விடுகிறது. கணவன் மனைவிக்கிடைடயிலான இல்லற உறவின்போது கேட்க வேண்டிய பிரார்த்தனை தொடர்பிலான நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் இதனை நன்கு தெளிவுபடுத்துகிறது. இப்பிரார்த்தனையில் அச்சிசுவை ஷைத்தானிடமிருந்து பாது காக்குமாறு இடம்பெற்றுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்:

“உங்களில் ஒருவர் தம் மனைவியுடன் உடலுறவு கொள்ளச் செல்லும்போது “அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு உடலுறவு கொள்ளப் போகிறேன். இறைவா! எங்களைவிட்டு ஷைத்தானைத் தூரமாக்கு! (இந்த உறவு மூலம்) நீ எங்களுக்கு அளிக்கப் போகும் (குழந்தைப்) பேற்றிலும் ஷைத்தானை அப்புறப்படுத்து” என்று சொல்லிவிட்டு, உறவு கொண்டு அதன் மூலம் அவ்விருவருக்கும் குழந்தை வழங்கப் படுமானால் அக்குழந்தைக்கு ஷைத்தான் எந்தத் தீங்கும் விளைவிப்பதில்லை” (புகாரி, 141).

- **வாழ்வதற்கான உரிமை**

ஒரு குழந்தை தனது தாயின் கருவறையில் சிசுவாக மாறியவுடன் அதற்கு வாழ்வதற்கான உரிமையை இஸ்லாம் உத்தரவாதப்படுத்தியுள்ளது. கருக்கலைப்பை இஸ்லாம் தடை செய்துள்ளமை இதற்கான சான்றாகும். அதாவது தாய்க்கு சிசு பிறக்கும் முன்னர் அதனை அகற்றிவிடுவதை இஸ்லாமிய ஷரீஆ தடைசெய்துள்ளது. ஏனெனில் குழந்தை என்பது அவளின் கர்ப்பப்பையில் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள ஓர் அமானிதமாகும். எனவே, வாழ்வதற்கான உரிமை அச் சிசுவுக்கு உண்டு. ஆகவே, அதனைத் துன்புறுத்துவதோ நோவினை செய்வதோ எவ்வகையிலும் கூடாது. அதேபோன்று

அச்சிசு 4 மாதங்கள் கடந்து கருப்பைக்குள் அதற்கு உயிர் கொடுக்கப்பட்டுவிடுமாயினும் அதனை எவ்வகையிலும் கொன்றுவிடக் கூடாது என இஸ்லாம் குறிப்பிடுகின்ற மையானது அதனை ஓர் உயிராக கவனத்தில் கொண்டுள்ளமையைப் புலப்படுத்துகிறது. அ.த்துடன் அதனை யாராவது கொன்றுவிடுவார்களாயின் அதற்கான இழப்பீட்டை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. முகீரா பின் ஷு.ஃபா (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

"ஹுதைல் குலத்தைச் சேர்ந்த ஆணொருவரின் இரு மனைவிகள் தமக்கிடையே சண்டையிட்டுக் கொண்டார்கள். அப்போது அவர்களில் ஒருத்தி மற்றொருத்தியின் மீது ஒரு கல்லை எறிய அது அவளுடைய வயிற்றில் பட்டுவிட்டது. அதன் மூலம் கர்ப்பிணியாயிருந்த அவளையும் அவளுடைய வயிற்றில் இருந்த சிசுவையும் அவள் கொன்றுவிட்டாள். எனவே, நபி (ஸல்) அவர்களிடம் (மக்கள்) இந்த வழக்கைக் கொண்டு வந்தனர். அப்போது குற்றம் புரிந்த அப்பெண்ணின் காப்பாளல்களில் ஒருவர் (எதுகை மோனை வடிவில்), "உண்ணவோ, பருகவோ, மொழியவோ, அழவோ முடியாத ஒரு சிசுக்காக நாம் எப்படி அபராதம் செலுத்துவது இறைத்தூதர் அவர்களே! இதைப் போன்றவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமல்லவா?" என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், "இவர் (சாதுர்யமாகவும் அடுக்கு மொழியிலும் பேசுவதில்) குறிகாரர்களின் சகோதரர்களில் ஒருவர்"[53] என்று கூறிவிட்டு, அப்பெண்ணின் வயிற்றிலிருந்த சிசுக்காக ஓர் ஆண் அடிமையை, அல்லது பெண் அடிமையை உயிரீட்டுத் தொகையாகத் தரவேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள். அந்த இழப்பீட்டுத் தொகையை கொலை செய்த பெண்ணின் நெருங்கிய உறவினர்கள் செலுத்த வேண்டும் எனப் பணித்தார்கள்" (புகாரி, 5758).

---

[53] அறிஞர்கள் கூறுகின்றனர்: எதுகை மோனை வடிவில் அவர் பேசியதை நபி (ஸல்) அவர்கள் கண்டித்தமை இரு காரணிகளுக் காக இருக்கலாம். **ஒன்று:** மார்க்க சட்டத்தை அவர் மறுதலித்தமை. **இரண்டு:** தன்னை வருத்தி மிகவும் கஷ்டப்பட்டு அவ்வடிவில் அவர் பேசியமை. இவ்விரு வடிவங்களும் வரவேற்கப்படாத முறைகளாகும். பார்க்க: அல்மின்ஹாஜ் பீ ஷர்ஹி ஸஹீஹி முஸ்லிம் இப்னில் ஹஜ்ஜாஜ், 11/178.

அதேபோன்று சிசுவின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் நோக்கில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு ரமழான் மாதத்தில் பகல் பொழுதில் நோன்பை விடுவதற்கான அனுமதியை இஸ்லாமிய ஷரீஆ வழங்கியுள்ளது. அத்துடன் விபசாரத்துக்கான தண்டனை வழங்கப்படும் போது குறித்த பெண் கர்ப்பமுற்றவளாக இருப்பின் அவளது குழந்தை பிறந்து அது பால் குடித்து முடியும்வரை அத்தண்டனையைப் பிற்போடு வதையும் இஸ்லாம் அங்கீகரித்துள்ளது.

## பிறப்புக்குப் பின் பிள்ளைகளின் உரிமைகள்

- **அவர்கள் பிறக்கும் போது மகிழ்வடைதல்**

குழந்தை பிறந்த பின்னர் அவர்களின் பிறப்புத் தொடர்பான பல்வேறு சட்டதிட்டங்களை இஸ்லாம் வகுத்துள்ளது. அந்தவகையில் அவர்கள் பிறக்கும் போது மகிழ்வடைவது விரும்பத்தக்கதாகும். இவ்விடயம் தொடர்பில் யஹ்யா பின் ஸகரிய்யா (அலை) என்ற இறைத்தூதரின் பிறப்பு தொடர்பில் இடம்பெற்றுள்ள “அவர் தம் அறையில் நின்று தொழுது கொண்டிருந்தபோது, மலக்குகள் அவரை சப்தமாக அழைத்து: “நிச்சயமாக அல்லாஹ் யஹ்யா (எனும் பெயருள்ள மகவு குறித்து) நன்மாராயங் கூறுகின்றான் அவர் அல்லாஹ்விடமிருந்து ஒரு வார்த்தையை மெய்ப்பிப்ப வராகவும், கண்ணியமுடையவராகவும், ஒழுக்க நெறி பேணியவராகவும், நல்லோர்களிலிருந்தே நபியாகவும் இருப்பார்” எனக் கூறினர்” (3:39) எனும் அல்குர்ஆனிய வசனம் இங்கு குறிப்பிடத்தக்கது. இம்மகிழ்ச்சி எவ்வித வேறுபாடுமின்றி ஆண், பெண் என்ற இரு வகையான பிள்ளைகளுக்கும் பொருந்தக் கூடியதாகும்.

- **அதனது காதுகளில் அதான் (பாங்கு) மற்றும் இகாமா கூறுதல்**

பிள்ளையின் வலது காதில் அதான் கூறுவதும் அதன் இடது காதில் இகாமா கூறுவதும் அவர்களின் உரிமைகளில் ஒன்றாகும். இதனை நபி (ஸல்) அவர்களும் செய்து காட்டியுள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் தனது பேரனான ஹஸன் பின் அலி (ரழி) அவர்கள் பிறந்த போது அவரது

காதில் அதான் கூறினார்கள். உபைதுல்லாஹ் பின் அபீ ராபி.ஃ. என்பர் தனது தந்தை கூறியதாக பின்வருமாறு கூறினார்கள்: “பாத்திமா (ரழி) அவர்கள், ஹஸன் (ரழி) அவர்களைப் பெற்றெடுத்த போது தொழுகையில் சொல்லும் அதானை அவரது காதில் நபியவர்கள் சொல்வதை நான் கண்டேன்” (அபூ தாவூத், 5105)[54]

- **ஈச்சம் பழத்தை அதற்கு சுவைக்கக் கொடுத்தல்**

குழந்தை பிறக்கும்போது அதற்கு பேரீத்தம் பழத்தைச் சுவைக்கக் கொடுப்பது விரும்பத்தக்கது என்பது அதன் உரிமைகளில் ஒன்றாகும்.[55] இதனை நபி (ஸல்) அவர்கள் நடைமுறைப்படுத்தியுள்ளமையை அறிய முடிகிறது.

---

[54] இந்த ஹதீஸ் பலவீனமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களான இமாம் அல்அல்பானி மற்றும் ஷுஐப் அல்அர்நாஊத் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். பார்க்க: அஸ்ஸில்ஸிலா அழ்ழஈபா, 321 தக்ரீஜுல் முஸ்னத், 27194.

[55] பிறந்த குழந்தைகளுக்கு ஈச்சம் பழத்தை சுவைகக் கொடுப்பதில் ஒரு நுட்பம் உள்ளது. பிறக்கும் பெரும்பாலான அல்லது அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்கள் பிறந்தவுடன் குளுக்கோசு (Glucose) எனும் சர்க்கரை தேவைப்படுகிறது என மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஏனெனில் ஒப்பீட்டளவில் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் இரத்தத்தில் (குளுக்கோசு) சர்க்கரையின் அளவு மிகவும் குறைவாகவே காணப்படும். அந்தவகையில் ஈச்சம் பழம் பாரியளவு (குளுக்கோசு) சர்க்கரையைக் கொண்டுள்ளமையினால் சுவையான ஈச்சம் பழங்களைப் பிறந்த பிள்ளைக்குக் கொடுப்பது அல்லாஹ்வின் அனுமதியுடன் சர்க்கரை அளவு குறையும் அபாயத்திலிருந்து அதனைக் பாதுகாக்க வல்லதாகும். ஆகவே, பிறந்த குழந்தைக்கு ஈச்சம் பழம் ஊட்டுவது அதற்கான பாதுகாப்பு சிகிச்சை முறையாகும். இது ஒரு மருத்துவ அற்புதமாகும். இவ்விடயம் தொடர்பில் அல்லது பிறந்த குழந்தையின் இரத்தத்தில் (குளுக்கோசு) சர்க்கரை குறைவடைவதன் அபாயங்கள் தொடர்பில் மனித சமூகம் முன்னர் அறிந்திருக்கவில்லை. இவ்வற்புதம் தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள பார்க்க: கலாநிதி முஹம்மத் அலி அல்பார். மகாலுன் மின் ரிஆயதித் திப்லி பில் இஸ்லாம், தஹ்னீகுல் மவ்லூத் வமா பீஹா மின் இ.ஃ.ஜாஸின் இஸ்மி, அல்ஹய்அதுல் ஆலமிய்யா லில் இ.ஃ.ஜாஸ் அல்இல்மி லில் குர்ஆனி வஸ்ஸுன்னா.

அபூ மூஸா[56] (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“எனக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதை நான் நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு சென்றேன். அப்போது அவர்கள் இப்ராஹீம் என அக்குழந்தைக்குப் பெயர் சூட்டினார்கள். பிறகு, பேரீச்சம் பழத்தை மென்று குழந்தையின் வாயில் அதை இட்டார்கள். மேலும், அதற்காக சுபிட்சம் (பரக்கத்) வேண்டிப் பிரார்த்தித்தார்கள். பிறகு என்னிடம் கொடுத்து விட்டார்கள்” (புகாரி, 5467).

- **அவர்களின் தலை முடியை வழித்து அதன் நிறைக்கு ஏற்றாற்போல் வெள்ளியை தர்மம் செய்தல்**

குழந்தையின் தலையை வழித்து அதன் நிறைக்கு அளவான வெள்ளியை தர்மம் செய்வது அதற்கான உரிமைகளில் ஒன்றாகும். இதில் பல்வேறு சுகாதார மற்றும் சமூக நலன்கள் உண்டு. தலையில் இருக்கும் கழிவுகளையும் தீங்கு விளைவிப்பவற்றையும் அகற்றுவதை சுகாதார நலன் களாகக் குறிப்பிடமுடியும். அத்துடன் பலமான முடி முளைப்பதற்காக அதனது தலையில் இருக்கும் பலவீனமான முடியை அகற்றுவதற்காகவும் சிலவேளை இச்செயற்பாடு இடம்பெற வாய்ப்புண்டு. அத்துடன் அம்முடியின் நிறைக்கு ஏற்ப வெள்ளியை தர்மம் செய்வதை இதன் சமூக நலனாகக் கொள்ள முடியும். தனிநபர்களிடையே இஸ்லாம் வலியுறுத்தும் சமூகக் காப்புறுதியை இவ்வம்சம் உள்ளடக்கியுள்ளது. அதேபோன்று ஏழைகளிடையே மகிழ்வையும் இது ஏற்படுத்து கிறது. முஹம்மத் பின் அலி பின் அல்ஹுஸைன் அவர்கள் இவ்விடயம் தொடர்பில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

நபி (ஸல்) அவர்களின் மகளான பாத்திமா (ரழி) அவர்கள், ஹஸன் மற்றும் ஹுஸைன் (ரழி) அவர்களின் முடியை

---

[56] அபூ மூஸா அல்அஷ்அரி: அப்துல்லாஹ் பின் கய்ஸ் பின் ஸுலைம் பின் ஹழ்ழார் பின் ஹர்ப் பின் ஆமிர். இவர் நபி (ஸல்) அவர்களின் தோழராவார். இவரையும் முஆத் (ரழி) அவர்களையும் நபி (ஸல்) ஸபீத் மற்றும் அதன் ஆகிய பிரதேசங்களுக்கு பொறுப்பாக நியமித்தார்கள். அத்துடன் இவர் கூபாவின் கவர்னர் பதவியை வகித்துள்ளார். பார்க்க: இப்னு ஸஃத், அத்தபகாதுல் குப்ரா, 4/105 மற்றும் அத்தஹபி, ஸியர் அஃலாம் அந்நுபலா, 2/38.

நிறுத்து, அதன் நிறைக்கு ஏற்ப வெள்ளியை தர்மம் செய்தார்கள்" (முவத்தா, 2/501)[57].

- **அழகிய பெயர் சூட்டல்**

பிறப்பின் போது பிள்ளைகளுக்கு அழகிய பெயர் சூட்டுவது அவர்களின் முக்கிய உரிமைகளில் ஒன்றாகும். எனவே, மக்களுக்கிடையில் அழைக்கப்படும், உள்ளத்தில் அமைதியையும் மனதில் நிம்மதியையும் ஏற்படுத்தும் வகையிலான அழகிய ஒரு பெயரை குழந்தைக்குத் தேர்வு செய்வது பெற்றோரின் கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் ஹர்ப் எனும் பெயரை வெறுப்பவர்களாகவும் அதனைக் கேட்க விரும்பாதவர்களாகவும் இருந்தார்கள். இவ்விடயம் தொடர்பில் பின் வருமாறு இடம்பெற்றுள்ளது: "அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான பெயர் அப்துல்லாஹ், அப்துர்ரஹ்மான் என்பதாகும். மிக உண்மையான பெயர்கள் ஹாரிஸ், ஹம்மாம் என்பவையாகும், மிக அலங்கோலமான பெயர் ஹர்ப், முர்ரா என்பவையாகும்" (அபூ தாவூத், 4950).

அதேபோன்று அலி (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

"ஹஸன் அவர்கள் பிறந்த போது "ஹர்ப்" என்று நான் அவருக்குப் பெயரிட்டேன். அப்போது நபியவர்கள் வந்து "எனது குழந்தையைக் காட்டுங்கள். அவருக்கு என்ன பெயர் வைத்தீர்கள்?" என்றார். அப்போது நான் "ஹர்ப்" என்று பெயரிட்டேன் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் "இல்லை, அவர் ஹஸன்" என்றார்கள். பின்னர் ஹுஸைன் பிறந்தபோது அவருக்கு நான் "ஹர்ப்" எனப் பெயரிட்டேன். அப்போது நபியவர்கள் "எனது குழந்தையைக் காட்டுங்கள். அவருக்கு என்ன பெயர் வைத்தீர்கள்?" என்றார். அப்போது நான் "ஹர்ப்" என்று பெயரிட்டேன் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் "இல்லை, அவர் ஹுஸைன்" என்றார்கள்.

[57] இந்த ஹதீஸ் பலவீனமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல்அர்நாஊத் குறிப்பிட்டுள்ளர். பார்க்க: தக்ரீஜு ஸியர் அஃலாம் அந்நுபலாஃ, 3/249.

மூன்றாவது பிள்ளை பிறந்தபோது அவருக்கு நான் “ஹர்ப்” எனப் பெயரிட்டேன். அப்போது நபியவர்கள் “எனது குழந்தையைக் காட்டுங்கள். அவருக்கு என்ன பெயர் வைத்தீர்கள்?” என்றார். அப்போது நான் “ஹர்ப்” என்று பெயரிட்டேன் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் “இல்லை, அவர் முஹஸ்ஸின்” என்றார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள் “ஷபர், ஷபீர், முஷப்பிர் என்ற ஹாரூன் (அலை) அவர்களின் பிள்ளைகளின் பெயரையே இவர்களுக்கு நான் வைத்துள்ளேன்” என்றார்கள்” (இப்னு ஹிப்பான், 6958)[58].

- **குழந்தைக்காக அகீகா கொடுத்தல்**

பிள்ளைகள் பிறந்த பின்னர் அகீகா கொடுப்பது அவர்களுக்கான உரிமைகளில் ஒன்றாகும். அதாவது குழந்தை பிறந்து ஏழாவது நாளில் அதற்காக ஓர் ஆட்டை அறுத்துப் பலியிடுவது அகீகா ஆகும். இது *ஸுன்னா முஅக்கதா* (வலியுறுத்தப்பட்ட ஸுன்னா) ஆகும்.

இது குழந்தை பிறந்ததற்கான மகிழ்ச்சியையும் சந்தோச த்தையும் வெளிப்படுத்தும் செயலாகும். நபி (ஸல்) அவர்களிடம் அகீகா தொடர்பில் வினவப்பட்டபோது “நான் நோவினை செய்வதை விரும்புவதில்லை. யாரேனும் ஒருவரு க்கு குழந்தை பிறந்து அதற்காக அறுத்துப் பலியிட விரும்பினால் ஆண் குழந்தைக்காக ஒரே மாதிரியான இரு ஆடுகளையும், பெண் பிள்ளைக்காக ஒரு ஆட்டையும் அறுத்துப் பலியிடட்டும்” (அஹ்மத், 6713)[59] என்றார்கள்.

---

[58] இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல்அர்நாஊத் குறிப்பிட்டுள்ளர். பார்க்க: தக்ரீஜு ஸஹீஹி இப்னி ஹிப்பான், 6958.

[59] இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல்அர்நாஊத் குறிப்பிட்டுள்ளர். பார்க்க: தக்ரீஜுல் முஸ்னத், 6713.

- **பாலூட்டுதல்**

ஒரு குழந்தை பிறந்த பின்னர் அதற்குப் பாலூட்டுவதும் அதற்கான உரிமைகளில் ஒன்றாகும். ஒருவர் தனது வாழ்வில் சிறு குழந்தையாக, பின்னர் பிள்ளையாக இருக்கும்போது அவனது உடல், உள, சமூக வளர்ச்சியில் ஆழமான தாக்கம் பாலூட்டும் செயற்பாட்டுக்கு உண்டு.

இதனை இஸ்லாமிய ஷரீஆ நன்கு உணர்ந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. எனவே, ஒரு தாய் தனது பிள்ளைக்குப் பூரணமான இரண்டு வருடங்கள் பாலூட்டுவது கடமையாகும். அத்துடன் இது அக்குழந்தையின் உரிமை களில் ஒன்றாகவும் உள்ளது. இவ்விடயம் தொடர்பில் அல்குர்ஆன் "குழந்தைகளுக்குப் பூர்த்தியாகப் பாலூட்ட வேண்டுமென்று விரும்பினால், தாய்மார்கள் தங்கள் குழந்தை களுக்கு நிரப்பமான இரண்டு ஆண்டுகள் பாலூட்டுதல் வேண்டும். பாலூட்டும் தாய்மார்களுக்கு (ஷரீஅத்தின்) முறைப் படி உணவும், உடையும் கொடுத்து வருவது குழந்தையுடைய தகப்பன் மீது கடமையாகும்" (2:233) எனக் கூறுகிறது.

நவீன சுகாதார, உளவியல் ஆய்வுகள் சுகாதார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஓர் குழந்தை சீராக வளர்வதற்கு முதல் இரண்டு வருடங்கள் மிக அவசியமானதாகும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன[60].

எனினும் முஸ்லிம் சமூகம் மீதான அல்லாஹ்வின் அருளும் தயவும் நவீன உளவியல் ஆய்வு கூடங்களில் நடாத்தப்படும் இவ்விடயம் தொடர்பான ஆய்வு முடிவுகளையும் பரிசோதனை களையும் எதிர்பார்த்து இருக்கவில்லை. அத்துடன் உளவியல் அறிஞர்களும் மற்றும் கல்வியியலாளர்களும் அதற்கு முரணாகக் குறிப்பிடுவார்கள் எனவும் எதிர்பார்த்து இருக்க வில்லை. இவையனைத்துக்கும் முன்னரே இஸ்லாமிய வழிகாட்டல்கள் இவற்றைத் தெளிவுபடுத்திவிட்டன.

---

[60] இயற்கையான பாலூட்டல் குறைந்தது 12 மாதங்களாகும். எனினும் பூரணமாக இரண்டு வருடங்கள் பாலூட்ட வேண்டும் என்ற உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுரைகளைப் பின்பற்றுவதே இதனை விடச் சிறந்ததாகும். பார்க்க: ஹஸன் ஷம்ஸி பாஷா, அர்ரழாஅது மின் லபனில் உம்மி லிஹவ்லய்னி காமிலய்னி. இணைப்பு: https://shamela.ws/book/31356/71

இஸ்லாமிய ஷரீஆ பாலூட்டல் தொடர்பில் எவ்வளவு தூரம் அக்கறை செலுத்தி, அதனை குழந்தைக்கான ஓர் உரிமையாக ஆக்கியுள்ளமையை எம்மால் அவதானிக்க முடிகிறது. எனினும் இவ்வுரிமை தாயுடன் மாத்திரமே முற்றுப் பெறுவதல்ல. இவ்விடயத்தில் தந்தை மீதும் பொறுப்புண்டு. பிள்ளையை முறையாகப் பராமரித்து அதற்கு உணவு அளிப்பதற்கு முழுமையாக ஒதுங்கி விடுவதற்காக வேண்டி தாய்க்கு உணவும் உடையும் வழங்க வேண்டும் என்பதே கணவனின் பொறுப்பாகும்.

இஸ்லாமிய ஷரீஆ குறிப்பிட்டுள்ள வரையறைக்கேற்ப தாம் பாலூட்டும் குழந்தையைப் பராமரித்து, பாதுகாத்து, அதன் நலன்களை பாதுகாக்கும் வகையில் அவர்களில் ஒவ்வொரு வரும் தமது கடமையை நிறைவேற்றுவது அவசியமானதாகும். எனினும் அவ்விருவரின் இயலுமைக்கும் வசதிகளுக்கும் ஏற்பவே இச்செயற்பாடு இடம்பெறவேண்டும். இறைவன் "எந்த ஓர் ஆத்மாவும் அதன் சக்திக்கு மேல் (எதுவும் செய்ய) நிர்ப்பந்திக்கப்பட மாட்டாது" (2:233) எனக் கூறுகிறான்.

- **குழந்தைப் பராமரிப்பும் அதற்கான செலவீனமும்**

குழந்தையைப் பாதுகாத்து, அவர்களுக்காகச் செலவிடுவது பெற்றோரின் மீதான குழந்தைகளின்பாலுள்ள கடமைகளில் ஒன்றாகும். பிள்ளைகளைக் கவனிப்பதையும், அவர்களின் வாழ்வு மற்றும் ஆரோக்கியத்தைப் பாதுகாப் பதையும், அவர்களுக்காக செலவிடுவதையும் இஸ்லாமிய ஷரீஆ பெற்றோர்களுக்குக் கடமையாக்கியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் "உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே. மேலும் உங்கள் பொறுப்புக்குட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவரும் பொறுப்பாளியாவார். தன் பிரஜைகள் குறித்து அவர் விசாரிக்கப்படுவார். ஆண் தன் குடும்பத்தாருக்குப் பொறுப்பா ளியாவார். அவன் தன் பொறுப்புக்குட்பட்டவர்கள் குறித்து விசாரிக்கப்படுவார். பெண் தன் கணவனின் வீட்டுக்குப் பொறுப்பாளியாவாள். அவளது பொறுப்புக்குட்பட்டவை குறித்து அவள் விசாரிக்கப்படுவாள். பணியாள் (அடிமை) தன் எஜமானின் செல்வத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் தன் பொறுப்புக்குட்பட்டவை பற்றி விசாரிக்கப்படுவான்" (புகாரி, 2558) எனக் குறிப்பிட்டார்கள்.

- **நல்ல முறையில் வளர்த்தல்**

அதேபோன்று பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்து அவர்களுக்கு மார்க்கம் தொடர்பான அடிப்படை அம்சங்களைக் கற்றுக் கொடுப்பதும் அவர்களுக்கான உரிமைகளில் ஒன்றாகும். பிள்ளைகளை வளர்ப்பது தொடர்பான நடைமுறை வழிகாட்டல் என்ற வகையில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

"உங்களது பிள்ளைகள் ஏழு வயதை அடைந்தால் அவர்களுக்குத் தொழுமாறு ஏவுங்கள். அவர்கள் பத்து வயதை அடைந்தால் (தொழாவிடின்) தொழுமாறு அவர்களுக்கு (இலேசாக) அடியுங்கள். படுக்கையில் அவர்களுக்கிடையே பிரிவை ஏற்படுத்தி விடுங்கள்" (அபூ தவூத், 495). அதேபோல் நரக நெருப்பிலிருந்து எம்மையும் எமது பிள்ளைகளையும் பாதுகாக்குமாறு அல்லாஹ் கட்டளையிடுகிறான். இதற்கு "மு.ஃமின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும்" (66:6) எனும் வசனம் சான்றாகும்.

- **உளவியல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் அவர்கள் மீது அக்கறை கொள்ளல்**

உணர்வு ரீதியாக பிள்ளைகள் தொடர்பில் கரிசனை கொள்வதும் மிக அவசியமாகும். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளல், இரக்கம் காட்டல், அன்பாக கொஞ்சி விளையாடுதல் போன்றவை இவற்றுள் அடங்கும். இவ்விடயம் தொடர்பில் பின்வரும் சம்பவம் சுட்டிக்காட்டத்தக்கது:

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் (தம் பேரரான) ஹஸன் இப்னு அலியை முத்தமிட்டார்கள். அப்போது அவர்கள் அருகில் அமர்ந்துகொண்டிருந்த அக்ர.ஃ இப்னு ஹாபிஸ் அத்தமீமீ (ரழி), எனக்குப் பத்துக் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரைக் கூட நான் முத்தமிட்டதில்லை" என்றார். அவரை பார்த்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் "அன்பு காட்டாதவர் அன்பு காட்டப்படமாட்டார்" என்று கூறினார்கள்" (புகாரி, 1565; முஸ்லிம், 7132).

அதேபோன்று ஷத்தாத் பின் அல்ஹாதி என்பவர் தனது தந்தையிடமிருந்து பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

“ஒரு முறை ம∴ரிப் அல்லது இஷா தொழுகையில் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு முன்னிலையில் வந்தார்கள். அவர் ஹஸன் அல்லது ஹுஸைனை சுமந்து கொண்டு இருந்தா ர்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் முன் வந்து அவரை கீழே இறக்கி வைத்துவிட்டு தொழுகைக்காக தக்பீர் சொன்னார்கள். பின்பு தொழுதார்கள். பின்பு தொழுது கொண்டிருக்கும்போது நீண்ட ஒரு சுஜூத் செய்தார்கள். எனது தந்தை கூறுகிறார், “நான் எனது தலையை உயர்த்தினேன். நபியவர்கள் சுஜூத் செய்து கொண்டிருக்கும்போது அந்தக் குழந்தை நபியவர்களின் முதுகின் மீது இருந்து கொண்டி ருந்தது. உடனே நான் எனது சுஜூதுக்கு சென்று விட்டேன்”. நபியவர்கள் தொழுது முடிந்த போது மக்கள் அவரிடம், “அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் தொழுகையில் இருக்கும் போது நீண்ட ஒரு சுஜூத் செய்தீர்கள். அப்போது நாங்கள் உமக்கு ஏதோ நடந்துவிட்டது அல்லது உமக்கு வஹீ அருளப்பட்டது என்று நினைத்துக் கொண்டோம்” என்றனர். அப்போது நபியவர்கள் “அவ்வாறு ஒன்றும் நடக்கவில்லை. எனது மகன் எனக்கு மேல் ஏறி அமர்ந்து கொண்டான். எனவே, அவன் தனது தேவையை முடித்துக் கொள்ளும்வரை நான் அவசரப்பட விரும்பவில்லை” என்றார்கள்” (நஸாஈ, 1140)[61].

அதேபோன்று அனஸ் பின் மாலிக் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாகப் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“நீண்ட நேரம் தொழுகை நடத்தும் எண்ணத்துடன் நான் தொழுகையைத் துவக்குகிறேன். அப்போது குழந்தையின் அழுகுரலை கேட்கிறேன். (எனக்குப் பின்னால் தொழுது கொண்டிருக்கும்) அந்தக் குழந்தையின் தாயாருக்குச் சிரம மளிக்கக் கூடாது என்பதனால் தொழுகையைச் சுருக்கமாக முடித்துவிடுகிறேன்” (புகாரி, 710).

---

[61] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அந்நஸாஈ, 1140.

- **பெண் பிள்ளைகளை வளர்த்தல்**

பெண்களை வளர்ப்பதிலும் அவர்களின் மீது அக்கறை செலுத்துவதிலும் ஒரு பிரத்தியேகமான முக்கியத்துவம் உண்டு. குறிப்பாக பெண்களை அழகிய முறையில் வளர்ப்போருக்கு அதிக கூலி உண்டு என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்விடயம் தொடர்பில் "யார் ஒருவர் இரண்டு பெண் பிள்ளைகளை அவர்கள் பருவமடையும் வரை கவனித்துக் கொள்கிறாரோ நானும் அவரும் மறுமை யில் இவ்வாறு வருவோம் எனக் குறிப்பிட்டு நபியவர்கள் தனது விரல்களை இணைத்துக் கொண்டார்கள்" (முஸ்லிம், 2631) எனும் நபிமொழி குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில் பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து பெற வேண்டிய பல்வேறு முக்கிய உரிமைகள் உண்டு என இஸ்லாம் வலியுறுத்துகிறது. உலகில் பல்வேறு பண்டைய அல்லது நவீன சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்குகளை நோக்கும்போது இஸ்லாமிய வழிகாட்டல்கள் பல்வேறு படி நிலைகள் கொண்டதாகவும் பூரணமானதாகவும் உள்ளன.

இஸ்லாம், கருவிலுள்ள சிசு, பால் குடிக்கும் குழந்தை, சிறு பிள்ளைகள், மற்றும் கட்டிளமைப் பருவத்தினர் போன்ற ஆண் அல்லது பெண் எனும் முதிர்ச்சி நிலையை அடையும் வரை யில் உள்ள பிள்ளைகளின் வாழ்வின் பல்வேறு கட்டங்கள் தொடர்பில் இஸ்லாம் கவனம் செலுத்தியுள்ளது. அதைவிட மேலதிகமாக அவர்களின் வயிறுகளில் அவர்கள் சிசுக்களாக மாற்றமடைய முன்னரே அவர்கள் தொடர்பில் இஸ்லாம் கரிசனை செலுத்தியுள்ளது. தாயையும் தந்தையையும் தெரிவு செய்யும்போது மிக நல்ல முறையில் தெரிவு செய்ய வேண்டும் என இஸ்லாம் ஆர்வமூட்டியுள்ளமை இதற்கு சிறந்த சான்றாகும். சிறந்த பண்பாடுகளும் உயர்வான நாகரிக நெறிமுறைகளும் செல்வாக்குச் செலுத்த முடியுமான ஓர் சமூகத்தில் ஆண்களையும் பெண்களையும் சமமாக உருவா க்க வேண்டும் என்பதே இதன் பிரதான இலக்காகும்.

# இஸ்லாத்தில் பெற்றோரின் உரிமைகள்

## அறிமுகம்

ஒரு தம்பதியினருக்கு அல்லாஹ் குழந்தைப் பாக்கியத்தை வழங்கி பிள்ளைகளும் சந்ததிகளும் உள்ளவர்களாக மாறியதன் பின்னர் அவர்கள் பெற்றோர் எனப்படுகின்றனர். அவர்களுக்காகவே அவ்விருவரும் கஷ்டப்பட்டனர். அவர்களின் நிம்மதிக்காகவே அவ்விருவரும் விழித்திருந்தனர். அவர்களுக்கான பல்வேறு உரிமைகளையும் அவ்விருவரும் வழங்கினர். அத்துடன் ஏற்கனவே நாம் குறிப்பிட்டதைப் போல் அவர்களின் வாழ்வில் பல்வேறு வழிகளிலும் பல வசதிகளை அவர்கள் பூரணமாக ஏற்படுத்திக் கொடுத்தனர்.

## பிள்ளைகளின் மீதுள்ள பெற்றோருக்கான கடமைகள்

அழகிய ஒன்றைத் திருப்பிக் கொடுத்தல், நல்ல ஒன்றை செய்தமையை ஏற்றுக்கொள்ளல், அல்லது நல்ல முறையில் நடந்தமைக்கு பிரதியுபகாரமாக நல்ல முறையில் நடத்தல் என்ற வகையில் இஸ்லாம் பெற்றோர்களுக்கான பல்வேறு உரிமைகளை பிள்ளைகளுக்கு குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக அவ்விருவரும் முதுமையடைந்து பலவீனமடையும் போது பல உரிமைகளைக் குறிப்பிட்டுள்ளது. எனவே, பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போது அவ்விருவரும் செய்ததைப் போன்று முழுமையாக அவர்கக்ளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும் அவர்களுக்கு அன்பு காட்டுமாறும் அவர்களுக்கு நன்மை செய்யுமாறும் அல்லாஹ் வழிகாட்டுகிறான்.

எனவே, அவர்களுக்கு நலவு செய்வதும், கட்டுப்படுவதும், நல்ல முறையில் நடந்து கொள்வதும் அவர்களது உரிமைகளுள் மிக முக்கியமானவையாகும். அல்லாஹ்வுக்கு அடுத்ததாக அதிகம் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கும் உபகாரம் செய்வதற்கும் தகுதியானவர்கள் பெற்றோரைத் தவிர வேறு யாருமில்லை. இதனாலே, அல்லாஹ் தன்னை வணங்குதல் மற்றும் தனக்காகவே தூய்மையாக அனைத்தையும் செய்தல் என்பதுடன் அவ்விருவருக்கும் உபகாரம் செய்து அக்கறையுடன் நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுதல் என்பவற்றை இணைத்துக் கூறியுள்ளான். இவ்விடயம் தொடர்பில் அல்குர்ஆன்,

“அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் முதுமை அடைந்து விட்டால், அவர்களை உ∴ப் (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம். அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம். இன்னும் அவ் விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக. இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக. மேலும், “என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக” என்று கூறிப் பிரார்த்திப்பீராக” (17: 23-24) எனக் கூறுகிறது.

அந்தவகையில், அவ்விருவருக்கும் உபகாரம் செய்யும்படியும் அவ்விருவர் மீதும் சலிப்படையும் விதமாக “உப்” (சீ) என்ற வார்த்தையின் ஊடாகக் கூட அவ்விருவரின் உணர்வுகளை காயபடுத்திவிடக்கூடாது எனக் குறிப்பிட்டதனூடாக சிறிய விடயமாக இருப்பினும் எவ்வகையிலும் அவர்களை நோவினை செய்வதைத் தடுக்கும் வகையில் இஸ்லாத்தின் கட்டளை அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. அத்துடன் தனது அடியார்களில் சிலர் சிலரிடம் பணிந்து நடந்து கொள்வதை அல்லாஹ் பொதுவாக பாராட்டவுமில்லை. அதனை ஏற்கவுமில்லை. ஆயினும் பெற்றோர்கள் இருக்கும் போது மாத்திரம் அவர்களுடன் மிகப் பணிந்து நடந்து கொள்ளும்படி குறிப்பிடுகிறான். ஏற்கனவே குறிப்பிட்ட “இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக” எனும் வசனம் இதனைக் குறிப்பிடுகிறது.

அவர்களில் ஒருவர் அல்லது இருவர் முதுமையடைந்து சிலவேளை இயலாமை அவர்களுக்கு ஏற்பட்டு, அவர்கள் உடல் ரீதியாகவும் சிந்தனை ரீதியாகவும் பலவீனமான நிலையை அடையும் போது அவர்களுக்கு அதிகம் உபகாரம் செய்ய வேண்டும். எனவேதான் அந்நிலையை அவர்கள் அடையும்போது அவ்விருவருக்கும் அன்பை வெளிப்படுத்தும்

வகையிலும் அவ்விருவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளும் வகையிலும் அவர்களுடன் கண்ணியமான வார்த்தைகளைப் பயன்படுத்துமாறும் நளினமான முறையில் அவர்களுடன் உரையாடுமாறும் அல்லாஹ் கட்டளை இடுகிறான். அத்துடன் நாம் சிறுவயதில் பலவீனமாக இருக்கும்போது அவர்கள் எமக்கு எவ்வாறு இரக்கம் காட்டினார்களோ அவ்வாறு அருள் கிடைக்க வேண்டுமென அவர்களுக்காகப் பிரார்த்திக்குமாறும் நன்றி உணர்வு கலந்த வார்த்தைகளை அவர்களுக்கு அடிக்கடி கேட்க செய்யும்படியும் அல்லாஹ் வழிகாட்டுகிறான். இதனை அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல் என்பதுடன் அவன் இணைத்துக் கூறி இருக்கிறான்.

“நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி வஸிய்யத்துச் செய்(து போதித்)தோம். அவனுடைய தாய் பலவீனத்தின் மேல் பலவீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள். இன்னும் அவனுக்குப் பால் குடிமறத்தல் இரண்டு வருடங் களில் ஆகும். ஆகவே, “நீ எனக்கும் உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்துவாயாக. என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது” (31:14) எனக் கூறுகிறது.

நல்லவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான மிக உன்னத வழிகளுள் பெற்றோருக்கு உபகாரம் செய்வதும் ஒன்றாகும். அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி), நபி (ஸல்) அவர்களிடம் கேட்டதாக பின்வரும் ஹதீஸில் இடம் பெற்றுள்ள விடயம் இதற்கு சிறந்த சான்றாகும்.

(அல்லாஹ்வின் தூதரே) எந்த அமல் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது? (என அவர் வினவ), அதற்கு நபி (ஸல்) அவர்கள் “தொழுகையை அதன் (உரிய) நேரத்தில் தொழு வது” என்றார்கள். பின்பு எது? (என வினவ), நபி (ஸல்) அவர்கள் “பெற்றோருக்கு உபகாரம் செய்வது” என்றார்கள். பின்பு எது? (என வினவ), நபி (ஸல்) அவர்கள் “இறை பாதையில் அறப்போரில் ஈடுபடுவது” என்றார்கள். (புகாரி, 527; முஸ்லிம், 85).

அதேபோன்று அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து “அல்லாஹ்வின் தூதரே! நான் ஹிஜ்ரத் செல்வதற்காகவும் இறை பாதையில் போராடுவதற்காகவும் உறுதிமொழி அளிக்கிறேன். அதற்குரிய கூலியை அல்லாஹ்விடமே நான் எதிர்பார்க்கிறேன்” என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் “உம்முடைய பெற்றோர் இருவரில் யாரேனும் ஒருவர் உயிருடன் இருக்கிறாரா?” என வினவினார்கள். அவர் “இருவருமே இருக்கிறார்கள்” என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் நீர் அல்லாஹ்விடம் கூலியை எதிர்பார்க்கிறீர் தானே” என்றார்கள். அப்போது அவர்கள் “ஆம்” எனக் கூற, நபி (ஸல்) அவர்கள், “நீர் உம்முடைய பெற்றோரிடமே சென்று அவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள்” என்று கூறினார்கள். அத்துடன் வேறொரு அறிவிப்பில் “அவ்விருவர் விடயத்திலும் நீங்கள் இறை பாதையில் போராடுங்கள்” எனக் கூறினார்கள்” (முஸ்லிம், 254).

பிள்ளைகளின் மீதான பெற்றோரின் உரிமைகளுள் மிக உன்னதமானதாக இஸ்லாம் குறிப்பிடும் மற்றுமொரு உரிமையும் கீழ்வரும் ஹதீஸில் இடம்பெற்றுள்ளது. ஜாபிர் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

“ஒரு மனிதர் நபியவர்களிடம், அல்லாஹ்வின் தூதரே! எனக்குப் பணமும் சொத்தும் பிள்ளையும் உள்ளனர். எனது தந்தை எனது சொத்தை அபகரித்துக் கொள்ள விரும்புகிறார்” எனக் கூறினார். அப்போது நபியவர்கள் “நீரும் உமது சொத்தும் உமது தந்தைக்கே சொந்தம்” (இப்னு மாஜா, 2292)[62] எனக் கூறினார்கள்.

---

[62] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு இப்னி மாஜா, 1870.

இவ்விடயம் தொடர்பில் அபூ ஹாத்தம் பின் ஹிப்பான்[63] (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார்:

“ஏனைய அந்நிய நபர்களுடன் நடந்து கொள்வதைப் போல் ஒரு மனிதர் தனது தந்தையுடன் நடந்து கொள்வதை நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள் என்பதே இவ்விடத்தில் நபியவர்கள் குறிப்பிட்ட விடயத்தின் கருத்தாகும். சொல்லிலும் செயலிலும் அவரது தந்தையுடன் நல்ல முறையில் மென்மையாக நடந்து கொள்ளும்படி பணித்தார்கள். அவரது சொத்தையும் தனது தந்தைக்கு கொடுப்பது உள்ளடங்களாக சொல்லிலும் செயலிலும் அவருக்கு உபகாரம் செய்து மென்மையுடன் நடந்து கொள்ளும்படியும் தெளிவுபடுத்து வதற்காகவே “நீரும் உனது சொத்தும் உமது தந்தைக்கே சொந்தம்” என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். இது மகனின் விருப்பமின்றி தந்தை தான் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அவரது சொத்தை பெற்றுக் கொள்வதை இது குறிக்காது”[64].

பெற்றோருக்கு உபகாரம் செய்து அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதை வலியுறுத்தி அவர்களுக்கு நோவினை செய்வது தொடர்பில் எச்சரிக்கும் பல்வேறு எண்ணற்ற ஹதீஸ்களும் சான்றுகளும் உண்டு. இவை ஒரு சமூகத்தின் அடிப்படை நெறிமுறைகள் சீர்குலைக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் தூய இஸ் லாமிய ஷரீஆ எவ்வளவு தூரம் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது என்பதை மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

---

[63] அபூ ஹாதம் பின் ஹிப்பான் அல்புஸ்தி: அபூ ஹாதம் முஹம்மத் பின் ஹிப்பான் பின் அஹ்மத் (மர. ஹி. 354/ கி.பி. 965). இவர் வரலாறு, புவியியல், ஹதீஸ் துறைகளில் ஆழ்ந்த புலமை உள்ளவர். ஸிஜிஸ்தான் பிரதேசத்தில் புஸ்த் எனும் பகுதியில் பிறந்து அங்கே மரணித்தார். இவரது புத்தகங்களில் “அல்முஸ்னத் அஸ்ஸஹீஹ்” என்பது ஒன்றாகும். பார்க்க: அஸ்ஸுப்கி, தபகாதுஷ் ஷாபிஇய்யா, 3/131.

[64] ஸஹீஹ் இப்னு ஹிப்பான், 2/241.

# இஸ்லாத்தில் இரத்த உறவுகளை சேர்ந்து நடத்தல்.. முக்கியத்துவமும் உரிமைகளும்

## அறிமுகம்

குடும்பம் தொடர்பில் இஸ்லாம் குறிப்பிடும் வழிகாட்டல்கள் பெற்றோர் பிள்ளைகள் என்ற வரையறைக்குள் மாத்திரம் நின்றுவிடவில்லை. அதனைத் தாண்டி சகோதரர்கள், சகோதரிகள், தந்தையின் ஆண் மற்றும் பெண் உறவுக்காரர்கள் தாய்வழி ஆண் மற்றும் பெண் உறவுகள் அவர்களின் ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் என மிக விரிவான பரப்பை உள்ளடக்கியுள்ளது. எனவே, இவ்வனைத்து உறவினர்களுக்கும் இஸ்லாம் தூண்டும் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் மற்றும் உறவை சேர்ந்து நடத்தல் போன்ற உரிமைகள் உண்டு. இதனை இஸ்லாம் நற்குணங்களுள் ஒன்றாகக் கருதுவதோடு அதிகம் நன்மை தரும் ஒரு விடயமாகும் நோக்குகிறது. அத்துடன் உறவுகளைத் துண்டித்து நடப்போருக்கு மிகக் கொடிய தண்டனை உண்டு எனவும் எச்சரிக்கிறது. எனவே, யார் தனது உறவுகளை சேர்ந்து நடக்கிறாரோ அவரை அல்லாஹ்வும் சேர்ந்து நடப்பான். யார் அதனை துண்டித்து நடக்கிறாரோ அல்லாஹ்வும் அவரை துண்டித்து விடுவான்.

இவ்வாறான விரிவான பரப்பைக் கொண்ட குடும்பத்துக் கிடையே உள்ள உறவு தொடர்ந்து உறுதியாக இருப்பதற்காக வேண்டி உறவினர்களிடையே சிலர் சிலரை பொறுப்பேற்றல் மற்றும் சிலர் சிலருக்கு உதவுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சட்டதிட்டங்களையும் ஒழுங்குகளையும் இஸ்லாம் வகுத்து உள்ளது.

இஸ்லாம் குறிப்பிட்டிருக்கும் செலவினம் தொடர்பான ஒழுங்கு, வாரிசுரிமை சட்டம், *ஆகிலா* எனும் ஒழுங்கு போன்றவை இவற்றுக்கான சில உதாரணங்களாகும். *ஆகிலா* எனப்படுவது தவறுதலாக இடம்பெறும் கொலை (கத்லுல் கத.்.) அல்லது வேண்டும் என்று கொலை செய்வதற்கு ஒப்பான கொலை (ஷிப்ஹுல் அம்த்) போன்ற விவகாரங்களில் அதற்கான நஷ்டஈட்டை வழங்குவதை கொலையாளியின் வாரிசுச்

சொத்துக்களைப் பெறுவோர் மற்றும் ஏனைய நெருங்கிய உறவினர்களுகளிடையே பகிர்ந்தளிப்பதைக் குறிக்கிறது.[65]

## இஸ்லாத்தில் இரத்த உறவுகளைச் சேர்ந்து நடத்தல்

இரத்த உறவுகளைச் சேர்ந்து நடத்தல் என்பது உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதையும் அவர்களுக்கு இயலுமானவரை நன்மைகள் செய்வதையும், கெடுதிகளை முடியுமானவரை அவர்களை விட்டுத் தடுப்ப தையும் குறிக்கிறது. அவர்களிடம் அவர்களின் நிலை பற்றி வினவுதல், அவர்களின் நிலைமைகளைத் தேடி அறிதல், அவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்குதல், அவர்களில் வறியோருக்கு தர்மம் செய்தல், அவர்களில் நோய்வாய்ப் பட்டோரை நோய் விசாரித்தல், அவர்களின் அழைப்புக்கு பதில் அளித்தல், விருந்தாளிகளாக அழைத்து அவர்களை கண்ணியப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் இதனுள் அடங்கும். அத்துடன் அவர்களின் இன்பங்களில் பங்கு கொள்ளல், அவர்களின் துன்பங்களில் தோல் கொடுத்தல் போன்ற சமூகத்திலுள்ள தனி நபர்களுக்கிடையே உறவு எனும் பிணைப்பை உறுதிப்படுத்தி அதிகரிக்கும் அனைத்து விடயங்களும் இதனுள் அடங்கும்.

எனவே, உறவினர்கள் என்பது அதிக நன்மைகளைக் கொண்டுள்ள வாயிலாகும். இஸ்லாமிய சமூகத்தின் ஒற்றுமையும் பிணைப்பும் அதிலேயே உறுதியாகிறது. இதனூ டாக அதன் அங்கத்தவர்களின் உள்ளங்கள் அமைதியினாலும் இன்பத்தாலும் நிரம்பி வழிகின்றன. அத்துடன் தனிமை மற்றும் ஒதுங்கியிருத்தல் ஆகியவற்றிலிருந்து மனிதன் எப்போதும் தூரமாகவே இருக்கிறான். மேலும் தனது உறவினர்கள் அன்புடனும் அக்கறையுடனும் தன்னைச் சூழ்ந்து இருக்கி றார்கள் என்பதை அவன் உறுதி செய்து கொள்ள முடிவதோடு தேவை ஏற்படும் போது அவனுக்கு அவர்கள் உதவியும் செய்கிறார்கள்.

---

[65] பார்க்க: யூஸுப் அல்கர்ழாவி, அல்இஸ்லாமு ஹழாரதுல் கத், பக். 158.

அல்லாஹ் நெருங்கிய உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு ஏறுகிறான். நாம் அவசியம் சேர்ந்து நடக்க வேண்டிய இரத்த உறவுகளே அவர்களாவர். இவ் விடயம் தொடர்பில் அல்லாஹ்,

"மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள். அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தை யர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப் போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை" (4:36) எனக் கூறுகிறான்.

அத்துடன் இரத்த உறவுகளை சேர்ந்து நடப்போரை அல்லாஹ்வும் சேர்ந்து நடப்பதாகவும் அவனுக்கு தொடர்ந்து உபகாரமும் நலவும் அருளும் வழங்குவதாகவும் குறிப் பிடுகிறான். அப்துர் ரஹ்மான் பின் அவ்.ஃப் (ரழி) எனும் நபித்தோழர் வழியாக வந்துள்ள பின்வரும் ஹதீஸ் குத்ஸி இக்கருத்தை உணர்த்துகிறது. இந்த ஹதீஸில் அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

"நான் அளவற்ற அருளாளன் (ரஹ்மான்). அது இரத்த உறவு (ரஹிம்) ஆகும். எனது பெயரிலிருந்து எடுத்து ஒரு பெயரை நான் அதற்கு இட்டுள்ளேன்[66]. அதனைச் சேர்ந்து நடப்போரை நானும் சேர்ந்து நடப்பேன். அதனைத் துண்டித்து விடுபவரை நானும் துண்டித்து விடுவேன்" (அபூ தாவூத், 1694)[67].

---

[66]அதாவது அரபியில் இரத்த உறவைக் குறிக்கும் "ரஹிம்" எனும் பதம் இறைவனின் திருநாமமான "ரஹ்மான்" எனும் பெயரிலிருந்து வந்துள்ளது.

[67]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 1694.

அதேபோல் இரத்த உறவை சேர்ந்து நடப்பவரின் வாழ்வாதாரத்தில் விஸ்தீரணம் ஏற்படும் எனவும் வாழ்நாளில் அபிவிருத்தி ஏற்படும் எனவும் நபி (ஸல்) அவர்கள் நன்மாராயம் கூறியுள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டதாக அனஸ் பின் மாலிக் (ரழி) பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

“தம் வாழ்வாதாரம் (ரிஸ்க்) விசாலமாக்கப்படுவதையும் வாழ்நாள் நீடிக்கப்படுவதையும் விரும்புகிறவர் தம் உறவைப் பேணி வாழட்டும்” (புகாரி, 5986).

அறிஞர்கள் இவ்விடத்தில் வாழ்நாள் அதிகரிக்கபடுதல் என்பதற்கு அவரது வாழ்நாளில் அபிவிருத்தி ஏற்படுவதையும், இறைவழிபாட்டுக்கான அருள் கிடைப்பதையும், மறுமையில் தனக்குப் பயன் அளிக்கும் விடயங்களில் தனது நேரங்களைப் பயன்படுத்துவதையும், தனக்குப் பயனில்லாத விடயங்களில் தனது நேரத்தை வீணாக்குவதை விட்டு அதனைப் பாதுகாப் பதையும் குறிப்பதாக விளக்கம் அளிக்கின்றனர்[68].

மறுபுறம் இரத்த உறவுகளைத் துண்டிப்பதைக் கடுமையாக எச்சரித்து பல்வேறு வழிகாட்டல்கள் அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இடம்பெற்றுள்ளன. அவற்றை மிகப் பெரிய பாவமாகவே அவை கருதுகின்றன. ஏனெனில் மக்களிடையே உள்ள தொடர்புகளை அவை துண்டித்து விடும். அத்துடன் விரோதமும் பகைமையும் அதனூடாக பரவிவிடும். அத்துடன் உறவினர்களுக்கிடையே உள்ள குடும்பப் பிணைப்பு சீர்குலைவதற்கு அது காரணமாக அமைந்துவிடும். இது இறை சாபம் கிடைப்பதற்கும் அகப் பார்வையும் சிந்தனையும் அற்றுப்போவதற்கும் காரணமாக அமைந்துவிடும் என எச்சரித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

நீங்கள் பின் வாங்குவீர்களாயின், நீங்கள் பூமியில் குழப்பம் உண்டாக்கி உங்கள் இரத்த உறவுகளை (அவர்களுடன் கலந்து உறவாடுவதிலிருந்தும்) துண்டித்து விடவும் முனைவீர்களோ? இத்தகையோரைத் தாம் அல்லாஹ் சபித்து,

---

[68]பார்க்க: அந்நவவி, அல்மின்ஹாஜ் பீ ஷர்ஹி ஸஹீஹி முஸ்லிம் இப்னில் ஹஜ்ஜஜ், 16/411.

இவர்களைச் செவிடாக்கி, இவர்கள் பார்வைகளையும் குருடாக்கி விட்டான்” (47-22-23).

அதேபோன்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜுபைர் பின் முத்இம் (ரழி) அவர்கள் “இரத்த உறவை துண்டித்து நடப்பவன் சுவனம் நுழைய மாட்டான்” (புகாரி, 5984) எனக் குறிப்பிடுகிறார்கள். அதாவது இரத்த உறவை துண்டித்தல் என்பது உறவினர்களை சேர்ந்து நடக்காமலும் அவர்களுடன் நல்ல முறையில் நடக்காமலும் அவர்களுக்கு உபகாரம் செய்யாமலும் இருப்பதாகும். இது மிகப் பெரிய குற்றமாகும் என்பது தொடர்பில் பல்வேறு அல்குர்ஆனிய மற்றும் ஹதீஸ் வாசகங்கள் இடம்பெற்றுள்ளன. இஸ்லாம் இவ்வளவு வலி யுறுத்தி இவ்விடயத்தைக் குறிப்பிடுவதற்கான மிகப் பிரதான காரணம் பிணைப்பும் அன்பும் ஒற்றுமையும் மிகுந்த ஓர் சமூகத்தை உருவாக்குவதேயாகும். அதனூடாகவே பின்வரும் நபி (ஸல்) அவர்களின் கூற்று சாத்தியப்படுகிறது:

“ஒருவருக்கொருவர் கருணைபுரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் (உண்மையான) இறைநம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் கண்டுவிடுகிறது” (புகாரி, 6011).

# முஸ்லிம் சமூகத்தில் சகோதரத்துவம்.. முக்கியத்துவமும் பெறுமானமும்

## அறிமுகம்

அன்பும், பாதுகாப்பும், ஒத்தாசையும், இரக்கமும் ஒன்றாகக் கலந்த பெரிய ஒரு குடும்ப அலகே முஸ்லிம் சமூகம் எனப்படுகிறது. எனவே, அது பண்பாடு நிறைந்த தெய்வீக வழிகாட்டலின் அடிப்படையில் உருவான நடு நிலையான சமூகமாகும். அதன் அங்கத்தவர்கள் நற் குணங்கள் உள்ளவர்களாகவும் நீதம் மற்றும் கலந்து ஆலோசித்தல் (ஷூரா) போன்றவற்றை நடைமுறைப் படுத்துவோராகவும் இருப்பர். அதில் பெரியவர் சிறியவருக்கு அன்பு காட்டுவார். பணக்காரர் ஏழை மீது இரக்கம் காட்டுவார். பலவீனமானவருக்கு வலிமையுள்ளவர் ஒத்தாசையாக இருப்பார். எனவே, அச்சமூகம் ஒரு உடலைப் போன்றதாகும். அதில் ஏதேனும் ஓர் உறுப்பு நோய்வாய்ப்படுமாயினும் ஏனைய அனைத்து உறுப்புகளும் அதற்காக நோவினைபடும். அதேபோன்று அது ஒரு கட்டிடத்தை போன்றதாகும். அதன் சில பகுதிகள் மற்றப் பகுதிகளைத் தாங்கிப்பிடித்துள்ளன.

## இஸ்லாத்தில் சகோதரத்துவம்

ரீகன்[69] என்ற (அமெரிக்க) அதிபரின் நிர்வாகத்தில் மிக முக்கிய புள்ளியாக இருந்த எட்வோடர்[70] என்பவர் "லைப்"

---

[69]ரொனால்ட் ரீகன் (Ronald Reagan) (1911-2004): இவர் ஐக்கிய அமெரிக்காவின் 40ஆவது ஜனாதிபதியாவார். இவர் 1981 – 1989 வரை கடமையாற்றியுள்ளர். அரசியல் வாழ்வுக்குள் நுழைய முன்னர் இவர் இரண்டாம் தர திரைப்படக் கலைஞராக இருந்து வந்தார். மக்களால் விரும்பப்பட்ட பிரபலமான ஜனாதிபதியாக இருந்த இவர் 1984ஆம் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று இரண்டவது முறையாகவும் அதிபரானார்.

[70]எட்வோடர் (Lee Atwater) (1951-1991): இவர் அமெரிக்க குடியரசுக் கட்சியின் இராஜதந்திர மற்றும் அரசியல் ஆலோசகர் ஆவார். இவர் அமெரிக்க அதிபர்களான ரீகன் மற்றும் ஜோர்ஜ் எச்.டபில்யூ. புஷ் ஆகியோரின் அரசியல் ஆலோசகராகக் கடமையாற்றியுள்ளார்.

(Life) என்ற சஞ்சிகையின் 1991ஆம் ஆண்டின் பெப்ரவரி மாத இதழில் பின்வருமாறு கூறுகிறார்:

"எனக்கு ஏற்பட்டிருக்கும் நோய் எனது சமூகத்தில் எது இல்லாமல் இருக்கிறது என்பதை எனக்கு உணர்த்தியது. அது என்னிடத்திலும் இல்லாமலேயே இருந்தது. அதுதான் குறைவான அன்பும் பாசமும் குறைவான சகோதரத்துவமும் ஆகும்"[71]

எனவே, சகோதரத்துவம் என்பது சமூகக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்காக இஸ்லாம் நிலை நிறுத்தியுள்ள மனிதப் பண்பாடுகளில் மிக உயர்ந்தவற்றுள் ஒன்று எனக் கொள்ளமுடியும். அது சமூகத்தை பிணைப்பும் ஒற்றுமையும் உள்ளதாக மாற்றுகிறது. இது வேறெந்த பண்டைய அல்லது நவீன சமூகங்களிலும் இல்லாத ஓர் உயர் விழுமியமாகும். "மக்கள் சமூகத்தில் ஒருவருக்கொருவர் அன்புடனும் நெருக்க மாகவும் ஒத்தாசையுடனும் வாழ்வதையே இது குறிக்கிறது. ஒருவரை ஒருவர் நேசிக்கும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள் என்ற உணர்வே அவர்களை ஒன்று சேர்க்கிறது. அவர்களில் சிலர் சிலரை பலப்படுத்துகின்றனர். அதே போன்று தனது சகோதரனின் பலமே தனக்கும் பலமானது எனவும் அவனது பலவீனம் தனக்கும் பலவீனம் எனவும் அவர்கள் உணர்கின்றனர். அதேபோன்று அவர்கள் மிகக் குறைவான அக்கறையுடனும் தனது சகோதரர்கள் தொடர்பில் அதிக ஈடுபாட்டுடனும் இருப்பார்கள்"[72].

---

[71] பார்க்க: அப்துல் ஹை ஸல்லூம், இம்பிராதூரிய்யதுஷ் ஷர் அல்ஜதீதா, பக்: 397.

[72] பார்க்க: யூஸுப் அல்கர்ளாவி, மலாமிஹுல் முஜ்தமஃ அல்முஸ்லிம் அல்லதீ நன்ஷுதுஹு, பக்: 138.

## இஸ்லாமிய சமூகத்தில் சகோதரத்துவத்தின் பெறுமானம்

இஸ்லாமிய சமூகத்தில் சகோதரத்துவத்தின் நிலை தொடர்பிலும் முஸ்லிம் சமூகத்தைக் கட்டியெழுப்புவதில் அவற்றின் வகிபாகம் தொடர்பிலும் பல்வேறு வழிகாட்டல்கள் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் அதனை பலப் படுத்துவதற்கான பல்வேறு வழிகளையும் இஸ்லாம் தூண்டியுள்ளது. அத்துடன் அதனைப் பாதிக்கும் வகையிலான அனைத்து விடயங்களையும் இஸ்லாம் தடுத்துள்ளது இவ்விடயம் தொடர்பில் ஈமானிய சகோதரத்துவத் தொடர்பை உறுதிப்படுத்தி அல்லாஹ் "நிச்சயமாக மு.ீமின்கள் (யாவரும்) சகோதரர்களே" (49:10) எனக் குறிப்பிடுகிறான். எனவே, மனித சமூகத்தில் இனம், நிறம் அல்லது பரம்பரை போன்ற எந்த ஒன்றும் இங்கு கவனத்திற் கொள்ளப்படவில்லை. இதனாலேயே பாரசீகத்தை சேர்ந்த சல்மான், ஹபஷாவைச் சேர்ந்த பிலால், ரோமைச் சேர்ந்த ஸுஹைப் போன்றோர் தமது அரேபிய சகோதரர்களுடன் ஒன்றிணைந்து சகோதரர்களாக இருந்தனர்.

இந்த சகோதரத்துவம் அல்லாஹ்வின் அருள் என அல் குர்ஆன் குறிப்பிடுகிறது:

"அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நி.ீமத்களை (அருட்கொடைகளை) நினைத்துப் பாருங்கள். நீங்கள் பகைவர்களாக இருந்தீர்கள். உங்கள் இதயங்களை அன்பி னால் பிணைத்து அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாக ஆகிவிட்டீர்கள்" (3:103).

முஸ்லிம் சமூகத்தின் துவக்கமான நபி (ஸல்) அவர்களின் மதீனா ஹிஜ்ரத்தின் பின்னர் நபியவர்கள் தனது பள்ளிவாசலை கட்டி முடிந்த உடனே (மக்கத்து) முஹாஜிர்களுக்கும் (மதீனா) அன்சாரிகளுக்கும் இடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்தினா ர்கள். அன்பு மற்றும் பிறர் நலனுக்கு முன்னுரிமையளித்தல் போன்றவற்றுக்கான மிக அழகிய முன்னுதாரணமாக இந்த சகோதரத்துவத்தை அல்குர்ஆன் பின்வருமாறு பதிவு செய்துள்ளது:

“இன்னும் சிலருக்கும் (இதில் பங்குண்டு. அவர்கள் மதீனாவில் முஹாஜிர்களுக்கு) முன்னரே ஈமானுடன் வீட்டை அமைத்துக் கொண்டவர்கள். அவர்கள் நாடு துறந்து தங்களிடம் குடியேறி வந்தவர்களை நேசிக்கின்றனர். அன்றியும் அ(வ்வாறு குடியேறி)வர்களுக்குக் கொடுக்கப்பட்டதிலிருந்து தங்கள் நெஞ்சங்களில் எவ்விதத் தேவையையும் அவர்கள் உணர மாட்டார்கள். மேலும், தங்களுக்குத் தேவையிருந்த போதிலும், தங்களைவிட அவர்களையே (உதவி பெறுவதற்குத் தக்கவர்களாகத்) தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்” (59:9).

இத்தகைய சகோதரத்துவத்தின் காரணமாக அன்பிலும் பிறரை முன்னிலைப்படுத்துவதிலும் மிக அழகிய உதாரணங்களில் ஒன்றாக பின்வரும் நிகழ்வைக் குறிப்பிட முடியும். இந் நிகழ்வில் ஓர் அன்சாரி சகோதரர் தனது முஹாஜிர் சகோதரருக்கு தனது முழு சொத்தில் பாதியைக் கொடுப்பதாகவும் தனது இரு மனைவியர்களில் ஒருவரை விவாகரத்துச் செய்துவிட்டு, அவளை அவருக்குத் திருமணம் முடித்து வைப்பதாகவும் கூறுகிறார். இந்த நிகழ்வு பின்வருமாறு இடம்பெறுகிறது:

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) (நாடு துறந்து மதீனாவுக்கு) வந்தார்கள். அப்போது அவருக்கும் ஸஃத் இப்னு ரபீஃ அல்அன்சாரி (ரழி) அவர்களுக்கும் இடையே நபி (ஸல்) அவர்கள் சகோதரத்துவ உறவை ஏற்படுத்தினார்கள். இந்த ஸஃத் இப்னு ரபீஃ அல்அன்சாரி (ரழி) அவர்களுக்கு இரண்டு துணைவியர் இருந்தனர். எனவே, ஸஃத் (ரழி) தம் வீட்டாரிலும் தம் செல்வத்திலும் சரி பாதியை அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்களுக்கு வழங்கக் கேட்ட போது அவர், “அல்லாஹ உங்களுக்கு, உங்கள் வீட்டாரிலும் செல்வத்திலும் சுபிட்சத்தை அருள்வானாக! எனக்குக் கடை வீதியைக் காட்டுங்கள்..” என்று கூறினார்கள்” (புகாரி, 5072).

சமூகக் கட்டமைப்பின் பிணைப்பில் சகோதரத்துவம் எனும் செயற்பாட்டின் வகிபங்கு மிக முக்கியமாக உள்ளமையால் இஸ்லாமிய சகோதரத்துவத்தை பலவீனப்படுத்தும் அனைத்து செயற்பாடுகளையும் அல்லாஹ் மிகத் தெளிவாகத் தடை செய்துள்ளாள். அந்தவகையில் பிறரிடத்தில் பெருமை அடித்தல், பிறரைக் கேலி செய்தல் போன்றவற்றை முற்றாகத் தடுத்துள்ளான். அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

“மு.∴.மின்களே! ஒரு சமூகத்தார் பிரிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களை (பரிகசிப்போரை) விட மேலானவர்களாக இருக்கலாம். (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்). ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம்” (49:11).

அதேபோல் மறைமுகமாக குறைகளைச் சொல்வதையும் பரம்பரை மற்றும் குலப் பெருமையையும் அல்லாஹ் தடை செய்துள்ளான். அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

“இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள். இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள். ஈமான் கொண்ட பின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும். எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்களாவர்” (49:11).

அதேபோன்று புறம் பேசுதல், கோள் மூட்டுதல் மற்றும் தவறான சந்தேகம் போன்றவற்றையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. ஏனெனில் இவையே ஒரு சமூகத்தின் அழிவுக்கான முக்கிய காரணிகளாகும். இவ்விடயம் தொடர்பில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

“மு.∴.மின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும். (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம். உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன். மிக்க கிருபை செய்பவன்” (49:12).

ஏதேனும் ஒரு பிணக்கு அல்லது வெறுப்பு நிகழ்ந்துவிடுமாயின் உள்ளங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த இஸ்லாம் முனைகிறது. அதாவது முரண்பட்டுக் கொண்ட இருவரிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துமாறு இஸ்லாம் தூண்டுகிறது. இவ்விடயத்தை ஆர்வமூட்டி இதன் மகத்துவம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

““நோன்பு, தொழுகை, தர்மம் போன்றவற்றின் அந்தஸ்தை விட சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் கூறவா?” என நபி (ஸல்) அவர்கள் கேட்டவுடன், “ஆம் அல்லாஹ்வின் தூதரே! கூறுங்கள்” என தோழர்கள் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “இருவருக்கிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத் துவது” எனக் கூறினார்கள். இருவருக்கிடையே (இணக்கப் பாட்டை ஏற்படுத்த முனையாமல்) சீர்குலைவை ஏற்படுத்துவது அழிவாகும்” (அபூ தாவூத், 4919)[73].

இஸ்லாமிய சமூகக் கட்டமைப்பைப் பிளவுற்றுவிடாமல் நிலைபடுத்துவதற்கு உதவுகிறது என்ற வகையில் இணக்கப் பாட்டை ஏற்படுத்துவதற்காக முரண்பட்ட இருவரிடையே பொய் கூறுவதைக் கூட இஸ்லாம் அனுமதித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் “(பரஸ்பரம் பிணங்கிய இரண்டு தரப்பாரிடமும்) நல்லதை (புனைந்து) சொல்லி மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துபவன் பொய்யன் அல்லன்” (புகாரி, 2692) எனக் குறிப்பிட்டார்கள்.

## சகோதரத்துவத்தின் உரிமைகளும் கடமைகளும்

சகோதரத்துவத்தின் முக்கியத்துவம் கருதி இஸ்லாம் பல்வேறு உரிமைகளையும் கடமைகளையும் வகுத்துள்ளது. எனவே, அச்சகோதரத்துவம் வேண்டி நிற்கும் அவ் வொழுங்குகளை ஒவ்வொரு முஸ்லிமும் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் இவ்விடயம் நாளை மறுமையில் விசாரிக்கப்படும் ஒரு கடன் என்ற வகையில் அவற்றைக்

[73] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 4919.

கடைபிடிக்குமாறும் இஸ்லாம் வலியுறுத்துகிறது. அவை அவசியம் நிறைவேற்றப்பட வேண்டிய அமானிதம் எனவும் இஸ்லாம் குறிப்பிடுகிறது. இதனைத் தெளிவுபடுத்தி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

“நீங்கள் உங்களுக்குள் பொறாமைப்பட வேண்டாம். உங்களுக்குள் பொருளின் விலையை அதிகரித்து விற்க வேண்டாம். உங்களுக்குள் பகைமைப்பட வேண்டாம். நீங்கள் புறமுதுகு காட்டி ஓட வேண்டாம். உங்களில் சிலரின் வியாபாரத்துக்கு எதிராக சிலர் வியாபாரம் செய்ய வேண்டாம். அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் சகோதரர்களாக இருங்கள். ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரனாவான். எனவே, அவனுக்கு அநியாயம் இழைப்பதோ, அவனுக்கு சூழ்ச்சி செய்வதோ, அவனை இழிவுபடுத்துவதோ கூடாது. ஒரு மனிதன் தனது முஸ்லிம் சகோதரனை இழிவுபடுத்துவது அவன் தீயவன் என்பதற்குப் போதுமானது. ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் மற்ற முஸ்லிமின் உயிர், உடமை, மானம் ஆகியவை ஹராமானதாகும்” (முஸ்லிம், 2564).

“அவனுக்கு சூழ்ச்சி செய்யக்கூடாது” என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றில் சூழ்ச்சி செய்தல் என்பதற்கு அறிஞர்கள் அவனுக்கு உதவி செய்வதை விட்டு விடுவது என விளக்கம் அளித்துள்ளனர். இதன் கருத்து ஏதேனும் ஓர் அநியாயக்காரன் அல்லது அது போன்ற ஒன்றை தடுப்பதற்காக தனது சகோ தரனை உதவிக்கு அழைக்கும் போது உதவி செய்யாமல் இருப்பதற்கான ஷரீஆவில் அங்கீகாரம் பெற்ற நியாயமான காரணம் ஏதும் இல்லாத நிலையில் அவனுக்கு உதவ முடியுமாயின் உதவி செய்வது கட்டாயமானதாகும்.[74]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரழி) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

“(ஒரு முறை) இறைத்தூதர் (ஸல்) அவர்கள், “உன் சகோதரன் அக்கிரமக்காரனாக இருக்கும் நிலையிலும் அக்கிரமத்துக்குள்ளானவனாக இருக்கும் நிலையிலும்

---

[74] பார்க்க: அல்மின்ஹாஜ் பீ ஷர்ஹி ஸஹீஹி முஸ்லிம் இப்னில் ஹஜ்ஜஜ் லிந்நவவி, 16/120.

அவனுக்கு நீ உதவி செய்” என்றார்கள். அப்போது ஒருவர், “இறைத்தூதர் அவர்களே! அக்கிரமத்திற்குள்ளானவனுக்கு நான் உதவுவேன். அக்கிரமக்காரனுக்கு எப்படி நான் உதவுவேன்? கூறுங்கள்!” என்றார். நபி (ஸல்) அவர்கள், “அவனை அக்கிரமம் செய்ய விடாமல் நீ தடுப்பாயாக! இதுவே நீ அக்கிரமக்காரனுக்குச் செய்யும் உதவியாகும்” என்றார்கள்” (புகாரி, 6952).

அந்தவகையில் தனது சகோதரன் அநியாயம் இழைக்கப்படும் போது அவனது தேவைகள் தொடர்பில் விரைந்து செயற்படு மாறும், அவன் அநியாயம் இழைப்பவனாக இருக்கும்போது அதனை விட்டு அவனைத் தடுப்பதற்கும் வலியுறுத்தும் இஸ்லாம் தவிரந்த வேறு ஏதேனும் ஓர் மனித சமூகத்தை நாம் பார்த்ததுண்டா!

இது இஸ்லாமிய சமூகத்தில் மாத்திரமே உள்ளது. இது சகோதரத்துவம் மற்றும் அனைவரின் உணர்வும் ஒற்றுமைப் படுவதன் உயர்ந்த படிநிலையாகும். இதனூடாக ஒவ்வொரு தனிநபரும் தனது சகோதரனின் நெருக்கடிகளை அகற்றுவத ற்கும் அவனது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் முயல்கிறான். அத்துடன் அவனுக்கு உதவி ஒத்தாசை செய்வதற்குத் தயாரா க இருக்கிறான். பொறாமை, குரோதம் போன்றவற்றிலிருந்து விலகி இருக்கிறான். நேர்மறையான சிந்தனையைக் கடை பிடிக்கிறான். அந்தவகையில் இஸ்லாமிய சமூகத்தின் இணைப்புக்கும் கட்டுமானத்துக்கும் அடிப்படையாகவும் முகவரியாகவும் சகோதரத்துவம் தொழிற்படுகிறது எனலாம்.

# இஸ்லாமிய சமூகத்தில் சமூகக் கூட்டுறவு

## அறிமுகம்

இஸ்லாம், மனிதனின் வெளித் தேவைகள் மற்றும் பொருட்தேவைகளில் ஆதரவு வழங்குவது ஒருபுறமிருக்க உணர்வுகளில் ஒத்தாசை, ஆதரவு வழங்கல் மற்றும் உதவி செய்தல் போன்றவை தன்னைப் பின்பற்றும் முஸ்லிம்ள் இடையே இருக்கவேண்டுமென வலியுறுத்துகிறது.

இதனால் இம்மார்க்கத்தின் ஊடாக சில பகுதிகள் சிலதை ஈயத்தால் வார்த்து இணைக்கும் வகையில் அமைந்துள்ள இறுகக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை போல் அவர்கள் இருக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பில் அபூ மூஸா அல்அஷ்அரி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்: “ஒரு மு.்.மின் இன்னொரு மு.்.மினுக்கு (இடையிலான உறவு) ஒன்றோடொன்று பிணைக் கப்பட்டுள்ள கட்டடத்தைப் போன்றதாகும்” (புகாரி, 865; முஸ்லிம், 5852).

அல்லது முஸ்லிம் சமூகம் ஒரு உடம்பை போன்றதாகும். அது அதில் ஏதாவது ஒரு உறுப்பு நோய் வாய்ப்பட்டாலும் அதற்காக ஏனைய அனைத்து உறுப்புகளும் காய்ச்சலும் விழிப்புமுற்று இருக்கும். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

“ஒருவருக்கொருவர் கருணைபுரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் (உண்மையான) இறைநம்பிக்கையாளர்கள் ஒரு உடலைப் போன்றவர்கள். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் கண்டுவிடுகிறது” (புகாரி, 6011).

## இஸ்லாத்தில் சமூகக் கூட்டுறவின் பூரண நிலை

இஸ்லாத்தில் சமூகக் கூட்டுறவு என்பது சட ரீதியான நலன்களுடன் மாத்திரம் சுருங்கியதல்ல. அது ஓர் அடிப்படையாக இருக்கின்ற போதும் அதுதவிர பொருளாதார, உள, சிந்தனை ரீதியான விடயங்களின் விரிவான பரப்பை உள்ளடக்கும் வகையில் சமூகத்தின் தனிநபர் அல்லது குழுக்களின் ஏனைய அனைத்து தேவைகளையும் அது உள்ளடக்கியதாகும். எனவே, அதனூடாக சமூகத்தில் உள்ள தனி நபர்கள் மற்றும் ஏனைய குழுக்களின் அடிப்படையான அனைத்து உரிமைகளையும் அது உள்ளடக்குகிறது எனலாம்.

இஸ்லாத்தின் அனைத்துப் போதனைகளும் முஸ்லிம்கள் இடையே சமூகக் கூட்டுறவை முழுமையாக உறுதிப்படுத்து கின்றன. இதனாலேயே முஸ்லிம் சமூகத்தில் தனிநபர் வாதம், சுயநலம் அல்லது எதிர்மறை வாதம் போன்றவற்றை முஸ்லிம் சமூகம் அறிந்திருப்பதில்லை. மாறாக உண்மையான சகோதரத்துவம், கொடையளிக்கும் மனப்பான்மை, நல்ல விடயங்களிலும் இறையச்சத்திலும் எப்போதும் ஒத்தாசையாக இருத்தல் என்பதையே அச்சமூகம் அறிந்துள்ளது.[75]

## இஸ்லாத்தில் சமூகக் கூட்டுறவின் பொதுமைத்தன்மை

இஸ்லாத்தில் சமூக ஆதரவு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த முஸ்லிம்களை மாத்திரம் உள்ளடக்கியதல்ல. மாறாக அச்சமூகத்துக்குள் எவ்வகை சமய நம்பிக்கையைப் பின்பற்று வோராக இருப்பினும் அனைத்து மனிதர்களையும் அது உள்ளடக்கியதாகும். அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

“மார்க்க (விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார் களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செலுத்துவதையும் அல்லாஹ் விலக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துவோரை நேசிக்கிறான்” (60:8).

---

[75]பார்க்க: முஹம்மத் அத்தஸுகி, அல்வக்பு வதவ்ருஹு பீ தன்மியதில் முஜ்தம.். அல்இஸ்லாமி, ஸில்ஸிலது கழாயா இஸ்லாமிய்யா (46), பாகம் 1, பக், 5.

மனிதன் எனும் கௌரவமே சமூகக் கூட்டுறவின் அடிப்படை ஆகும் என்பதே இதற்கான காரணமாகும். அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

“நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம். இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப்படுத்தினோம்” (17:70).

அதேபோன்று இஸ்லாமிய சமூக அங்கத்தவர்களிடையே சமூகக் கூட்டுறவு மற்றும் பிணைப்பு தொடர்பில் குறிப்பிடப் பட்டுள்ள அல்குர்ஆனிய வசனங்களுள் ஒன்றாக பின்வரும் வசனத்தைக் குறிப்பிட முடியும்:

“இன்னும் நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் பரஸ்பர உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்” (5:2).

இவ்வசனம் தொடர்பில் இமாம் குர்துபி[76] (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார்:

“இவ்வசனத்தில் நன்மையான விடயங்களிலும் இறை அச்சத்திலும் படைப்பினங்கள் அனைவருக்கும் ஒத்தாசையாக இருக்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளது. அதாவது ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்ள வேண்டும் (என்பது இதன் பொருளாகும்)”[77].

---

[76]அல்குர்துபி (மர. ஹி. 671/ கி.பி. 1273): முஹம்மத் பின் அஹ்மத் அல்அன்ஸாரி அல்கஸ்ரஜி அல்மாலிகி அல்குர்துபி. இவர் மிகப் பெரும் முபஸ்ஸிர்களில் ஒருவர். “அல்ஜாமிஃ லி அஹ்காமில் குர்ஆன்” எனும் பிரபல அல்குர்ஆன் விரிவுரை நூலின் ஆசிரியர். இவர் எகிப்தில் மரணித்தார். பார்க்க: அஸ்ஸர்கலி, அல்அஃலாம், 5/322.

[77]பார்க்க: அல்குர்துபி, அல்ஜாமிஃ லிஅஹ்காமில் குர்ஆன், 6/46-47.

அதேபோன்று இமாம் மாவர்தி[78] (ரஹ்) பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

“நல்லவற்றில் ஒத்தாசையாக இருப்பதை அல்லாஹ் தூண்டி உள்ளான். அத்துடன் அவனுக்குப் பயப்படுவதுடன் (இறையச்சம் எனும் விடயத்துடன்) அதனை இணைத்துக் குறிப்பிட்டுள்ளான். ஏனெனில் இறையச்சத்தில் இறைவனின் திருப்தி உண்டு. அதேபோன்று (பிறருக்கு) நலவு செய்வதில் மக்களின் திருப்தி உண்டு. எனவே, அல்லாஹ்வின் திருப்தி யையும் மக்களின் திருப்தியையும் ஒன்றாக பெறுபவருக்கு சுபீட்சம் பூரணமாகி விடுவதோடு இறைவனின் அருளும் அவனை சூழ்ந்து கொள்கிறது”[79].

## இஸ்லாத்தில் ஸகாத்தின் முக்கியத்துவம்

பணக்காரர்களின் சொத்தில் தேவை உள்ளவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வரையறுக்கப்பட்ட ஒரு உரிமை (பங்கு) இருப்பதாக மிகத் தெளிவாக அல்குர்ஆன் கூறுகிறது. “அவர்களது பொருள்களில் (பிறருக்கு) நிர்ணயிக்கப்பட்ட பங்கு உண்டு. யாசிப்போருக்கும் வறியோருக்கும் (அவர்களின் பொருட்களில் பங்குண்டு)” (70:24-25).

இப்பங்கைத் தெளிவுபடுத்தும் பொறுப்பை அல்லாஹ்வே ஏற்றுள்ளான். பணக்காரர்களின் கொடை மனப்பான்மைக்கும் தனவந்தர்களின் தயாளத்தன்மைக்கும், அவர்களின் மனதில் உள்ள அன்புக்கும், நல்ல விடயங்கள் மற்றும் உபகாரம் செய்வதில் அவர்களது உள்ளத்தில் உள்ள ஆர்வத்துக்கும் ஆவலுக்குமேற்ப அதனை அவன் விட்டுவிடவில்லை.[80]

---

[78]அல்மாவர்தி (ஹி. 364-450/ கி.பி. 974-1058): அபுல் ஹஸன் அலி பின் முஹம்மத் பின் ஹபீப். இவர் மிகச் சிறந்த நீதிபதியாவார். பிக்ஹ், உஸூல், தப்ஸீர் போன்ற கலைகளில் இவர் துறைபோனவராவார். பல பகுதிகளில் நீதிபதிப் பதவியை வகித்துள்ளார். “அதபுத் துன்யா வத்தீன்” மற்றும் அல்அஹ்காமுஸ் ஸுல்தானிய்யா போன்றவை இவரது முக்கிய நூல்களாகும். பார்க்க: அத்தஹபீ, ஸியரு அஃலாமிந் நுபலா, 18/65 மற்றும் அஸ்ஸர்கலி, அல்அஃலாம், 4/327.

[79] பார்க்க: அல்மாவர்தி, அதபுத் துன்யா வத்தீன், பக். 196-197.

[80] ஹுஸைன் ஹாமித் ஹஸ்ஸான், அத்தகாபுல் அல்இஜ்திமாஈ பிஷ்ஷரீஆ அல்இஸ்லாமிய்யா, பக். 8.

இவ்வாறு தேவையுள்ளவர்களை கீழ்வரும் அல்குர்ஆனிய வசனம் பின்வருமாறு வரையறை செய்கிறது:

“(ஸகாத் என்னும்) தானங்கள் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின்பால் உள்ளங்கள் ஈர்க்கப்பட்டோருக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப் பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோரு க்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும். அல்லாஹ் (யாவும்) அறிபவன். மிக்க ஞானமுடையோன்” (9:60).

சமூகத்தின் பெரும்பாலான அங்கத்தவர்களை உள்ளடக் குகிறது என்ற வகையில் ஸகாத் முக்கியத்துவம் பெறுகிறது. அத்துடன அது சமூகக் கூட்டுறவு மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பைப் பூரணப்படுத்துவதற்கான முதலாவது அடிப் படை ஊற்று என்பதைக் கவனத்தில் கொள்வதன் மூலமும் அது முக்கியத்துவம் பெறுகிறது. இது இஸ்லாத்தின் (ஐந்து) கடமைகளுள் மூன்றாவது கடமையாகும். அதனை ஏற்காமல் ஒருவரின் இஸ்லாம் ஏற்கப்படமாட்டாது. ஸகாத் வழங்குபவரின் உள்ளத்தை அது தூய்மைப்படுத்துகிறது. எனவே, ஒருவர் தனது ஸகாத் பணத்தை யாருக்கு செலவிடுகிறாரோ அந்நபருக்குப் பயனாக அது அமைய முன்னர் ஸகாத்தை வழங்குபவருக்கே அது முதலில் பயனளிக்கிறது. இதனை அல்லாஹ், “(நபியே!) அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு, அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக” (9:103) எனக் குறிப்பிடுகிறான்.

உண்மையில் ஸகாத் கொடுப்பவரின் உள்ளத்திலிருந்து பேராசை, கஞ்சத்தனம், உலோபித்தனம் போன்றவற்றை அது அகற்றி விடுவதைப்போல் தேவையுள்ளவர், ஏழை மற்றும் ஏனைய ஸகாத் பெறத் தகுதியானவர்களிடம் உள்ள குரோ தம், வஞ்சகம், பணக்காரர்கள் மற்றும் சொத்து உள்ளவர்கள் மீதான வெறுப்பு போன்றவற்றையும் அது அப்புறப்படுத்தி விடுகிறது. அத்துடன் இக்கடமை நிறைவேற்றப்படும் சமூக அங்கத்தவர்களிடையே பிணைப்பும், அன்பும், ஒற்றுமையும் பரஸ்பர இரக்கமும் உள்ள சூழலை அது தோற்றுவிக்கிறது.

ஏழைகளின் தேவைகளை நிறைவு செய்யுமளவை செல்வந்தர்களின் சொத்திலிருந்து பெற ஆட்சியாளருக்கு இஸ்லாம் அனுமதி வழங்குகிறது. ஒவ்வொருவரும் தனது சொத்தின் அளவுக்கேற்ப இதனை வழங்க வேண்டும். முஸ்லிம் சமூகத்தில் ஒருவர் வயிறு நிரம்பியவராக உறங்கும் அதேவேளை அவரது அண்டை வீட்டார் பசித்தவராக இரவுப் பொழுதைக் கழிப்பதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. எனவே, ஒரு சமூகம் என்ற வகையில் ஒவ்வொருவரும் பிறருக்கு ஆதரவு வழங்குவது அவசியமானதாகும். இவ் விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் "தனது அண்டை வீட்டார் பசித்திருப்பதை அறிந்தும் வயிறு நிறைந்தவராக இரவில் உறங்குபவர் என்னை ஈமான் கொண்டவர் அல்லர்" (தபரானி, 754) எனக் குறிப்பிட்டார்கள்.

இந்நபிமொழி தொடர்பில் இமாம் இப்னு ஹஸ்ம்[81] (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார்:

"ஊரிலுள்ள அனைத்து செல்வந்தர்களும் அவ்வூரிலுள்ள ஏழைகளைப் பொறுப்பேற்பது கட்டாயமானதாகும். அதற்காக அவர்களை ஆட்சியாளர் நிர்ப்பந்திக்க வேண்டும். ஸகாத்தின் ஊடாகவும் முஸ்லிம்களின் ஏனைய சொத்துக்கள் ஊடாகவும் அவர்களின் தேவைகளை (முழுமையாக) நிவர்த்தி செய்ய முடியவில்லையாயின் அவர்களுக்கு அன்றாடம் மிக அவசி யமாக உள்ள பிரதான உணவை உண்ணும் அளவான ஏற்பாடுகளும், கோடை, மாரி காலங்களில் அவர்களுக்குத் தேவையான ஆடைகளும், மழை, கோடை, வெயில், பாதசாரிகளின் பார்வை போன்றவற்றிலிருந்து அவர்களை மறைக்கும் வசிப்பிடமும் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்"[82].

---

[81]இப்னு ஹஸ்ம் அல்அந்தலூஸி: அபூ முஹம்மத் அலி பின் அஹ்மத் பின் ஸஈத் அழ்ழாஹிரி (ஹி. 384-456/ கி.பி. 994-1064). இவர் முக்கிய இஸ்லாமிய அறிஞராவார். பிக்ஹ் துறையில் தேர்ச்சி பெற்றிருந்த இவர் ழாஹிரி மத்ஹபைச் சேர்ந்தவராவார். பார்க்க: அஸ்ஸபதி, அல்வாபி பில் வபயாத், 20/39.

[82]இப்னு ஹஸ்ம், முஹல்லா, 6/452 அல்மஸ்அலா, 725.

தேவையுள்ளோருக்கு (வாழ்வாதாரத்துக்கான) பொருட்களை விநியோகித்து ஆதரவு வழங்குவது தொடர்பான இஸ்லாத்தின் நோக்கு அவர்களின் அத்தேவையை நிறைவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் மாத்திரம் நின்று விடவில்லை. அதனைத் தாண்டி அவர்களுக்கு (ஏனைய அனைத்துத் தேவைகளும் நிறைவேறி) தன்னிறைவடைதல் என்ற நிலையை உறுதிப்படுத்துவதையே அது குறிக்கிறது. உமர் (ரழி) அவர்களின் பின்வரும் கூற்று இதனை நன்கு உணர்த்துகிறது: "அவர்களுக்கு ஸகாத்தை மீண்டும் மீண்டும் கொடுத்துக்கொண்டிருங்கள். அவர்களில் ஒருவருக்கு 100 ஒட்டகைகள் இருந்த போதும் (மீண்டும் மீண்டும் கொடுங்கள்)"[83].

## சமூகக் கூட்டுறவின் சிறப்பு தொடர்பான சில ஹதீஸ்கள்

முஸ்லிம் சமூகத்தில் சமூகக் கூட்டுறவின் சிறப்பைத் தெளிவுபடுத்தி, அதனைத் தூண்டி இஸ்லாத்தில் அவற்றின் நிலை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஹதீஸ்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

"அஷ்அரீ குலத்தினர், போரின்போது கையிருப்பிலுள்ள பயண உணவு (இருப்பு) குறைந்துவிட்டால் அல்லது மதீனாவில் தங்கள் மனைவி மக்களின் உணவு (இருப்பு) குறைந்து போய்விட்டால் தங்களிடம் (எஞ்சி) இருப்பதை ஒரு துணியில் சேகரித்து, பிறகு ஒரு பாத்திரத்தைக் கொண்டு சமமாகத் தங்களுக்கிடையே அதைப் பங்கிட்டுக் கொள்வார்கள். அவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள். நான் அவர்களைச் சேர்ந்தவன்" (புகாரி, 2486).

இந்த ஹதீஸ் தொடர்பில் இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் பத்ஹுல் பாரி என்ற தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் "அதாவது அவர்கள் என்னுடன் சேர்ந்து இருப்பார்கள். ஒரு முஸ்லிமுக்கு கிடைக்கும் சிறப்பின் உச்ச நிலை இதுவாகும்"[84].

---

[83] *Abid*

[84] பத்ஹுல் பாரி, 5/130.

அதேபோன்று இவ்விடயம் தொடர்பான ஒன்றாகப் பின்வரும் ஹதீஸைக் குறிப்பிட முடியும்:

“ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதியிழைக்கவும் மாட்டான். அவனை (பிறரின் அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான். தன் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிரு ப்பவரின் தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கிறான். ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குபவரை விட்டு அல்லாஹ்வும் மறுமை நாளில் ஒரு துன்பத்தை நீக்குகிறான். ஒரு முஸ்லிமின் குறைகளை மறைப்பவரின் குறைகளை அல்லாஹ்வும் மறுமையில் மறைப்பான்” (புகாரி, 2442).

இமாம் நவவி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

இந்த ஹதீஸில் ஒரு முஸ்லிமுக்கு உதவுவது, அவனது கஷ்டத்தை நீக்குவது, அவனது குறைகளை மறைப்பது தொடர்பான சிறப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. தனது சொத்து, பதவி அல்லது தான் உதவி செய்வதன் ஊடாக அவனது கஷ்டத்தை நீக்குவது இதனுள் அடங்கும். அதேபோன்று வெளிப்படையாக நோக்கும் போது ஒருவர் தனது ஆலோசனை, கருத்து அல்லது வழிகாட்டல் ஊடாக நீக்குவதும் இதனுள் அடங்கும்”[85]. இதுவே முஸ்லிம் சமூகத்தில் சமூகக் கூட்டுறவு என்பதன் பொருளாகும்.

அதாவது ஒரு சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனி நபரும் தமது சமூகத்துக்கு ஆதரவு வழங்குவதை இது குறிக்கிறது. பலம் படைத்த ஒவ்வொருவரும் அல்லது அதிகாரம் உள்ள ஒவ்வொருவரும் நல்ல விடயத்தின் ஊடாக தனது சமூகத்துக்கான ஆதரவை வழங்குபவராக இருப்பதையும் இது குறிக்கிறது. அத்துடன் சமூகத்தில் உள்ள அனைத்து சக்திகளும் ஒவ்வொரு தனிநபரினதும் நலன்களைப் பாதுகாப்பதிலும் கெடுதிகளை நீக்குவதிலும் ஒன்றுடன் மற்றொன்று தொடர்புபட்டதாக இருப்பதையும் இது குறிக்கிறது. பின்னர் சமூகக் கட்டமைப்பில் உள்ள தீங்குகளை நீக்கி சீரான அடிப்படைகளின் மீது அதனை அமைப்பது தொடர்பில் கவனம்

---

[85] அந்நவவி, அல்மின்ஹாஜ் ஷர்ஹு ஸஹீஹி முஸ்லிம், 16/135.

செலுத்துவதையும் இது குறிக்கிறது[86]. அதேபோல் தனிநபர் மற்றும் சமூகத்துக்கு இடையிலும் ஒவ்வொரு மனிதரும் தனது சக மனிதருக்கு இடையிலும் ஒத்தாசையுடனும் பிணைப்புடனும் இருக்கும் நிலையில் ஒவ்வொருவரும் மற்றவரோடு ஒன்றாக வாழ்வதையும் இது குறிக்கிறது[87].

நபி (ஸல்) அவர்கள் தேவையுள்ளோருக்கு உதவுவதையும் நாம் வாழும் சமூகத்தில் உள்ள தனிநபர்கள் விடயத்தில் உள்ள பொறுப்பை உணர்வதையும் எமது ஆன்மாவுக்கான தர்மங்களின் வகைகளுள் ஒன்றாகக் கருதினார்கள். அபூ தர் (ரழி) பின்வருமாறு கூறுகிறார்:

"சூரியன் உதிக்கும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் தனக்காக நிறைவேற்ற வேண்டிய ஒரு தர்மம் உள்ளது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நான் எங்களிடத்தில் சொத்துக்கள் இல்லாத நிலையில் எங்கிருந்து நாம் செலவழிப்பது அல்லாஹ்வின் தூதரே! எனக் கேட்டேன். அப்போது அவர்கள் "தர்மம் செய்வதற்கு பல்வேறு வழிகள் உண்டு. ஒரு கண்பார்வையற்றவருக்குப் பாதையை காட்டுவது, காது கேளாத, வாய் பேசாத ஒருவருக்கு ஏதேனும் ஒன்றை அவன் அறிந்து கொள்ளும் வரை நீ கேட்கச் செய்வது, யாரேனும் ஒருவர் வந்து நீ அறிந்திருக்கும் ஓர் இடத்தைப் பற்றி தனது தேவை நிமித்தமாக கேட்கும் ஒருவருக்கு அவ்விடத்தை நீ காட்டிக் கொடுப்பது, வழிதவறிச் சென்று உதவி தேடுபவருக்கும் கடுமையாக தாகித்து உதவி தேடுவோருக்கும் நீ இயலுமானவரை உதவுவது, பலவீனமான ஒருவருக்கு முடியுமானவரை நீ உதவுவது போன்ற இவை அனைத்தும் உன் ஆன்மாவுக்காக நீ செய்யும் தர்மங்களின் வகைகளுள் உள்ளதாகும்" எனக் கூறினார்கள்" (இப்னு ஹிப்பான், 3377).

[86]முஹம்மத் அபூ ஸஹ்ரா, அத்தகாபுல் அல்இஜ்திமாஈ பில் இஸ்லாம், பக். 7.

[87]அப்துல் ஆல் அஹ்மத் அப்துல்ஆல், அத்தகாபுல் அல்இஜ்திமாஈ பில் இஸ்லாம், பக். 31.

உயர்வான நாகரிகத்தின் அடையாளங்களாகக் கருதப் படுகின்ற இந்நெறிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அனைத்து ஒழுங்குகளையும் சட்டதிட்டங்களையும் இதனூடாக இஸ்லாம் தெளிவாக முந்திவிட்டது எனலாம். கண் தெரியாதவருக்கு வழிகாட்டல், காது கேளாதவருக்கும் வாய் பேச முடியாதவருக்கும் விடயங்களை அறியச் செய்தல் (தொடர்பான வழிகாட்டல் பற்றி இஸ்லாமிய வழிகாட்டல் தவிர்ந்த ஏனைய வழிகாட்டல்களில்) யார்தான் கேட்டிருப்பார்!!

மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஆற்றல் இருந்து அதில் கவனயீனமாக இருப்போரை நபியவர்கள் எச்சரித்துள்ளார்கள். அம்ர் பின் முர்ரா என்பவர், நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுவதை தான் கேட்டதாக முஆவியா (ரழி) அவர்களிடம் பின்வருமாறு கூறுகிறார்:

தேவையுடையவர்கள், ஏழைகள், வறியவர் போன்றோரைத் தவிர்க்க தனது கதவுகளை மூடும் எந்த ஒரு தலைவரினதும் தேவையையும், ஏழ்மையையும், வறுமையையும் தவிர்க்க வானத்தின் கதவுகளை அல்லாஹ் மூடிவிடுவான்" (அபூ தாவூத், 2948). எனவே, மக்களின் தேவைகளை கேட்டறிய முஆவியா (ரழி) அவர்கள் ஒரு மனிதரை நியமித்தார்.

அதேபோல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரழி) மற்றும் அபூதல்ஹா அல்அன்சாரி (ரழி) ஆகியோர் அறிவிக்கின்றனர்:

"யாரேனும் ஒரு மனிதர் ஒரு முஸ்லிமின் கண்ணியம் சிதைக்கப்பட்டு, அவரது மானம் குறை காணப்படும் ஒரு இடத்தில் அம்முஸ்லிமுக்கு சதி செய்வாராயின், அவர் வெற்றி பெற வேண்டும் என விரும்பும் இடத்தில் அல்லாஹ் அவருக்கு சதி செய்து விடுவான். அதேபோன்று ஒரு முஸ்லிமின் மானம் குறைகாணப்பட்டு, அவனது கண்ணியம் சிதைக்கப்படும் இடத்தில் ஒரு முஸ்லிமுக்கு யாரேனும் உதவினால் அவர் வெற்றி பெற வேண்டும் என விரும்பும் ஒரு இடத்தில் அல்லாஹ் அவருக்கு உதவுவான்" (அபூ தாவுத், 4884).

மேற்கூறப்பட்ட அடிப்படையைக் கொண்டு இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ள பல்வேறு கருத்துக்கள் உண்மையில் ஆச்சரியம் அளிக்கின்றன. அந்தவகையில் பிறருக்கு ஏற்படும் கெடுதியை அகற்ற முயற்சிப்பது ஒவ்வொரு

முஸ்லிமின் மீதும் கடமையாகும் எனும் விதியை அவர்கள் வகுத்துள்ளனர். எனவே, அவசர உதவிக்கு அழைப்பவர், நீரில் மூழ்குபவர் அல்லது தீயில் எரிந்து கொண்டிருப்பவர் போன்றோருக்கு உதவுவதற்கான இயலுமை வேறு யாருக்கும் இன்றி ஒருவருக்கு மாத்திரமே இருக்குமாயின் அவ்விடத்தில் உதவுவதற்காக தொழுகையை இடையில் நிறுத்தி, அவருக்கு ஏற்பட்டிருக்கும் அழிவிலிருந்து அவரை பாதுகாப்பது அவர் மீதான பிரத்தியேகக் கடமை (பர்ள் ஐன்) ஆகும். எனினும் வேறு நபர்களுக்கும் அவ்விடத்தில் அவருக்கு உதவி செய்ய முடியுமாக இருப்பின் அது அவர் மீது சமூகக் கடமை (பர்ள் கிபாயா) ஆகும். இவ்விவகாரத்தில் சட்டவியல் அறிஞர்கள் இடையே எவ்வித கருத்து வேற்றுமையும் இல்லை[88].

அந்தவகையில் சமூகக் கூட்டுறவு என்பது முஸ்லிம் சமூகத்தின் தூண்களுள் மிக அடிப்படையானதாகும். பரஸ்பர உதவி, இருவருக்கு இடையிலான பிணைப்பு மற்றும் இடை வெளிகளைப் பூரணப்படுத்துவதில் பங்குகொள்ளல் போன்ற பல்வேறு வடிவங்களை இது உள்ளடக்குகிறது. உதவிக்கரம் நீட்டல், பாதுகாத்தல், உதவி செய்தல், ஆதரவு அளித்தல் போன்ற பல்வேறு வடிவங்களில் இது பிரதிபலிக்கிறது. எனவே, நிர்க்கதிக்குள்ளானவரின் தேவையை நிறைவேற்றும் வரை இச்செயற்பாடு நடைபெற வேண்டும். அத்துடன் கவலை ஏற்பட்டவரின் துன்பம் நீங்கும்வரையும், காயம் ஏற்பட்டவரின் காயம் ஆறி எவ்வித வலியும் நோயும் இல்லாமல் அவரது உடல் குணமாகும் வரையும் இது தொடர்ந்து இருக்க வேண்டும்.

[88] இப்னு குதாமா, அல்முக்னி, 8/202.

# இஸ்லாத்தில் நீதி..
# முக்கியத்துவமும் யதார்த்த நிலையும்

## இஸ்லாத்தில் நீதியின் பெறுமானம்

இஸ்லாம் குறிப்பிட்டுள்ள நீதமானது அடிப்படையான மனித நெறிமுறைகளுள் ஒன்றாக நோக்கப்படுகிறது. தனி மனித, குடும்ப, சமூக, அரசியல் வாழ்வின் அடிப்படை அம்சங்களுள் ஒன்றாக அதனை இஸ்லாம் குறிப்பிடுகிறது. மக்களிடையே நீதத்தை நிலைநாட்டுவதே அனைத்து இறை தூதுக்களின் இலக்காகும் என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

“நிச்சயமாக நாம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம். அன்றியும், மனிதர்கள் நீதியுடன் நிலைப் பதற்காக, அவர்களுடன் வேதத்தையும் (நீதத்தின்) துலாக் கோலையும் இறக்கினோம்” (57:25).

அந்தவகையில் அல்லாஹ் தனது தூதர்களை அனுப்பியமை மற்றும் வேதங்களை அருளியமை போன்றவற்றுக்கான முதன்மை நோக்கமாக நீதம் இருக்கின்றமையானது அதன் பெறுமானத்தை மிகத் துல்லியமாக தெளிவுபடுத்துகிறது. அத்துடன் நீதத்தின் மூலமாகவே வேதங்களும் அருளப்பட்டன. அதனூடாகவே தூதுவர்களும் அனுப்பப்பட்டனர். அத்துடன் நீதத்தின் மூலமாகவே வானங்களும் பூமியும் அமைந்து உள்ளன[89].

நாங்கள் யார் விடயத்திலும் தீர்ப்பளிக்கும் போது நாம் பகைமை கொண்டவர்களாக அவர்கள் இருப்பினும் நீதத்தை உறுதிப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவதற்கான தெளி வான பிரகடனத்தைப் பின்வரும் அல்குர்ஆனிய வசனங்கள் முன்வைக்கின்றன:

“மு.்.மின்களே! நீங்கள் நீதியின் மீது நிலைத்திருப்பவர்களா கவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள்” (4:135).

---

[89] பார்க்க: யூஸுப் அல்கர்ளாவி, மலாமிஹுல் முஜ்தம.். அல்முஸ்லிம் அல்லதீ நன்ஷிதுஹு, 133.

“மு.ஃ.மின்களே! நியாயத்தை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே (தக்வாவுக்கு) பயபக்திக்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்” (5:8)

(இதன் விளக்கவுரையாக) இமாம் இப்னு கஸீர்[90] (ரஹ்) பின்வருமாறு குறிப்பிடுகிறார்[91]:

“ஒரு கூட்டத்தின் மேல் உங்களுக்கு உள்ள பகைமை அவர்களிடம் நீதம் செலுத்தாமலிருக்க உங்களைத் தூண்டி விட வேண்டாம். மாறாக நண்பன் அல்லது எதிரி என யாராக இருப்பினும் நீதத்தையே நீங்கள் உபயோகியுங்கள்”.

எனவே, இஸ்லாத்தில் நீதி அன்பின் ஊடாகவோ அல்லது பகைமையின் ஊடாகவோ எவ்வித தாக்கத்துக்கும் உட்படாத தாகும். அதேபோன்று பரம்பரை, வம்சாவளி, பதவி மற்றும் செல்வத்துக்கிடையே அது வேற்றுமை பார்க்காது. அதேபோன்று முஸ்லிம் முஸ்லிமல்லாதோரிடையேயும் அது பாகுபாடு காட்டாது. மாறாக எவ்வித அன்பு அல்லது பகைமை இருந்தாலும் ஒரு பிரதேசப் பரப்புக்குள் வாழும் முஸ்லிம் முஸ்லிமல்லாதோர் என அனைவரும் அதனை அனுபவிப்பர்.

---

[90]இப்னு கஸீர்: அபுல் பிதா இஸ்மாஈல் இப்னு கஸீர் அத்திமஷ்கி (ஹி. 701-774/ கி.பி. 1302-1373). இவர் மனன ஆற்றலுள்ள வரலாறு, பிக்ஹ் துறைகளில் தேர்ச்சி பெற்றவராவார். ஷாம் பிரதேசத்தில் பிறந்த இவர் டமஸ்கஸில் மரணித்தார். “அல்பிதாயா வந்நிஹாயா” இவரது நூல்களுள் ஒன்றாகும். பார்க்க: அல்ஹுஸைனி, தய்லு தத்கிரதில் ஹுப்பாழ், பக். 57-58.

[91] தப்ஸீரு இப்னி கஸீர், 3.ஃ.43.

## இஸ்லாத்தில் நீதம் செலுத்தப்பட்டமை தொடர்பான சில நடைமுறைச் சான்றுகள்

நீதியை நிலைநாட்டுவதற்கு ஆதாரமாக அமையும் ஒரு நிகழ்வாக உசாமா பின் ஸைத் (ரழி) என்பவர் தொடர்புபட்ட மக்ஸூம் கோத்திரத்தைச் சார்ந்த பெண் தொடர்பான நிகழ்வைக் குறிப்பிட முடியும். திருட்டுக் குற்றத்துக்காக நல்ல வம்சாவளிப் பின்னணியைக் கொண்ட மக்ஸூம் கோத்திரப் பெண்ணின் கை வெட்டப்பட்டு விடக் கூடாது என்பதற்காக இடைத்தரகராக அவர் செயற்பட முற்பட்டபோது நபி (ஸல்) மிகக் கடுமையாகக் கோபப்பட்டு மக்களிடையே உருக்கமான ஓர் உரையை ஆற்றினார்கள். அவ்வுரையில் இஸ்லாத்தின் இயல்பு மற்றும் அதன் நீதம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்கள். இந்த உரையில் தலைவர்களாக அல்லது ஆட்சிக்கு உட்பட்டோர் என யாராக இருப்பினும் ஒவ்வொரு தனிநபருக்கும் இடையே சமத்துவத்தை வலியுறுத்தினார்கள். இவ்வுரையில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

“உங்களுக்கு முன்னிருந்த மக்களை அழித்ததெல்லாம் அவர்கள், தம்மிடையேயுள்ள உயர்ந்த(குலத்த)வன் திருடி விடும்போது அவனை (தண்டிக்காமல்) விட்டுவந்ததும், பலவீன மான (பிரிவைச் சேர்ந்த)வன் திருடி விடும்போது அவனுக்கு தண்டனை கொடுத்து வந்ததும் தான். முஹம்மதின் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீதாணையாக! முஹம்மதின் மகள் ஃபாத்திமாவே திருடி விட்டிருந்தாலும் அவளுடைய கையையும் நான் வெட்டியிருப்பேன்” (புகாரி, 4304).

ஜாபிர் (ரழி) கூறுவதாக இமாம் அஹ்மத் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

“அல்லாஹ் கைபர் பிரதேசத்தை நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கினான். அங்கு மக்கள் எவ்வாறு இருந்தார்களோ அதனை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அத்துடன் அப்பூமியை தனக்கும் அங்கு (ஏற்கனவே) வசித்துவருவோருக்கும் இடையே பங்கிட்டுக் கொண்டார்கள்.

அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரழி) என்பவரை நபியவர்கள் அனுப்பி வைத்தார்கள். அப்போது அவர் அங்கிருந்த பேரீத்தம் பழங்களை (அளவை) தனது அனுபவத்தின் ஊடாக கணக்கிட்டார். பின்னர் அங்கிருந்தவர்களிடம் "யூதர்களே! நீங்களே படைப்பினங்களில் எனக்கு மிகவும் வெறுப்பான வர்கள். நீங்கள் அல்லாஹ்வின் நபிமார்களைக் கொன்று குவித்தீர்கள். அல்லாஹ்வின் மீது பொய் உரைத்தீர்கள். எனினும் உங்கள் மீது எனக்குள்ள கோபம் உங்களுக்கு அநியாயம் இழைக்க என்னைத் தூண்டவில்லை. நான் (இங்கு) 20 வஸக் (ஒரு வஸக் ஏறத்தாள 130 கிலோகிராம் நிறைக்கு நிகரானது) (பேரீத்தம்பழம்) இருப்பதாக எனது அனுபவத்தில் கணித்துள்ளேன். நீங்கள் விரும்பினால் அது உங்களுக்கு (அதாவது நாம் அதனை எடுத்து அதில் அரைவாசியை உங்களுக்குத் தருகிறோம்). நீங்கள் மறுத்தால் அது எனக்குச் சொந்தமானது (நீங்கள் அதனை எடுத்து அரைவாசியை எங்களுக்குத் தந்து விடுங்கள்)" என்றார். அப்போது அவர்கள் "(உமது தீர்ப்பு நீதமானது). இதனூடாகவே வானங்களும் பூமியும் அமைந்துள்ளன. (உமது தீர்ப்பை ஏற்று எமது பங்கை) நாம் எடுத்துக் கொள்கிறோம்" என்றார்கள்" (தாரகுத்னி, 2050)[92].

அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரழி) யூதர்களுடன் பகைமை உள்ளவராக இருப்பினும் அவர் அவர்களுக்கு அநியாயம் இழைக்கவில்லை. மாறாக அவர்களுக்கு அநியாயம் இழைக்க விரும்பவில்லை என மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். எனவே, அவர்கள் இரண்டாக பிரிக்கப்பட்டு இருந்த பேரீத்தம் பழப் பங்குகளில் எதை எடுக்க விரும்பினாலும் அதை எடுக்கட்டும் எனக் குறிப்பிட்டார்கள்.

---

[92]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல்அர்நாஊத் குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தக்ரீஜு ஸுனன் அத்தாரகுத்னி, 2050.

## இஸ்லாத்தில் நீதத்தின் உண்மை நிலை

நீதம் இவ்வுலகில் அல்லாஹ்வின் தராசு என்பதே இஸ்லாத்தில் நீதத்தின் உண்மை நிலையாகும்.

பலவீனப்பட்டவரின் உரிமை அதனூடாகவே பெற்றுக் கொடுக்கப்படுப்படுகிறது. அநியாயம் இழைத்தவரிடமிருந்து அநியாயமிழைக்கப்பட்டவருக்கு நீதி வழங்கப்படுகிறது. உரிமை பெறத் தகுதியான ஒருவர் தனது உரிமையைப் பெற மிக எளிய வழியை அது ஏற்படுத்திக் கொடுக்கிறது. அத்துடன் நீதம் என்பது இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாட்டிலிருந்து சமூகத்துக்குள் தோற்றம் பெறும் ஓர் உயரிய விழுமியமாகும். எனவே, முஸ்லிம் சமூகத்தில் இருக்கும் அனைவரும் நீதியைப் பெறும் உரிமையையும் நம்பிக்கையுடன் அதனைச் சார்ந்திருக்கும் உரிமையையும் பெற்றுள்ளனர்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட அல்குர்ஆனிய வசனங்களில் பார்த்ததைப் போல் இஸ்லாம் அனைத்து மக்களுடனும் நீதமாக நடந்து கொள்ளுமாறு ஏவுகிறது. இந்நீதம் எவ்வித பக்கச்சார்பையும் அறியாத தன்மை கொண்டதாகும். எனவே, அது அன்பின் ஊடாகவோ குரோதத்தின் ஊடாகவோ தாக்கத்துக்கு உட்படாது. தனக்கான உரிமை, இறைவனுக்கான உரிமை, பிறருக்கான உரிமைகள் போன்ற வற்றுக்கிடையே சமநிலை பேணப்பட வேண்டும் என ஒரு முஸ்லிமுக்கு இஸ்லாம் வலியுறுத்தியுள்ளமையின் மூலம் ஒரு மனிதர் தன்னிடமிருந்தே முதலில் நீதத்தை ஆரம்பிக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் வழிகாட்டலாகும் என்பது புலனாகிறது.

தனது மனைவியின் உரிமைகளைப் புறக்கணித்து தொடர்ந்து பகல் பொழுதில் நோன்பு நோற்று இரவுப் பொழுதில் நின்று வணங்கியமை தொடர்பில் நபித்தோழர் ஸல்மான் (ரழி) தனது தோழர் அபுத் தர்தா (ரழி) என்பவருக்கு “உங்களுடைய இறைவனுக்காகச் செய்ய வேண்டிய கடமைகள் உங்களுக்கு உள்ளன. மேலும், உங்கள் உடலுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உங்களுக்கு உள்ளன. உங்கள் குடும்பத்தாருக் குச் செய்ய வேண்டிய கடமைகளும் உங்களுக்கு உள்ளன.

எனவே, ஒவ்வொருவருக்கும் அவரவருக்குச் சேர வேண்டிய உரிமைகளை வழங்குங்கள்" (புகாரி, 6139) எனக் கூறிய அறிவுரையை நபி (ஸல்) அவர்கள் உண்மைப் படுத்தியமையினூடாக இது தெளிவாகிறது.

அவ்வாறே வார்த்தைகளிலும் நீதம் இருக்க வேண்டும் என இஸ்லாம் பணிக்கிறது. "நீங்கள் பேசும்பொழுது (அதனால் பாதிக்கப்படுபவர்) நெருங்கிய உறவினராக இருந்த போதிலும் நியாயமே பேசுங்கள்" (6:152).

அத்துடன் தீர்ப்பளிக்கும் போதும் நீதத்தைக் கடைபிடிக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. "நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரரர் களிடம் நீங்கள் ஒப்புவித்து விடவேண்டுமென்றும், மனிதர்களிடையே தீர்ப்புக் கூறினால் நியாயமாகவே தீர்ப்புக் கூறுதல் வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான்" (4:58).

அதேபோல் (இருவரிடையே) இணக்கப்பாட்டை ஏற்படுத்து வதிலும் நீதமாக நடந்து கொள்ளும்படி இஸ்லாம் வலியுறுத்துகிறது.

"மு.ஃ.மின்களில் இரு சாரார் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால், அவ்விருசாராருக்கிடையில் சமாதானம் உண்டா க்குங்கள். பின்னர் அவர்களில் ஒரு சாரார் மற்றவர் மீது அக்கிரமம் செய்தால், அக்கிரமம் செய்வோர் அல்லாஹ்வுடைய கட்டளையின் பால் திரும்பும் வரையில், (அவர்களுடன்) போர் செய்யுங்கள். அவ்வாறு, அவர்கள் (அல்லாஹ்வின் பால்) திரும்பி விட்டால் நியாயமாக அவ்விரு சாராரிடையே சமாதானம் உண்டாக்குங்கள். (இதில்) நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான்" (49:9).

## இஸ்லாத்தில் அநியாயம் தடுக்கப்பட்டுள்ளமை

இஸ்லாம் நீதத்தை வலியுறுத்தி அதனைத் தூண்டுகின்ற அதே அளவு மிகக் கடுமையாக அநியாயமிழைப்பதையும் தடுத்துள்ளது. அத்துடன் ஒருவர் தனக்கு இழைக்கும் அல்லது பிறருக்கு இழைக்கும் என எவ்வகையான அநியாயமாக இருப்பினும் இஸ்லாம் அதனை முற்றாக எதிர்க்கிறது. குறிப்பாக வலிமையுள்ளவர்கள் நலிவுற்றோருக்கும், வசதி உள்ளவர்கள் ஏழைகளுக்கும், ஆட்சியாளர்கள் குடிமக்களுக்கும் இழைக்கும் அநீதி போன்றவற்றை இஸ்லாம் முழுமையாகவே எதிர்க்கிறது. அந்தவகையில் மனிதனின் பலவீன நிலை அதிகரிக்க அதிகரிக்க அவர்களுக்கு அநீதமிழைப்பதன் தீங்கும் (பாவமும்) கடுமையாகிறது.[93] ஒரு ஹதீஸ் குத்ஸி பின்வருமாறு குறிப்பிடுகிறது:

“என் அடியார்களே! எனக்கு நான் அநியாயமிழைப்பதை ஹராமாக்கி உள்ளேன். எனவே, உங்களுக்கு மத்தியிலும் அதை நான் ஹராமாக்கி விட்டேன். எனவே, நீங்கள் உங்களிடையே அநியாயமிழைத்துக் கொள்ள வேண்டாம்” (முஸ்லிம், 2577).

அத்துடன் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“அநியாயம் இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனையை பயந்து கொள். ஏனெனில் அதற்கும் அல்லாஹ்வுக்கும் இடையே எந்தத் திரையும் இல்லை” (புகாரி, 1496).

அதேபோன்று நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறும் கூறினார்கள்.

“மூன்று பேரின் பிரார்த்தனை (இறைவனால்) மறுக்கப்படமாட்டாது. (ஒருவர்) நோன்பாளி நோன்பு திறக்கும் வரை, நீதமான அரசன் (மற்றும்) அநியாயம் இழைக்கப் பட்டவன் (ஆகியோரே அவர்களாவர்). மேகங்களுக்கு மேல்

---

[93]பார்க்க: யூஸுப் அல்கர்ழாவி, மலாமிஹுல் முஜ்தம.். அல்முஸ்லிம் அல்லதீ நன்ஷுதுஹு, பக். 135.

அவற்றை அல்லாஹ் உயர்த்துவான். வானத்தின் கதவுகளை அவற்றுக்காக அவன் திறப்பான். “என் கண்ணியம் மீது சத்தியமாக! சற்று தாமதித்தாலும் உனக்கு நிச்சயம் நான் உதவுவேன்” என அல்லாஹ் கூறுவான்” (இப்னு குஸைமா, 1901). இதுவே நீதமாகும். இதுவே இஸ்லாமிய சமூகத்தில் உள்ள வானத்திலிருந்து வந்துள்ள தராசு ஆகும்.

# இஸ்லாத்தில் அன்பு.. முக்கியத்துவமும் சில முன்மாதிரிகளும்

## இஸ்லாமிய சட்டவாக்கத்தில் அன்பின் முக்கியத்துவம்

முஸ்லிம்களின் சட்ட யாப்பும் இஸ்லாமிய சட்டவாக்கத்தின் மிக முக்கிய மூலாதாரமுமான அல்லாஹ்வின் வேதத்தில் உள்ள சூரா தவ்பா தவிர்ந்த ஏனைய அனைத்து சுறாக்களும் *பிஸ்மில்லாஹ்* என்றே ஆரம்பமாகின்றன. இதனுடன் *அர்ரஹ்மான்*, *அர்ரஹீம்* என்ற இரு பண்புகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுராவின் ஆரம்பமும் இவ்விரு பண்புகள் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமையானது இஸ்லாமிய சட்டவாக்கத்தில் அன்பின் முக்கியத்துவத்தை மிகத் தெளிவாக உணர்த்துகிறது என்பது எவ்வித சந்தேகமும் அற்ற விடயமாகும். அத்துடன் அர்ரஹ்மான், அர்ரஹீம் ஆகியவற்றுக்கிடையே கருத்தில் மிக நெருக்கம் உள்ளன. எனினும் இவ்விரு பதங்களையும் வேறுபடுத்தும் வகையில் பல்வேறு கருத்துக்களையும் விளக்கங்களையும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்[94].

*அர்ரஹ்மா* (இரக்கம்) என்ற பண்புடன் வேறு ஏதேனும் ஓர் (அழகிய) பண்பை அல்லாஹ் இணைத்துக் கூறியிருக்க முடியும். உதாரணமாக: *அல்அளீம்* (மகத்துவம் மிக்கவன்), *அல்ஹகீம்* (ஞானம் மிக்கவன்), *அஸ்ஸமீ'*, (யாவற்றையும் கேட்பவன்), *அல்பஸீர்* (யாவற்றையும் பார்ப்பவன்) போன்றவற்றைக் குறிப்பிட முடியும். அல்லது அல்குர்ஆனை ஓதுபவர் *அர்ரஹ்மா* (இரக்கம்) என்ற பண்பில் எல்லை மீறி விடாது அவரிடத்தில் சமநிலையை உறுதிப்படுத்தும் வண்ணம் வேறொரு (எதிர்க்) கருத்தைக் கொண்ட ஒரு பண்பை *அர்ரஹ்மா* என்ற பண்புடன் இணைத்துக் கூறியிருக்க முடியும். *அல்ஜப்பார்* (முழு அதிகாரமுள்ளவன்), *அல்முன்தகிம்* (பழி வாங்குபவன்), *அல்கஹ்ஹார்* (அடக்கி ஆள்பவன்) போன்றவை இதற்கான சில உதாரணங்களாகும். எனினும் கருத்தில் ஒன்றையொன்று ஒத்துள்ள இவ்விரு பண்புகளையும் அல்குர்ஆனின் ஒவ்வொரு சூராவின் ஆரம்பத்திலும் ஒன்றாகக்

---

[94] இப்னு ஹஜர், பத்ஹுல் பாரி, 31/358-359.

குறிப்பிட்டமையானது மிகத் தெளிவான ஒரு பதிவை வழங்கு கிறது. அதாவது எவ்வித மாற்றுக் கருத்தும் இன்றி ஏனைய அனைத்துப் பண்புகளையும் விட *அர்ரஹ்மா* என்ற பதம் முன்னுரிமை பெற்றதாகும். அத்துடன் அன்பினூடாக தொடர்பு களை அமைத்துக் கொள்வதே எந்நிலையிலும் சிதைந்து போகாத, வேறொன்றுக்கும் ஈடாகாத அடிப்படையாகும்.

*அல்பாத்திஹா* எனும் அல்குர்ஆனின் முதலாவது அத்தியாயம்[95] ஏனைய சூராக்களைப் போன்று அர்ரஹ்மான் *அர்ரஹீம்* ஆகிய இரு பண்புகள் உள்ள *பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்* என்பதைக் கொண்டே ஆரம்பிக்கிறது. பின்னர் அந்த (*அர்ரஹ்மான், அர்ரஹீம்* ஆகிய) இரு பண்புகள் அதே சூராவில் மீண்டும் இடம்பெறுகின்றன. எனவே, இந்த சூராவின் மூலம் அல்குர்ஆன் ஆரம்பமாகின்றமை மிகத் தெளிவான ஒரு கருத்தை உணர்த்துவதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் நாம் அறிந்துவைத்திருப்பதைப் போல் ஒவ்வொரு நாள் தொழுகையிலும் ஒவ்வொரு ரக்அத்திலும் ஒரு முஸ்லிம் சூரா பாத்திஹாவை ஓதுவது கட்டாயமானதாகும். (ஒரு ரக்அத்தில்) ஒரு முஸ்லிம் குறைந்தது இரண்டு தடவை *அர்ரஹ்மான்* எனும் சொல்லை மீட்டிச் சொல்ல வேண்டும். அதேபோன்று *அர்ரஹீம்* எனும் சொல்லை குறைந்தது இரண்டு தடவை மீட்டிச் சொல்ல வேண்டும் என்பதே இதன் பொருளாகும். எனவே, தொழுகையின் ஒவ்வொரு ரக் அத்திலும் ஓர் அடியான் குறைந்தது அல்லாஹ்வின் அன்பை நான்கு தடவையேனும் நினைவு கூறுகிறான். அந்தவகையில் ஒரு முஸ்லிமின் மீது கடமையான தொழுகைகளான ஐவேளைத் தொழுகையில் உள்ள மொத்தமான 17 ரக்அத்துகளிலும் குறைந்தது அறுபத்தி எட்டு தடவையேனும்

---

[95] அல்குர்ஆனின் அத்தியாயங்களும் வசனங்களும் அருளப்பட்ட ஒழுங்கும் தற்போது அவை அல்குரஆனில் அமைந்துள்ள ஒழுங்கும் வித்தியாசமானவையாகும். எனினும் தற்போதுள்ள அதன் அத்தியாய ஒழுங்கமைப்பு தவ்கீபி (இறைவனால் நிர்ணயிக்கப்பட்டது) ஆகும். அதாவது இன்று எம்மிடமுள்ள அல்குர்ஆனின் அத்தியாய மற்றும் வசன ஒழுங்கமைப்பு இறைவனால் நபி (ஸல்) அவர்களுக்கு வஹீ மூலமாக அருளப்பட்டதாகும். பார்க்க: அஸ்ஸர்கஷி, அல்புர்ஹான் பீ உலூமில் குர்ஆன். 1/26.

அன்பு எனும் சொல் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. எனவே, *அர்ரஹ்மா* எனும் உயர்ந்த பண்பு எவ்வளவு தூரம் கவனத்தைப் பெற்றுள்ளது என்பது இதனூடாக நன்கு தெளிவாகிறது.

அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வின் இரக்கத்தை விபரிக்கும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட பல்வேறு ஹதீஸ் கள் இதனை நன்கு தெளிவுபடுத்துகின்றன. எடுத்துகாட்டாக அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கும் பின்வரும் ஹதீஸைக் குறிப்பிடலாம்:

"அல்லாஹ் படைப்புகளைப் படைப்பதற்கு முன்பாக தனக்குத் தானே விதியொன்றை எழுதிக்கொண்டான். "என் கருணை என் கோபத்தை முந்திவிட்டது" என்பது தான் அந்த விதி. அது அவனிடமுள்ள அரியாசனத்திற்கு மேலேயே எழுதப்பட்டுள்ளது" (புகாரி, 7554).

இது கோபத்தை விட அன்புக்கும் கடும்போக்கை விட நளினப் போக்குக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற் கான பகிரங்கப் பிரகடனமாகும்.

## நபி (ஸல்) அவர்கள் தூதராக அனுப்பப்பட்டமை அகிலத்துக்கு ஓர் அருளாகும்

மேற்கூறப்பட்டவற்றுக்கு மேலதிகமாக அல்லாஹ் இஸ்லாத்தின் தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களை மனித சமூகத்துக்கும் அகிலத்துக்கும் அருளாக அனுப்பிவைத்தான். இதனை அல்லாஹ் "(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு ரஹ்மத்தாக (ஓர் அருட்கொடையாக)வேயன்றி (தூதராக) அனுப்பவில்லை" (21:107). நபி (ஸல்) அவர்களின் ஆளுமையிலும் தனது தோழர்கள் எதிரிகள் என வேறுபாடின்றி அனைவருடனான உறவாடலலிலும் இது தெளிவாகிறது.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் அன்பு எனும் இவ்வுயர்ந்த ஒழுக்கப் பண்பைக் கடைபிடித்துக் கொள்ளும்படி ஆர்வமூட்டி "மக்களுக்கு அன்பு காட்டாதவருக்கு அல்லாஹ்வும் அன்புகாட்ட மாட்டான்" (புகாரி, 7376) எனக் கூறினார்கள். இந்நபிமொழியில் இடம்பெற்றுள்ள "*அந்நாஸ்*" எனும் பதம்

இனம், மதம் என எவ்வித வேறுபாடுகளும் இன்றி அனைத்து மனிதர்களையும் உள்ளடக்கும் பொதுச் சொல்லாகும். இதனால்தான் அறிஞர்கள் இது சிறுவர்கள் மற்றும் ஏனையோருக்கு அன்புகாட்டல் என அனைத்தையும் குறிக்கும் பொதுவான ஒன்று எனக் குறிப்பிடுகின்றனர்[96].

அத்துடன் (புகாரி கிரந்தத்தின் விரிவுரையாளர்களுள் ஒருவரான) இப்னு பத்தால்[97] (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார்:

“மேற்கூறப்பட்ட நபி மொழியில் இரக்கம் எனும் பண்பை அனைத்துப் படைப்பினங்களுக்கும் பயன்படுத்துமாறு ஆர்வம் ஊட்டப்பட்டுள்ளது. எனவே, மு.ஃமின்கள், முஸ்லிம் அல்லாதோர், யாருக்கேனும் உரித்தான அல்லது உரித்து இல்லாத கால்நடைகள் போன்ற அனைத்தும் இதனுள் அடங்கும். அத்துடன் உணவளித்தல், நீர் கொடுத்தல், அதிக சுமை சுமத்தாமலிருத்தல், எல்லைமீறி அடிப்பதை விட்டுவிடுதல் போன்ற அனைத்து விடயங்களும் இரக்கம் காட்டுதல் என்பதற்குள் அடங்கும்”[98].

அதேபோன்று நபி (ஸல்) அவர்கள் வேறொரு ஹதீஸில் பின்வருமாறு சத்தியம் செய்தார்கள்:

“என் ஆன்மா எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, இரக்கம் காட்டுபவர் மீது மாத்திரமே அல்லாஹ் தனது இரக்கத்தை அருளுகிறான். அப்போது தோழர்கள், “அல்லாஹ்வின் தூதரே! எங்களில் அனைவரும் இரக்கம்

---

[96]அந்நவவி, அல்மின்ஹாஜ் பீ ஷர்ஹி ஸஹீஹி முஸ்லிமிப்னில் ஹஜ்ஜாஜ், 15/77.

[97]இப்னு பத்தால்: அலி பின் கலப் பின் அப்துல் மலிக் பின் பத்தால். இப்னுல் லிஜாம் எனவும் அறியப்படுகிறார். மிக முக்கிய இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவர். அழகிய முறையில் எழுதுபராகவும் ஞாபக ஆற்றல் உள்ளவராகவும் காணப்பட்டார். ஸஹீஹுல் புஹாரிக்கான இவரது விரிவுரை பல பாகங்களில் அமைந்தது. ஹி. 449 இல் இவர் மரணித்தார். பார்க்க: அஸ்ஸர்கலி, அல்அ.ஃலாம், 4/85 மற்றும் அத்தஹபி, ஸியரு அ.ஃலாமிந் நுபலா, 18/47.

[98]அல்முபாரக்பூரி, துஹ்பதுல் அஹ்வதி, பிஷர்ஹி ஜாமி.ஃ. அத்திர்மிதி, 6/42.

காட்டுகிறோம் (அல்லவா?)” என்றனர். அப்போது நபி (ஸல்) அவர்கள் “அது உங்களில் ஒருவர் தனது தோழர் மீது அன்பு வைப்பதல்ல. மாறாக மக்கள் அனைவருடன் அன்பாக இருப்பதாகும்” என்றார்கள்” (முஸ்னத் அபீ ய.்.லா, 5258).

எனவே, ஒரு முஸ்லிம், முஸ்லிம்கள், முஸ்லிமல்லாத (என்ற வேறுபாடின்றி) சிறுவர்கள், பெண்கள், முதியோர் என அனைவருக்கும் இரக்கம் காட்ட வேண்டும்.

அதேபோன்று நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் “இவ்வுலகில் இருப்போருக்கு நீங்கள் இரக்கம் காட்டுங்கள். (அவ்வாறு இரக்கம் காட்டினால்) வானத்தில் உள்ளவன் உங்களுக்கு இரக்கம் காட்டுவான்” (அபூ தாவூத், 4941). இந்த ஹதீஸில் பயன்படுத்தப்பட்டுள்ள “*மன்*” எனும் (அரபிப்) பதம் பூமியில் உள்ள அனைவரையும் உள்ளடக்குகிறது.

முஸ்லிம் சமூகத்தில் அன்பின் பெறுமானம் இதுவாகும். ஒரு மனிதன் தனது சகோதரன் மீதுள்ள பாசத்தைக் குறிப்பிடும் நடைமுறை ரீதியான பண்பாட்டு நெறிமுறையாகவே இது உள்ளது. அதைவிட மேலதிகமாக எந்த இனத்தை, மதத்தைச் சார்ந்திருப்பினும் மனித இனத்தைத் கடந்து வாய் பேச முடியாத மிருகம், ஊர்ந்து செல்பவை, பறவைகள், பூச்சி வகைகள் என அனைத்தையும் உள்ளடக்கிய விரிவான பரப்பைக் கொண்டதாகும்.

ஒரு பூனையுடன் எவ்வித இரக்கமும் இன்றி கடினமாக நடந்து கொண்டமையினால் ஒரு பெண் நரகில் நுழைந்ததாக நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

“ஒரு பெண் பூனையொன்றைக் கட்டி வைத்தாள். அதற்கு அவள் தீனி போடவுமில்லை. பூமியிலுள்ள புழு பூச்சிகளைத் தின்று (பிழைத்துக் கொள்ளட்டும் என்று அதை அவிழ்த்து) விடவுமில்லை. அதன் காரணத்தால் அவள் நரகம் புகுந்தாள்” (புகாரி, 3318).

அத்துடன் தாகித்திருந்த ஒரு நாய்க்கு நீர் புகட்டி இரக்கம் காட்டிய ஒரு மனிதனை அல்லாஹ் மன்னித்து விட்டதாக நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

"ஒருவர் ஒரு பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவருக்குக் கடுமையான தாகம் ஏற்பட்டது. அவர் (வழியில்) ஒரு கிணற்றைக் கண்டார். உடனே அதில் இறங்கித் தணணீர் குடித்தார். பிறகு (கிணற்றை விட்டு) அவர் வெளியே வந்தார். அப்போது நாய் ஒன்று தாகத்தால் (தவித்து) நாக்கைத் தொங்கவிட்டபடி ஈரமண்ணை நக்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்த மனிதர் (தம் மனதிற்குள்) எனக்கு ஏற்பட்டதைப் போன்ற (அதே) கடுமையான தாகம் இந்த நாய்க்கும் ஏற்பட்டிருக்கிறது போலும் என்று சொல்லிக் கொண்டார். உடனே (மீண்டும்) அக்கிணற்றில் இறங்கி (தண்ணீரை தோலால் ஆன) தன்னுடைய கால் உறையில் நிரப்பி கொண்டு அதை தன் வாயால் கவ்வியபடி (மேலேறி வந்து) அந்த நாய்க்குப் புகட்டினார். அல்லாஹ் இதற்கு நன்றியாக அவரை (அவரின் பாவங்களை) மன்னித்தான் என்று இறைத்தூதர் அவர்கள் கூறினார்கள். (இதைச் செவியுற்ற) மக்கள், இறைத்தூதர் அவர்களே! மிருகங்களுக்கு உதவும் விஷயத்திலும் எங்களுக்கு மறுமையில் நற்பலன் கிடைக்குமா? என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "ஆம்", உயிருள்ள பிராணி ஒவ்வொன்றின் விஷயத்திலும் அதற்கு உதவும் பட்சத்தில் மறுமையில் அதற்கான நற்பலன் கிடைக்கும் என்று கூறினார்கள்" (புகாரி, 6009).

அதேபோல் ஒரு விபசாரப் பெண்மணியின் உள்ளத்தில் ஒரு நாய் மீது ஏற்பட்ட அன்பினால் சுவனம் அவளுக்காக தனது வாயில்களை திறந்து கொடுத்தமையை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

"(முன்னொரு காலத்தில்) நாய் ஒன்று ஒரு கிணற்றைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. அது தாகத்தால் செத்து விடும் நிலையில் இருந்தது. அப்போது, பனூ இஸ்ராயீல் சமுதாயத்தின் விபசாரிகளில் ஒருத்தி அதைப் பார்த்தாள். உடனே, அவள் தன் காலுறையைக் கழற்றி (அதில் நீரை எடுத்து) அந்த நாய்க்குப் புகட்டினாள். அதன் காரணமாக அவளுக்குப் பாவமன்னிப்பு வழங்கப்பட்டது" (புகாரி, 3467).

விபசாரம் எனும் பாரிய குற்றத்துக்கு ஒரு நாய் ஈடாகுமா?! என ஒரு மனிதன் ஆச்சரிய மேலீட்டால் திகைக்கக்கூடும். எனினும் அவளது செயலின் பின்னணியில் அதன் யதார்த்தம் மறைந்துள்ளது. அதுவே ஒரு மனிதனின் உள்ளத்தில் உள்ள அன்பாகும். அதனை அடிப்படையாகக் கொண்டும் பொதுவாக மனித சமூகத்தில் அதன் பெறுமானம் மற்றும் தாக்கத்தின் அளவுக்கு ஏற்பவுமே ஒருவரது செயல்களும் செயற் பாடுகளும் இடம்பெறுகின்றன.

## வாய் பேச முடியாத மிருகத்துக்கும் சிறிய பறவைகளுக்கும் இரக்கம் காட்டல்

மிருகத்தை பட்டினியில் போடாமல் இருத்தல் அல்லது அதன் இயலுமையை விட அதிகமான சுமையை சுமத்தாமல் இருத்தல் போன்றவற்றினூடாக அதற்கு அன்பு காட்டுவதும் இஸ்லாம் குறிப்பிடும் அன்பு தொடர்பான வழிகாட்டலில் உள்ளதாகும்.

மெலிந்துள்ள ஒரு ஒட்டகத்தைக் கடந்து ஒருமுறை நபியவர்கள் சென்றபோது மிகப் பரிதாபப்பட்டு அன்புடன் அவர்கள் குறிப்பிட்ட பின்வரும் விடயம் இங்கு கவனிக்கத்தக்கது:

“வாய் பேச முடியாத இந்த கால்நடைகள் விடயத்தில் அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள்.. அவை (நோயின்றி) ஆரோக்கியமாக இருக்கும் போது அவற்றில் ஏறிப் பிரயாணம் செய்யுங்கள். அவை ஆரோக்கியமாக இருக்கும்போது அவற்றை (அறுத்து) உண்ணுங்கள்” (அபூ தாவூத், 2548).

அதேபோல் ஒருமுறை ஒரு மனிதர் “அல்லாஹ்வின் தூதரே! நான் ஆட்டை அறுக்கும் போது அதன் மீது இரக்கம் காட்டுகிறேன்” எனக் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “ஆட்டுக்கு நீ இரக்கம் காட்டினால் அல்லாஹ் உனக்கும் இரக்கம் காட்டுவானாக” என்று பிரார்த்தித்தார்கள்” (அல்அதபுல் முப்ரத், 287).

கால்நடைகள் மீதான அன்பைக் கடந்து, கால்நடைகள் மனிதனுக்கு பயனளிப்பதைப் போல் பயனளிக்காத சிறிய பறவைகளுடனும் இறக்கம் காட்டுவதன் பால் இஸ்லாத்தின் அன்பு தொடர்பான வழிகாட்டல் நீள்கிறது. ஒரு சிட்டுக்குருவி விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

“யாரேனும் ஒருவர் விளையாட்டுத்தனமாக ஒரு சிட்டுக் குருவியை கொன்றுவிடுவாராயின் மறுமையில் அது அல்லாஹ்விடத்தில் நீதம் கேட்டுப்போகும். அப்போது அது அல்லாஹ்விடம் “என்னுடைய இறைவா! இந்த மனிதன் என்னை விளையாட்டாகக் கொன்று விட்டான். அவன் ஏதேனும் ஓர் பயனுக்காக என்னை கொல்லவில்லை” என முறையிடும்” (இப்னு ஹிப்பான், 5894).

அத்துடன் அம்ர் பின் ஆஸ் (ரழி) எகிப்தை வெற்றி கொண்ட போது இடம்பெற்ற நிகழ்வை வரலாற்றாசிரியர்கள் பின்வருமாறு பதிவு செய்கின்றனர்:

“அவர் தங்கியிருந்த கூடாரத்தில் ஒரு புறா இறங்கி அதன் மேற்பகுதியில் ஒரு கூட்டைக் கட்டியது. அவர்கள் அவ் விடத்திலிருந்து பிரயாணிக்க முற்பட்ட போது அதனை அவதானித்தார். எனவே, அதனை அகற்றி அக்கூட்டை சிதைக்க அவர் விரும்பவில்லை. எனவே, அவர் அதனை அவ்வாறு விட்டுவிட்டார். பின்னர் அதனைச் சூழ பல்வேறு கட்டிடங்களும் வரலாயின. பின்னர் அது புஸ்தாத் (கூடார) நகரம் என (பெயர்) ஆகிப்போனது”.

அதேபோன்று இப்னு அப்தில் ஹகம்[99] (ரஹ்), உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) என்பவரின் வரலாறு தொடர்பில் பின்வருமாறு பதிவு செய்கிறார்:

“அவர் ஏதேனும் ஓர் தேவை தவிர்த்து குதிரைக்கு (வீணாக) (காலால்) உதைப்பதை தடை செய்தார்கள். அத்துடன் சிகக்

---

[99]இப்னு அப்தில் ஹகம் (ஹி. 187-257): அபுல் காஸிம் முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் அப்துல் ஹகம். இவர் வரலாற்றாசிரியரும் மாலிக் மத்ஹப் சார்ந்த சட்டவியல் அறிஞருமாவார். இவரது பிறப்பும் இறப்பும் எகிப்திலாகும். பார்க்க: அஸ்ஸர்கலி, அல்அ∴லாம், 3/282.

என்ற பிரதேசத்தில் இருந்த தனது கவர்னருக்கு எந்த ஒருவரையும் பாரமான கடிவாளத்தை இட வேண்டாம் எனவும் அடிப்பகுதியில் இரும்பு உள்ள சுத்தியலால் அடிக்க வேண்டாம் எனவும் எழுதியனுப்பினார்கள். அத்துடன் எகிப்தில் இருந்த தனது கவர்னருக்கு, "எகிப்தில் பொதிகளைச் சுமக்கும் ஒட்டகங்கள் இருப்பதாகவும் அவற்றில் ஒரு ஒட்டகத்தின் மீது ஆயிரம் இராத்தல் (ஒரே நேரத்தில்) சுமத்தப்படுவதாகவும் எனக்கு அறியக் கிடைத்தது. எனது இக்கடிதம் உனக்கு கிடைக்குமாயின் அதன் பின்னர் ஒரு ஒட்டகத்தின் மீது அறுநூறு இராத்தல்களை விட அதிகமாக சுமத்தப்படுகிறது என்பதை நான் அறிந்துவிடவே கூடாது" எனக் கடிதம் எழுதி அனுப்பினார்கள்[100].

இதுவே இஸ்லாமிய சமூகத்தில் உள்ள இரக்கம் ஆகும்.. இது அச்சமூகத்திலுள்ள தனிநபர்கள் மற்றும் குழந்தைகளின் உள்ளத்தில் வேரூன்றியுள்ளது. இதனாலே பலவீனமானவர்க ளுடன் அவர்கள் மென்மையாக நடந்து கொள்கிறார்கள். கவலையில் வாடுவோருக்காக வருந்துகிறார்கள். நோயாளிகளுக்கு இரக்கம் காட்டுகிறார்கள். வாய் பேச முடியாத மிருகமாக இருப்பினும் கூட தேவையுள்ளவர்களு க்காக (கவலையில்) முணுமுணுக்கிறார்கள்..

இவ்வாறான உயிரோட்டமான அன்பான உள்ளங்களின் ஊடாக சமூகம் களங்கமற்றதாக மாறுகிறது. குற்றங்களில் இருந்து விலகி விடுகிறது. அத்துடன் தன்னைச் சூழ இருக்கின்ற பகுதிகள் மற்றும் மனிதர்களுக்கான நலவு, நன்மை, அமைதிக்கான பிறப்பிடமாகவும் அது மாற்றமடைந்து விடுகிறது.

---

[100]பார்க்க: முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் அப்துல் ஹகம், ஸீரது உமர் பின் அப்தில் அஸீஸ், 1/141.

# முஸ்லிம்கள் - முஸ்லிமல்லாதோர் இடையிலான தொடர்பு

## அறிமுகம்

இஸ்லாமிய நாகரிகத்தில் உள்ள சட்ட ஒழுங்குகள் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் வாழும் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதோரின் விவகாரங்களை கையாள்வதுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. அதனுடன் முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாத ஏனைய மக்கள் மற்றும் நாட்டை சார்ந் தோருடன் உள்ள தொடர்பை ஒழுங்கமைப்பது தொடர்பிலும் கவனம் அது செலுத்துகிறது. அந்தவகையில் யுத்தம் அல்லாத சுமூக நிலை, யுத்தம் என அனைத்து நிலைகளிலும் அந்தத் தொடர்புகள் அமையப்பெற அவசியமான பல்வேறு அடிப்படை களும் அத்திவாரங்களும் அவ்வொழுங்குகளில் உள்ளன. இவ்வாறான சூழ்நிலைகளில் இஸ்லாமிய நாகரிகத்தின் மகத்துவம் மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. அத்துடன் இதனூடாக அதன் மனித நேயமும் பிரம்மிக்கத்தக்க வகையில் உயர்வடைகிறது.

## இஸ்லாம் சமாதானத்தின் மார்க்கமாகும்

உண்மையில் சமாதானமே இஸ்லாத்தின் அடிப்படை ஆகும். தன்னை விசுவாசித்து தனது தூதரை உண்மைப்படுத்தும் அடியார்களுக்கு அல்லாஹ் பின்வருமாறு ஏவுகிறான்:

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்துவிடுங்கள். தவிர ஷைத்தானுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் ஆவான்" (2: 208).

இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள *"ஸில்ம்"* எனும் அரபுப் பதம் இஸ்லாத்தையே குறிக்கிறது[101]. ஏனெனில் மனிதனுக்கும் அவனது ஆன்மாவுக்கும், வீட்டுக்கும், சமூகத்துக்கும், அவனைச் சூழவுள்ளவர்களுக்கும் சாந்தமாக உள்ளமையால்

---

[101]பார்க்க: தப்ஸீரு இப்னி கஸீர், 1/565.

இஸ்லாத்தைக் குறிக்க (சாந்தம் எனும் பொருளைக் குறிக்கும்) *ஸில்ம்* எனும் பிரயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இது சாந்தமான மார்க்கமாகும்.

இஸ்லாம் எனும் பதம் (அமைதி/சமாதானம் எனும் பொருள் கொண்ட) *சில்ம்* எனும் மூலச் சொல்லிலிருந்து பிறந்தது என்பதிலும் பொதுவாக சமாதானம் இஸ்லாத்தின் தனி அடிப்படை என்பதாக இல்லாவிடினும் அதன் முக்கிய அடிப்படைகளுள் ஒன்று என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை. அத்துடன் மொழி ரீதியாக (சமாாதனம் எனும் பொருளைக் குறிக்கும்) *ஸலாம்* எனும் பதத்தின் மூலச் சொல்லைக் நோக்கும் போது இஸ்லாம் எனும் சொல்லுக்கு ஒத்த கருத்துடைய சொல்லாக அப்பதமும் பயன்படுத்த முடியும் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது[102].

எனவே, பொது மக்களிடையே ஒத்தாசை, புரிந்துணர்வு, நல்ல விடயங்களைப் பரிமாறுதல் போன்ற அம்சங்களை ஏற்படுத்த முடியுமான யுத்தமற்ற சுமூகமான நிலையே இஸ்லாத்தில் அடிப்படையாகும். முஸ்லிமல்லாதோர் (எவ்வித பிரச்சினைக ளுமின்றி) கட்டுக்கோப்புடன் நடந்து கொள்வார்களாயின் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் மனிதர்கள் என்ற வகையில் அவர்களும் முஸ்லிம்களும் சகோதரர்களேயாவர்[103]. எனவே, (இவ்வாறான சூழ்நிலையில்) முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்குமிடையே அச்சமற்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. இதற்காக எவ்வித செலவினங்களையோ உடன்படிக்கையையோ மேற்கொள்ள வேண்டியதில்லை. (முஸ்லிம் - முஸ்லிமல்லாதோர் உறவாடலில்) அடிப்படை சமாதானம் ஆகும் என்ற வகையில் இது செல்லுபடியாகும். முஸ்லிம்களுக்கு எதிராக ஏதேனும் ஓர் பகைமை இவ்வடிப்படையைப் பாதிக்காதவரை (இஸ்லாத்தில்) சமாதானமே அடிப்படையாகும் என்ற வகையிலேயே இந்நிலை தோன்றிவிடுகிறது[104].

---

[102]பார்க்க: முஹம்மத் ஸாதிக் அபீபி, அல்இஸ்லாமு வல்அலாகாத் அத்தவ்லிய்யா, பக். 106.

[103]மஹ்மூத் ஷல்தூத், அல்இஷ்லாமு அகீததுன் வஷரீஆ, பக். 453.

[104] பார்க்க: ஸுப்ஹி அஸ்ஸாலிஹ், அந்நுளும் அல்இஸ்லாமிய்யா நஷ்அதுஹா வததவ்வுருஹா, பக். 520.

## முஸ்லிமல்லாத சமூகத்தவருடனான முஸ்லிம்களின் தொடர்பு

முஸ்லிம் அல்லாத ஏனைய மதத்தவருடனும் ஏனைய சமூகங்களுடனும் அன்பு, பாசம் கலந்த தொடர்பாடல்களை நிலைநாட்டுவது முஸ்லிம்களின் மீது கடமையாகும். இது மானிட சகோதரத்துவம் என்பதை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாகும். அத்துடன் "மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கி னோம்" (49: 13) எனும் வசனமும் இதனைத் தெளிவு படுத்துகிறது. எனவே, இவ்வாறான மனித பன்மைத்துவம் காணப்படுவது முரண்பட்டு அழிந்து போவதற்காக அல்ல. மாறாக, இது பரஸ்பர அறிமுகம், பரஸ்பர அன்பு மற்றும் பாசத்தை பரிமாறுதல் போன்றவற்றுக்கான தூண்டு கோலாகும்[105].

முஸ்லிம் அல்லாதோர் சமாதானம், இணக்கப்பாடு போன்றவற்றுக்கு தயாராக இருப்பதை வெளிப்படுத்து வார்களாயின் அவர்களுடன் சுமுகமாக நடந்து கொள்ளுமாறு வலியுறுத்தும் பல்வேறு அல்குர்ஆனிய வசனங்கள் இவ்வணுகுமுறைக்குச் சான்றாக அமைகின்றன. எடுத்துக் காட்டாக "அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்து (இணங்கி) வந்தால், நீங்களும் அதன் பக்கம் சாய்வீராக! அல்லாஹ்வின் மீதே உறுதியான நம்பிக்கை வைப்பீராக" (8: 61) எனும் வசனத்தைக் குறிப்பிட முடியும். முஸ்லிம்கள் எந்நேரரத்திலும் யுத்தத்தைத் தவிர்த்து சமாதானத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என திட்டவட்டமாக இவ்வசனம் சான்றளிக்கிறது. எனவே, எதிரிகள் சமாதானத்தை விரும்புவார்களாயின், இவ்விடயம் முஸ்லிம்களின் உரிமை களைப் பாதிக்கும் வகையிலோ அல்லது அவர்களின் விருப்பத்தைப் பறிக்கும் வகையிலோ அமையப்பெறாமல் இருக்கும் வரை, அதனை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

---

[105]ஜாத்துல் ஹக், மஜல்லதுல் அஸ்ஹர், பக். 18, டிசம்பர், 1993.

மேற்கூறப்பட்ட வசனத்தின் கருத்தை அஸ்ஸத்தி[106] (ரஹ்) மற்றும் இப்னு ஸைத்[107] (ரஹ்) ஆகியோர் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்: அவர்கள் (சமாதானமான) இணக்கப் பாட்டுக்கு அழைத்தால் (அதனை ஏற்றுக் கொண்டு) அவர்களுக்குப் பதிலளியுங்கள்.[108]

இவ்வசனத்துக்கு அடுத்து வரும் வசனம் இஸ்லாம் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஆர்வம் கொண்டு ள்ளமையை உறுதிப்படுத்துகிறது. (இவ்வடுத்த வசனத்தில்) எதிரிகள் சமாதானத்தை விரும்புவதாக வெளிப்படையாகப் பாசாங்கு செய்து, மறைமுகமாக சூழ்ச்சி செய்ய முனையும் சூழ்நிலையாக இருப்பினும் கூட அல்லாஹ் தனது தூதருக்கு "அவர்கள் உம்மை ஏமாற்ற எண்ணினால், நிச்சயமாக அல்லாஹ் உமக்குப் போதுமானவன். அவன் தான் உம்மைத் தன் உதவியைக் கொண்டும், மு.்.மின்களைக் கொண்டும் பலப்படுத்தினான்" (8: 62) என அறிவுரை கூறுகிறான். அதாவது எவ்வித பாதிப்புமின்றி உம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுள்ளான் என்பது இதன் பொருளாகும்.[109]

---

[106]அஸ்ஸத்தி: இஸ்மாஈல் பின் அப்துர் ரஹ்மான் அஸ்ஸத்தி (மர. ஹி. 128/ கி.பி. 745). இவர் ஹிஜாஸ் பிரதேசத்தில் பிறந்து கூபாவில் வசித்த ஒரு தாபிஈ ஆவார். இவர் தப்ஸீர், ஸீரா போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். பார்க்க: தக்ரி பர்தி, அந்நுஜூம் அஸ்ஸாஹிரா, 1/390.

[107]இப்னு ஸைத்: அப்துர் ரஹ்மான் பின் ஸைத் பின் அஸ்லம் (மர. ஹி. 170/ கி.பி. 786). பிக்ஹ், ஹதீஸ், தப்ஸீர் துறைகள் சார்ந்த அறிஞர். "அந்நாஸிக் வல் மன்ஸூக்" மற்றும் "அத்தப்ஸீர்" ஆகியவை இவரது நூல்களுள் சிலவாகும். இவர் கலீபா ஹாரூன் ரஷீதின் ஆட்சியின் ஆரம்பத்தில் மரணித்தார். பார்க்க: இப்னுந் நதீம், அல்பிஹ்ரஸத், 1/315.

[108]பார்க்க: அல்குர்துபி, அல்ஜாமி.். லி அஹ்காமில் குர்ஆன்ஆன், 4/398-399.

[109]பார்க்க: அல்குர்துபி, அல்ஜாமி.். லி அஹ்காமில் குர்ஆன்ஆன், 4/400.

அதேபோன்று ஒரு முஸ்லிம் அவசியம் விரும்ப வேண்டிய விடயங்களுள் ஒன்றாக நபி (ஸல்) அவர்கள் சமாதானத்தைக் கவனத்தில் கொண்டுள்ளதோடு அதனை அருளுமாறு தொடர்ந்தும் இறைவனிடம் பிரார்த்தித்தும் வந்துள்ளார்கள். அந்தவகையில் தனது பிரார்த்தனையில் "இறைவா, இவ் வுலகிலும் மறுமையிலும் (எவ்வித சச்சரவுகளும் அற்ற) ஆரோக்கியத்தை (வழங்கும்படி) உன்னிடம் நான் (இறைஞ்சிக்) கேட்கிறேன்" (அபூ தாவூத், 5074) எனக் குறிப்பிடுவார்கள்.

அதேபோல் மற்றுமொருமுறை நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களிடையே உரையாற்றும் போது "எதிரிகளை சந்திக்க வேண்டுமென ஆசைப்படாதீர்கள். (எவ்வித சச்சரவுகளுமற்ற) ஆரோக்கியத்தை அல்லாஹ்விடம் நீங்கள் கேளுங்கள். எனினும் அவர்களை நீங்கள் சந்திக்க நேர்ந்தால் அவ் விடத்தில் பொறுமையாக இருங்கள்" (புகாரி, 4082; முஸ்லிம், 2471) எனக் கூறினார்கள்.

அதேபோல் யுத்தம் எனும் பொருளைக் கொண்ட *"ஹர்ப்"* எனும் சொல்லை நபி (ஸல்) வெறுத்தார்கள். இதனாலே தான் "அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான பெயர் அப்துல்லாஹ், அப்துர் ரஹ்மான் என்பதாகும். மிக உண்மையான பெயர்கள் ஹாரிஸ், ஹம்மாம் என்பவையாகும். மிக அலங்கோலமான பெயர் ஹர்ப், முர்ரா என்பவையாகும்"[110] (அபூ தாவூத், 4950) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

[110] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என அல்பானி (ரஹ்) குறிப்பிட்டுள்ளார். பார்க்க: அஸ்ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 1040.

# முஸ்லிம்கள் - முஸ்லிமல்லாதோர் இடையிலான உடன்படிக்கைகள்

## அறிமுகம்

சமாதானம் மற்றும் அமைதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே முஸ்லிமல்லாதோருடனான முஸ்லிம்களின் உடன்படிக்கைகள் அமைந்திருந்தன. இவ் வுடன்படிக்கைகள் ஊடாக முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லா தோர் ஆகிய இரு தரப்பினரும் (எவ்வித போரும் அற்ற) சமாதானமான, அமைதிநிறைந்த, சுமூகமான நிலையில் இருப்பர்.

மனித தொடர்பாடல்களிடையே சமாதானமே அடிப்படையாகும் என்றவகையில் திடீரென ஏற்பட்ட ஓர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நிரந்தர அமைதியான சூழலின் பக்கம் திரும்புவதற்கு அல்லது அமைதியான சூழலை உத்தரவாதப் படுத்தி அதன் அடிப்படை அம்சங்களை ஸ்திரப்படுத்து வதற்காகவே உடன்படிக்கைகள் இடம்பெறுகின்றன. இவ் வுடன்படிக்கைக்குப் பின்னர் ஏதேனும் அத்துமீறல் இடம்பெறுமாயின் அது அவ்வுடன்படிக்கையை முறிக்கும் விடயமாகவே நோக்கப்படும்[111].

நீண்ட வரலாறு நெடுகிலும் இஸ்லாமிய அரசுகள் முஸ்லிம் அல்லாத ஏனைய நாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளன. சர்வதேச இஸ்லாமிய சட்டத்தின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையிலான பல்வேறு கடமைகளையும், விதிகளையும், நிபந்தனைகளையும், அடிப்படைக் கோட்பாடுகளையும் அவ் வொப்பந்தங்கள் உட்பொதிந்துள்ளன.

[111]முஹம்மத் அபூ ஸஹ்றா, அல்அலாகாதுத் தவ்லிய்யா பில் இஸ்லாம், பக். 79.

## உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பான அறிமுகம்

சமாதான மற்றும் யுத்த சூழ்நிலைகளில் இஸ்லாமிய அரசு ஏனைய நாடுகளுடன் மேற்கொள்ளும் ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் மற்றும் சாசனங்களே உடன்படிக்கைகள் எனப்படுகின்றன. யுத்த நிலைகளின் போது மேற்கொள்ளப் படும் உடன்படிக்கை அமைதி உடன்படிக்கை, யுத்த நிறுத்த உடன்படிக்கை அல்லது சமாதான உடன்படிக்கை எனப்படுகிறது. யுத்தத்தைக் கைவிடுவதற்கு இணங்குவதே இதன் பிரதான இலக்காகும். அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

“அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்து (இணங்கி) வந்தால், நீங்களும் அதன் பக்கம் சாய்வீராக!” (8:61).

## இஸ்லாமிய உடன்படிக்கைகளுக்கான சில நடைமுறை முன்மாதிரிகள்

- **மதீனாவில் இருந்த யூதர்களுடனான நபி (ஸல்) அவர்களின் உடன்படிக்கை**

இஸ்லாமிய அரசுக்கும் ஏனையோருக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளுள் ஒன்றாக நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது அங்கிருந்த யூதர்களுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கையைக் குறிப்பிடலாம். இவ்வுடன் படிக்கை பின்வருமாறு இடம்பெற்றிருந்தது:

எதிரிகளின் தாக்குதலுக்கு உட்படும்போது முஸ்லிம்களுடன் யூதர்களும் இணைந்து செலவிட வேண்டும். பனூ அவ்ப் கிளையைச் சார்ந்த யூதர்கள் முஸ்லிம்களுடன் ஒன்றிணைந்த சமூகத்தவராவர். யூதர்கள் தமது மதத்தைக் கடைபிடிப்பார்கள். முஸ்லிம்கள் தமது மதத்தைக் கடைபிடிப்பார்கள். அத்துடன் அவர்கள் தமது அடிமைகளையும் உயிர்களையும் பாதுகாத் தும் கொள்வார்கள். எனினும் யாராவது (உடன் படிக்கையை முறித்து) அநீதமிழைத்து தீய செயலில் ஈடுபடுவாராயின் அவர் தன்னையும் தனது குடும்பத்தையுமே அழித்துக் கொள்கிறார். அதேபோன்று பனுன் நஜ்ஜார், பனுல் ஹாரிஸ், பனூ ஸாஇதா, பனூ ஜுஷம், பனுல் அவ்ஸ் போன்ற யூதக் கிளைகளுக்கும்

யூத பனூ அவ்ப் கிளையைச் சார்ந்தோருக்கு உள்ள அனைத்து உரிமைகளும் உண்டு. யூதர்களின் நெருங்கிய பங்காளிகளுக்கும் யூதர்களை போன்ற உரிமைகள் அனைத்தும் உண்டு. அவர்களுக்காக செலவிடுவது யூதர்கள் மீது கடமையாகும். அத்துடன் அவர்களுக்காக செலவிடுவது முஸ்லிம்கள் மீதும் கடமையாகும். இச்சாசனத்தை எதிர்ப்போருக்கு எதிராக (முஸ்லிம்களும் யூதர்களும்) தங்களி டையே உதவி செய்து கொள்வது கடமையாகும். பாவங்கள் தவிர்த்து அவர்களுக்கிடையே பிறர் நலம் நாடல், அறிவுரை கூறல் மற்றும் நலன் விரும்பல் போன்றவை அவசியம் இடம்பெற வேண்டும். ஒருவர் தனது பங்காளி (இழைத்த குற்றம்) ஊடாக குற்றவாளியாகமாட்டார். அநியாயத்துக்கு உட்பட்டவருக்கு உதவி வழங்கப்பட வேண்டும். (இவ்வுடன்படிக்கையில கைச்சாத்திட்ட யாரேனும் ஒருவரிடம்) அடைக்களம் தேடுபவரும் அத்துமீறலிலோ குற்றச் செயலிலோ ஈடுபடாதவரை (அக்கைச்சாத்திட்டவர் பாதுகாக்க ப்படுவதைப் போல் பதுகாக்கப்பட வேண்டிய அவரைப்) போன்றவரே ஆவார். இச்சாசனத்தில் உள்ளவற்றுக்கு எச்சரிக்கையுடன் (ஒழுங்காக) மிக உண்மையாக நடந்து கொள்வோருக்கு அல்லாஹ்வும் உறுதுணையாக இருப்பான். மதீனாவைத் தாக்க வருவோருக்கு எதிராக (முஸ்லிம்களும் யூதர்களும்) தங்களிடையே உதவிக்கொள்ள வேண்டும். (யூதர்களாகிய) அவர்கள் யுத்த நிறுத்தத்தின் பக்கம் (இணக்கப்பாட்டின் பக்கம்) அழைக்கப்பட்டால் (முஸ்லிம்க ளாகிய) அவர்கள் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் மார்க்க விடயங்களில் பகிரங்கமாக போரிடாதவரை அவ்வாறான ஒன்றுக்கு (முஸ்லிம்கள்) அழைக்கப்பட்டால் முஸ்லிம்களுக்காக அதனைச் செய்வது (யூதர்களாகிய) அவர்கள் மீதுள்ள கடமையாகும். எனவே, தம் பக்கத்தில் உள்ளவற்றை முழுமையாக நிறைவேற்றுவது (இரு தரப்பிலுள்ள) அனைவர் மீதும் கடமையாகும். (இரு தரப்பிலுமுள்ள) எந்த ஒரு அநியாயமிழைத்தவனையோ குற்றவாளியையோ இச்சாசனம் பாதுகாக்காது. நன்மை

செய்து அஞ்சி நடப்போருக்கு நிச்சயம் அல்லாஹ் சமீபமாக இருக்கிறான்”[112].

யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே சுமுக நிலையை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது என்பது இவ்வுடன்படிக்கையூடாகத் தெளிவாகிறது. அத்துடன் அவர்களுக்கிடையே எவ்வித யுத்தமும் நிகழ்ந்து விடாமல் உத்தரவாதம் அளிப்பதற்கான ஓர் பாதுகாப்பாகவும் இது இருக்கிறது. மேலும் பிற சமூகத்தவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்காகவும் நீதத்தின் அடிப்படைகளை ஸ்திரப்படுத்துவதற்காகவுமே இவ்வுடன்படிக் கை இடம்பெற்றுள்ளமை தெளிவாகிறது. அத்துடன் அநீதி இழைக்கப்பட்டவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது அதில் மிகத் தெளிவாக குறித்துச் சொல்லப் பட்டுள்ளமையானது சமாதானத்தை நிலைநாட்டவும் நீதத்தின் ஊடாகவும் பலவீனப்பட்டவருக்கு உதவுவதன் ஊடாகவும் அதனை உறுதிப்படுத்துவதன் அவசியத்தையும் வலியுறுத்துவதாக அமைகிறது.[113]

- **நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களுடனான நபி (ஸல்) அவர்களின் உடன்படிக்கை**

நபி (ஸல்) அவர்களின் வாழ்வு தொடர்பான சீரா நூல்கள் இவ்வாறான உடன்படிக்கைகள் தொடர்பிலான பல விடயங்களை குறிப்பிட்டுள்ளன. நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களுடன் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட அமைதி உடன்படிக்கையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்வுடன்படிக்கையில் பின்வருமாறு இடம் பெற்றுள்ளது:

“நஜ்ரான் வாசிகளுக்கும் அவர்களின் பங்காளிகளுக்கும் அல்லாஹ்வின் அபயம் உண்டு. அவர்களின் உயிர்கள், சமயம், பூமி, சொத்துக்கள், அவர்களில் இங்கு இல்லாதோர்,

---

[112] இப்னு ஹிஷாம், அஸ்ஸீரா அந்நபவிய்யா, 1/503-504 இப்னு கஸீர், அஸ்ஸீரா அந்நபவிய்யா, 2/322-323.

[113] முஹம்மத், அபூ ஸஹ்ரா, அல்அலாகாத் அத்தவ்லிய்யா பில் இஸ்லாம், பக். 81.

இருப்போர் அவர்களின் உறவுக்காரர்கள், அவர்களின் பங்காளிகள்.. அத்துடன் அவர்களின் கைகளில் இருக்கும் குறைவான அல்லது அதிகமான அனைத்துக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களின் பாதுகாப்பு உண்டு"[114].

- **பனூ ழமுரா கோத்திரத்தவருடனான நபி (ஸல்) அவர்களின் உடன்படிக்கை**

பனூ ழமுரா[115] கோத்திரத்தவருடனான நபி (ஸல்) அவர்களின் உடன்படிக்கையும் இவற்றுள் ஒன்றாகும். மக்ஷி பின் அம்ர் என்பவரே அக்காலத்தில் கோத்திரத்தின் தலைவராக இருந்தார். அதேபோன்று யன்பு∴ எனும் பகுதியில் வாழ்ந்து வந்த பனூ முத்லிஜ் கோத்திரத்தவருடனும் நபி (ஸல்) அவர்கள் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஹிஜ்ரி 2ஆம் ஆண்டு ஜுமாதல் ஊலா மாதம் இது நடைபெற்றது. அவ்வாறே ஜுஹைனா கோத்திரத்தின் கிளைக் கோத்திரங்களுடனும் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறான ஒப்பந்தங்களை மேற்கொண்டார்கள். இவர்கள் மதீனா முனவ்வராவின் வடமேற்குப் பகுதியில் வசித்து வந்தவர்கள் ஆவர்.

- **உமர் (ரழி) அவர்களின் உடன்படிக்கை**

பலஸ்தீனில் உள்ள ஈலியா பிரதேச (பய்துல் மக்திஸ்) வாசிகளுடன் இஸ்லாமிய ஆட்சியாளரான உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் மேற்கொண்ட உடன்படிக்கையும் இவற்றுள் ஒன்றாகும்.[116] இது "உமரிய உடன்படிக்கை" என அழைக்கப்பட்டது.

இந்த உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய உடன்படிக்கைகளை நோக்கும்போது முஸ்லிம்கள் தாம் அண்டி வாழ்ந்த ஏனையோருடன் சுமுகமாகவும் அமைதியான ஒரு சூழலில்

---

[114] அல்பய்ஹகி, தலாஇல் அந்புநவ்வா, 5/485.

[115] பனூ ழமுரா கோத்திரம்: இது அத்னான் என்பவர் வழியாக வந்த ஒரு அரபுக் கோத்திரமாகும். மதீனா முனவ்வராவின் மேற்குப் பக்கம் உள்ள வத்ததான் பிரதேசத்தில் இவர்கள் வசிக்கின்றனர்.

[116] இவ்வுடன்படிக்கையின் வாசகம் தொடர்பில் அறிந்து கொள்ள பார்க்க: அத்தபரி, தாரீகுல் உமம் வல் முலூக், 2/449-450.

வாழ்வதற்கு முயற்சித்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. அத்துடன் எந்த ஒரு நிலையிலும் யுத்தத்தில் ஈடுபட முனையவில்லை. மாறாக எப்போதும் யுத்தத்தை விட சமாதானத்துக்கும் பிளவை விட ஒற்றுமைக்கும் முன்னுரிமை அளிப்பவர்களாகவே அவர்கள் இருந்தனர்.

## இஸ்லாத்தில் உடன்படிக்கைகளுக்கான வரையறைகளையும் நிபந்தனைகளும்

ஷரீஆ நியமங்களுடன் ஒன்றிப் போகும் வகையிலும் தாம் ஆகுமாக்கப்பட்ட நோக்கத்துக்காகவும் உடன்படிக்கைக ளுக்கான பல்வேறு வரையறைகளையும் நிபந்தனைகளையும் இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது.

நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் மஹ்மூத் ஷல்தூத்[117] பின்வருமாறு கூறுகிறார்:

“ஏதோ சில (பயன்மிக்க) நோக்கங்களுக்காக உடன்படிக்கை களை மேற்கொள்ளவதற்கான உரிமையை முஸ்லிம்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள போதும் ஒரு உடன்படிக்கையின் செல்லுபடித்தன்மைக்கு பின்வரும் நிபந்தனைகளை அது இடுகிறது:

i. இஸ்லாத்தின் தனிப்பெரும் ஆளுமையின் அடித்தளமாக உள்ள அதன் அடிப்படை சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதன் பொதுச் சட்ட ஒழுங்கு போன்றவற்றுக்கு பாதிப்பாக அது அமையாமலிருத்தல். இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: “அல்லாஹ்வின் வேதத்தில் இல்லாத ஒவ்வொரு நிபந்தனையும் செல்லுபடியற்றதாகும்” (புகாரி, 2155). இவ்வாறான

[117] மஹ்மூத் ஷல்தூத் (ஹி. 1310-1383/ கி.பி. 1893-1963): எகிப்சைத் சேர்ந்த சட்டவியலாளரும் முபஸ்ஸிருமாவார். புஹைராவில் பிறந்தார். இவர் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆவார். அங்கு ஷரீஆ பீடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டு பின்னர் 1958 முதல் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் தலைவராக (ஷைகுல் அஸ்ஹர்) தனது மரணம் வரை பதவி வகித்தார்.

நிபந்தனையை அல்லாஹ்வின் வேதம் ஏற்க மறுக்கிறது என்பதே இதன் பொருளாகும்.

இந்நிபந்தனையின் ஊடாக முஸ்லிம் பிரதேசங்களை தாக்குவதற்கு அல்லது முஸ்லிம்களின் ஒற்றுமையைப் பிரித்து அவர்களின் பிணைப்பைச் சீர்குலைப்பதனூடாக முஸ்லிம் களின் நிலையை பலவீனப்படுத்துவற்கு எதிரிகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக இஸ்லாத்தின் தனித்துவத்துக்கு குந்தகமாக அமையும் வகையிலான உடன்படிக்கையை மேற்கொள்வதை இஸ்லாம் ஏற்கவில்லை.

ii. அவ்வுடன்படிக்கை இரு தரப்பினரின் பரஸ்பர திருப்தியை அடிப்டையாகக் கொண்டு அமையப் பெற்றிருத்தல். அந்தவகையில் பலவந்தமாக அதிகாரத் தோரணையில் தீயவர்களின் தூண்டுதலின் விளைவாக உருவாகும் உடன்படிக்கைக்கு எவ்வித பெறுமானமும் இருப்பதாக இஸ்லாம் கருதவில்லை. பொதுவாக இது ஓர் உடன்படிக்கையின் இயல்பு வேண்டிநிற்கும் நிபந்தனையாகும். அந்தவகையில் **“உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் ஏற்படுகிற வர்த்தகம் அல்லாமல்,** ஒருவர் மற்றொருவரின் பொருட்களை தவறான முறையில் உண்ணாதீர்கள்” (4:29) எனும் அல்குர்ஆனிய வசனத் துக்கிணங்க சாதரணமாக ஒரு பொருளை விற்றல், வாங்கல் தொடர்பான பரஸ்பர பரிமாற்ற ஒப்பந்தத்தில் கூட இரு தரப்பு சம்மதம் மிக அடிப்படையான ஒன்றாக இருக்கிறது. அவ்வாறாயின் ஒரு சமூகத்தின் வாழ்வாக அல்லது மரணமாக அமையவல்ல தீர்க்கமான அமைதி உடன்படிக்கை எவ்வளவு முக்கியத்துவமானது!

iii. தேவையற்ற வியாக்கியானங்களுக்கோ விளக்கங்களுக் கோ சொற்களின் மூலம் விளையாடுவதற்கோ எவ்வித வழிகளையும் ஏற்படுத்திவிடாதவகையில் இரு தரப்பின ரதும் கடமைகளையும் உரிமைகளையும் திட்டவட்டமாக வரையறை செய்யும் வகையில் அவ்வுடன்படிக்கை மிகவும் தெளிவான இலக்குகளை கொண்டதாகவும் தெளிவான குறிக்கோளை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அவற்றின் இலக்குகளை வரையறுப்பதில் தெளிவற்ற

விதமாக பக்கச்சார்புடன் நடந்து கொண்டமையே சமதானத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் பாடுபடுவதாக வாதிட்டுக் கொள்ளும் பல்வேறு வளச்சியடைந்த நாடுகளின் உடன்படிக்கைகள் தோற்றுப் போனமைக்கான முக்கிய காரணமாகும். அத்துடன் பல்வேறு சர்வதேச ரீதியான தொடர் பிரச்சினைகளுக்கும் இது ஊக்கியாக அமைந்தது. இவ்வியல்புகளைக் கொண்ட உடன்படிக்கைகளை எச்சரித்து அல்குர்ஆன் "நீங்கள் உங்கள் சத்தியங்களை உங்களுக்கிடையில் (சதி, துரோகம்) ஆகியவற்றுக்குக் காரணமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள் (அவ்வாறு செய்வதால்) நிலை பெற்ற (உங்களுடைய) பாதம் சறுகி விடும் அன்றியும், நீங்கள் அல்லாஹ்வின் பாதையை விட்டும் (மக்களைத்) தடுத்துக்கொண்டிருந்த காரணத்தால், (இம்மையில் பெருந்) துன்பத்தை அனுப விக்க நேரிடும்" (16:94) எனக் குறிப்பிடுகிறது. இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள "தகல்" "دَخَلًا" எனும் பதம் ஏதேனுமோர் விடத்தை சீர்குலைக்க மேற்கொள்ளப்படும் மறைமுகமான சதியைக் குறிக்கிறது[118].

## உடன்படிக்கையை நிறைவேற்றுவதன் அவசியம்

பல்வேறு அல்குர்ஆனிய வசனங்களும் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களும் உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. இதற்குப் பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் சான்றுகளாக உள்ளன:

"மு.:.மின்களே! (நீங்கள் செய்து கொண்ட) உடன்படிக் கைகளை (முழுமையாக) நிறைவேற்றுங்கள்" (5:1).

அல்லாஹ்வுக்கு (நீங்கள் கொடுத்த) உறுதி மொழியை நிறை வேற்றுங்கள் (6:152).

[118] தவ்பீக் அலி வஹ்பா, அல்முஆஹதாத் பில் இஸ்லாம், பக். 100-101.

இன்னும் (நீங்கள் அல்லாஹ்விடமோ, மனிதர்களிடமோ கொடுத்த) வாக்குறுதியை நிறை வேற்றுங்கள் (17:34).

இதே கருத்தை வலியுறுத்தும் வேறு பல வசனங்களும் உண்டு.

அதேபோன்று நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் இவ்விடயம் தொடர்பில் இடம்பெற்ற வழிகாட்டல்களைப் பின்வருமாறு நோக்கலாம்:

அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்:

“நான்கு குணங்கள் எவனிடம் குடிகொண்டுள்ளனவோ அவன் வடிகட்டிய நயவஞ்சகன் ஆவான். பேசும்போது பொய் சொல்வதும், வாக்குறுதியளித்தால் (அதற்கு) மாறு செய்வ தும், ஒப்பந்தம் செய்தால் (நம்பிக்கை) மோசடி செய்வதும், வழக்காடினால் அவமதிப்பதும் தான் அவை. எவனிடம் இவற்றில் ஒரு குணம் குடிகொண்டுள்ளதோ அவன் அதைவிட்டுவிடும் வரை அவனுள் நயவஞ்சகத்தின் ஒரு குணம் குடியிருக்கும்” (புகாரி, 3178).

அனஸ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்:

“மோசடி (நம்பிக்கைத் துரோகம்) செய்பவன் ஒவ்வொருவருக்கும் (உலகில்) அவன் செய்த மோசடியை வெளிச்சமிட்டுக் காட்டுவதற்காக மறுமைநாளில் கொடி யொன்று நடப்படும்” (புகாரி, 7111).

அதேபோன்று நபி (ஸல்) அவர்கள் கூறிய பின்வரும் நபிமொழியும் இங்கு கவனிக்கத்தக்கது:

“யாரேனும் பிற சமூகத்தவருடன் ஏதேனும் உடன்படிக்கை செய்து கொள்வாராயின் அவ்வுடன்படிக்கைக் காலம் முடியும் வரை அல்லது அவ்வுடன்படிக்கை முறிந்து விட்டதாக எதிர்த்தரப்புக்கு தெளிவாக அறிவிக்கும் வரை (அதனை முறிப்பதனூடாகவோ அல்லது அதற்கு மாறுசெய்வதன்

ஊடாகவோ) அவ்வுடன்படிக்கையில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்திவிட வேண்டாம்" (அபூ தாவூத், 2759)[119].

அதேபோன்று அபூ தாவூதில்[120] பின்வருமாறு இடம்பெறுகிறது:

"முஸ்லிம் பிரதேசத்தில் உடன்படிக்கை செய்துகொண்டு வாழும் முஸ்லிமல்லாதவருக்கு அநீதி இழைத்தவர், அவரது உரிமைகளைப் பறித்தவர், அவரது சக்திக்கு மீறி அவரை கஷ்டப்படுத்தியவர் அல்லது அவரது விருப்பமின்றி அவரிடத் தில் இருந்து ஏதோ ஒன்றை அபகரித்தவர் போன்றோருக்கு எதிராக மறுமை நாளில் நான் வாதிடுபவராக இருப்பேன்" (அபூ தாவூத், 3052)[121].

(நாட்டின் நலன்கருதி) நல்ல, தீய ஆட்சியாளர்கள் என அனைவருடனும் இணைந்து போராட வேண்டும் என இஸ்லாமிய சட்டவியல் அறிஞர்கள் (புகஹாக்கள்) அபிப்பிராயத்தைக் கொண்டிருந்த போதும் உடன்படிக்கை களை முறையாக நிறைவேற்றாத ஆட்சியாளருடன் இணைந்து போராட முடியாது என்பதே அவர்களில் பெரும்பாலானோரின் கருதுநிலையாகும். நவீன உலகில் நடைமுறையில் உள்ள சர்வதேச சட்டத்துக்கு முரணாக சூழ்நிலைகள் எவ்வாறு மாற்றம் பெற்றிருப்பினும் எந்நிலையிலும் உடன்படிக்கையை முறிப்பது இஸ்லாத்தில் அனுமதியற்றதாகும். அந்தவகையில் ஏதேனும் பிரத்தியேகமான சூழ்நிலைகளில் உடன்படிக்கை தொடர்பான தமது கடமைகளை நிறைவேற்ற முடியாத நிர்ப்பந்த நிலை தோன்றுமாயின் அடுத்த தரப்பினரின் கடமைகள் தொடர்பில் போதிய கரிசனை செலுத்துவது அவர்கள் மீதுள்ள கடமையாகும். இவ்விடயம் தொடர்பில் இடம்பெறும் பின்வரும் நிகழ்வு இங்கு கவனிக்கத்தக்கது.

---

119 இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பர்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 2759.

120 அபூ தாவூத்: ஸுலைமான் பின் அல்அஷ்அஸ் பின் இஸ்ஹாக் பின் பஷீர் அல்அஸ்தி அஸ்ஸிஜிஸ்தானி (ஹி. 202-275). இவரது காலத்தில் ஹதீஸ் அறிஞர்களின் தலைவர். ஸுனன் அபூ தாவூத் எனும் பிரபல ஹதீஸ் நூலின் ஆசிரியர். பாரசீகத்தில் ஸிஜிஸ்தான் பகுதியில் பிறந்தார். பஸராவில் மரணித்தார். பார்க்க: அத்தஹபி, ஸியரு அஃலாமிந் நுபலா, 31/203.

121 இந்த ஹதீஸ் ஹஸன் தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுத் தர்கீப், 3006.

“முஸ்லிம் படைத்தளபதி அபூ உபைதா பின் ஜர்ராஹ் (சிரியாவின்) ஹிம்ஸ் பிரதேசத்தைக் கைப்பற்றினார். அங்கு (முஸ்லிம் அல்லாதோரிடமிருந்து அறவிடப்படும்) *ஜிஸ்யா* (ஆள் வரியை) அறவிட்டார். பின்னர் அங்கிருந்து பின்வாங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டபோது மக்களிடமிருந்து பெற்ற அவ்வரியை மீள ஒப்படைத்தார். பின்னர் அம்மக்களிடம் “(ஜிஸ்யா ஊடாக) எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள இவற்றை உமக்கு மீள் ஒப்படைத்தமைக்கான காரணம் (எதிகளிடமிருந்து) உம்மைப் பாதுகாக்க வேண்டும் என நீங்கள் எமக்கு நிபந்தனையிட்டிருந்தமையினாலாகும். எம்மால் அதனைச் செய்ய முடியவில்லை.. (ஆகவே,) நாம் உம்மிடமிருந்து பெற்றவற்றை உங்களிடமே மீள் ஒப்படைத்து விட்டோம். குறித்த அவ்வுடன்படிக்கைக்கு அமைவாகவே நாம் உங்களுடன் இருக்கிறோம். (எதிரிகளாகிய) அவர்களுக்கு எதிராக அல்லாஹ் (உங்களைப் பாதுகாக்க) எமக்கு உதவினால் மாத்திரமே (வரி பெறுதல் எனும்) உமக்கும் எமக்குமிடையே நாம் எழுதிக் கெண்ட இவ்வொப்பந்தம் நிலைபெறும்”[122].

இஸ்லாமிய வரலாற்றில் இவ்வகைக்கு பல்வேறு உதாரணங்கள் உண்டு. எனவே, சூழ்நிலைகளும் குறித்த ஒரு சமூகம் சார் நலன்களும் மாறுவது ஒருபோதும் இஸ்லாத்தில் உடன்படிக்கையை முறிப்பதற்கான நியாயமாக அமையாது. அதேபோல் முஸ்லிம்கள் எதிர்த்தரப்பினரை விட தாம் பலம் பெற்றவர்கள் என கருதிக் கொள்வதும் அதனை முறிப்பதற்கான நியாயமாக அமைந்துவிடமாட்டாது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அல்குர்ஆனில் திட்டவட்டமாக பின்வருமாறு இடம்பெற்றுள்ளது.

“இன்னும், நீங்கள் அல்லாஹ்வின் பெயரால் செய்யும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை சாட்சியாக வைத்துச் சத்தியம் செய்து, அதனை உறுதிப்படுத்திய பின்னர், அச்சத்தியத்தை முறிக்காதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிவான்” (16:91).

[122] அபூ யூஸுப், அல்கராஜ், பக். 18.

உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதன் அவசியம் தொடர்பான எவ்வித பொது விதிகளும் இல்லாத சூழ்நிலையிலேயே முஸ்லிம்கள் அவற்றை அவசியம் நிறைவேற்ற வேண்டும் என்ற அழுத்தமாக இவ்வசனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளமை இங்கு அவதானிக்கத்தக்க அம்சமாகும்[123].

இதுவே சுமூக நிலையைப் பேணுவதற்காக ஓர் இஸ்லாமிய அரசு ஏனைய நாடுகளுடன் கைச்சாத்திடும் ஒப்பந்தங்கள் தொடர்பான இஸ்லாத்தின் இஸ்லாத்தின் சட்டதிட்டமாகும். எனவே, எதிர்த்தரப்பினர் உடன்படிக்கையை முறிக்காதவரை எந்நிலையிலும் முறித்து விடாமல் முறையாக அதனை நிறைவேற்றுமாறு நாம் பணிக்கப்பட்டுள்ளோம். ஆகவே, எதிர்த்தரப்பினர் அதனை முறித்து விடாமலும் முஸ்லிம்கள் மீதான பகைமையை அவர்கள் பகிரங்கப்படுத்தாமலும் இருப் பார்களாயின் அவ்வுடன்படிக்கையை நிறைவேற்றுவது முஸ்லிம்கள் மீது அவசியமாகிவிடுகிறது. அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

“ஆனால், நீங்கள் உடன்படிக்கை செய்து கொண்ட இந்த முஷ்ரிக்குகளில், எதையும் குறைத்துவிடாமலும், உங்களுக்கு விரோதமாக எவருக்கும் உதவி செய்யாமலும் இருக்கின்றார் களோ அவர்களைத் தவிர. அவர்களுக்கு அவர்களின் உடன்படிக்கையை அவர்களின் காலக்கெடு வரையில் பூரணமாக நிறைவேற்றுங்கள்” (9:4).

இமாம் முஹ்மூத் ஷல்தூத் பின்வருமாறு கூறுகிறார்:

“உடன்படிக்கையை நிறைவேற்றுவது ஒரு மார்க்கக் கடமையாகும். அது தனக்கும் தனது இறைவனுக்கும் இடையில் உள்ள விடயம் என்றவகையில் அவ்விடயம் தொடர்பில் அவன் வினவப்படுவான். எனவே, அவ்வுடன் படிக்கையை சீர்குலைப்பது ஒரு மோசடியும் சூழ்ச்சியும் ஆகும்”[124].

---

[123]ஸாலிஹ் பின் அப்துர் ரஹ்மான் அல்ஹஸீன், அல்அலாகாத் அத்தவ்லிய்யா பய்ன மன்ஹஜில் இஸ்லாம் வல்மன்ஹஜ் அல்ஹழாரி அல்முஆஸிர், பக். 51.

[124] மஹ்மூத் ஷல்தூத், அல்இஸ்லாமு அகீததுன் வஷரீஆ, பக். 457.

இதனூடாக உடன்படிக்கைகள் தொடர்பான சட்டதிட்டங்களை வகுப்பதில் இஸ்லாம் தனது சட்ட ஒழுங்குகள் ஊடாக ஏனைய சமூகங்களை விட முன்னிலையில் திகழ்கிறது. அதனை விட மேலதிகமாக எதிரிகளுடன் நீதமாகவும் விட்டுக்கொடுப்பு டனும் நடந்து கொள்ளும் விடயத்தில் இஸ்லாம் அவைகளை விட்டு தனித்துவம் பெறுகிறது. இவ்வாறு இஸ்லாம் முன்னிலையில் பெறுவது கோட்பாட்டு ரீதியாக மாத்திரமன்றி நடைமுறை ரீதியாகவும் தான் என்பது இங்கு மிக முக்கியமானதாகும். நபியவர்களின் காலம் முதல் நேர்வழி பெற்ற நான்கு கலீபாக்களின் காலப்பகுதி உள்ளடங்கலாக ஏனைய இஸ்லாமிய ஆட்சிக் காலப்பகுதிகளில் எதிரிகளுடன் முஸ்லிம்கள் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் இக்கருத்தை நன்கு உணர்த்துகிறது.

## இஸ்லாத்தில் தூதுவர்களுக்கு பாதுகாப்பளித்தல்

(வெளிநாட்டுத்) தூதுவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதன் அவசியம் தொடர்பில் இஸ்லாமிய சட்டவாக்கத்தில் மிகத் தெளிவாக சட்டதிட்டம் இடம்பெற்றுள்ள மையை அவதானிக்க முடிகிறது. பல்வேறு திட்டவட்டமான சட்ட வசனங்களும் நபி (ஸல்) அவர்களின் நடைமுறையும் எவ்வித சூழ்நிலையிலும் தூதுவர்களை கொள்வது கூடாது என்பதை வலியுறுத்துகின்றன. எனவே, தூதுவருக்கான முழுமையாக பாதுகாப்பை வழங்குவதோடு அவரது நம்பிக் கைச் சுதந்திரத்தை அனுபவிப்பதுடன் தனது பணிகளை பூரண சுதந்திரத்துடன் நிறைவேற்றுவதற்கான உத்தரவாதமும் முஸ்லிம் ஆட்சியாளரால் அவசியம் வழங்கப்பட வேண்டும் என சட்டவியல் அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர்[125].

அந்தவகையில் ஒரு வெளிநாட்டுத் தூதருக்கு பாதுகாப்பு வழங்குதல் எனும்போது எந்நிலையிலும் ஒரு கைதி என்ற வகையில் அவரைக் கைது செய்வது ஆகுமானதல்ல என்பது அதனுள் அடங்குகிறது. அத்துடன் அவரது நாட்டு அரசு அவரை ஒப்படைக்குமாறு வேண்டிக் கொண்டாலும் அவர் அதனை மறுத்து விடும் நிலையில் அவரை ஒப்படைக்காவிடின் போர் தொடுக்க நேரிடும் என (அந்நாட்டு அரசால்)

---

[125] பார்க்க: இப்னு ஹஸ்ம், அல்முஹல்லா, 4/307.

இஸ்லாமிய அரசுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டாலும் அந்நாட்டு அரசிடம் அவரை ஒப்படைப்பதும் ஆகுமானதல்ல. ஏனெனில் அவரை அவ்வாறு ஒப்படைப்பது அவருக்கு இழைக்கும் ஒரு மோசடியாகவே கருதப்படுகிறது. அத்துடன் முஸ்லிம் பிரதேசத்தில் பூரண பாதுகாப்பைப் பெறும் உரிமையையும் அவர் அனுபவித்து வருகிறார் என்பதும் இதற்கான காரணமாகும்[126].

உடன்படிக்கைகளை மேற்கொள்ளல், கூட்டணிகளை அமைத்தல் அல்லது யுத்தம் நிகழ்வதைத் தடுத்தல் போன்றவற்றின் வெளிநாட்டுத் தூதுவரின் பணிக்குக் காத்திரமான பங்களிப்பு உண்டு. இதனால் அவருக்கான அனைத்து வழிகளும் தேவையான விடயங்களும் முழுமை யான ஏற்பாடு செய்து கொடுக்கப்பட வேண்டும். இது அவருக்கான பிரத்தியேகமான ஏற்பாடு அல்ல. மாறாக அவரது பணியைப் பூரணமாக நிறைவேற்றுவதற்கானதாகும். உண்மையில் தனக்கு மாறுபட்ட கருதுநிலைகள் இருந்தாலும் தனது கடமையை நிறைவேற்றும் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டுள்ளமையினால் தன்னை அனுப்பிவைத்தவரையே அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். எனவே, யாரிடம் அவர் தூதுவராக அனுப்பப்படுகிறாரோ அந்நபர் இந்நிலையைக் கவனத்தில் கொள்வது அவசியமானதாகும்.

அபூ ராபிஃ என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:

“குறைஷ் கோத்திரத்தினர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களிடம் என்னைத் தூதுவராக அனுப்பினார். அவரை நான் கண்டவுடன் எனது உள்ளத்தில் இஸ்லாம் (பற்றிய நல்லெண்ணம்) உதயமாகிவிட்டது. நான் “அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் மீது ஆணையாக, நான் அவர்களிடம் திரும்பிச் செல்ல மாட்டேன்” என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் “நான் உடன்படிக்கைக்கு மோசடி செய்பவன் அல்ல. அத்துடன் நான் தூதுவர்களை தடுத்து வைப்பவனும் அல்ல. நீர் அவர்களிடம் திரும்பி சென்று விடுங்கள். உமது உள்ளத்தில் தற்போது இருக்கின்ற விடயம் (அங்கு சென்று அதன் பின்னால்)

---

[126] அப்துல் கரீம் ஸய்தான், அஷ்ஷரீஆ அல்இஸ்லாமிய்யா வல்கானூன் அத்தவ்லி அல்ஆம், பக். 169.

இருந்தால் நீங்கள் திரும்பி வாருங்கள்" என்றார்கள்" (அபூ தாவூத், 2758)[127].

அதேபோன்று இமாம் ஹைசமி[128] (ரஹ்), "மஜ்மஉஸ் ஸவாஇத் வமன்பஉல் பவாஇத்" என்ற தனது நூலில் "தூதுவர்களை கொலை செய்வது தடை செய்யப்பட்டுள்ளமை" எனும் தலைப்பின் கீழ் இவ்விடயம் தொடர்பான பல்வேறு ஹதீஸ்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றுள் இப்னு அந்நவ்வாஹா என்பவர் கொல்லப்பட்ட போது அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவித்த பின்வரும் ஹதீஸும் ஒன்றாகும்:

இவரும் இப்னு ஆஸால் என்பவரும் பொய் நபி முஸைலமாவின் தூதுவர்களாக நபி (ஸல்) அவர்களிடம் சமூகமளித்திருந்தனர். அவ்விருவரிடமும் நபி (ஸல்) அவர்கள் "நான் அல்லாஹ்வின் தூதர் என நீங்கள் சாட்சி கூறுகிறீர்களா?" என வினவ, அவ்விருவரும் "முஸைலமாவே அல்லாஹ்வின் தூதர் என நாங்கள் சாட்சி கூறுகிறோம்" என்றனர். அப்போது நபி (ஸல்) அவர்கள், "நான் தூதுவர்களை கொல்பவனாக இருந்திருப்பின் அவர்களது கழுத்துக்களைத் துடித்திருப்பேன்" என்றார்கள். (முஸ்னத் அஹ்மத், 3761)[129]. அந்தவகையில் இவ்விடயம் தொடர்பில் இமாம் ஹைசமி (ரஹ்) அவர்கள் "இதன் பின்னர் வெளிநாட்டுத் தூதுவர்கள் கொல்லப்படக் கூடாது

---

[127] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு வழஈபு அபீ தாவூத், 2758.

[128] இப்னு ஹஜர் அல்ஹைஸமி: அபுல் ஹஸன் அலி பின் அபூ பக்ர் பின் ஸுலைமான் அஷ்ஷாபிஈ அல்மிஸ்ரி (ஹி. 735-807/ கி.பி. 1335-1405). இவர் ஹதீஸ் துறை சார்ந்த அறிஞராவார். "மஜ்மஉஸ் ஸவாஇத் வமன்பஉல் பவாஇத்" இவரது பிரபலமான நூலாகும். பார்க்க: அஸ்ஸர்கலி, அல்அஃலாம், 4/266.

[129] இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல்அர்நாஊத் குறிப்பிட்டுள்ளார். பார்க்க: தக்ரீஜுல் முஸ்னத், 3761.

என்பதாகவே நடைமுறை அமைந்துவிட்டது”[130] எனக் குறிப்பிட்டுளார்கள்.

இதனூடாக வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான மனிதநேயம் மிக்க நாகரிக விதிகளை வகுப்பதில் மேலைத்தேய சமூகங்களை விட இஸ்லாமிய நாகரீகம் 1400க்கு மேற்பட்ட வருடங்கள் முன்னிலை பெற்றுவிட்டது எனலாம். மிக அண்மைக் காலம் வரை இச்சமூகங்கள் இவ்விதியை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை என்பதே நிதர்சனமாகும்.[131]

---

130 அல்ஹ்ஸமி, மஜ்மஉஸ் ஸவாஇத் வமன்பஉல் பவாஇத், 5/378.

131 பார்க்க: ஸுஹைல் ஹுஸைன் அல்பத்லாவி, திப்லுமாஸிய்யது அந்நபி முஹம்மத்: திராஸா முகாரனா பில் கானூன் அத்தவ்லி அல்முஆஸிர், பக்: 182.

# இஸ்லாத்தில் யுத்தம்..
# காரணிகளும் நோக்கங்களும்

## இஸ்லாத்தில் யுத்தத்தின் உண்மை நிலை

நாம் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல் சமாதானமே இஸ்லாத்தில் அடிப்படையானதாகும். ஓர் ஆசிரியர் என்ற வகையில் நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கு பின்வருமாறு கற்பிப்பவர்களாகவும் வழிகாட்டுபவர்களாகவும் இருந்தார்கள்:

“நீங்கள் எதிரிகளை (யுத்தத்தில்) சந்திப்பதற்கு ஆசைப்பட வேண்டாம். அத்துடன் ஆரோக்கியத்தை அல்லாஹ்விடம் கேளுங்கள்..” (புகாரி, 7237).

எனவே, குர்ஆனிய போதனைகள் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் ஊடாக பண்பாட்டுப் பயிற்சியைப் பெறும் ஒவ்வொரு முஸ்லிமும் இயல்பாகவே கொலை மற்றும் இரத்தத்தை வெறுப்பவனாகவே இருப்பான். ஆகவே, அவன் யாருடனும் யுத்தத்தை முதலில் ஆரம்பித்து வைக்கமாட்டான். மாறாக அனைத்து வழிவகைகளிலும் யுத்தத்தையும் உயிர்கள் காவு கொள்ளப்படுவதையும் தவிர்க்கவே முனைவான். இக்கருத்தை நன்கு வலியுறுத்தும் வகையிலான பல்வேறு அல்குர்ஆனிய வசனங்கள் உள்ளன. உண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தங்கள் துவங்கி வைக்கப் பட்டதன் பின்னணியிலேயே அல்குர்ஆன் யுத்தத்தில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கியது. அவ்வாறு முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தம் தொடுக்கப்படும் போது உயிரையும் மார்க்கத்தையும் பாதுகாத்துக் கொள்வது மிக இன்றியமையாததாகும். இல்லையெனில் அது கோழைத்தனத் தையும் தன்னம்பிக்கையின் நிச்சயமற்ற தன்மையையுமே பிரதிபலிக்கும். அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

“போர் தொடுக்கப்பட்டோருக்கு, அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த கா∴பிர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன். இவர்கள்

(எத்தகையோரென்றால்) நியாயமின்றித் தம் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். "அல்லாஹ் தான் எங்களுடைய இறைவன்" என்று அவர்கள் கூறியதைத் தவிர (வேறெதுவும் அவர்கள் சொல்லவில்லை)" (22:39-40).

இவ்வசனத்தில் யுத்தத்திற்கான காரணி மிகத் தெளிவாக இடம்பெற்றுள்ளது. அதாவது முஸ்லிம்கள் எவ்வித நியாய மான காரணமும் இன்றி அநியாயம் இழைக்கப்பட்டதோடு அவர்களின் வீடுகளில் இருந்தும் விரட்டப்பட்டனர் என்பதே இதன் பின்புலமாகும்.

மேலும் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

"உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள். ஆனால் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை" (2:190).

இவ்வசனம் தொடர்பில் இமாம் குர்துபி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்:

"யுத்தத்தில் ஈடுபடுவது தொடர்பில் இறங்கிய முதல் வசனம் இதுவாகும். "நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக!" (41:34) மற்றும் "எனவே, நீர் அவர்களை மன்னித்துப் புறக்கணித்து விடுவீராக" போன்ற பல்வேறு மக்கி வசனங்களுக்கமைய ஹிஜ்ரத்திற்கு முன்னர் யுத்தம் தடைசெய்யப்பட்டதாகவே இருந்தது என்பதில் எவ்வித கருத்து வேற்றுமையும் இல்லை. எனவே, மதீனாவுக்குச் சென்ற பின்னரே யுத்தத்தில் ஈடுபடுதல் தொடர்பான வழிகாட்டல் அருளப்பெற்றது"[132].

சுமூகமாக வாழ்பவருடன் அல்லாமல் ஏனையவர்கள் யுத்தத்தை ஆரம்பிக்கும் போது அவர்களிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காகவே யுத்தத்தில் ஈடுபடுவதற்கான கட்டளை இடம்பெற்றுள்ளமை இங்கு அவதானிக்கத்தக்கது இக்கருத்தை மிக ஆணித்தரமாக வலியுறுத்தும் விதமாக "**வரம்பு மீறாதீர்கள்**" என்ற சொற்றொடர் இடம்பெற்றுள்ளது. பின்னர்

[132] பார்க்க: அல்குர்துபி, அல்ஜாமிஃ லிஅஹ்காமில் குர்ஆன், 1/718.

முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை செய்து **“நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை”** எனும் சொற்றொடர் இடம்பெற்றுள்ளது. எனவே, முஸ்லிம் அல்லாதவர்கள் மீதாக இருப்பினும் அல்லாஹ் அத்துமீறுவதை விரும்புவதில்லை. முடிவின்றி யுத்தம் தொடர்ந்து செல்வதற்கான கடுமையான எச்சரிக்கை இவ்வசனத்தில் உள்ளது. அந்தவகையில் முழு மனித சமூகத்துக்குமான அருள் இதில் இடம்பெற்றுள்ளது எனலாம்.

அத்துடன் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

“இணைவைப்பவர்கள் உங்கள் அனைவருடனும் போர் புரிவது போல் நீங்களும், அவர்கள் அனைவருடனும் போர் புரியுங்கள்” (9:36).

இங்கு யுத்தத்தில் ஈடுபடுவது வரையறையுடனே கூறப்பட்டுள்ளது. அதாவது எதிரிகள் முஸ்லிம்களுடன் போர் புரிதல் மற்றும் அதற்காக அவர்கள் ஒன்று கூடுதல் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டே அவர்களுக்காக முஸ்லிம்கள் ஒன்று சேர்வதன் அவசியமும் அமைகிறது.[133] இணைவைப்பாளர்களுடன் முஸ்லிம்கள் அனைவரும் இணைந்து யுத்தம் செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளமைக்கான காரணி அவர்கள் அனைவரும் இணைந்து முஸ்லிம்களோடு யுத்தம் செய்தமையே ஆகும். எனவே, கொள்ளை, அபகரிப்பு, முஸ்லிம்களின் உரிமைகளை சூரையாடுதல், யாருக்கேனும் அநீதமிழைத்து அதனை முஸ்லிம்கள் அகற்ற முனைதல், தமது மர்க்கத்தைப் பரப்ப அல்லது பிறரிடம் அதனைக் கொண்டு போய் சேர்ப்பதற்குத் தடையாக இருத்தல் போன்ற ஏதேனும் ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயங்கள் இன்றி ஒரு முஸ்லிம் எந்நிலையிலும் பிறருடன் போரிடுவது அனுமதிக்கப் பட்டதல்ல.

அத்துடன் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட வசனத்தை போன்று பின்வரும் வசனமும் உள்ளது:

“தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்ட

---

[133] பார்க்க: அல்குர்துபி, அல்ஜாமிஃ. லிஅஹ்காமில் குர்ஆன், 4/474.

மிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர். நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் மு.ஃ.மின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்" (9:13).

இங்கு சத்தியத்தை முறித்தவர்கள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது மக்கா காபிர்கள் ஆகும். நபியவர்கள் மக்காவிலிருந்து வெளியேறுவதற்கு அவர்களே காரணமாக இருந்தமையால் அவர்கள் வெளியேற்றிவிட்டனர் என இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் மக்காவாசிகள் சத்தியத்தை முறித்தமையினால் அவர்களுடன் போரிட நபியவர்களை மதீனாவிலிருந்து வெளியேற்றியவர்கள் என்ற விளக்கமும் இதற்குண்டு. ஹஸன் (அல்பஸரி) (ரஹ்) அவர்கள் "அவர்களே துவங்கினர்" எனும் சொற்றொடரின் பொருளை "யுத்தத்தைத் துவங்கினர்" எனவும், "முதல் முறையாக" எனும் சொற் றொடரின் பொருளை "உடன்படிக்கையை முறித்து (முஸ்லிம்களின் பங்காளிகளான) குஸாஆ கோத்திரத்தை(த் தாக்க) (தமது பங்காளிகளான) பனூ பக்ர் கோத்திரத்துக்கு உதவினர்" எனவும் விரிவுரை வழங்கியுள்ளார்.

அதேபோல் பத்ர் போரின் போது (அபூ ஸுஃப்யான் தலைமை தாங்கி) பொருட்களை சுமந்து (வெளியூரிலிருந்து மக்காவை நோக்கி வந்த குரைஷிகளின்) ஒட்டகக் கூட்டத்தை வழிமறிக்க நபி (ஸல்) அவர்கள் சென்றதைக் கேள்வியுற்று (அதனைப் பாதுகாக்க அவர்கள் வெளியேறிச் சென்று பின்னர்) பாதுகாப் பாக அதனை பெற்றுக் கொண்ட பின்னரும் விடாப்பிடியாக பத்ர் (களம்) நோக்கிப் படையெடுத்து அங்கு மதுபானம் அருந்தியமை.. (தொடர்பான சம்பவத்தில்) அவர்களே முதலில் யுத்தத்தைத் துவங்கி வைத்தனர் என்ற விளக்கமும் இதற்குண்டு.

மேலும் நபி (ஸல்) அவர்களை ஹஜ், உம்ரா, தவாப் செய்யாமல் தடுத்து அவர்களை வெளியேற்றியமையே அவர்கள் (யுத்தத்தைத் துவங்கினர்) என்பதன் பொருளாகும் என்ற விளக்கமும் இதற்கு குறிப்பிடப்படுவதுண்டு[134]. எதிரிகள்

[134] பார்க்க: அல்குர்துபி, அல்ஜாமிஃ. லிஅஹ்காமில் குர்ஆன், 4/434.

எப்போது முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தத்தைத் துவங்கி வைத்தனர் என்பது தொடர்பில் இவ்வாறு பல்வேறு கருத்துக்கள் குறிப்பிடப்பட்ட போதும் முஸ்லிம்கள் யுத்தத்தில் ஈடுபட்டமைக்கான பின்புலம் மிகவும் தெளிவானதாகும். அதாவது எதிரிகள் முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தத்தைத் துவக்கி வைத்தனர் என்பதே அக்காரணியாகும்.

இவையே யுத்தத்தின் பக்கம் முஸ்லிம்களை அழைக்கும் காரணிகளும் தூண்டுதல்களுமாகும். நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் வந்த நேர்வழிபெற்ற நான்கு கலீபாக்களின் காலத்தில் முஸ்லிம்களின் நடைமுறை இதனை நன்கு உறுதிப்படுத்துகிறது. முஸ்லிம்கள் தாம் பெற்ற வெற்றிகளின் போது தாம் எதிர்கொண்ட அனைத்து இணைவைப்பாளர்களையும் அவர்கள் கொன்றுவிடவில்லை. மாறாக தாம் வெற்றி கொண்ட பிரதேசங்களில் இருந்த எதிரிப்படைகளில் இருந்து தங்களுடன் போரிட்டவர்களுடனே அவர்கள் யுத்தம் செய்தனர். ஏனைய இணைவைப்பவர்களை அவர்களின் மார்க்கத்தில் அவர்கள் விட்டுவிட்டனர்.

அந்தவகையில் மேற்கூறப்பட்ட காரணிகள் மற்றும் தூண்டுதல்களை நீதமான யாராலும் மறுக்க முடியாது. அத்துடன் பக்கச் சார்பற்ற எவராலும் இவற்றில் குறுக்கீடு செய்ய முடியாது. அவை பகைமையை விலக்கி, உயிர், குடும்பம், நாடு, சமயம் போன்றவற்றைப் பாதுகாப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளன. அதேபோன்று முஸ்லிம்களின் மார்க்கம் தொடர்பில் காபிர்கள் ஏற்படுத்த முனையும் குழப்பங்களுக்கு எதிராக தமது சமயம் மற்றும் நம்பிக்கை போன்றவற்றுக்கான உத்தரவாதத்தை அவர்களுக்கு வழங்கு வதையும் நோக்காகக் கொண்டுள்ளன. அத்துடன் இஸ்லாமிய தூது அனைவருக்கும் சென்றடைவதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தையும் அது உள்ளடக்கியுள்ளது. இறுதியாக, உடன்படிக்கையை முறித்தவருக்கு ஒழுக்கமூட்டுவதையும் அது இலக்காகக் கொண்டுள்ளது[135]. யுத்தத்துக்கான இவ்வாறான காரணிகள் நோக்கங்களையும் உலகத்திலுள்ள யார் தான் மறுத்துரைப்பார்?!

---

[135]பார்க்க: அன்வர் அல்ஜுன்தி, பிமாதா இன்தஸரல் முஸ்லிமூன், பக்: 57-62.

# இஸ்லாத்தில் யுத்த தர்மங்கள்

## யுத்த தர்மங்களில் இஸ்லாத்தின் தனித்துவம்

நல்ல பண்பாடுகளும் பிறருடன் மென்மையாக நடப்பதும், பலவீனமானவருடன் அன்பாக இருப்பதும், அண்டை வீட்டாருடனும் உறவினர்களுடனும் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்வதும் சமூகமான நிலைகளில் எவ்வகையான நாகரீகத்தில் வளர்ச்சியுறாத சமூகமாக இருப்பினும் அனைத்து சமூகங்களும் செய்யும் செயலாகும். எனினும் யுத்தங்களில் நல்லமுறையில் நடந்து கொள்வதும், எதிரிகளுடன் மென்மையாக நடந்து கொள்வதும், பெண்கள், பிள்ளைகள், முதியோருக்கும் அன்பு காட்டுவதும், தோற்றவர்களுடன் விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்வதும் எல்லா சமூகத்தா லும் செய்ய முடியாததாகும். அதேபோல் ஒவ்வொரு படைத்தளபதியும் அப்பண்புகளைக் கொண்டிருக்க முடியாது. இரத்தத்தைப் பார்வையிடுவது மேலும் இரத்தம் வடிந்தோடுவதற்கே வழிவகுக்கும். பகைமை, வஞ்சகம் மற்றும் கோபம் எனும் நெருப்பையே மேலும் மேலும் பற்றியெறிய வைக்கும். வெற்றிப் பெருமிதம் வெற்றியாளர்களை இன்னும் தீவிரமாக போதையேற்றி, மிக மோசமாக அவர்களை கொடிய பழிவாங்கும் செயல்களில் ஈடுபட வைத்துவிடும். இதுவே ஆரம்பகால மற்றும் நவீன கால உலகின் வரலாறாகும். காபில் என்பவர் தனது சகோதரரான ஹாபில் என்பவரைக் கொன்ற நிகழ்விலிருந்து மனித வரலாறு இதுவேயாகும். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

“அவ்விருவரும் (ஒவ்வொருவரும்) குர்பானி கொடுத்த போது, ஒருவரிடமிருந்து அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. மற்றவரிடம் இருந்து அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. (பின்னவர்) “நான் நிச்சயமாக உன்னைக் கொலை செய்து விடுவேன்” என்று கூறினார். அதற்கு (முன்னவர்) “மெய்யாகவே அல்லாஹ் ஏற்றுக் கொள்வது பயபக்தியுடையவர்களிடமிருந்து தான்” என்று கூறினார்” (5:27).

இங்கு படைத் தளபதிகள், சாதாரண பொதுமக்கள், வெற்றியாளர்கள், ஆட்சி புரிவோர் போன்ற பல்வேறு படிநிலைகளிலும் எமது நாகரிகத்தின் முன்னோடிகளுக்கு வரலாறு நிரந்தர கிரீடத்தை அணிவிக்கிறது. ஏனெனில் பற்றியெறியும் யுத்த களங்களிலும் சித்திரவதை செய்தல், பழிவாங்கல், உயிர்களை சூரையாடுதல் போன்ற மிகக் கொடிய சூழ்நிலைகளிலும் மனித நேயம் நிறைந்த அன்பினூடாகவும் நீதத்தினூடாகவும் அனைத்து நாகரிகங் களின் தலைவர்களுக்கு இடையே அவர்கள் தனித்துவம் பெற்று விளங்கினார்கள். இறைவன் மீதாணையாக, யுத்த களங்களில் கடைபிடிக்கப்பட்ட இவ்வுயரிய பண்பாடுகளின் வரலாறு தொடர்பிலான ஒப்பற்ற இவ்வற்புதம் தொடர்பில் எவ்வித சந்தேகங்களுக்கும் இடமின்றி மிக உண்மையாக வரலாறு குறிப்பிட்டிருக்காவிடின் இதனை ஒரு மூட நம்பிக்கை எனவும் எவ்வித சான்றுகளுமற்ற ஒரு கட்டுக்கதையே ஆகும் என்றே நான் கூறியிருப்பேன்!.[136]

இஸ்லாத்தில் சமாதானமே அடிப்படையாக இருக்கும் அதேவேளை நாம் ஏற்கனவே குறிப்பிட்ட காரணிகளுக்கும் நோக்கங்களுக்காகவுமே இஸ்லாத்தில் யுத்தங்கள் அனுமதிக் கப்பட்டுள்ளவையாக இருப்பதைப் போல் இஸ்லாம் யுத்தங்களுக்கான எவ்வித நிபந்தனைகளோ சட்டமோ இன்றி அதனை பொதுவாக விட்டுவிடவுமில்லை. அந்தவகையில் இஸ்லாம் யுத்தத்தின் பின்னணியில் வரமுடியுமான பல்வேறு எதிர்மறையான விளைவுகளைக் கட்டுப்படுத்தும் வகையிலான வரையறைகளை அதற்கென வகுத்துள்ளது. அந்தவகையில் தனிமனித மேலாதிக்கங்களின்றி யுத்தங்களை பண்பாடு களுடன் தொடர்புபட்டவையாக அது அமைத்துள்ளது. அதேபோல் அவை அத்துமீறி பிறர் உரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்வோருக்கு எதிராகவே அமைய வேண்டும். நிராயுதபாணிகளான சமூகமாக நடந்து கொள் வோருக்கு எதிராக அது அமைந்து விடக்கூடாது.

---

[136] முஸ்தபா அஸ்ஸிபாஈ, மின் ரவாஇஇ ஹழாரதினா, பக்: 73.

**யுத்தம் தொடர்பான பண்பாட்டு வரையறைகளில் பிரபலமான சில விடயங்களைப் பின்வருமாறு நோக்க முடியும்:**

### i. பெண்கள், முதியோர், சிறுவர்கள் போன்றோரைக் கொல்வதைத் தடைசெய்துள்ளமை

நபி (ஸல்) அவர்கள் படைத் தளபதிகளுக்கு இறையச்சத்துடனும் அல்லாஹ்வின் கண்காணிப்பு தொடர்பான எண்ணத்துடனும் நடந்து கொள்ளுமாறு தொடர்ந்தும் அறிவுரை கூறி வந்தார்கள். யுத்த தர்மங்களை கடைபிடிக்க இது அவர்களுக்கு தூண்டுதலாக அமையும். இவற்றுள் சிறுவர்களைக் கொல்வதை நபியவர்கள் தடை செய்துள்ளமை ஒன்றாகும். புரைதா (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

"நபி (ஸல்) அவர்கள் யாரேனும் ஒரு தளபதியை ஏதேனும் ஒரு சிறிய அல்லது பெரிய படைக்கு நியமிப்பார்களாயின் அவருக்கு தனிப்பட்ட முறையில் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுமாறும் அவரோடு இருக்கும் ஏனைய முஸ்லிம்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும் அறிவுரை கூறுவார்கள். அத்துடன் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுவார்கள்: "நீங்கள் எந்த ஒரு சிறுபிள்ளையையும் கொன்றுவிட வேண்டாம்.."" (முஸ்லிம், 1731). அபூதாவூதில் இடம்பெறும் மற்றுமொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் "தள்ளாடும் நிலையில் உள்ள வயது முதிர்ந்த நபரையோ, குழந்தையையோ, சிறுவனையோ பெண்ணையோ நீங்கள் கொன்றுவிட வேண்டாம்" (அபூ தாவூத், 2614) என அறிவுரை கூறுவதாக இடம்பெற்றுள்ளது.

### ii. வழிபாடுகளில் ஈடுபடுவோரைக் கொல்வதைத் தடை செய்துள்ளமை

நபி (ஸல்) அவர்கள் தனது படையினரை அனுப்பி வைக்கும் போது “நீங்கள் வழிபாட்டுத் தலங்களில் இருப்போரை கொன்றுவிட வேண்டாம்” (முஸ்னத் அஹ்மத், 2728)[137] எனக் கூறிவந்தார்கள். அத்துடன் மு.்.தா யுத்தத்துக்குச் சென்ற தனது படைக்கு பின்வருமாறு அறிவுரை கூறினார்கள்.

“அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு நீங்கள் யுத்தகளத்தில் போராடுங்கள். அல்லாஹ்வை மறுப்போருக்கு எதிராக (அவர்கள் உங்களுடன் போரிடும்போது அவர்களை எதிர்த்து) நீங்கள் போரிடுங்கள். நீங்கள் சதி செய்து விடாதீர்கள். நீங்கள் மோசடியில் ஈடுபட்டு விடாதீர்கள். சித்திரவதை செய்து விடாதீர்கள். குழந்தை, பெண், வயது முதிர்ந்தவரை மற்றும் ஏதேனுமோர் வழிபாட்டுத் தலத்தில் வழிபாடுகளுக்காகத் தங்கியிருப்போரையும் கொன்று விடாதீர்கள்” (முஸ்லிம், 1731).

### iii. மோசடியில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளமை

நபி (ஸல்) அவர்கள் தனது படையினருக்கு பிரியாவிடை வழங்கும் போது “நீங்கள் மோசடியில் ஈடுபட்டு விடாதீர்கள்” (முஸ்லிம், 1731) என அறிவுரை கூறுவார்கள். முஸ்லிம்கள் ஏனைய சகோதர முஸ்லிம்களோடு தொடர்பாடல்களை மேற்கொள்வதை மையப்படுத்தியதாக இவ்வறிவுரை அமையப் பெறவில்லை. மாறாக முஸ்லிம்களுக்கெதிராக சதி முயற்சிகளில் ஈடுபட்டு, ஒன்றிணைந்து முஸ்லிம்களுக்கு எதிராகப் போரிட வருவோரை மையப்படுத்தியதாகவே இது இடம்பெற்றுள்ளது. யுத்தங்களில் மோசடியில் ஈடுபட்டவர்கள் முஸ்லிம்களாக இருப்பினும் மோசடிக்கு உள்ளாக்கப் பட்டவர்கள் முஸ்லிமல்லாதோராக இருப்பினும் மோசடியில் ஈடுபட்டோரை விட்டு தான் நீங்கிக் கொள்வதாக நபி (ஸல்) குறிப்பிட்டுள்ளமை ஊடாக அவர் இவ்விடயம் தொடர்பில்

[137] இந்த ஹதீஸ் ஹஸன் லிகய்ரிஹி தரத்தைச் சார்ந்ததாகும் என ஹதீஸ் திறனாய்வுத்துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் ஷுஐப் அல்அர்னாஊத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் பார்க்க: தக்ரீஜுல் முஸ்னத், 2728).

அதிக முக்கியத்துவம் அளித்திருப்பதனைக் காணமுடிகிறது. இவ்விடயம் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

“யாரேனும் ஒருவர் மற்றொருவரின் உயிருக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறி, பின்னர் அவரை கொன்று விட்டால் நான் கொலையாளியிடமிருந்து நிரபராதியாகிவிட்டேன். கொல்லப் பட்டவர் முஸ்லிமல்லாதவராக இருப்பினும் சரியே” (ஸஹீஹு இப்னு ஹிப்பான், 5982)[138].

நபி (ஸல்) அவர்களின் தோழர்களின் உள்ளத்தில் (வாக்குறுதி விடயத்தில் மோசடியில் ஈடுபடுவதைத் தவிர்த்து) உண்மையாக நடந்து கொள்வதன் பெறுமானம் நன்கு பதிந்திருந்தது. எடுத்துக்காட்டாக உமர் (ரழி) அவர்களின் ஆட்சியில் போர்க்களத்தில் இருந்த ஒரு முஸ்லிம் போராளி பாரசீகத்தை சேர்ந்த ஒரு எதிரிக்கு “நீ பயப்பட வேண்டாம்” எனக் கூறி, பின்னர் அவரைக் கொன்றுவிடுகிறார். இச்செய்தி உமர் (ரழி) அவர்களுக்குக் கிடைக்கிறது. அப்போது உமர் (ரழி) அவர்கள் அந்தப் படைத் தளபதிக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்கள்: “எனக்கு தகவல் கிடைத்தது: உங்களில் சிலர் முஸ்லிமல்லாதவரை தேடிச் செல்கிறார்கள். அவர் மலைப்பகுதியில் நிலைகொண்டு அங்கிருந்து (சரண டைவதற்காக) வர மறுப்பாராயின் (அவ்வெதிரியிடம்) “நீ பயப்படாதே” எனக் கூறுகின்றனர். பின்னர் ஏதேனுமோர் வகையில் அவரைப் பிடித்து விட்டால் உடனே அவரைக் கொன்று விடுகின்றனர். என் ஆன்மா எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக, யாரேனும் ஒருவர் அதனைச் செய்தார் என்ற தகவல் எனக்கு கிடைக்குமாயின் அவரது கழுத்தை நிச்சயம் நான் துண்டித்து விடுவேன்”[139].

---

[138]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹுத் தர்கீ(ப)ப்(டி), 3007.

[139] இமாம் மாலிக், அல்இஸ்தித்கார், 4/35.

### iv. பூமியில் குழப்பம் விளைவிப்பது தடை செய்யப்பட்டுள்ளமை

முஸ்லிம்களின் யுத்தங்கள் சமகால யுத்தங்களைப் போல் பேரழிவுகளை ஏற்படுத்தும் யுத்தங்களாக இருக்கவில்லை. நவீன யுத்தங்களில் போரில் ஈடுபடும் முஸ்லிமல்லாதோர் தமது எதிரிகளின் வாழ்வின் புறத்தோற்ற அம்சங்களை முற்றாக அழித்து விட விரும்புகின்றனர். எனினும் முஸ்லிம்கள் தாம் யுத்தங்களில் ஈடுபட்ட பகுதிகள் எதிரிகளின் நாடுகளாக இருப்பினும் அவற்றில் இருக்கும் கட்டிடங்களைக் கூட பாதுகாப்பதற்கு அதிகம் விரும்பினார். அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களின் ஷாம் பிரதேசத்துக்கு சென்ற தனது படை யினருக்கு கூறிய அறிவுரை வார்த்தைகளில் மிகத் தெளிவாக இவ்விடயம் புலப்படுகிறது. இவ்வறிவுரையில் "நீங்கள் பூமியில் குழப்பத்தை ஏற்படுத்தி விடாதீர்கள்"[140] என இடம்பெற்றுள்ளது. இது மெச்சத்தக்க அனைத்து நல்ல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

அத்துடன் அவரது அறிவுரையில் பின்வருமாறும் இடம்பெற்றுள்ளது:

"நீங்கள் எந்த ஒரு பேரீத்தம்பழ மரத்தையும் மூழ்கடித்து விடாதீர்கள். அதற்கு தீ மூட்டி விடாதீர்கள். கால்நடைகளை அல்லது பழம் தரும் மரத்தை வெட்டி விடாதீர்கள். அத்துடன் எந்த ஒரு வழிபாட்டுத் தலத்தையும் இடித்து விடாதீர்கள்"[141]

இவ்வனைத்து விரிவான விடயங்களும் பூமியில் குழப்பம் விளைவிக்க கூடாது என்ற அறிவுரையின் நோக்கத்தை தெளிவுபடுத்துகின்றன. ஓர் சமூகத்தின் மீதுள்ள பகைமை அச்சமூகத்துக்கெதிரான ஏதேனுமோரிரு தீய செயலில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கிவிடும் என ஒரு படைத்தளபதி யூகித்துக்கொள்வதைத் தடுக்குமுகமாகவே இவ்வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் அனைத்து வடிவங்களிலும் குழப்பம் விளைவிப்பது இஸ்லாத்தில் முற்றாக மறுக்கப்பட்ட விடயமாகும்.

---

[140] அஸ்ஸுனன் அல்குப்ரா லில்பய்ஹகி, 40971.

[141] அஸ்ஸுனன் அல்குப்ரா லில்பய்ஹகி, 40971.

### v. யுத்தக் கைதிக்காகச் செலவிடல்

யுத்தக் கைதிக்காகச் செலவிடுவதும் அவனுக்கு உதவுவதும் ஒரு முஸ்லிமுக்கு நன்மையை ஈட்டித்தரும் விடயமாகும். அவனது பலவீனமான நிலை, குடும்பம் மற்றும் சமூகத்தவரைப் பிரிந்திருத்தல், அதிகம் உதவி பெறும் நிலையில் இருத்தல் போன்றவையே இதற்கான பின்புலமாகும். கைதியுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதை அநாதைகள் மற்றும் ஏழைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதனுடன் இணைத்து அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. மு.ஃமின்களின் பண்புகள் தொடர்பில் அல்குர்ஆன் "மேலும், அ(வ்விறை)வன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள்" (76:8) எனக் குறிப்பிடுகிறது.

### vi. இறந்தவரை சித்திரவதை செய்யாமல் இருத்தல்

நபி (ஸல்) அவர்கள் சித்திரவதை செய்வதை முற்றாகத் தடுத்தார்கள். அப்துல்லாஹ் பின் ஸைத் (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

"நபி (ஸல்) அவர்கள் (பிறர் சொத்தை) அபகரிப்பதையும் (பிறர் உடலை) சித்திரவதை செய்வதையும் தடுத்தார்கள்" (புகாரி, 2474).

அத்துடன் இம்ரான் பின் ஹுஸைன் (ரழி) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

"நபி (ஸல்) அவர்கள் தர்மம் செய்யும்படி எமக்குத் தூண்டு வார்கள். அத்துடன் (உடல்களைச்) சித்திரவதை செய்வதைத் தடுத்தார்கள்" (அபூ தாவூத், 2667)[142].

[142]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: ஸஹீஹு அபீ தாவூத், 2667.

உஹது யுத்தத்தில் தனது சிறிய தந்தையான ஹம்ஸா (ரழி) அவர்களை இணைவைப்பாளர்கள் சித்திரவதை செய்த போதும் இக்கோட்பாட்டை நபி (ஸல்) அவர்கள் மாற்றிக் கொள்ளவில்லை. மாறாக அவ்வெதிரிகளின் கொல்லப்பட்ட உடல்களை சித்திரவதை செய்வதில் முஸ்லிம்கள் ஈடுபடுவதை மிகக் கடுமையாக எச்சரித்தார்கள். இவ்விடயம் தொடர்பில் பின்வருமாறு கூறினார்கள்:

“ஒரு நபி யாரையேனும் கொன்றிருப்பின் அந்நபர் அல்லது ஒரு நபியைக் கொன்றவரே மறுமையில் இறைவனின் மிகக் கடுமையான தண்டனையைப் பெறுவார். அத்துடன் வழிகேட்டில் இருந்த தலைவரும் (உடல்களுக்கு) சித்திரவதை செய்தவரும் (இறைவனின் மிகக் கடுமையான தண்டனையைப் பெறுவர்)” (முஸ்னத் அஹ்மத், 3868)[143]. நபி (ஸல்) அவர்களின் வரலாற்றில் முஸ்லிம்கள் தமது எதிரிகளில் ஒருவரையேனும் சித்திரவதை செய்தமையைக் குறிக்கும் வகையிலான எவ்வித நிகழ்வும் பதிவாகவில்லை.

இவையே முஸ்லிம்களின் யுத்தப் பண்பாடுகளாகும். முரண்பாடுகள் ஏற்படும் போது கண்ணியத்தை பாதிக்கும் வகையில் அவை அமையவில்லை. பிறருடனான தொடர்பாடலில் நீதமாக நடந்து கொள்வதைப் பாதிக்கும் வகையிலும் அவை காணப்படவில்லை. யுத்தத்தில் அல்லது யுத்தத்தின் பின்னர் மனித நேயத்தை களங்கப்படுத்தும் வகையிலும் அவை இல்லை.

[143]இந்த ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும் என ஹதீஸ் திறனாய்வுத் துறை நவீன அறிஞர்களுள் ஒருவரான இமாம் அல்அல்பானி குறிப்பிட்டுள்ளார். பார்க்க: அஸ்ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா, 281.

“தற்காலத்தில் பரவலாகக் கலந்துரையாடப்படும் பண்பாடுகளுடன் தொடர்பான அதிகமான விடயங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இஸ்லாமிய மூலாதாரங்கள் ஊடாக வரையறுக்கப்பட்டு, அவை முஸ்லிம் உலகில் மிகப் பரவலாக நடைமுறையில் இருந்து வந்துள்ளன எனும் மையக்கருத்தை நிறுவுவதனூடாக உலகின் அனைத்து நாகரிகங்களையும் விட இஸ்லாமிய நாகரிகம் கொண்டுள்ள தனித்துவத்தை இந்நூல் மிக அற்புதமாக வெளிக்காட்டுகிறது. இதனூடாக இஸ்லாத்துக்கும் இஸ்லாமிய நாகரிகத்துக்கும் எதிராக மனித உரிமைகள் மற்றும் ஏனைய விவகாரங்களை மையப்படுத்தி முன்வைக்கப்படும் எதிர்மறையான கருத்துக்களை இந்நூல் அறிவியல் பூர்வமாக எதிர்கொள்ள முயல்கிறது எனலாம்”

ISBN 978-624-97947-5-7

9 786249 794757

Price: LKR 1200.00